வெளியீடு 15-11-2004 Issued 15-11-200

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூலை 28, 2004—தொகுதி 61—எண் 1
**Wednesday the 28th July, 2004 —Volume 61—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
-lative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

28 மார் 2005
சென்னை
எழும்பூர்

28-07-2004

## உள்ளடக்கம்


ஆளுநரும் அமைச்சரவையும் v - ix

Governor and Council of Ministers ix - xiv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xv - xvii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xix - xxix

1. **வினாக்கள்—விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 1-37

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (8, 9 மற்றும் 10—வது பட்டியல்கள்) 37-252

2. **உரிமைப் பிரச்சினை—**

உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட பிரச்சினை குறித்து எவரும் விவாதிக்கவோ விமர்சிக்கவோ கூடாது என்ற ஆணை 253-256

3. **கவன ஈர்ப்பு—**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வடரங்கம் ஊராட்சி அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டுதல் 256-258

4. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 259

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு 259

(இ) அரசு உறுதிமொழிக் குழு 259

(ஈ) மனுக்கள் குழு 260

5. அறிவிப்பு—

இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) 260

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 260 -261

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 261-262

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004 262 -263

7. மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகள், 1991-1992, 1992-1993, 1993-1994, 1994-1995, 1995-1996 மற்றும் 1996-1997, அளித்தல்— 263 -278

8. மானியக் கோரிக்கைகள், 2004—2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 43 — சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

(ஆ) கோரிக்கை எண் 4 — ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

(அ), (ஆ) 279 -344

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 279, 280 -281, 328 -342

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி 280, 281, 286, 289, 290, 292, 318 -327

திரு. செ.கு. தமிழரசன் 281 - 297

திருமதி இரா. சரோஜா 297 -303

8. மானியக் கோரிக்கைகள், 2004—2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

திருமதி ஆர். சசிகலா 304 - 308

திருமதி வி. சிவகாமி 308 - 318

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 344 - 349

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் — திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையில் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3 நிதி மற்றும் உணவு அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

தமிழ்நாடு ... காப்பகம்
226196
சென்னை-600 008
...லகம்

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

10. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.



11. வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

12. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

13. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

14. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

15. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**16. கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.*

**17. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

**18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

**19. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

*மீன்வளம்.*

**20. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

**21. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

*தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு*

**22. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

*செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

**23. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.*

---

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** - **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** - **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

3. **Minister for Finance and Food** - **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

4. **Minister for Law, Information Technology and Electricity** - **The Hon. Thiru D. Jayakumar:**

   Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development.

5. **Minister for Hindu Religious and Charitable Endowments** - **The Hon. Thiru P.C. Ramasamy:**

   Hindu Religious and Charitable Endowments.

6. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

7. Minister for Social Welfare .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. Minister for Adi-Dravidar Welfare .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

9. Minister for Transport .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. Minister for Industries .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

11. **Minister for Agriculture and Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development, Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

12. **Minister for Commercial Taxes and Co-operation** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes and Co-operation.

13. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

14. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

15. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

16. **Minister for Education and Backward Classes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees, Backward Classes, Most Backward Classes and Denotified Communities

17. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

20. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

| | | |
|---|---|---|
| 21. **Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 22. **Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply. |
| 23. **Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

------

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

*திருமதி சி. எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. செ. கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 23-7-2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

— — —

# பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ... சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை(செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கணேசன், திரு. வி. - மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

113. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
122. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந - கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ்.. - விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி... பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்



136. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



182. மில்லர், திரு. அ. - கடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-1
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி



228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 13, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 ஜூலை 28, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்."

தீங்கு செய்தவருக்கே தீங்குகள் வந்து சேரும்; எனவே தீங்கற்ற வாழ்வை விரும்புகிறவர்கள், பிறருக்குத் தீங்கிழைத்தல் கூடாது.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 41, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**41—**

### சார் பதிவாளர் அலுவலகம்

***2531—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளி மந்தயத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தயத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. செ. தாமோதரன், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**42—**

## வீட்டுமனைப் பட்டா

***4484—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை அருகே பெரிய பூலாங்கிணறில் இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாத மக்களுக்கு விரைவில் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தகுதி வாய்ந்த அரசு புறம்போக்குப் பகுதிகளில் வீட்டுமனை ஒப்படை கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள்மீது விதிமுறைகளின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன்.



**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை அருகே உள்ள பூலாங்கிணறு என்ற பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அங்கு இப்போது தொழில்கள் நசிந்துவிட்டதால், அந்தத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றவர்கள் தற்போது விவசாயக் கூலி வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தற்போது குடியிருக்கின்ற வாடகை வீட்டுக்கு வாடகைகூடக் கொடுக்கமுடியாமல் உள்ளார்கள். நேற்று நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு ஏழை எளியோருக்கு, 60 ஆயிரம் நபர்களுக்கு, வீட்டுமனைப் பட்டா நமது அரசு வழங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த திட்டத்தில் பூலாங்கிணறு பகுதி சேர்க்கப்பட்டு இந்த ஆண்டே அவர்களுக்கு நிலம் வழங்கி பட்டா கொடுக்க நமது அரசு முன்வருமா? மற்றும் எனது கிணத்துக்கடவு தொகுதியிலே நிறைய மந்தைப் புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த நிலங்களில் பல இடங்களில் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருந்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீட்டுமனைப் பட்டாவோடு நில்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், பூலாங்கிணறு கிராமம் உடுமலை நகரிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றி பெரிய, நடுத்தர, சிறிய பஞ்சாலைகள் மற்றும் இதர பல்வேறு தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளன. இங்கு வசிக்கும் பெரும்பாலான மக்கள் தொழிற்சாலைகளையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 75 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டிற்குமேல் வாழ்பவர்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைவு. தாழ்த்தப்பட்ட மக்களும் விவசாயக் கூலி வேலை செய்வதன்மூலம் சுமாரான நிலையில் உள்ளனர். மனுதாரர்கள் இலவச வீட்டுமனை ஒப்படை கோரும் இடங்கள் விலை மதிப்புடையவை. சில இடங்களில் மனுதாரர்கள் இரண்டு சென்ட்டுக்கு மேலாக ஆக்கிரமித்துக்கொண்டு அவற்றுக்கு ஒப்படை கோருகின்றனர். அவ்வினங்களுக்கு வீட்டுமனை வழங்க இயலாத நிலை உள்ளது. சில இனங்களில் மனுதாரர்கள் கடை வைத்து நடத்துவதாக ஒப்படை கோருகின்றனர். இவர்களுக்கும் ஒப்படை வழங்க அரசின் விதிமுறைகளில் இடமில்லை. தகுதியான நபர்களுக்கு ஏற்கெனவே

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தகுதிவாய்ந்த அரசு புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனை ஒப்படை கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள்மீது விதிமுறைகளின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கு நன்றி. மற்றும் எனது கிணத்துக்கடவு தொகுதியில் நிறைய மந்தைப் புறம்போக்கு நிலங்கள் உள்ளன. அந்த நிலங்களில் பல இடங்களில் ஏழையெளிய மக்கள் குடியிருந்து வருகிறார்கள். குறிப்பாக, எனது தொகுதிக்குட்பட்ட பூசேரிப்பட்டி, அரசம்பாளையம் பகுதியிலே மிக அதிக நபர்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் தாங்கள் குடியிருந்து வருகின்ற மந்தைப் புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா கேட்கும்போது அந்த மந்தைப் புறம்போக்கு இடத்திற்கு பட்டா வழங்க இயலாது என்று நமது வருவாய்த் துறை அலுவலர்கள் கூறுகிறார்கள். அப்படி அந்த இடத்தை நத்தமாக மாற்றி, பட்டா கொடுக்க வேண்டுமென்றால் அவர்கள் தற்போது குடியிருக்கும் இடத்தைப்போல மறுபடி ஒரு பங்கு இடத்தை அந்தக் கிராமத்திலே, வேறு இடத்தில் இலவசமாகக் கொடுத்தாலோ அல்லது வாங்கிக் கொடுத்தாலோ மட்டும், அந்த இடத்தை மந்தைப் புறம்போக்காக அறிவித்துவிட்டு தற்போது குடியிருக்கின்ற மந்தைப் புறம்போக்கை வீடு கட்டுவதற்குப் பட்டா போட்டுக் கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். அந்த மந்தைப் புறம்போக்கில் குடியிருக்கும் மக்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட ஏழையெளியவர்கள் ஆவார்கள். அவர்கள் அந்த இடத்திற்கு மாற்று இடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. செ. தாமோதரன்:** மாற்று இடம் வாங்கிக் கொடுக்க முடியாது. எனவே, அரசு இந்த நிபந்தனையைத் தளர்த்தி, அந்த மந்தைப் புறம்போக்கில் குடியிருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு பட்டா கொடுக்க முன்வருமா? அப்படிப் பட்டா கொடுத்தால் தமிழகத்திலேயே பல மக்களுக்குப் பயன் கிடைக்கும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். எனவே இதுபற்றி அரசு—





*முற்பகல் 10—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன், உட்காருங்கள், பட்டா கொடுக்க முன்வருமா? அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் ஒதுக்குவது அரசின் நிலையான கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு தகுதியான நிலம் உள்ளதோ அங்கு வீட்டு மனைகளைத் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது. இலவச வீட்டு மனைப் பட்டா கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் 16 ஆயிரத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் 24 ஆயிரத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வீட்டு மனைக்காகக் கிராமப்புறங்களில் 3 சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில், வீட்டு மனை, ஒப்படை செய்யப்படுகிறது. இதன்படி ஒப்படை கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், ஒப்படை கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் குளம், குட்டை, ஆறு, ஓடை, போன்ற நீர்வழிப் புறம்போக்கு, மேய்க்கால், மந்தைவெளி மற்றும் வண்டிப் பாதைப் புறம்போக்குகள் ஆகிய புறம்போக்குகள் ஆட்சேபகரமான புறம்போக்குகள் எனத் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், இவ்வினங்களில் வீட்டு மனைப் பட்டா வழங்க இயலாது. நகராட்சி எல்லைக்குள் அரசு நிலங்களில் ஒப்படை வழங்கத் தடையாணை உள்ளது. எனவே, ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் விண்ணப்பதாரரின் தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உடுமலை தொகுதியிலே, உடுமலை ஒன்றியத்திலே முக்கோணம், ஜெ.ஜெ. நகர், பெரிய பூலாங்கிணறு, மில்கேட், ஜே.வி.என். நகர் போன்ற பகுதிகளும், அதை ஒட்டியுள்ள

ராகல்வாய் ஊராட்சி, அந்தியூர் ஊராட்சி, கணபதிபாளையம் ஊராட்சி அடுத்தடுத்த கிராமங்களாக அங்கே அருகிலேயே உள்ளன. அங்கு அதிகமான மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகக் குடியிருந்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது கூறியது போல அங்கே தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. அங்கே தொழிலாளர்கள் 70 சதவிகிதம் வசதியாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தச் சூழ்நிலையில் அங்கு யாரும் இல்லை. மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளார்கள். நெசவாளர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய வாழவாடி பகுதி அங்கே உள்ளது. இவற்றை எல்லாம் கருத்திலே எடுத்துக் கொண்டு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியிலே வாழுகிற மக்களுக்காக நில ஆர்ஜிதம் செய்து அவர்களுக்குக் குடியிருக்க வீட்டு மனை இடம் கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். அதோடு என்னுடைய தொகுதியிலே மடத்துக்குளத்தில் பெரியவட்டாரத்திலும், சங்கராமநல்லூரில் மைலாபுரத்திலும், உடுமலை நகரத்திலே டி.வி. பட்டனம் என்ற இடத்திலும் அரசு புறம்போக்கு இடம் உள்ளது. அதிலே பட்டா கொடுப்பதற்குக் கடந்த ஓராண்டு காலமாக நம்முடைய அதிகாரிகள் தவணை வைத்து வருகிறார்கள். கூடிய சீக்கிரத்திலே அந்த மக்களுக்குப் பட்டா கிடைக்க நம்முடைய அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைப் பட்டாக்கள் கேட்டு வரப்படுகின்ற விண்ணப்பங்களின் தகுதியின் அடிப்படையிலும், விதிமுறைகளின்படியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகளுக்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுதர்சனம்.

**திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், குடிசை வீடுகள் அமைத்து, அதற்கு ஒரு விளக்கு மின் இணைப்பும் பெற்றிருக்கும் நிலையில் அங்கே சாலைகள் அமைத்தும், அங்கே நீர்நிலை மேல்நிலைத் தொட்டி அமைத்தும், குடிநீர் வசதி செய்து தந்தும், அவர்களுக்குப் பட்டா வழங்கவில்லை என்ற ஒரு குறைபாடு, மனுக்கள்





மூலமாக வரப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழையெளியவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு 168—வது சட்டப் பிரிவைத் தளர்த்தி நாம் அதுபோன்ற வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு 3 சென்ட் கூட தேவையில்லை, 2½ சென்ட் கொடுத்தால்கூட, அங்கே மக்கள் அதற்காக நன்றியுடன் இருப்பார்கள்; அம்மாவினுடைய அரசிற்கு நன்றி தெரிவிப்பார்கள். எனவே அதற்கான சட்டத் திருத்தம் செய்து, அமைச்சர் அவர்கள் பட்டா வழங்குவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டில் வாழ்கின்ற மக்கள் ஏற்கெனவே அவர்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு பண்ணி வீட்டு மனைகள் ஏற்படுத்தியிருந்தால், அந்தப் பகுதி ஆட்சேபனையற்ற பகுதியாகயிருந்தால், உடனடியாகப் பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆட்சேபனை உள்ள பகுதியாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கோரிக்கை வைத்தால், அரசு ஆய்வு செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்களில், பொதுப் பணித் துறைக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில் அந்த இடங்களிலே பல ஆண்டுகளாக – ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு மேலாக – வீடுகளை அமைத்து, அதற்குரிய—நமது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல—மின் இணைப்புகளைப் பெற்று, அங்கே ஒரு கிராமம்போல வசித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு சார்பிலே எல்லாவித வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே, அந்தப் புறம்போக்குகளிலே அவர்கள் வசிக்கின்ற வீடுகளை அப்புறப்படுத்தா வண்ணம் அவர்களிடத்திலே ஏதாவது ஒரு கணிசமான தொகையினைப் பெற்றுக்கொண்டுகூட அந்த வீடுகளுக்கெல்லாம் பட்டா வழங்குகின்ற ஒரு நிலையை அரசு ஏற்படுத்துமா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2004 ஜூலை 28

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிற குளங்கள், ஏரிகள், வரத்து வாய்க்கால்களில் ஆக்கிரமிப்புகள் பெருகி வருவதைத் தடை செய்ய வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம். இலவச வீட்டுமனைப் பட்டாவை எவ்வாறு வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற மக்களுக்குக் கொடுப்பதை அரசின் கொள்கையாகக் கொண்டிருக்கின்றோமோ, அதேபோல வருங்காலத்தில் நீர் நிலைகளினுடைய பாதுகாப்பையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய ஒரு கால கட்டத்தில்—பருவ மழை பொய்க்கின்ற காலமாக இருப்பதனால்—பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஏரிகளையும், வரத்து வாய்க்கால்களையும், குளங்களையும் ஆக்கிரமிப்பு செய்வதை நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப் பணித் துறையினுடைய ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்து வீட்டுமனைகள் அமைத்து இருக்கின்றார்கள், அவர்களுக்குப் பட்டாக்கள் தேவை என்று சொல்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட ஏரி, குளங்களுக்குக்கீழ் பாசனப் பகுதி இல்லையென்றாலும், குளங்கள் இருக்கவேண்டிய காலச் சூழ்நிலை கட்டாயம் அந்தப் பகுதிக்குத் தேவை என்றால் நாம் அதையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இருந்தாலும் அந்தப் பகுதியிலிருந்து அவர்களை வெளியேற்ற முடியாத ஒரு சூழ்நிலையில், கீழே எந்தவித பாசனப் பகுதியும் இல்லையென்றால் அந்தப் பகுதி அரசின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுபது ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டாக்கள் இந்த வருடம் ஏழைஎளிய மக்களுக்கு வழங்கப்படும் என்கின்ற புரட்சித் தலைவி அம்மாவினுடைய செய்தி, தமிழ்நாடு முழுவதும் ஓர் இனிக்கின்ற செய்தியாக இருக்கின்ற இந்த நேரத்தில், எங்களுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உடையகுளம் பேரூராட்சியினுடைய எல்லையிலே, கால்நடை பராமரிப்புத் துறைக்காக 15 ஆண்டுகளுக்கு முன்பாக எடுக்கப்பட்ட 8 ஏக்கர் நிலம், யாருக்கும் பயனற்று வீணாக இருக்கின்றது. அந்த நிலத்தை அரசு நத்தமாக convert செய்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவசமாகப் பட்டா வழங்க முயற்சிக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 ஜூலை 28]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளையும் அரசு காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை இருப்பதனால் மேய்க்கால் புறம்போக்குகளை நாம் கட்டிக் காப்பாற்றுகின்ற ஒரு சூழ்நிலையும் அரசுக்கு இருக்கிறது. ஆகவே மேய்க்கால் புறம்போக்குகளில் அரசினுடைய தடை ஆணை இருப்பதனால், விதிமுறைகளின்படி அங்கே பட்டா வழங்க அனுமதியில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகட்டுவதற்கு இடம் இல்லாத ஏழைஎளிய மக்கள் 20 ஆண்டு காலமாகப் புறம்போக்கு இடங்களில் குடியிருந்து வருகின்றபோது, அவர்கள் வட்டாட்சியரைச் சந்தித்துப் பட்டா கேட்கின்றபோது, அது குளப் புறம்போக்கு, பாறைப் புறம்போக்கு என்று கூறிப் பட்டா கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால், அது குளத்திற்குப் பயன் இல்லாமல், பெயருக்குத்தான் பாறைப் புறம்போக்கு என்று இருக்கின்றது. அரசாங்கத்தின் ஒரு நன்மைக்கோ, வருவாய்க்கோ, அந்தப் பாறைப் புறம்போக்கு, வாய்ப்புக் கொடுக்கக்கூடிய ஓர் இடமாக இல்லை. அதேபோல, இந்தக் குளத்துப் புறம்போக்கு என்பதில் எந்தத் தண்ணீர் பிடிப்பும் இல்லாமல், சும்மா மேடாக இருக்கின்றது. அத்தகைய பகுதியிலேதான் 20, 30 ஆண்டு காலமாக ஏழை எளிய மக்கள் குடியிருந்து வருகிறார்கள்.

*முற்பகல் 10–15*

எனவே குளத்துப் புறம்போக்கு என்ற பெயரிலே இருக்கின்ற இடங்களில் குடியிருப்பவர்களுக்கும், பாறைப் புறம்போக்கிலே குடியிருப்பவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசில் இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் விதிகளைத் தளர்த்தி, பாறை, அரசாங்கத்திற்கு வருமானம் இல்லாது இருக்கின்ற இடமாக இருந்தாலோ, தண்ணீர் பிடிக்காத இடமாக இருந்தாலோ, அந்த இரண்டிலும் அந்த மக்களுக்கு, அதாவது அங்கே குடியிருந்து வருகிறவர்களுக்குப் பட்டா கொடுக்கும் அடிப்படையில் ஒரு அறிவிப்பை அளிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 28

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தின் தகுதியின் அடிப்படையிலும், வீட்டுமனைப் பட்டா கோருபவருடைய தகுதியின் அடிப்படையிலும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. சுப்பிரமணியன்.

**திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டைப் புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு மற்றும் குளப் புறம்போக்கு ஆகிய இடங்களில் மனைப் பட்டா வழங்கக் கூடாது என்று அரசிலே ஒரு standing order, நிலையான உத்தரவு இருக்கிறது. இருந்தாலும்கூட கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விதிமுறைகளைத் தளர்த்தி அப்படிப்பட்ட புறம்போக்கு இடங்களில் வேண்டிய ஒரு சிலருக்கு மட்டும் மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு விதிமுறையைத் தளர்த்தியதை இரத்து செய்துவிட்டார்கள். இப்போது அந்தப் பகுதியிலே குடியிருந்தவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது, எங்களுக்கு மனைப் பட்டா வழங்கப்படவில்லை என்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, விதிமுறையைத் தளர்த்தி, விடுபட்டுப் போனவர்களுக்கும் மனைப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோலத் தடையாணைக்குட்பட்ட நிலங்களில் ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு சட்டத்தில் விதிவிலக்கு அளித்து, பட்டா வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், ஒரு குளத்தில் தடையாணைக்குட்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் இருந்தால், அவர்களில் தங்களுக்கு சாதகமான, தங்களுடைய கட்சிக்காரர்களுக்கு மட்டும் பட்டா வழங்கிவிட்டு, பக்கத்தில் இருக்கின்ற பொது மக்களுக்கு, தகுதியுள்ள பொது மக்களுக்குப் பட்டா வழங்காமல் விடப்பட்டிருக்கின்றது என்ற தகவல் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றது. அந்த மாதிரி இனங்களில், பக்கம் பக்கத்தில் இருந்துகொண்டிருப்பவர்கள் வீட்டுமனை கோருபவர்கள், தகுதியுள்ளவர்கள் விடுபட்டிருந்தால் அந்த விவரங்களை அரசு அனைத்து மாவட்டங்களிலும் சேகரித்துக்கொண்டிருக்கின்றது. விவரங்கள் அரசிற்கு



2004 ஜூலை 28]

வந்தவுடன் தக்க முடிவு எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *43*, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**43—**

## அத்தியாவசிய பொருட்கள்

***36021–திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்கள் குறிப்பிட்ட நாளில் வாங்கப்பெற வேண்டும் என்றுள்ள நடைமுறையை மாற்றி மாதத்தில் அனைத்து நாட்களிலும் வழங்கலாம் என அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நியாய விலைக் கடைகள் அனைத்து வேலை நாட்களிலும் திறக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், உணவு தானியங்கள் மக்களுக்கு ஒவ்வொரு மாதமும் அனைத்து வேலை நாட்களிலும் வழங்கப்பட வேண்டும் என்றும் ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டு, அவை நடைமுறையில் உள்ளன.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களாகிய அரிசி, மண்ணெண்ணெய், சீனி, கோதுமை போன்ற பொருட்களைப் பாமர மக்களாகிய கூலித் தொழிலாளர்கள், ஒரு வாரமோ அல்லது 10 தினங்களோ வேலைபார்த்து அதற்குரிய அவர்களுடைய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, நியாய விலைக் கடைகளுக்குச் சென்று மண்ணெண்ணெய், அரிசி கொடுங்கள் என்று கேட்டால், "உங்கள் வார்டில், உங்கள் பகுதியில் நேற்றே விநியோகம் செய்து முடித்துவிட்டோம், இந்த மாத quota கிடையாது. இனி அடுத்த மாதத்திற்குத்தான் வர வேண்டும், அடுத்த மாதம் வந்து சீனி, கோதுமை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று அந்த அப்பாவி கூலித் தொழிலாளிகளைத்

[2004 ஜூலை 28

திருப்பி அனுப்பிவிடக்கூடிய ஒரு கால கட்டத்தில், ரேஷன் கடைகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் நடந்து வருகின்றார்கள். மாண்புமிகு கருணையுள்ளம் கொண்ட அம்மாவினுடைய அரசு மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய உணவுப் பொருட்கள்மேல் எவர் கை வைத்தாலும் அவர்களைக் கடுமையாக எச்சரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்கள் சர்வ சாதாரணமாக அரிசி இல்லை, மண்ணெண்ணெய் இல்லையென்று அந்த அப்பாவி மக்களைத் திருப்பிவிடக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, ஏழைக் கூலித் தொழிலாளர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், அந்த ஒரு மாதத்திற்குரிய பொருட்களை, ரேஷன் கடைகளில்போய் எப்போது வேண்டுமானாலும் அவர்கள் கையிலே பணத்தை வைத்துக்கொண்டு அரிசி, மண்ணெண்ணெய் போன்ற ரேஷன் பொருட்கள் கொடுங்கள் என்று கேட்டால், உடனடியாகக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு—பாசமிகு எங்களுடைய அருமை அண்ணன் அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாக, அன்போடு கேட்டுக்கொள்வது, இந்த ரேஷன் பொருட்களை எந்த நேரம் வேண்டுமானாலும் வாங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்றும் அதற்கு அரசு—முன்வருமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் மக்களுக்கு, அட்டைதாரர்களுக்குத் தேவையான அந்த முழு அளவுப் பொருள்களும் வாணிகக் கழகத்தால் ஒதுக்கப்படுகின்றன, தரப்படுகின்றன. அவை அங்கு சென்று சேர்கின்றன. ஆனால் துரதிருஷ்டவசமாக நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் கால கட்டத்தில், ஆட்சிக்கு எதிரான சில அரசு ஊழியர்கள், அந்த நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகிற ஊழியர்கள், அரிசி, சீமெண்ணெய் போன்றவை ஆங்கு அந்தக் கடைகளில் இருந்தபோதிலும், ஏற்கெனவே தீர்ந்துவிட்டது என்று தவறான தகவலை மக்களுக்குச் சொல்லி, மக்கள் மத்தியில் ஆட்சிக்கு ஒரு தவறான எதிர்ப்புணர்வை உருவாக்க வேண்டுமென்ற நோக்கோடு செயல்பட்ட தகவல் அரசுக்கு வந்தது. உடனடியாகத் துறையின் மேலதிகாரிகள் முடுக்கி விடப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவை குறித்து அறிவுறுத்தப்பட்டு, கடும் நடவடிக்கை இத்தகைய நியாய விலைக் கடைகள் மீது எடுக்கப்பட்டன. 15 தினங்களுக்குள் இப்படிப்பட்ட



2004 ஜூலை 28]

மோசடிகள், அரசியல் உள்நோக்கத்தோடு பணியாற்றுகிற அரசுப் பணியாளர்கள், கூட்டுறவு அங்காடிகளில் பணியாற்றுகிற பணியாளர்கள் செய்திட்ட அந்த மோசடிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை இனி எங்குமே நடக்காது. தேவைக்கேற்ப அதாவது எந்தெந்த அளவுக்கு அரிசி, மண்ணெண்ணெய் தேவையோ, அவை முழுமையாக எல்லா நியாய விலைக் கடைகளுக்கும், எல்லா அட்டைதாரர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் தரப்படுகின்றன. நடந்த நிகழ்வு, அரசில் பணியாற்றுகிற, கீழ்மட்டத்திலே அங்காடிகளில் பணியாற்றுகிற, அரசியல் தொடர்பு எதிர்க்கட்சிகளோடு கொண்டிருக்கிற, எதிர்க்கட்சிகளுடைய தூண்டுதலில் செயல்படுகிற பணியாளர்கள் மேற்கொண்ட ஒரு மோசடி நடவடிக்கை. உரிய நடவடிக்கைக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்வு எதிர்காலத்தில் நடக்காமல் அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் எந்தெந்தப் பொருள்கள், எந்தெந்த அளவில், எந்தெந்த விலையில் கொடுக்கப்படுகின்றன என்பதைப் பொதுமக்கள் அறியும்முகமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரிய பட்டியலையே கேட்கிறீர்கள் போல இருக்கிறதே?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைக்கு ஒரு நபருக்கு 12 கிலோ என அரிசி வழங்கப்படுகிறது. ஒரு நபர், ஒரு குழந்தை என்று இருக்கின்றபோது 14 கிலோ வழங்கப்படுகிறது. 2 நபர்கள், 2 குழந்தைகள் என்று இருக்கின்றபோது 16 கிலோ வழங்கப்படுகிறது. 2 நபர்கள், ஒரு குழந்தை அல்லது 3 குழந்தை என்ற நிலையில் இருக்கின்றபோது 18 கிலோ வழங்கப்படுகிறது. 3 நபர்கள் என்று இருக்கின்றபோது 20 கிலோ வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் கூடுதலாக 4 கிலோ வழங்கப்படுகிறது. அந்தியோதயா, அன்னயோஜனா திட்டத்தின்கீழ் உள்ள ஏழைகளுக்கு, வறுமைக்கோட்டு எல்லைக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு, தலா 35 கிலோ வழங்கப்படுகிறது. கோதுமையைப்

[2004 ஜூலை 28

பொறுத்தவரைக்கும் 10 கிலோ நகர்ப் புறங்களுக்கும், மாவட்டத் தலைநகரங்களுக்கும், 5 கிலோ மற்றத் தொகுதிகளுக்கும் அரிசிக்கு மேலே கூடுதலாக வழங்கப்படுகிறது. சர்க்கரை 500 கிராம் ஒரு நபருக்கு என்ற அடிப்படையில் உச்சக்கட்டமாக 2 கிலோ வழங்கப்படுகிறது; அல்லது மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்களுக்கு 3 கிலோ வழங்கப்படுகிறது. சீமெண்ணெய்யைப் பொறுத்தவரைக்கும், சென்னை மாநகராட்சி, மாவட்டத் தலைநகரங்களில் எல்.பி.ஜி. சிலிண்டர் இல்லாதவர்களுக்கு 10 லிட்டரும், ஒரு சிலிண்டர் இருப்பவர்களுக்கு 3 லிட்டரும் வழங்கப்படுகிறது. முனிசிபாலிடிகளுக்கு 6 லிட்டரும், எல்.பி.ஜி. சிலிண்டர் உள்ளவர்களுக்கு 3 லிட்டரும் வழங்கப்படுகிறது. மற்ற டவுன்களுக்கு எல்லாம் எல்.பி.ஜி. சிலிண்டர் இல்லாதவர்களுக்கு 5 லிட்டரும், ஒரு சிலிண்டர் இருப்பவர்களுக்கு 3 லிட்டரும் வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் எல்.பி.ஜி. சிலிண்டர் இல்லாதவர்களுக்கு 5 லிட்டரும், ஒரு சிலிண்டர் வைத்திருப்பவர்களுக்கு 3 லிட்டரும் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் தலைநகரங்களில் 15 லிட்டரும், முனிசிபாலிடிகளில் 15 லிட்டரும், டவுன்களில் 10 லிட்டரும் வழங்கப்படுகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகக் கடைகளில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் மாதத்தில் 2 நாட்களே வழங்கப்படுவதாகப் பொதுமக்கள் கூறுகிறார்கள். எனவே, மாதத்தில் 10 நாட்கள் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய்யைப் பொறுத்தவரைக்கும் எந்த நேரத்திலும் அதாவது எல்லா நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்றுதான் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எங்கேனும் சிற்சில இடங்களில் தவறுகள் நடந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.



2004 ஜூலை 28]

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தலுக்குப் பிறகு இந்த "எச்" முத்திரை நீக்கிய கார்டுகளுக்கு எல்லாம் அரிசி வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் கூப்பன் வாங்கத் தவறியவர்கள் எல்லாம் அந்தக் கெடு முடிந்த பிறகு—அதை வாங்காமல் இருந்துவிட்ட அட்டைகளுக்கெல்லாம்—அரிசி வேண்டுமென்று இப்போது கேட்டால், 'அதற்குத் தனியாக அனுமதிக்கு எழுதியிருக்கிறோம், அது வந்த பிறகுதான் கொடுக்கப்படும்' என்று சொல்கிறார்கள். அந்த அனுமதி கேட்டு இங்கே வந்திருக்கிறதா, அமைச்சர் அவர்கள் அந்த கூப்பன் இல்லாமல் விட்டுவிட்ட கார்டுகளுக்கு அரிசி வழங்க அனுமதிப்பார்களா என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறையிலே அரிசியைப் பெறுவதற்கு இனிமேல் கூப்பன் தேவையில்லை. கூப்பன் ஏற்கெனவே பெற்றிருந்தும் அரிசி கிடைக்காதவர்கள் மீண்டும் அவர்கள் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் செய்வதற்கு அவர்களுக்கு நிறைய வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. இன்னும்கூட அவர்கள் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் செய்வார்களேயானால் தகுதியின் அடிப்படையில்—அவர்களுக்கு அந்தத் தகுதி இருக்க வேண்டும். ஏற்கெனவே அவர்கள் இரண்டு விலாசங்களில் அந்த அட்டையை வைத்திருப்பவர்களாக இருந்தால் அவர்களுக்குக் கிடைக்காது—உண்மையிலேயே அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தால் அவர்கள் எல்லோருக்கும் அரிசி விநியோகம் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் இருக்கின்றன? இதிலே எத்தனை கடைகள் மகளிர் மூலமாக நடத்தப்படுகின்றன? நான்கூட ஒரு குழுவிலே சென்ற நேரத்திலே, பல்வேறு கடைகளை ஆய்வு செய்கின்றபோது, மகளிர் நடத்துகின்ற அந்தக் கடைகளில் மிகச் சிறப்பாக இருப்புப் பட்டியல், விநியோகப் பட்டியல் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. எனவே, வருகின்ற காலத்தில் மகளிர் நடத்துகின்ற நியாய விலைக் கடைகளை அதிகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-6-2004 முடிய நியாய விலைக் கடைகள் பற்றிய விவரத்தைக் கூறுகிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக முழுநேரக் கடைகள் 1091-ம், பகுதிநேரக் கடைகள் 58-ம், ஆக மொத்தம் 1,149 கடைகள் உள்ளன. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக முழுநேரக் கடைகள் 21,677-ம், பகுதிநேரக் கடைகள் 4,593-ம், ஆகமொத்தம் 26,270 கடைகள் உள்ளன. மாண்புமிகு அண்ணன் சந்தானம் கூறியவாறு பெண்களால் நடத்தப்படும் கடைகள் மட்டும், முழுநேரக் கடைகள் 373 கடைகள் உள்ளன. பகுதிநேரக் கடைகள் 156 உள்ளன. ஆக மொத்தம் 529 கடைகள் உள்ளன. ஏனைய கூட்டுறவுத் துறை கடைகள், முழுநேரக் கடைகள் 151, பகுதிநேரக் கடைகள் 7, ஆகமொத்தம் 158 கடைகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் நீலகிரி மாவட்டம் போன்ற மலைப் பகுதிகளில் நடமாடும் நியாய விலைக் கடைகள் உள்ளன. அங்கே முழு நேரக் கடைகளாக 36 கடைகள் உள்ளன. ஆக மொத்தம் முழுநேரக் கடைகள் 23,328-ம், பகுதிநேரக் கடைகள் 4,814-ம் ஆக மொத்தம் இப்படி நியாயவிலைக் கடைகள் ஒட்டுமொத்தமாக 28,142 கடைகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் மாதத்தில் சில குறிப்பிட்ட நாட்களில்தான் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது. அப்படி மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்போதுகூட அந்த நியாய விலைக் கடைகளில் உள்ள ஊழியர்கள் காலை 5 மணிக்கே கடையைத் திறந்து வைத்துக்கொண்டு, அங்கே இருக்கக்கூடிய கள்ள மார்க்கெட் வியாபாரிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டு காலை 9 மணிக்குள்ளாக மண்ணெண்ணெய் அனைத்தையுமே விநியோகம் செய்துவிடுகிறார்கள். காலை 5 மணிக்கே வரிசையிலே வந்து நிற்கக்கூடிய ஒருசில பொதுமக்களுக்கு மட்டும்தான் மண்ணெண்ணெய் கிடைக்கிறது; பல நியாய விலைக் கடைகளிலே, பொதுமக்கள் காலை 10 மணிக்கு வருகின்றபோது அரசு கொடுத்த அனைத்து மண்ணெண்ணெய்யையும் நாங்கள் கொடுத்தாகிவிட்டது; உங்களுக்கு இந்த மாதம் இல்லை, அடுத்த மாதம் வாருங்கள் என்று அரசின்மீது குற்றச்சாட்டை வைக்கின்றார்கள். எனவே, இதைக் கண்காணிப்பதற்காக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவினை ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, காலையிலே 5 மணி, 4 மணி என்று





கடையைத் திறப்பதற்கும் அரசு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10—30

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு, ஏழைகளின் நலன் கருதித் தரப்படுவது இந்த மண்ணெண்ணெய்த் திட்டம். இதிலே நியாயவிலைக் கடைகளில் பணியாற்றுகின்ற பணியாளர்கள், இப்படிப்பட்ட முறைகேடுகளில் ஈடுபடுவது மன்னிக்க முடியாத குற்றம்; criminal குற்றம். தற்போது இதுபோன்ற சில தகவல்கள் ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு வந்து, கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். R.D.O.-வுக்கும் தற்போது கூடுதல் பொறுப்பு, அதிகாரம், இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதுகாறும், வெறுமனே T.S.O. மட்டும் நடவடிக்கை எடுத்துவந்த நிலையை மாற்றி, R.D.O., மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அதுமட்டுமல்லாமல் Vigilance Department ஆகியவையும் இதுகுறித்துக் கடுமையான நடவடிக்கை எடுத்து, அப்படிப்பட்ட தவறு செய்கின்ற அந்தக் கூட்டுறவு நியாய விலைக் கடைப் பணியாளர்கள்மீது criminal குற்றம் சாட்டப்பட்டு, criminal நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு, கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நியாய விலைக் கடைகளில் ஏராளமான கார்டுகள் இருக்கின்றன. பல்வேறு நியாய விலைக் கடைகளில், தொலைதூரத்திற்குச் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. இவற்றையெல்லாம் சீர்படுத்துவதற்காக ஒரு சிறப்பு நடவடிக்கையாக ஒரு குறிப்பிட்ட நாளில்—எந்தெந்தக் கடைகள் பிரிக்கப்பட வேண்டும், எந்தெந்தப் பகுதிக்கு பகுதிநேரக் கடைகள் தேவை என்கின்ற அளவிற்கு— ஒரு சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்து, ஒரே நடவடிக்கையின் மூலமாக தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளைப் பிரிப்பது, இடம் மாற்றுவது போன்ற பணிகளை நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 28

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளில் அவற்றில் 500 கார்டுகளுக்குக் குறையாமலும், 800—க்கு மிகாமலும் குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்று திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. பகுதிநேரக் கடைகளுக்கு இன்னும் குறைந்த அளவே இருந்தால் போதும் என்ற நிலையிலே, 200 குடும்ப அட்டைகளாவது இருக்க வேண்டும் என்று இணைக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கு இன்னும் பகுதிநேரக் கடைகள் தேவை என்று மக்களிடமிருந்தும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் கோரிக்கை வருகிறதோ, அங்கெல்லாம் பகுதிநேரக் கடைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்கள் ஆய்வு செய்து அவற்றிற்கு அனுமதி தரலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு பரிசீலித்து எங்கெங்கு தேவையோ, அங்கு பகுதிநேரக் கடைகள் அதிகமாகத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. கே.எஸ். தென்னரசு. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**44—**

## தனி மகளிர் நீதிமன்றம்

***19405—திரு. கே.எஸ். தென்னரசு:**

*மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னையிலும், கோவையிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைத்ததுபோல் ஈரோட்டிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையிலும், கோவையிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைத்ததுபோல் ஈரோட்டிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 ஜூலை 28]

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் துவங்கியும், பல இலட்சக்கணக்கான பெண்களை மகளிர் சுய உதவிக் குழுக்களில் இணைத்தும், இந்தியாவிலேயே தமிழகத்தில் முதன்முதலாக பெண் commando படையை அமைத்தும், அதிகமான பெண் சட்டமன்ற உறுப்பினர்களை இந்த மாமன்றத்திற்கு அனுப்பியும், தமிழகத்தில் முதன்முதலாக ஒரு பெண் தலைமைச் செயலாளரை நியமித்தும், தமிழகத்திலே முதன்முதலாக வஃக்பு வாரியத்தின் தலைவராக ஒரு பெண்ணை நியமித்தும், பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்துத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இதனை மறுபரிசீலனை செய்து, பெண்ணுரிமை காத்த தந்தை பெரியார் பிறந்த மண்ணில் ஒரு தனி மகளிர் நீதிமன்றம் அடுத்த நிதியாண்டிலாவது அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, மக்கள் வாழ்வதற்குரிய ஒரு அமைதியான சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியா என்று சொல்லும்போது, மகளிருக்கு எதிரான குற்றங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில்தான் மிக, மிக, மிக, மிகக் குறைவு. எனவே, அப்படி மகளிருக்கு எதிரான குற்றங்கள் நடைபெறும்போது, அவற்றை விசாரித்து உடனடியாக நியாயம் வழங்கி, நீதி வழங்கி, தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய கொள்கை. எனவேதான் சென்னை, கோயம்புத்தூர் மட்டும் அல்லாமல் மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் போன்ற பகுதிகளில்கூட மகளிர் நீதிமன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தை நான் பாராட்டுகின்றேன், மதிக்கின்றேன். பொதுவாகவே, அவருடைய ஈரோடு தொகுதி என்று சொல்லும்போது அந்த மாவட்டத்திலே கிட்டத்தட்ட 31-12-2003 வரை பதியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 116 மட்டுமே. எனவே, குறைந்த எண்ணிக்கைக் கொண்ட 116 வழக்குகளுக்கு ஒரு மகளிர் நீதிமன்றம் அமைப்பது சாத்தியமில்லை. உண்மையிலேயே அந்தக் குற்றம் குறைவு என்று நினைக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சிகொள்ள வேண்டுமேயொழிய குற்றங்களுக்காகவே நீதிமன்றம் வர வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது என்பதுதான் என்னுடைய பதில் என்று சொல்லி அமைகின்றேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**45—**

## துணை மின் நிலையம்

***33094—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள கந்தர்வக்கோட்டையில் 5 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணி எப்போது துவங்கும்?

(ஆ) விரைந்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 24–1–2003 அன்று இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து செயலாற்றுகின்ற ஓர் அரசு என்பதற்கு உதாரணமாக—இங்கே எதிர்க் கட்சிகள் இல்லை. எனவே அவர்கள் காதிலே கேட்கின்ற வகையிலே சத்தமாகவும், ஓங்கியும் பலத்த குரலிலே, நான் அவர்கள் காதிலே விழும்படி கேட்கின்றேன்—ஓராண்டு காலத்திலேயே இந்தக் கோரிக்கை இங்கே வைத்தவுடனேயே செயலாற்றி அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிய ஓர் அரசுதான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இந்த உதாரணத்தை வைத்துப் பார்க்கும்போது எல்லாத் துறைகளும் இன்றைக்கு எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயலாற்றுகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் என்பதை நான் இங்கே தெரிவித்து திருத்தப்பட்ட விடையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியின்கண் கந்தர்வக்கோட்டையில் புதியதாக ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் ரூபாய் 8.5 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு விட்டது. இத்திட்டத்தை 2003–2004 ஆம் ஆண்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்’ என்ற வாக்கிற்கு இணங்க கேட்காமலே பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு மின் துறையிலே சட்டமன்றத்திலே இந்தக் கோரிக்கை வைத்தற்குப் பின்னாலே, ஓராண்டுக்குள்ளாகவே, மிக விரைவிலே, முடித்துக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சகத்திற்கும் தொகுதி மக்களுடைய சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஒரு கூடுதல் பலனாக இன்னொரு கோரிக்கையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன். இதிலே இந்தக் கோரிக்கையை வைத்ததற்குப் பின்னாலே, ஆதனக்கோட்டையிலே 66 கிலோ வாட் துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக உயர்த்த வேண்டுமென்று கூடுதலாகக் கோரிக்கை வைத்து இருக்கின்றோம். அந்தக் கோரிக்கையையும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதே ஓராண்டுக்குள்ளாக இந்தப் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு ஏறத்தாழ 1 கோடி, 2 கோடி அல்ல, 8 கோடி ரூபாய் செலவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். ஆக அதற்கும் இந்தத் தருணத்திலே நன்றிகள் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இதிலே குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் இன்றைக்கு இந்த ஆதனக்கோட்டை S.S. திட்டத்தின் மூலம் பயன்பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய விவசாயிகளுக்கு பகலிலே 6 மணி நேர மின்சாரமும், இரவிலே 8 மணி நேரம் மின்சாரமும் என்று மொத்தம் 14 மணி நேரம் மின்சாரம் மட்டுமே அந்த விவசாய பம்ப் மோட்டார்களுக்கு மின்சாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், பக்கத்து ஊரான ஆலங்குடியிலே, ஆலங்குடி S.S. திட்டத்தின் மூலமாக supply பெறுகின்ற அந்த

விவசாயிகளுக்கு ஏறத்தாழ பகலிலே 10 மணி நேரம், இரவிலே 10 மணி நேரம் என 20 மணி நேரம் மின்சாரம், கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே கருணை கூர்ந்து தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே–இந்த ஆதனக்கோட்டை S.S. திட்டத்தின் மூலமாக பயன்பெறுகின்ற ஏறத்தாழ நிறைய பஞ்சாயத்துகள் இருக்கின்றன–கந்தர்வக்கோட்டை மட்டுமல்லாமல் ஆதனக்கோட்டை, சோத்துப்பாளை, வளவம்பட்டி, வாராப்பூர். வடவாளம், மணவிடுதி, பெருங்களூர், அண்டகுளம், முள்ளாகோயில், முள்ளூர் எனப் பல்வேறு பஞ்சாயத்துகளுக்கு இந்த S.S. திட்டத்தின் மூலமாக 20 மணி நேரம் மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Uninterrupted quality power supply – தடையில்லா மின் வசதியைப் பெற வேண்டும் – என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு. எனவே, இந்த ஒரு சீரான மின் விநியோகம் செய்ய வேண்டுமென்றால் Grid frequency 49.7 hertz என்பதை maintain செய்தாக வேண்டும். அந்த Grid frequency–யிலே குறைந்தாலும், அதிகமானாலும் சரி அந்த Grid collapse ஆகும் ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவேதான், நாம் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த வெய்யில் காலத்தில்–கோடை காலத்தில்–7,251 மெகாவாட் பெற்று ஒரு பெரிய சாதனையைப் படைத்திருக்கின்றோம்.

எனவே, இன்னும் 5 per cent கூடுதலாக வருகின்ற ஆண்டில் நாம் எதிர்நோக்கும்போது, கிட்டத்தட்ட 7,262 மெகாவாட் நாம் எதிர்நோக்கி இருப்பது. எனவே, இருக்கின்ற system என்பதில் ஏதாவது மாற்றம் செய்தாலும்கூட கூடுதலான மின்சாரம் நமக்குத் தேவை. எனவே இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கின்றது. –ஆனால் 20 மணி நேரம், 24 மணி நேரம் மின்சாரம் தர வேண்டுமென்பதுதான் அம்மாவின் அரசினுடைய கொள்கை. எனவே–இந்த ஒரு சூழ்நிலையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டும். Capacity அதிகமாகின்றபட்சத்தில் நிச்சயமாக அவருடைய கோரிக்கை. வரும் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**46—**

## தேருக்கு இரும்புச் சக்கரம்

***48966—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமோகூரிலுள்ள அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான தேருக்கு இரும்புச் சக்கரம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், திருமோகூர், அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில் திருத்தேருக்கு இரும்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்டு, பணிகள் நிறைவு பெற்றுள்ளன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான சமயநல்லூர் தொகுதிக்குட்பட்ட திருமோகூர் அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில் பெருமைமிக்க 108 வைணவத் திருக்கோயில்களில் ஒன்றாகும். இக்கோயிலுக்குச் சொந்தமான தேருக்கு இரும்புச் சக்கரங்கள் நான்கு மற்றும் இரும்பு அச்சுகள் வாங்கி வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கோயிலுக்குச் சொந்தமான

[2004 ஜூலை 28

தேருக்கு இரும்புச் சக்கரங்கள் நான்கு மற்றும் இரும்பு அச்சுகள் வாங்க எவ்வளவு செலவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செலவானது என்ன என்று கேட்கிறீர்களா? வாங்கிக் கொடுத்துவிட்டார்களே?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், திருமோகூர் அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில் 108 திவ்யதேசங்களில் ஒன்று; நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பெருமைமிக்க 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்று. இத்திருக்கோயிலின் பசலி 1412 உதவித் தொகை நிர்ணய வருமானம் 22 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திருக்கோயிலுக்கு 1995-ல் திருப்பணிகள் செய்து குடமுழுக்குச் செய்யப்பட்டது. இத்திருக்கோயிலில் வைகாசி பிரம்மோற்சவத்தை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் வழக்கமாகத் தேரோட்டம் நடைபெறுகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான தேருக்கு இரும்புச் சக்கரங்கள் நான்கு மற்றும் இரும்பு அச்சுகள் திருச்சி, பாரத மிகுமின் தொழிலகத்தின் மூலம் ரூ.3,17,277-க்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு உரிய அங்கீகாரத்துடன் கடந்த 28-11-2003 அன்றே தேருக்குப் பொருத்தப்பட்டு, பணிகள் நிறைவுபெற்று, கடந்த வைகாசி மாதம் பிரம்மோற்சவ விழாவின்போது தேரோட்டம் நடைபெற்று உள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**47—**

## துணைச் சுகாதார நிலையம்

***37386—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, கல்லகம் ஊராட்சிக்கு துணைச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 28]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை 22-4-2003 அன்றைக்கு எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இதுபோன்ற துணைச் சுகாதார நிலையங்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்திற்கேற்ப மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய அந்தத் துணைச் சுகாதார நிலையம் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்துவரும் புள்ளம்பாடியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை, இதுவரையிலும் கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் இந்தியாவிலே இதுவரையிலும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 117 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற 2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றைய தினம் 2004 வரை, கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

48—

## மருந்து அட்டைகளில் பெயர்

***49570—திரு. மு. கார்த்தி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் மருந்துக் கடைகளில் மருந்துகளின் அட்டைகளில் பெயர்களை ஆங்கிலம் மற்றும் தமிழ்ச் சொற்களுடன் அச்சடித்து விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 49, திரு. க. பாரமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

49—

## விடுதிகளுக்குப் புதிய கட்டடம்

***32044—திரு. க. பாரமலை:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலும், பழையனூரிலும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?*





**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை மாணவர் விடுதிக்கும் மற்றும் பழையனூர் மாணவர் விடுதிக்கும் அரசு கட்டடம் கட்ட முறையே 27–6–2003–லும் மற்றும் 5–9–2003–லும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுக் கட்டடம் கட்டும் பணி நடவடிக்கையில் உள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 50, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

50—

## பேருந்து இயக்குதல்

***43588—திருமதி சி.எம். சூரியகலா:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பேரணாம்பட்டு–சென்னை அரசுப் பேருந்து வழித்தடம் எண் 84, 89 ஆகியவை பள்ளிகொண்டா வழித்தடத்திற்குப் பதிலாக வேலூர்–விரிஞ்சிபுரம்–கே.வி.குப்பம் வழியாக பேரணாம்பட்டுக்கு இயக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு–சென்னை அரசுப் பேருந்து வழித்தட எண்கள் 84, 89 ஆகியவற்றை பள்ளிகொண்டா வழித்தடத்திற்குப் பதிலாக வேலூர்–விரிஞ்சிபுரம்–கே.வி.குப்பம் வழியாக பேரணாம்பட்டுக்கு இயக்குவதற்கு சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திருமதி சி.எம். சூரியகலா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு என் பணிவான வணக்கம்.*

[2004 ஜூலை 28

பேரணாம்பட்டு—சென்னை—பள்ளிகொண்டா வழியாக நிறையப் பேருந்துகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் திருப்பத்தூரிலிருந்து புறப்படும் பேருந்துகளும் பள்ளிகொண்டா வழியாகத்தான் சென்னைக்குச் செல்கின்றன. ஆனால், பேரணாம்பட்டு, குடியாத்தம், கே.வி. குப்பம், வடுகந்தாங்கல், விருஞ்சிபுரம் வழியாகச் செல்ல பேருந்துகள் கிடையாது. 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த மார்கபந்து ஈசுவரர் ஆலயம் விரிஞ்சிபுரத்தில் உள்ளது. இங்கு முஸ்லீம் பெருமக்கள் அதிகமாக உள்ளனர். இந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கினால் பக்தர்களுக்கும், வணிகர்களுக்கும், வேலைக்குச் செல்லும் பணியாளர்களுக்கும் உதவியாக இருக்கும். பேருந்துகள் இல்லாத காரணத்தினால் இவர்கள் வேலூர் போய், சென்னைக்குச் செல்ல முன் பதிவு செய்து காத்திருக்க வேண்டும். எல்லோருடைய வசதிக்காகவும் வேண்டி 84, 89 வழித் தடப் பேருந்துகளை பொதுமக்களின் நலன் கருதி இயக்கினால் உதவியாக இருக்கும். இலாபத்தில் இயங்கும் ஏதாவது ஒரு பேருந்தை இந்த வழித்தடத்தில் இயக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடத்தில் வேலூரிலிருந்து விருஞ்சிபுரம், கே.வி.குப்பம் வழியாக அரசு நகர வழித்தட எண் 17 மூலம் வேலூர்—வி.கே. புரம் 4 நடைகளும், வேலூர்—தேவரிஷிகுப்பம் 8 நடைகளும் என 12 நடைகள் அந்த வழியிலே, அரசுப் பேருந்துகள், இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதுபோக 2 தனியார் பேருந்துகள் மூலம் தினசரி 10 நடைகளும் அந்த வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, அந்த வழித்தடத்தில் ஏற்கெனவே போதிய பேருந்து வசதிகள் இருப்பதால் இதுகுறித்து மேல் நடவடிக்கை—புதிய பேருந்துகள் அதிலே கூடுதலாக விடுவதற்கு—தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பேரணாம்பட்டு—சென்னை (வழி) பள்ளிகொண்டா என இயக்கப்படும் 84, 89 வழித்தடப் பேருந்துகள் அரசின் தக்க உரிமம் பெற்று இயக்கப்படுகின்றன. அந்த ஒரு வழித்தடத்தில் உரிமம் பெற்று இயக்கப்படுகின்ற பேருந்துகளை மற்றொரு வழித்தடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னால் அது உரிமத்தை மீறிய குற்றமாகும். எனவே, விதிமுறைப்படியும் அதற்கு சாத்தியமில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.



2004 ஜூலை 28]

**51—**

## எத்தனால் தயாரித்தல்

***5274—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெல்லப்பாகிலிருந்து எத்தனால் என்கிற இரசாயன திரவத்தைத் தயாரிக்க சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு சர்க்கரை ஆலைகளில் எத்தனால் தயாரிக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகில் உள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் சேலத்தில் உள்ள உள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வடிப்பகத்தில் எத்தனால் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வடிப்பகத்தில் எத்தனால் என்கின்ற இரசாயன திரவத்தைத் தயாரிக்க அனுமதி வழங்கினால் நலிவடைந்த நிலையில் உள்ள அந்த ஆலைகள் இலாபத்தில் இயங்குவதற்கு வழிவகுக்கும். மேலும், விவசாயிகளுக்கு நல்ல பயன் கிடைக்கும் வகையிலும் இருக்கும். ஆகவே, நமது இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு இதைக் கருத்தில் கொண்டு, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கியதைப்போல அமராவதி மற்றும் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்க முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சர்க்கரை ஆலைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால், அரசு இதுபோன்ற காரியங்களை இனிமேல் தொடர்ந்து செய்ய முடியாத சூழ்நிலையில் இருப்பதால்—அந்தத் தனியார் துறைகளில் Thiru Aruran Sugars, Shakthi Sugars, Rajshree Sugars, Tharani Sugars போன்ற ஆலைகளில் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால்—அரசு ஆலைகளுக்கு அந்த

அனுமதியை வழங்க இயலாத நிலையில் இப்போது அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சேலம் மோகனூர் சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளின் வடிப்பாலைகளில் எத்தனால் தயாரிக்கும் அனுமதியை வழங்கினால் அந்த ஆலைகள் நலிவிலிருந்து நீங்குவதுடன், ஆலையைச் சார்ந்த விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கரும்புக்குக் கூடுதல் விலை கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது. மேலும், தற்போது தமிழ்நாட்டில் 5 தனியார் ஆலைகளுக்கு எத்தனால் தயாரிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் இதன்மூலம் 200 இலட்சம் லிட்டர் எத்தனால் தயாரிக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 8 மாவட்டங்களுக்கு இந்த அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு மொத்தம் தேவைப்படுவது 500 இலட்சம் லிட்டர், அந்த 5 சதவீதம் என்ற அடிப்படையிலே. சேலம், அமராவதி ஆகிய இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கொடுத்தால், மேலும் 100 இலட்சம் லிட்டர் எத்தனால் கொடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்த இரண்டு ஆலைகளில் எத்தனால் தயாரிக்க, ஒரு ஆலைக்குக் குறைந்தது 4.25 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. தற்போது இரண்டு ஆலைகளும் திரண்ட நஷ்டத்தில் உள்ளன மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல். இருந்தாலும், கூட்டுறவுத் துறை என்ற அடிப்படையிலே, ஒரு முன்னுரிமை கொடுக்கக்கூடிய அடிப்படையிலே, bank அல்லது இதர நிறுவனங்கள் தற்போது கடன் கொடுக்கத் தயாராக இல்லாத சூழ்நிலை இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, நீண்டகாலக் கடன் அல்லது மானியம் கொடுத்தால் அல்லது வட்டியில்லாக் கடன் தந்தால் இந்த ஆலைகள் இரண்டும், 2, 3 ஆண்டுகளில் மூலதனத்தை எடுத்துவிடக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதை அன்போடு கூறிக்கொள்ளக்கூடிய வகையிலே, நம்முடைய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இரண்டுக்கு—ஒரு ஆண்டுக்கு 50,000 டன் மொலாசஸ்





இருந்தால் 100 இலட்சம் லிட்டர் எத்தனால் எடுக்கலாம். அமராவதி மட்டும் 10,000...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, கேள்வியாகப் போடுங்கள். நீங்களே பதிலையும் சொல்லிவிட்டால் அப்புறம் அமைச்சர் என்ன செய்வார்?

**திரு. சி. சண்முகவேலு:** தற்போது இரண்டு ஆலைகளுக்கும், 4 கூட்டுறவு ஆலைகளின் மொலாசஸ் இருந்தால் போதுமானதாக இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் மொலாசஸ் மூலம் எத்தனால் தயாரிக்க அனுமதி வழங்க நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 5 தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து 8 மாவட்டங்களுக்குக் கிட்டத்தட்ட 250 இலட்சம் லிட்டர் எத்தனால் என்று சொன்னார்கள். அது தவறு. 500 இலட்சம் லிட்டர் எத்தனால் ஏற்கெனவே தயாரிக்கப்படுகிறது. இந்த 500 இலட்சம் லிட்டர் எத்தனால் இந்த 8 மாவட்டங்களுக்கும் போதுமானதாக இருக்கிறது. இப்போது பணப் பிரச்சினையின் காரணமாகத்தான் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் தயாரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு இதில் கொள்கை அளவில்தான் முடிவு எடுக்கவேண்டுமே தவிர இதில் உடனடியாக முடிவு எதுவும் சொல்லமுடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனால் தயாரிப்பதன் மூலம் அரசாங்கமானது சர்க்கரை ஆலைகள் மூலமாக அதிக வருவாயை ஈட்ட முடியும். அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் நட்டத்திலே இயங்குகின்ற சர்க்கரை ஆலைகளை இலாபத்திலே இயங்கச் செய்வதற்கான ஒரு வாய்ப்பு வரும்போது அரசாங்கத்திற்குத் தடையாக இருக்கின்ற அந்த அம்சம் என்ன என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குத் தடையாக இருப்பது பணம்தான். நிதி இருந்தால்தான் நாம் எதையும் செய்யமுடியும். எத்தனால் தயாரிப்பதற்கு முதலிலே நாம் investment பண்ண வேண்டும். அதிகப்படியாக இருப்பதனால் அதைச் செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே மயிலாடுதுறை என்.பி.கே.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலைதான் அதிக இலாபத்திலே ஓடிக்கொண்டிருந்தது. அரசு அதை விரிவாக்கம் செய்யவேண்டும் என்பதற்காகவும், அரவைத் திறனை அதிகரிக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் அதைத் தனியாரிடம் கொடுத்ததன் விளைவாக அந்த ஆலை நஷ்டத்தில் இயங்கி, தற்போது பணப் பட்டுவாடா செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. எத்தனால் தயாரிப்பதன் மூலமாகத்தான் டன் ஒன்றுக்கு கரும்புக்கு 1,000 ரூபாய் தரமுடியும் என்று வேளாண் விஞ்ஞானிகள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே மயிலாடுதுறை sugar factory பக்கத்திலேயே தனியார் ஆலைகள் வந்துவிட்ட காரணத்தினால் தற்போது விவசாயிகள் மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அரசு எத்தனால் தயாரிக்க அனுமதிக்க வேண்டும். இல்லையேல், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 150 ரூபாய் போனஸ், முன்பு கொடுத்ததைப் போல் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



**52—**

### சிந்தாமணி கூட்டுறவுப் பண்டகசாலை

***7712—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நட்டத்தில் இயங்கிவரும் கோவை சிந்தாமணி கூட்டுறவுப் பண்டகசாலையை முறைப்படுத்தி, முறைகேடுகளைக் களைந்து இலாபகரமாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவுப் பண்டக சாலையை முறைப்படுத்தி, இலாபகரமாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**53—**

### கால்நடை மருத்துவமனை

***9940—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைத் தங்கள் அனுமதியுடன் பேரவைமுன் வைக்கிறேன். (அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை தொகுதி,

[2004 ஜூலை 28

மேலப்பாளையத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் தற்போதுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 15 ஆயிரமாகும் என்று எனக்குத் தகவல் தரப்பட்டுள்ளது. மேலப்பாளையம் கிளை நிலையத்தில் தினசரி 50–க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சைக்காக வருகின்றன. ஆகவே, அங்கே தற்போதுள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த அரசின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுகுறித்த கோப்புகளை அரசுக்கு அனுப்ப வேண்டப்பட்டுள்ளது என்பதையும் தங்களின் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *54*, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**54—**

## கால்நடை மருத்துவமனை

***23526—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, நாட்டேரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், நாட்டேரி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை *3725* மட்டுமே உள்ளதாலும், அதன் அருகில் *5* கி.மீ. தூரத்தில் பிரம்மதேசம் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதிநிலை காரணமாகவும், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, நாட்டேரி கிராமத்தில் எந்தவொரு கால்நடை கிளை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(ஆ) எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *55*, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**55—**

## மாசுக் கட்டுப்பாடு வாரிய விதிகள்

***38284—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் தொடங்குவதில், மாசுக் கட்டுப்பாடு வாரியம் விதித்துள்ள நடைமுறைகளைத் தளர்த்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களைக் காப்பாற்றுகின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உள்ளது. கடந்த கால தி.மு.க. அரசு சிறுதொழில்களைத் தொடங்கும்போது, மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாகக் கடுமையான விதிகளை விதித்து வந்துள்ளது. குறிப்பாக, Sago Factory, Milk Dairy, Foundry போன்ற சிறுதொழில்களைத் தொடங்க வேண்டும் என்றால், ஓடை, ஆறுகளுக்கு *5* கி.மீ. தூரத்திற்கு அப்பால்தான் தொடங்கவேண்டும் என்று விதிகள் உள்ளதாகத் தெரிகிறது. தற்போது மாசுக் கட்டுப்பாடு வாரியம், treatment plant — சுத்திகரிப்பு நிலையம் அமைத்த பிறகே, உரிமம் கொடுத்து வருகிறார்கள். சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் சுத்தப்படுத்தப்பட்ட பிறகு மாசு கிடையாது.

[2004 ஜூலை 28

அப்படியிருக்கும்போது, தொழிற்சாலைகளை 5 கி.மீ. தூரத்திற்கு அப்பால்தான் அமைக்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதிகமாக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்மீது, பொது மக்களைப் பாதிக்காதவண்ணம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 5 கி.மீ., ஆற்றிற்கு அருகில் அதிகமாக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் எதுவும் நிறுவக்கூடாது என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. உதாரணத்திற்கு, திருப்பூரில் பொது மக்கள் வழக்குத் தொடர்ந்து, ஆறு மாசுபட்டதற்கு 12 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையை திருப்பூர் சாயத் தொழிற்சாலை அதிபர்கள் கொடுக்கவேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான், அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11–00*

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்து கிலோ மீட்டர் தூரம் என்ற தொழிற்சாலைகள்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. செ. வெங்கடாஜலம்:** குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால் foundry தொழிலுக்கும் ஓடைக்கும் என்ன சம்பந்தம் என்பதே தெரியவில்லை. அப்படி இருக்கின்றபட்சத்தில் அவர்கள் foundry தொழிலை அமைக்க வேண்டுமென்றால் ஐந்து கிலோ மீட்டர் தூரம் ஓடைக்கு அப்பால் அல்லது அந்த ஆறுகளுக்கு அப்பால் இருக்க வேண்டுமென்ற அந்த விதியை உருவாக்கியிருக்கின்றார்கள். எனவே, இதையெல்லாம் அரசு அறியுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.



2004 ஜூலை 28]

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் நிறையத் தொழிற்சாலைகள் நீரைச் சுத்திகரிப்பு செய்து வெளியேவிடாமல், நேராக ஆற்றில் விட்டுவிடுவதால் நிலத்தடி நீர் மாசுபடுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். நிலமும் பாதிக்கப்படுகிறது. இதை மனதில் வைத்துத்தான் அரசு அந்த ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் மிகவும் மாசுபடுத்துகின்ற தொழிற்சாலைகளை அமைக்க ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சிய கேள்விகள் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

## (பட்டியல்கள் 8 முதல் 10 வரை)

## பட்டியல் 8

**1—**

### மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம்

**வினா எண் 44559—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள 24 வார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய தென்பாதி பகுதியில் மற்றொரு மண்ணெண்ணெய் பங்க் திறக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

---

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணையின்படி ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்துடன் 8,000 முதல் 10,000 வரை குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். அதேபோல் இலாபகரமாக தன்னாற்றல் பெற்று செயல்பட மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 50,000 லிட்டர் வரை மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படவேண்டும். சீர்காழி பகுதியில் செயல்படும் மண்ணெண்ணெய் பங்கில் 5,762 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், தென்பாதி பகுதியில் 833 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், மேலும் ஒரு மண்ணெண்ணெய் பங்க் திறப்பது என்பது ஏற்கெனவே செயல்பட்டு வரும் மண்ணெண்ணெய் நிலையத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதாலும் புதியதாக ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் ஏற்படுத்த இயலாத நிலை உள்ளது.*

**2—**

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 32028—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம் திருப்பைஞ்ஞீலியிலுள்ள ஞீலிவனேஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருப்பைஞ்ஞீலியில் உள்ள அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயில் திருப்பணி வேலைகள் அனைத்தும் உபயதாரர்கள் மூலம் சுமார் ரூ.7,00,000/- மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 6-2-2003 அன்று குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது.*





**3—**

## சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

**வினா எண் 32906—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, ஆரம்பள்ளம் ஊராட்சி, நல்லூர் சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட தகுதியானதாக இருப்பின் வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.*

**4—**

## ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்

**வினா எண் 37764—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி ஒன்றியம், பச்சூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா?*

[2004 ஜூலை 28

(ஆ) மருத்துவப் பணியாளர்கள் தங்கி முழுநேரம் பணியாற்ற நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசின் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, பச்சூர் ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) மற்றும் (இ) பச்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் தலைமையிடத்தில் தங்கி பணிபுரிய அறிவுறுத்தப்பட்டு உள்ளார்கள்.

**5—**

## சுகாதார நிலையத்தைத் தூய்மை செய்தல்

**வினா எண் 42130—திரு. டி.கே. இராஜா**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் சுகாதார நிலையத்தை சுற்றி தூய்மை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி; ஆண்டியப்பனூர் சுகாதார நிலையம் தற்போது தூய்மை செய்யப்பட்டு சுகாதார வசதியுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 28]

**6—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வசதிகள்

**வினா எண் 43830—திரு. எஸ். நடராஜன்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, பேராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வாகன வசதியும், சுற்றுச்சுவர், பணியாளர் குடியிருப்புக் கட்டடமும் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள வாகனம் பழுதடைந்து கழிவு செய்யப்பட்டு விட்டதால் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய வாகனத்தைப் பயன்படுத்த உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் மற்றும் பணியாளர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

**7—**

## சலவைப் பெட்டி வழங்குதல்

**வினா எண் 33965—திரு. கே.கே. சிவசாமி**: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கீழக்குடி பகுதியில் சலவைப் பெட்டி கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கீழக்குடி பகுதியிலிருந்து 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் சலவைப் பெட்டி கேட்டு யாரும் விண்ணப்பிக்கவில்லை. எனவே அப்பகுதியிலுள்ளவர்களுக்கு சலவைப் பெட்டி வழங்கப்படவில்லை.

8—

### மூன்று சக்கர சைக்கிள் வழங்குதல்

**வினா எண் 13174—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு எவ்வளவு பேருக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் 96 மூன்று சக்கர சைக்கிள்களும், 9 சக்கர நாற்காலிகளும் ஊனமுற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் 2001-2002 ஆம் ஆண்டில் 40 மூன்று சக்கர சைக்கிள்களும், 5 சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.

9—

### ஊனமுற்றோருக்கு அடையாள அட்டை வழங்குதல்

**வினா எண் 13176—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் உள்ள ஊனமுற்றோர் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா?



2004 ஜூலை 28]

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இத்துறை சமூக நலத் துறையின்கீழ் செயல்பட்டபோது சேலம் மாவட்டத்தில் 30,000 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. தற்போது மாவட்ட மறுவாழ்வு மையம் மூலம் 4,174 அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

10—

### ஊனமுற்றோருக்கு அடையாள அட்டை வழங்குதல்

**வினா எண் 13970—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் உடல் ஊனமுற்றோருக்கு அடையாள அட்டை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் 98 உடல் ஊனமுற்றோருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு மாதமும் முதல் திங்கட்கிழமை திருநெல்வேலி மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலகத்தில் மருத்துவர் நேரில் வந்து கவனித்து ஊனமுற்ற நபர்களுக்கு அடையாள அட்டை உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. அதுதவிர இதர அலுவலக நாட்களில் மருத்துவச் சான்று எடுத்துவரும் ஊனமுற்றோருக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

11—

### பேருந்து நிறுத்தம்

**வினா எண் 27953—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சிதம்பராபுரம், யாக்கோபுரம் வழியாக இயக்கப்படும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் அண்ணாநகர் பகுதியில் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இராதாபுரத்திலிருந்து வடக்கன்குளம் சுமார் 9.0 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. வடக்கன்குளம்-சிதம்பராபுரம்-யாக்கோபுரம் சுமார் 10.0 கிலோ மீட்டர் ஆகும். சிதம்பராபுரம்—யாக்கோபுரம் சாலை அண்ணாநகர் என்ற குடியிருப்பு பகுதி ஏதும் இல்லை. மேலும், சிதம்பராபுரத்திலிருந்து பழனூர் என்ற ஊருக்குச் செல்லும் சாலையில் புதுக்காலனி என்ற குடியிருப்புப் பகுதி ஒன்று உள்ளது. மேற்படி காலனியில் தமிழ்நாடு அரசுப் போக்குவத்துக் கழகம் மதுரையைச் சார்ந்த பேருந்து நின்று செல்கிறது.

12—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 41317—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர்–வள்ளிமலை 10–எப் வழித்தட பேருந்தை மீண்டும் வள்ளிமலையில் இரவு தங்கி புறப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வேலூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் நகர வழித்தடம் 20–ஏ வேலூர்-வள்ளிமலை தற்போது வள்ளிமலையில் இரவு தங்குதல் கொடுத்து இயக்கப்படுகிறது. கோரிக்கை வழித்தடமாகிய 10–எப் வேலூர்–வள்ளிமலை, லாலாப்பேட்டையில் இரவு தங்குதல் கொடுத்து இயக்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில், இதனை



2004 ஜூலை 28]

மாற்றி இயக்கினால், தற்போது பயன்பெற்று வரும் மக்கள் பயன் இழக்க நேரிடும். எனவே, கோரிக்கை வழித்தட பேருந்தை மீண்டும் வள்ளிமலையில் இரவு தங்கி இயக்க சாத்தியமில்லை.

13—

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 47050—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் செல்லும் வழியில் தண்டரை பகுதியில் புதியதாக துவக்கப்பட்டுள்ள ஆசான் பொறியியல் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக அவ்வழியாக செல்லும் அனைத்து நகரப் பேருந்துகளும் அங்கு நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதியின் செங்கற்பட்டு - மாமல்லபுரம் சாலையில் ஒரகடம் கூட்டுச்சாலையின் அருகில் உள்ள தண்டரையில் அமைந்துள்ள ஆசான் பொறியியல் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக அவ்வழியாக செல்லும் அனைத்து கழகப் பேருந்துகளும் நகரப் பேருந்துகள் உட்பட ஒரகடம் கூட்டுச்சாலையில் நிறுத்தி மாணவர்களை ஏற்றி இறக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

14—

## உழவு மாட்டுக் கடன் வசதி

**வினா எண் 30725—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சித்தாலிக்குப்பம் கிராம மக்களுக்கு உழவு மாட்டுக் கடன் வசதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கூட்டுறவு வங்கிகள் ஏற்கெனவே உழவு மாட்டுக் கடனை அதன் உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. பண்ருட்டி தொகுதி, சித்தாலிக்குப்பம் கிராமம், ரெங்கநாதபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் அமைந்துள்ளது. இக்கிராம மக்களுக்கு ரெங்கநாதபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும், கடலூர் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலும், சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு உழவு மாட்டுக் கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**15—**

## சாலை அமைத்தல்

**வினா எண் 39023—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் சரகம், விளாங்குளம் வன இலாகா வழியாக நெற்இருப்பு-நெய்வேலி செல்லும் பாதைக்கு சாலை அமைக்க வன இலாகா இடம் அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், இடம் வழங்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெற்இருப்பு - நெய்வேலி செல்லும் சாலையானது விழுப்புரம் வனக்கோட்டம், உளுந்தூர்பேட்டை சரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள விளாங்குளம் காப்புக் காட்டினுள் அமைந்துள்ளது. இப்பகுதி காப்புக்காடாக அறிவிக்கப்பட்டபோது, அனுமதிக்கக் கோரும் சாலைக்கு வழி உரிமம் வழங்கப்படவில்லை. எனவே, வனப் பாதுகாப்புச்



சட்டம், 1980-ன்படி மேற்காண் சாலை அமைக்க அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது. எனினும், மேற்படி சாலை அமைப்பதன் அவசியம் கருதி சம்பந்தப்பட்ட பயனீட்டாளர் அல்லது துறையினர், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980, பிரிவு 2-ன்படி உரிய செயற்குறிப்பு அனுப்பி வைத்தால் மைய அரசின் அனுமதி பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**16—**

## கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்

**வினா எண் 34468—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு என்ன வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 325 பேர்.

(இ) வாரியத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு, வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, அவர்களது பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் அடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரருக்கு நிவாரண உதவித் தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன.

[2004 ஜூலை 28

17—

## ஓவியர்கள் நல வாரியம்

**வினா எண் 34474—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 169 பேர்.

18—

## பீடித் தொழிலாளர் வீட்டுவசதி திட்டம்

**வினா எண் 48790—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தில் மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அதில் பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதி திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு



2004 ஜூலை 28]

வருகிறது. மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 20,000/- அல்லது வீடு ஒன்றின் கட்டுமானச் செலவில் 50% தொகை இதில் எது குறைவோ, அத்தொகையை பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து மானியமாக வழங்குகிறது. இதுதவிர, மாநில அரசும் பீடித் தொழிலாளர்களின்பால் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களின் சமூகப் பொருளாதார அந்தஸ்தை உயர்த்தும் நோக்கில், இத்திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு ரூ. 5,000/- வீதம் மாநில அரசின் மானியமாக வழங்குகிறது. வீடு ஒவ்வொன்றும் ரூ.40,000/- திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட வேண்டும். இதில் மத்திய, மாநில அரசுகளின் மொத்த மானியத் தொகை ரூ. 25,000/- போக மீதம் ரூ.15,000/-ஐ பயனீட்டாளர்கள் தங்களது சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்து கட்டுமானப் பணிகளை தாங்களே மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசு 1,285 பயனீட்டாளர்களுக்கு தலா ரூ. 20,000/- வீதம் மொத்தம் ரூ. 2.57 கோடி மானியமாக வழங்க நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. தமிழக அரசு மானியத் தொகையாக ரூ.5,000/- வீதம் 499 பயனீட்டாளர்களுக்கு மொத்தம் ரூ. 24,95,000/- வழங்கியுள்ளது.

19—

## மின்னணு அளவுக் கருவி பொருத்துதல்

**வினா எண் 47137—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள மீன்வளர்ச்சிக் கழகத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் (Diesel Bunk) உள்ள டீசல் விசைக் குழாயை (Diesel Pump) புதுப்பித்து மின்னணு அளவுக் கருவி (Electronic Meter) பொருத்தப்பட்ட டீசல் விசைக் குழாயை நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள மீன்வளர்ச்சிக் கழகத்தின் எரிபொருள் நிரப்பு

நிலையத்தில் (Diesel Bunk) கடந்த 14–08–2003 முதல் இரண்டு '2' Line Electronic Diesel Pump பொருத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

**20—**

## மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்துதல்

**வினா எண் 51372—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம் அணையின் அருகில் மீன்வளத் துறையின் மூலம் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம் நீர்த்தேக்கத்தில் பெரும்பகுதி கேரளா மாநிலத்தில் அமைந்துள்ளது. அதன் ஒரு சிறு பகுதியே தமிழ்நாட்டின் எல்லைக்குள் உள்ளது. அந்த சிறு பகுதி நீர்த்தேக்கத்திலும் மீன் துறை, மீன்பிடிப்பு/விற்பனையை செய்வதில்லை. இரு மாநிலங்களுக்கிடையே உள்ள நீர்ப்பரப்பானதால் அங்கு விற்பனை நிலையம் அமைத்து மீன்விற்பனை செய்வது சாத்தியமில்லை.*

**21—**

## உழவர் சந்தைகள்

**வினா எண் 4052—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் உழவர் சந்தை ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ் ஏப்ரல் 2001 ஆம் ஆண்டு வரை எத்தனை உழவர் சந்தைகள் திறக்கப்பட்டன?*



*(ஆ) இதில் எத்தனை உழவர் சந்தைகள் செயற்படாமல் உள்ளன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஏப்ரல் 2001 ஆம் ஆண்டு வரையில் தமிழகத்தில் 103 இடங்களில் உழவர் சந்தைகள் திறக்கப்பட்டன.*

*(ஆ) அவ்வாறு திறக்கப்பட்ட 103 உழவர் சந்தைகளில் 28 உழவர் சந்தைகள் போதிய வரத்து மற்றும் விவசாயிகளின் வருகை குறைவாக இருந்ததனையொட்டி செயலற்ற உழவர் சந்தைகளாகக் கருதப்பட்டு அவற்றினை மூடிவிட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் விழுப்புரம், திண்டிவனம், பெரியகுளம், போரூர், செய்யார், ஆரணி போன்ற உழவர் சந்தைகளில் வரத்து குறைவாக இருந்ததின் காரணமாக இவ்வுழவர் சந்தைகளை மூடுவது சம்பந்தமாக ஆராயப்பட்டு வருகிறது.*

**22—**

## உழவர் சந்தை

**வினா எண் 21170—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழக அரசு தொடங்கி வைத்துள்ள உழவர் சந்தையில் இடைத்தரகர், வியாபாரிகள் நுழையாமல் இருக்க அதிகாரிகளை அரசு நியமிக்க ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*சராசரி வரத்து, 10 மெட்ரிக் டன், அதற்கு மேலும் காய்கறிகள் வரத்து வரக்கூடிய உழவர் சந்தைகளில் வேளாண்மை அலுவலர் ஒருவரும், இளநிலை உதவியாளர் ஒருவரும், காவலர்கள் மூவரும் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஒரு நபர் எனவும், சராசரி வரத்து 10 மெட்ரிக் டன் அதற்கு குறைவாக காய்கறிகள் வரக்கூடிய உழவர் சந்தைகளில், உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், காவலர் மூவரும் துப்புரவுப் பணியாளர் ஒருவர் எனவும்*

[2004 ஜூலை 28

பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். பணியாற்றும் அலுவலர்கள் உழவர் சந்தைக்கு வரும் விவசாயிகளின் உறுப்பினர் அடையாள அட்டையினை சரிபார்ப்பதுடன், வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்கள் நுழையாமலும் பார்த்துக் கொள்கின்றனர். இது தவிர்த்து, விற்பனைக்குழு செயலாளர்கள் திடீர் ஆய்வு செய்து உறுப்பினர் அடையாள அட்டையினை சரிபார்த்து வருகின்றனர்.

இந்நிலையில் மேலும் புதியதாக அதிகாரிகளை நியமிக்க இயலாது.

**23—**

**உலர்களம் அமைத்தல்**

**வினா எண் 26194—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியில் அரிசிப்பாளையத்தில் ஒரு தானியம் அடிக்கும் களம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியில் அரிசிப்பாளையத்தில் சர்வே எண் 147/1-ல் உலர்களம் அமைக்க வேண்டி, புதுப்பாளையம் ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு, மேற்படி சர்வே எண்ணிற்குரிய சிட்டா அடங்கல், வரைபடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் வருவாய்த் துறையினர் ஆய்வு செய்து மேற்படி இடம் மந்தைவெளி புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டு அரசால் தடை செய்யப்பட்டுள்ளதால் மேற்படி இடத்தில் உலர்களம் கட்டுவதற்கு இயலாது. எனவே, 2004-05ஆம் நிதியாண்டில் மேற்படி கிராமத்தில் வேறு இடத்தில் உலர்களம் அமைக்க நிதிநிலையினைக் கருத்தில் கொண்டு உலர்களம் அமைத்திட இயன்றவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2004 ஜூலை 28]

**24—**

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 30537—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் வாடகை கட்டடத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்த கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி சீர்காழி நகரில் வாடகை கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் வாங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**25—**

**உணவுப் பூங்கா**

**வினா எண் 31158—திரு. ராதாரவி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உணவுப் பூங்கா தொடங்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் ஓர் உணவுப் பூங்கா, அனைத்து அடிப்படை

[2004 ஜூலை 28

வசதிகளுடன் அமைக்க அரசாணை (எம்.எஸ்.) எண் 23, வேளாண்மை (வேவி3) துறை, நாள் 23-1-2004-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதுதவிர, விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டைக்கு அருகில் இந்தியன் உணவுப் பூங்கா என்ற ஓர் உணவுப் பூங்கா, தனியாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

26—

## தர்பூசணி பயிரிடுதல்

**வினா எண் 34011—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் தர்பூசணி எத்தனை ஹெக்டேரில் கடந்த ஆண்டு பயிரிடப்பட்டது?

(ஆ) இந்த ஆண்டு எத்தனை ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு தொகுதியில் தர்பூசணிப் பயிர் 853 ஹெக்டேரிலும், 2002-03 ஆம் ஆண்டில் 904 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டது.

(ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் தர்பூசணி செங்கற்பட்டு தொகுதியில் சுமார் 950 ஹெக்டேரில் பயிரிடப்படும்.

27—

## நவப்ரா திட்டம்

**வினா எண் 34019—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர், பரமத்தி, கபிலர்மலை ஒன்றியங்களில் நவப்ரா திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் விவரம் என்ன?



2004 ஜூலை 28]

(ஆ) பயன்பெற்ற விவசாயிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி மோகனூர் மற்றும் கபிலர்மலை ஒன்றியங்களில் பரமத்தி ஒன்றியத்தில் மட்டும் மத்திய அரசின் திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி நவப்ரா திட்டம் உத்தேசமாக 5,030 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட உள்ளது.

தற்போது நவப்ரா திட்ட ஆரம்பகட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளது:

1. திட்டச் செயலாக்க முகமையாக வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த வேளாண்மை உதவிப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), திருச்செங்கோடு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

2. 11 எண்கள் நுண் நீர்வடிப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு திட்ட செயலாக்க பகுதிகள் முழுவதும் தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் 4 நீர்வடிப்பகுதி அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் பணியமர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

3. நீர்வடிப்பகுதி அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மூலம் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகள் முடிக்கப்பட்டுள்ளன:

* திட்டம் செயல்படுத்தப்பட உள்ள 11 எண்கள் நுண்நீர்வடிப்பகுதிகளிலும் திட்ட செயலாக்கப் பகுதிகளின் எல்லைவரையிலும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
* பயனாளிகள் குழுக்கள் 67 எண்கள் அமைக்கப்பட்டுள்ளன.
* திட்டப் பகுதிகளில் ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் 2, பெண்கள் சுய உதவிக்குழுக்கள் 23 என 25 சுய உதவிக்குழுக்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
* திட்ட செயலாக்கப் பகுதிகளில் திருத்தியமைக்கப்பட்ட நவப்ரா திட்டம் குறித்து விழிப்புணர்வு முகாம்கள், தெருக்கூத்து மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் மூலம் 18-7-2003—28-7-2003 ஆகிய நாட்களில் நடத்தி முடிக்கப்பட்டது.

[2004 ஜூலை 28

* தற்சமயம் நீர்வடிசங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு சங்கங்கள் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

* நீர்வடிப்பகுதிகளில் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகள் 3,500 ஆகும்.

**28—**

**உலர் களம் அமைத்தல்**

**வினா எண் 34046—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், முதலைமேடுதிட்டில் அண்ணா நகரில் வேளாண்மை செயற்பொறியியல் துறை மூலமாக களம் (நெல் அடித்தல்) அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2004-2005 நிதியாண்டின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், முதலைமேடுதிட்டில் அண்ணா நகரில் உலர்களம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் அமைக்க பரிசீலிக்கப்படும்.

**29—**

**உழவர் சந்தை திட்டம்**

**வினா எண் 34910— திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உழவர் சந்தை திட்டத்தில் அரசு அனுமதிக்கு மேல் செலவு செய்யப்பட்ட இனங்கள் மொத்தம் எத்தனை?



2004 ஜூலை 28]

(ஆ) அப்படிச் செய்யப்பட்ட செலவுகள் எவ்வாறு முறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு அனுமதிக்கு மேல் செலவு செய்யப்பட்ட இனங்கள் மொத்தம் 100.

(ஆ) இந்த 100 உழவர் சந்தைகளின் கட்டுமானப் பணிகளுக்கென அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக ஏற்பட்ட செலவினமானது அரசின் அனுமதி பெற பிரேரணைகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. அரசின் அனுமதி வழங்கப்பட்ட பின்னர் கட்டுமானப் பணிகளுக்கான கூடுதல் செலவுகள் முறைப்படுத்தப்படும்.

**30—**

**விதைகள் சேமிக்கும் கிடங்கு**

**வினா எண் 35669—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் விதைகளை சேமிக்கும் புதிய கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சங்கராபுரத்தில் ஒரு பிரதான வேளாண்மை விரிவாக்க மையமும், வடபொன்பரப்பில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களின் மூலம் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள்

[2004 ஜூலை 28

அனைத்தும் சேமிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஆகவே, அரசின் சிக்கன நடவடிக்கையை கருத்தில்கொண்டு சங்கராபுரத்தில் விதைகள் சேமிப்பதற்கு புதிய கிடங்கு அமைக்கும் திட்டம் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஆ) அரசின் நிதிநிலை சீரான பிறகு பரிசீலிக்க வாய்ப்புள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**31—**

## உலர் களம் அமைத்தல்

**வினா எண் 37748—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலக்குறிச்சி ஊராட்சி, ரங்கம்பாளையம் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, கபிலக்குறிச்சி ஊராட்சி, ரங்கம்பாளையம் கிராமத்தில் உலர்களம் கட்டுவதற்கு நிதிநிலையினை கருத்தில் கொண்டு 2004-05 ஆம் நிதியாண்டில் இயன்றவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**32—**

## தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 40763—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 28]

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு மாவட்டந்தோறும் எவ்வளவு நிலங்கள் கையகப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், விவசாயிகளின் பங்கேற்புடன் விவசாயிகளின் பட்டா நிலங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

**33—**

## வணிக மலரியல் அபிவிருத்தித் திட்டம்

**வினா எண் 41546—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வணிக மலரியல் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வணிக மலர்கள் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசின் நிதியுதவியுடனும் மாநில அரசின் பங்களிப்புடனும், வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த 2003-04 ஆம் ஆண்டில் ரூ.8.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் செலவு செய்யப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:

[2004 ஜூலை 28

### சேலம் மாவட்டம், வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்

| வ. எண் | திட்டப் பெயர் | ஒதுக்கீட்டுத் தொகை | செலவு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | பரப்பு விரிவாக்கம் | 3.625 | 3.625 |
| 2 | செயல்விளக்கப் பாத்திகள் அமைத்தல் | 1.575 | 1.575 |
| 3 | நிழல்வலை கூடாரங்கள் அமைத்தல் | 0.100 | 0.100 |
| | மொத்தம் | 8.400 | 8.400 |

இத்திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டு 100 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

**34—**

### தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு மானியம்

**வினா எண் 42608—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலைத் துறையின் விவசாயிகளுக்கு அரசு மானியம் தரும் திட்டங்கள் என்னென்ன ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு அரசு மானியம் தரும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 28]

### இணைப்பு

I. தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு அரசு மானியம் தரும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | திட்ட விவரங்கள் | வழங்கப்படும் பொருட்கள் | மானிய சதவீதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் | செடிகள் மற்றும் விதைகள் | 50% |
| 2. | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | செடிகள், இடுபொருட்கள் | 75% |
| 3. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | செடிகள், விதைகள், ஏனைய இடு பொருட்கள் | 50% |
| 4. | மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி | செடிகள், விதைகள் | 50% |

**II. மாநில மற்றும் மைய அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம் | பரப்பு விரிவாக்கத்தின் பொருட்டு செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கல் | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.3,700/- மானியம் (இவற்றில் குறைவான தொகை) |

| | | |
|---|---|---|
| 2. ஒருங்கிணைந்த பழப்பயிர்கள் மேம்பாட்டுத் திட்டம் | (i) பரப்பு விரிவாக்கத்தின் கீழ் கொய்யா, நெல்லி, சிட்ரஸ் போன்ற பழச் செடிகள் வழங்கல். | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.1,750/- (குறைவான தொகை) |
| | (ii) மா, சப்போட்டா போன்ற பழச்செடிகள் வழங்க. | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.2,500/- (குறைவான தொகை) |
| | (iii) திசு வளர்ப்பு வாழை மற்றும் பைன் ஆப்பிள் பழச்செடிகள் பயிரிட | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.7,500/- (குறைவான தொகை) |
| | (iv) திராட்சை மற்றும் ஸ்ட்ராபரி பழங்கள் | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.17,500/- (குறைவான தொகை) |
| | (v) ஜாக், ஜாமூன் போன்ற பழ வகைகள். | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.1,750/- (குறைவான தொகை) |





**உற்பத்தியைப் பெருக்குதல்**

| | | |
|---|---|---|
| | (i) பயிர்களில் உயிரியல் பூச்சிகள் மூலமாக (பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல்) | ஒரு ஹெக்டருக்கு ரூ.2,500/- வரை மானியம் |
| | (ii) பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் வழங்கும் பொருட்டு | 25% மானியம் அல்லது ஒரு அலகிற்கு ரூ.5,000/- (குறைவான தொகை) |
| | விவசாயிகளுக்குப் பயிற்சி | ஒரு விவசாயிக்கு ரூ.1,500/- வரை மானிய உதவி. |
| | **(1) பரப்பு விரிவாக்கம்** | |
| 3. ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் | (i) மஞ்சள் | 25% மானியம் அல்லது ரூ.4,000/- ஒரு ஹெக்டருக்கு |
| | (ii) மிளகாய் | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.1,250/- |
| | (iii) கரு மிளகு | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ.3,500/- |

[2004 ஜூலை 28

| | |
|---|---|
| (iv) வெனிலா | 25% மானியம் அல்லது ஒரு ஹெக்டருக்கு ரூ.10,000/- <br> இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது |

**(2) செயல் விளக்க பாத்திகள் அமைத்தல்**

| | |
|---|---|
| (i) மஞ்சள் | 25% மானியம் அல்லது 0.1 ஹெக்டர் பரப்பிற்கு ரூ.1,250/- |
| (ii) மிளகாய் | 25% மானியம் அல்லது 0.1 ஹெக்டருக்கு ரூ.750/- |
| (iii) மூலிகை நறுமணப் பயிர்கள் | 25% மானியம் அல்லது 0.1 ஹெக்டருக்கு ரூ.1,000/- |

**(3) அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

ரூ.12.5 இலட்சம், அரசு சாரா நிறுவனங்கள், அரசு தோட்டக்கலைப் பண்ணை சான்று பெற்ற தனியார் விதை உற்பத்தியாளர்கள் ஆகியவைக்கு மானியம்.

இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.



2004 ஜூலை 28]

**(4) ஒருங்கிணைந்த காய்கறி அபிவிருத்தித் திட்டம்**

| | |
|---|---|
| (i) உற்பத்தியைப் பெருக்க ஒருங்கிணைந்த திட்டம் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தல். | ஒரு ஹெக்டருக்கு ரூ.1,500/- அல்லது 25% மானியம் |
| (ii) விவசாயி முன்னிலையில் வயல் விளக்க பாத்திகள் அமைத்தல். | ஒரு ஹெக்டருக்கு ரூ.10,000/- அதிகபட்சம் |
| (iii) விதை கிராமத் திட்டம் | 25% மானியம் அல்லது ரூ.2.50/-இலட்சம் மானியம் (விவசாயி குழுக்களுக்கு) |
| (iv) பயிற்சி மற்றும் பயணம் | ரூ.1500/- வரை ஒரு விவசாயிக்கு மானிய உதவி |

**5. ஒருங்கிணைந்த மருத்துவ பயிர்கள் மற்றும் மூலிகை மேம்பாட்டுத் திட்டம்**

| | |
|---|---|
| (i) பரப்பு விரிவாக்கம் | 25% மானியம் (அல்லது) ஒரு ஹெக்டருக்கு ரூ. 12,500/- வரை மானிய உதவி இவற்றுள் குறைவான தொகை |
| (ii) விதை உற்பத்தி மற்றும் விளக்கப் பாத்திகள் விவசாயிகளின் நிலத்தில் அமைத்தல் | 25% மானியம் அல்லது 0.05 ஹெக்டருக்கு ரூ.750/- வரை அதிகபட்ச மானிய உதவி |

| | | |
|---|---|---|
| | (iii) வாலை வடித்தல் அமைப்புகள் ஏற்படுத்துதல். | 25% மானியம் அல்லது ஒரு அலகிற்கு ரூ.25,000/- இவற்றுள் குறைவான தொகை. |
| | (iv) மருத்துவ சிறுதளைகள் வழங்கல் | 25% மானியம் அல்லது 0.01 ஹெக்டர் பரப்பில் ஒரு தளைக்கு ரூ.3,500/- வரை |
| 6. ஒருங்கிணைந்த கொக்கோ மேம்பாட்டுத் திட்டம் | பரப்பு விரிவாக்கம் | ஒரு ஹெக்டர் பரப்பிற்கு ரூ.8,000/- வரை மானிய உதவி |
| 7. வணிக மலரியல் அபிவிருத்தித் திட்டம் | (1) பரப்பு விரிவாக்கம் (i) பல்பஸ் வகை (Bulbous variety) | 25% மானியம் அல்லது 0.2 ஹெக்டருக்கு ரூ.10,000/- வரை மானிய உதவி |
| | (ii) ஒட்டுக்கிளை வகை (ரோஜா போன்றவை) | 25% மானியம் அல்லது 0.2 ஹெக்டருக்கு ரூ.17,500/- வரை மானிய உதவி |
| | (iii) விதை வகைகள் | 25% மானியம் அல்லது 0.2 ஹெக்டருக்கு ரூ.2,000/- வரை மானிய உதவி |
| | (2) விளக்க பாத்திகள் அமைக்கும் பொருட்டு | 0.40 ஹெக்டர் பரப்பு உள்ள ஓர் அலகுக்கு ரூ.60,000/- வரை உதவி. |





| | | |
|---|---|---|
| | (3) நிழல் வலை அமைக்க | 500 சதுர அடி கொண்ட ஓர் அலகிற்கு ரூ.50,000/- வரை நிதி உதவி. |
| | (4) மலர் கையாளுகை கூடம் (Handling Units) அமைக்க | ஓர் அலகிற்கு - ரூ.1.00 இலட்சம் வரை அமைக்க நிதியுதவி (தொடரா செலவினம்). |
| | (5) மலர் ஏல மையம் (மாதிரி மலரியல் மையம்) | ஒரு மையத்திற்கு ரூ.1.00 இலட்சம் வரை நிதி உதவி (தொடரா செலவினம்) |
| | (6) ஆலோசனை/ சாத்தியக் கூறுகள் (மலரியல் தொடர்பானது) | ரூ.1.00 இலட்சம் வரை நிதி உதவி |
| | (7) மாதிரி மலரியல் வளர்ப்பிடம் வளர்ச்சி | ஒரு வளர்ப்பிட (Nursery) வளர்ச்சிக்கு ரூ.5.00 இலட்சம் வரை நிதியுதவி (அரசு நிறுவனங்களுக்கு மட்டும்) |
| | (8) பயிற்சி | ஒரு விவசாயிக்கு ரூ.1,000/- வரை நிதியுதவி. |
| 8. காளான் வளர்ச்சி திட்டம் | பயிற்சி | ஒரு விவசாயிக்கு ரூ.500/- வரை நிதியுதவி. |
| 9. குழைமப் பயன்பாட்டின் மூலம் தோட்டக் கலை வளர்ச்சி | (1) பசுமைக் குடில் விளக்க திட்டம் | 25% மானிய உதவி (அதிகபட்சம் ரூ.40,000 500 ச. மீட்டருக்கு நிதியுதவி). |

[2004 ஜூலை 28

| | | |
|---|---|---|
| | (2) நிழல்வலை குடில் அமைத்தல் | 25% மானிய உதவி (ஒரு ச. அடிக்கு ரூ.7 வரை மானிய உதவி. ஒரு விவசாயிக்கு அதிக பட்சம் 500 ச. மீட்டர் வரை உதவி.) |
| 10 தோட்டக்கலைத் துறையில் புதிய முயற்சிகள் | (1) நாற்றங்கால் வளர்ப்பிடம் (Nursery village) அமைத்தல்/ வளர்ச்சிக்கு உதவுதல் | ஒரு எக்டருக்கு ரூ.10,000 வரை மானிய உதவி |
| | 2) நவீன உயர் தொழில்நுட்ப விளக்க பாத்தி-களை விவசாயிகள் வயல்களில் அமைத்தல். | தொழில்நுட்பத்தைப் பயிற்றுவிப்பர்வகளுக்கு மாதம் ரூ.5,000 வரை படி |
| | (3) மாம்பழத் தோட்டங்களில் ஈராண்டுக்கு ஒருமுறை அறுவடை தொடர்பான சிறப்புத் திட்டம் | ஒரு எக்டருக்கு ரூ.2,000 வரை நிதியுதவி |
| | (4) பயிற்சி (துறையின் களப் பணியாளர்களுக்கு) | ரூ.6,000 வரை நிதியுதவி |

இத்திட்டங்கள் யாவும் தற்போது மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இத்திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துவதற்காக தோட்டக்கலைத் துறையின் மூலம் கையேடுகளும் வெளியிடப்பட்டுள்ளன.



2004 ஜூலை 28]

35—

### சிமெண்ட் களம் அமைத்தல்

**வினா எண் 44414—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், ஆதமங்கலம் ஊராட்சியில் வேளாண்மை விற்பனை குழுவின் மூலம் சிமெண்ட் களம் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) 2004-05 ஆம் நிதியாண்டின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், ஆதமங்கலம் ஊராட்சிக்கு விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய அளவில் சிமெண்ட் களம் அமைத்துக் கொடுக்க இயன்றவரை நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

36—

### விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கல்

**வினா எண் 48441—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நஷ்டத்திலுள்ள விவசாயிகளுக்கு உரம், யூரியா, பொட்டாஷ் போன்றவைகளை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 28

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கட்டுப்பாடு உரமான (Controlled) யூரியா உரத்திற்கு, மைய அரசே விலை நிர்ணயம் செய்து மானியத்தினை உற்பத்தியாளர்களுக்கு நேரடியாக வழங்கி வருகிறது. மைய அரசின் விலை நிர்ணய அடிப்படையில் அதிகபட்ச உரவிற்பனை விலை (Maximum Retail Price) வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டு, அனைத்து உற்பத்தியாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. யூரியா தவிர கட்டுப்பாடற்ற உரங்களான (Decontrolled Fertilisers) பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் போன்ற இதர உரங்களுக்கும் மைய அரசு, உற்பத்தியாளர்களுக்கு நேரடியாக மானியம் வழங்கி வருகிறது. தமிழக அரசு வேளாண்மைத் துறையினால் அதிகபட்ச விற்பனை விலை (MRP) நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்படுகிறது. இதனை அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

மானிய விலையில் விற்பனை செய்யப்படும் உரங்களின் விலை விவரம் (அதிகபட்ச விற்பனை விலை) (MRP)

| உரங்கள் | 12-03-2003 முதல் அதிகபட்ச உர விற்பனை விலை விவரம் | | | |
|---|---|---|---|---|
| | ரூபாய் டன்னுக்கு | | ரூபாய் 50 கிலோ மூட்டைக்கு | |
| | தனியார் விற்பனையாளர் | கூட்டுறவு விற்பனை-யாளர் | தனியார் விற்பனை-யாளர் | கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள் |
| யூரியா (46%) | 5025.30 | 5024.46 | 251.27 | 251.22 |



2004 ஜூலை 28]

கட்டுப்பாடற்ற உரங்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டு விற்பனை விலை:—

| வ. எண் | உரங்கள் | 12-3-2003 முதல் 2003-2004 ஆம் ஆண்டு அதிகபட்ச உர விற்பனை விலை விவரம் | |
|---|---|---|---|
| | | ரூபாய்/டன்னுக்கு தனியார் விற்பனையாளர் | ரூபாய்/50 கிலோ மூட்டைக்கு தனியார் விற்பனையாளர் |
| (1) | (2) | (3) | (4) |
| 1. | டை அமோனியம் பாஸ்பேட் (டி.ஏ.பி.) | 9730.10 | 486.51 |
| 2. | மியூரியேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.) | 4633.71 | 231.69 |
| 3. | போரான் அடங்கிய சூப்பர் பாஸ்பேட் பவுடர் வடிவம் | 3556.22 | 177.81 |
| | போரான் அடங்கிய சூப்பர் பாஸ்பேட் துகள் வடிவம் | 3756.28 | 187.81 |
| 4. | காம்பிளக்ஸ் உரங்கள்— | | |
| | 10:26:26 | 8705.26 | 435.28 |
| | 12:32:16 | 8830.70 | 441.54 |
| | 14:28:14 | 8643.14 | 432.16 |
| | 14:35:14 | 9018.26 | 450.91 |
| | 15:15:15 | 7267.70 | 363.39 |
| | 16:20:0 | 7792.74 | 369.64 |
| | 17:17:17 | 8434.74 | 421.74 |
| | 19:19:19 | 8643.14 | 432.16 |
| | 20:20:0 | 7580.30 | 379.02 |
| | 23:23:0 | 8330.54 | 416.53 |
| | 28:28:0 | 9455.90 | 472.80 |

மேற்படி விலைக்கு மிகாமல் விற்பனை நிலையங்களிலிருந்து உர விற்பனை மேற்கொள்ளப்படுவது, வேளாண்மைத் துறை தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களால் ஆய்வு மேற்கொண்டு சரிபார்க்கப்படுகிறது.

இலவசமாக உரங்கள் வழங்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**37—**

## வேளாண்மைத் துறையில் புதிய கண்டுபிடிப்பு

**வினா எண் 48443—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறையில் புதிய இரக நெல், கோதுமை, ராகி, கம்பு, சோளம் போன்றவைகளை கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடர் முயற்சியாக புதிய இரக நெல், கோதுமை, கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகியவற்றின் புதிய இரகங்களை உருவாக்குவதில் முனைந்து ஈடுபட்டுள்ளது. கோவையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக 2003-2004 காலகட்டத்தில் கோதுமையில் எச்.டபிள்யூ-3070, எச்.டபிள்யூ-3094 என்ற வளர்ப்புகள் அனுசரணை ஆராய்ச்சித் திடலில் உழவர்கள் வயலில் நல்ல விளைச்சலைத் தந்த வண்ணம் உள்ளன. ராகியில் கோ (ஆர்.ஏ) 14 என்ற புதிய இரகம் இந்த வருடம் வெளியிடத் தகுதி பெற்றுள்ளது. அவ்விதமே கோ (சியு) 9 என்ற புதிய கம்பு இரகம் 2004-ல் வெளிவர இருக்கிறது. சோளம் டி.என்.எஸ்.590 என்ற வளர்ப்பு பல இடப் பரிசோதனையில் உள்ளது.

தானிய மக்காச் சோளத்தில் கோ.எச்.எம்4 என்ற ஒட்டு இரகம் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. கோழி பண்ணையாளர்களால்



மிகவும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. யு.எம்.எச்.12 என்ற இரகம் அடுத்த ஆண்டு வெளியிட தயாராக உள்ளது. மேலும் சி.பி.எம்.003 மற்றும் சி.பி.எம்.006 என்ற இரண்டு வழி ஒட்டு மக்காச்சோளம் சிறந்த டென்ட் (Dent) மக்காச் சோளமாக தேர்வு செய்யப்பட்டு சோதனையில் உள்ளது. தரம் மிக்க புரதம் கொண்ட மக்காச்சோள இரகங்களை உருவாக்க ஆய்வுகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மற்றும் தினை, பனிவரகு, சாமை போன்ற குறுதானியங்களில் பத்துக்கும் மேற்பட்ட வளர்ப்புகள் பரிசோதனையில் உள்ளன.

நெல்லில் குறுகிய கால வளர்ப்பான ஏடி.95128 மற்றும் நீண்ட கால வளர்ப்பான ஏடி.99039 ஆகியவை அனுசரணை ஆய்வுத் திடலில் உள்ளன. தகுந்த மகசூல் மற்றும் சமையல் பண்புகளுக்கான சோதனைகளுக்குப் பின் புதிய உயர் விளைச்சல் இரகங்களாக இவற்றை வெளியிட வாய்ப்பு உள்ளது.

**38—**

## மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 13929—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், இருளங்குப்பம் மயானத்தில் கொட்டகை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், இருளங்குப்பம் மயானத்தில் எரியூட்டும் கொட்டகை நகராட்சியால் கட்டித் தரப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 28

39—

## தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா எண் 18241—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பழைய கொண்டஞ்சேரி கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பழைய கொண்டஞ்சேரி கிராமத்தில் 2002-2003 ஆம் ஆண்டிற்கான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 10 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

40—

## ஆதிதிராவிடர் குடியிருப்புகளை சீரமைத்தல்

**வினா எண் 18619—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், முக்கூட்டுமலை ஊராட்சியில் பழுதடைந்துள்ள 19 ஆதிதிராவிடர் குடியிருப்புகளை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 28]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

41—

## ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு விடுகள்

**வினா எண் 22141—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடு கட்டித் தர மத்திய அரசு வழங்கிய மானிய தொகை எவ்வளவு?

(ஆ) அதில் எத்தனை வீடுகள் கட்டித் தரப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடு கட்டித் தர மத்திய அரசு சேலம் மாவட்டத்திற்கு ரூ.173.40 இலட்சம் மானியத் தொகையாக வழங்கியுள்ளது.

(ஆ) வழங்கப்பட்ட மானியத் தொகையில் 1,156 தொகுப்பு வீடுகள் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளன.

42—

## மீனவர்களுக்கு இலவச விடுகள்

**வினா எண் 22328—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் வாழும் உள்நாட்டு மீனவர்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய தகவல்களை அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீனவர்கள் வாழும் பகுதி எடப்பாடி நகராட்சியினை சார்ந்தது. சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படும் தொகுப்பு வீடுகள் தொடர்பான திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, தொகுப்பு வீடுகளை சேலம் மாவட்டத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்திடவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு மீனவர்கள் எடப்பாடி நகராட்சி பகுதிகளில் வசித்து வருவதால், அவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வாய்ப்பில்லை.

**43—**

### சமத்துவபுரம்

**வினா எண் 23327—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் எத்தனை பெரியார் நினைவு சமத்துவபுரம் திறக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் 135 பெரியார் நினைவு சமத்துவபுரம் திறக்கப்பட்டுள்ளன.



2004 ஜூலை 28]

**44—**

### ஆதிதிராவிட மக்களுக்கு காலனி வீடுகள்

**வினா எண் 29300—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, சீர்காழி ஒன்றியம், ராதாநல்லூர் ஊராட்சி ஆதிதிராவிட மக்களுக்கு காலனி வீடு கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், ராதாநல்லூர் ஊராட்சியில் அடங்கிய ஆலங்காடு கிராமத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 12 ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ராதாநல்லூர் ஊராட்சி 2003-2004 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்படவில்லை.

**45—**

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 29313—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 56 வள்ளுவக்குடியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 ஜூலை 28

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், 56 வள்ளுவக்குடி ஊராட்சியில் 2000-2001 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் 10 ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.*

**46—**

## காலனி வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம்

**வினா எண் 29345—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திட்டை ஊராட்சியிலுள்ள கீழத்தெரு கிராமத்திலுள்ள காலனி வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**47—**

## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

**வினா எண் 30320—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 28]

*(அ) சேலம் மாவட்டத்தில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் நிதியாண்டில் எத்தனை புதிய வீடுகள் கட்டப்பட்டன?*

*(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் நிதியாண்டில் ரூ.192.620 இலட்சம் மதிப்பீட்டில் 1,226 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.*

**48—**

## பிரதம மந்திரி வளர்ச்சித் திட்டம் (ஊரக குடியிருப்பு வசதி)

**வினா எண் 30393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பிரதம மந்திரி வளர்ச்சி திட்டத்தின் (ஊரக குடியிருப்பு வசதி) கீழ் 2001-2002ஆம் நிதியாண்டில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?*

*(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், பிரதம மந்திரி வளர்ச்சி திட்டத்தின் (ஊரக குடியிருப்பு வசதி) கீழ் 2001-2002ஆம் நிதியாண்டில் ரூ.70.400 இலட்சங்கள் மதிப்பீட்டில் 220 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.*

**49—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 31285—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 2001-2002 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் எத்தனை கட்டி முடிக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 2001-2002 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ரூ.31,04,000/- மதிப்பீட்டில் 97 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**50—**

## இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்

**வினா எண் 31525—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதுவரை எத்தனை இந்திரா நினைவுக் குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் நிதியாண்டில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ரூ.435.52 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அதில் 1361 தொகுப்பு வீடுகள் கட்டும் பணி செயல்படுத்தப்பட்டு, இதுவரை 1338 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 23 தொகுப்பு வீடுகளுக்கான பணியும் முடியும் தருவாயில் உள்ளது.

**51—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 31965—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடர் நலத் துறையால் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் 2001-2002ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளினால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை.

**52—**

## தொகுப்பு வீடுகளைச் செப்பனிடல்

**வினா எண் 32815—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, அம்பலூர் ஊராட்சி, வடக்குப்பட்டு கிராமத்தில் தொகுப்பு வீடுகளின் மேற்கூரை பழுதடைந்து உள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**53—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 33239—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், சந்திரப்பட்டி ஊராட்சி வெள்ளிமலையில் பழங்குடி மக்களுக்கான தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.





**54—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 33793—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் ஒன்றியம், ஜமீன் கிராமத்திற்கு இலவச தொகுப்பு வீடுகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் ஒன்றியம், குளித்தகை ஜமீன் ஊராட்சியில் 1998-99ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 2002-2003-ல் 10 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**55—**

## கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம்

**வினா எண் 35897—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சி, வள்ளுவக்குடியில் புதிய கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடியில் 2003-2004ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.*

**56—**

**கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 35900—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கொண்டல் ஊராட்சி, கொண்டலில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், கொண்டல் ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்ட நிர்வாகம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணி துவங்கப்பட்டு கட்டடம் கட்டித் தரப்படும்.*

**57—**

**மயானத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்தல்**

**வினா எண் 37763—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், நரவிந்தம்பட்டி கிராமத்தில் உள்ள சுடுகாட்டிற்கு சுற்றுச்சுவர் அமைத்து எரியூட்டும் கூரை அமைத்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், நத்தம் ஊராட்சி, நரவிந்தம்பட்டி கிராமத்தில் உள்ள சுடுகாட்டிற்கு சுற்றுச்சுவர் மற்றும் எரியூட்டும் கூரை அமைக்கத் திட்டம் ஏதுமில்லை. மேலும் மேற்கண்ட திட்டத்திற்கு ஊராட்சியில் போதிய நிதி ஆதாரம் ஏதும் இல்லை.*

**58—**

**கச்சா வீடுகள் வழங்கும் திட்டம்**

**வினா எண் 37859—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் தொகுதி, மத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கே. பாப்பாரப்பட்டி ஊராட்சி கிராமங்களில் பிற்பட்டோருக்கு கச்சா வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, மத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கே.பாப்பாரப்பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கு கச்சா வீடுகள் வழங்கும் திட்டம் நடப்பு நிதியாண்டில் (2003-2004) இல்லை.*

[2004 ஜூலை 28

**59—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 38368—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரணாம்பட்டு தொகுதி, சென்டத்தூர் கிராம பஞ்சாயத்தில் இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி சென்டத்தூர் ஊராட்சியில் 2001-02ஆம் ஆண்டில் 16 ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் நிதியாண்டில் மேற்படி ஊராட்சிக்கு தொகுப்பு வீடுகள் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.*

**60—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 38369—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரணாம்பட்டு தொகுதியை சார்ந்த சின்னதாமல் செருவு கிராமத்திற்கு இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி சின்னதாமல் செருவு ஊராட்சியில் 2002-03 ஆம் ஆண்டில் 5 ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. 2003-04 ஆம் நிதியாண்டில் மேற்படி ஊராட்சிக்கு தொகுப்பு வீடுகள் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.*

**61—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 38371—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரணாம்பட்டு தொகுதி, எம்.வி.குப்பம் கிராம பஞ்சாயத்தில் இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், எம்.வி.குப்பம் ஊராட்சிக்கு 1998-99 ஆம் நிதியாண்டில் 30 தொகுப்பு வீடுகளும் 2002-2003 ஆம் நிதியாண்டில் 1 தொகுப்பு வீடு ஒதுக்கீடும் ஆக மொத்தம் 31 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.*

**62—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 38374—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) பேரணாம்பட்டு தொகுதி, துத்திப்பட்டு கிராம பஞ்சாயத்தில் தொகுப்பு வீடுகள் வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2003-04 ஆம் நிதியாண்டில், வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த துத்திப்பட்டு கிராம ஊராட்சியில் 10 ஆதிதிராவிடர் இன பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**63—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 40683—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், பூவுற்றக்குடி ஆதிதிராவிட காலனியில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.



2004 ஜூலை 28]

**64—**

## தொகுப்பு விடுகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 40927—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, பல்லலப்பள்ளி ஊராட்சியில் ஆதிதிராவிடர் காலனியில் தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளதை புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**65—**

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 41098—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சட்டமன்ற மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு மூலம் பணிகள் செய்த ஒப்பந்ததாரர்களுக்கு உரிய பணத்தை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளின் பட்டியல்களுக்கான தொகைகளும் முழுமையாக விடுவிக்கப்பட்டு விட்டன.

**66—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 41449—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், அம்பட்டையன்பட்டி பாண்டிய நகர் பகுதிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியம், அம்பட்டையன்பட்டி பாண்டியன் நகர் பகுதிக்கு 2003 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுவஜல்தாரா குடிநீர்த் திட்டத்தின்கீழ், ஒரு தனி மின்விசைத் திட்டத்துடன் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் பராமரிப்பிற்காக ஊராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 28]

**67—**

**தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 41547—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஆளப்பிறந்தான் ஊராட்சி, பெருமாள்பட்டி ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகள் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**68—**

**தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 41549—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், இடையார் ஊராட்சி, இடையார் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

[2004 ஜூலை 28

எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

69—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41552—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், கொடிவயல் கிழக்கு ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

70—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41553—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், சுப்பிரமணியபுரம் ஊராட்சி, சுப்பிரமணியபுரம் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

71—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41556—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், நாகுடி ஊராட்சி, மாணவநல்லூர் கிராம ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

72—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41558—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஏகப்பெருமாளூர் ஊராட்சி, கண்டிச்சங்காடு ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**73—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41559—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அத்தாணி ஊராட்சி, காக்கமங்கலம் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.





**74—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41560—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அத்தாணி ஊராட்சி, தோப்புவயல் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**75—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41562—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், பஞ்சாத்தி ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

[2004 ஜூலை 28

76—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41564—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மேலப்பட்டு ஊராட்சி, வாரப்பூர் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

77—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41566—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மங்களநாடு ஊராட்சி, மங்களநாடு ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.



2004 ஜூலை 28]

78—

## தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா எண் 41653—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியம், கோட்டைப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த அருந்ததியர் இனத்தவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஒன்றியம், கோட்டைப்பட்டினம் ஊராட்சி, இமாம் நகரிலுள்ள அருந்ததியர் இன மக்களில் 189 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர்களில் 2003-2004 ஆம் நிதியாண்டில் பாரதப் பிரதமர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 4 நபர்களுக்கு தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

79—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 42229—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், நாகுடி ஊராட்சி, களக்குடி குடியிருப்பில் தாழ்த்தப்பட்டோருக்கு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், நாகுடி ஊராட்சியில் 1989-90 ஆம் ஆண்டில் 20 தொகுப்பு வீடுகளும்,

[2004 ஜூலை 28

1996-97 ஆம் ஆண்டில் 30 தொகுப்பு வீடுகளும், 2002-2003 ஆம் ஆண்டில் 22 தொகுப்பு வீடுகளும் ஆக மொத்தம் 72 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 5 வீடுகள் மட்டும் இதர இனத்திற்கு கட்டப்பட்டுள்ளன. நாகுடி ஊராட்சி களக்குடி கிராமத்தில் 2002-03 ஆம் ஆண்டில் 3 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு கட்டப்பட்டுள்ளன.

**80—**

**தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 42243—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, தண்டலை ஊராட்சி, வேட்டணிவயல் ஆதிதிராவிடர் காலனி தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**81—**

**தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 42252—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மேலப்பட்டு, ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**82—**

**தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 42253—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், நாட்டுமங்களம், ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பர்ம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**83—**

**பொது குடிநீர் குழாய் அமைத்தல்**

**வினா எண் 43188—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கிருஷ்ணன்குப்பம் கிராமத்தில் கூடுதலாக பொது குடிநீர் குழாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த கிருஷ்ணன்குப்பம் கிராமத்தில் மக்கள் பங்கேற்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தில் மக்கள் தொகைக்கேற்ப நான்கு பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**84—**

## இலவச வீடுகள் கட்டுதல்

**வினா எண் 43844—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், ஓவியம்பாளையம் காலனிக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், ஓவியம்பாளையம் காலனி பேரூராட்சி பகுதியைச் சார்ந்தது. பேரூராட்சி பகுதியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் நடைமுறையில் இல்லை.



D V211,3 ; 04 Y04.61.1

**85—**

## இலவச வீடுகள் கட்டுதல்

**வினா எண் 43845—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், எம். இராசாம்பாளையம் அருந்ததியர் தெரு மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், எம். இராசாம்பாளையம் அருந்ததியர் தெரு மக்களுக்கு இதுவரை 25 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

**86—**

## இலவச வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 43851—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சோழசிராமணி, சத்திபாளையம் காலனி மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

22619 சென்னை-600 009 நூலகம்

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சோழசிராமணி சத்திபாளையம் காலனி மக்களுக்கு இதுவரை 31 தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு உள்ளன.*

**87—**

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 43959—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், நல்லூர் கிராமம், கவுண்டிபாளையத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் கிராமம், கவுண்டிபாளையத்தில் இதுவரை 10 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.*

**88—**

## கச்சா வீடுகள் சீரமைக்கும் திட்டம்

**வினா எண் 44069—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) 2002–2003ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை ஆதிதிராவிடர் வீடுகளுக்கு கச்சா வீடுகள் சீரமைக்கும் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டது?*

*(ஆ) இதற்காக அரசு செலவழித்த தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.58.00 இலட்சம் செலவில் 580 ஆதிதிராவிடர் வீடுகளுக்கு கச்சா வீடுகள் சீரமைக்கும் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டுள்ளது.*

**89—**

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 44310—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், இருட்டணை ஊராட்சி மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், இருட்டணை ஊராட்சியில் இதுவரை 37 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.*

[2004 ஜூலை 28

**90—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 44517—திரு. ப. அரசன்**: மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், களபம் ஊராட்சியிலுள்ள களபம் மற்றும் ஆதவத்தூர் ஆதிதிராவிட வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**91—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 44158—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மங்களநாடு ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனியில் உள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.



2004 ஜூலை 28]

எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**92—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 45032—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மேலப்பட்டு ஊராட்சியில் வசிக்கும் ஆதிதிராவிட காலனி வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**93—**

## விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 45435—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், கம்மங்காடு ஊராட்சி, கள்ளறுப்பான்வயல் கிராம ஆதிதிராவிட காலனி வீடுகளைப் பழுதுபார்த்துத் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**94—**

**கழிப்பிட வசதி**

**வினா எண் 46418—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரம் 24-வது வார்டு இரயிலடி தோப்புத் தெரு மற்றும் 21-வது வார்டு தென்பாதியிலுள்ள ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு கழிப்பிட வசதி செய்து தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 24வது வார்டு இரயிலடி தோப்புத் தெரு மற்றும் 21-வது வார்டு தென்பாதி பகுதியிலுள்ள ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதி ஆகியவற்றில் நகராட்சி மற்றும் அரசுக்குச் சொந்தமான இடமில்லை என்பதால் கழிப்பிட வசதி செய்ய இயலாது.



**95—**

**கழிப்பிடக் கட்டடம்**

**வினா எண் 46420—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்திலுள்ள 3-வது வார்டில் மணத்திடல் தெரு, சருக்கான் தெருவில் ஆதிதிராவிடர்களுக்கு ஒருங்கிணைந்த கழிப்பிடக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 3-வது வார்டில் மணத்திடல் தெரு மற்றும் சருக்கான் தெருவில் நகராட்சி மற்றும் அரசுக்குச் சொந்தமான இடமில்லை என்பதால் ஆதிதிராவிடர்களுக்கு ஒருங்கிணைந்த கழிப்பிடக் கட்டடம் கட்ட இயலாது.

**96—**

**சிறிய பாலம் (கல்வெர்ட்) கட்டுதல்**

**வினா எண் 47871—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி, 3-வது வார்டு நெய்குப்பைக்குச் செல்லும் சாலையிலுள்ள சிறிய பாலத்தினை (கல்வெர்ட்) கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் அடங்கிய 3-வது வார்டு நெய்குப்பைக்குச் செல்லும் சாலையிலுள்ள சிறிய பாலத்தினை (கல்வெர்ட்) பேரூராட்சி பொது நிதியிலிருந்து அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 21-2-2004 முதல் ஆர்.சி.சி. குழாய்கள் மூலம் அமைக்கப்பட்டு வரும் இப்பணி 28-2-2004-ல் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**97—**

### உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

**வினா எண் 43653—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுச்சாலையில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுச்சாலையில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2004 ஜூலை 28]

**98—**

### பெண்கள் கால்பந்து போட்டிகள்

**வினா எண் 46906—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெண்கள் கால்பந்து ஆட்டத்தை மாவட்ட அளவில் வால்பாறையில் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் விளையாட்டினை ஊக்குவிக்க வெவ்வேறு துறையினர் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுடன் பெண்களுக்கான கால்பந்து போட்டிகளை நடத்தி வருகின்றனர். கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவில் பெண்கள் கால்பந்து விளையாட்டு போட்டிகள் தனியாக நடத்திடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**99—**

### விளையாட்டுப் பயிற்சி உதவித் தொகை

**வினா எண் 46908—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள மலைப்பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி வழங்கும் போது உதவித் தொகை வழங்கி ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள மலைப்பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி வழங்கும்போது உதவித் தொகை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* நிலை எழவில்லை.

**100—**

## உடற்பயிற்சி மையம் அமைத்தல்

**வினா எண் 51071—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம், சீர்காழி, ஆரப்பள்ளம் மற்றும் அகணி ஊராட்சியில் உடற்பயிற்சி மையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம், சீர்காழி, ஆரப்பள்ளம் மற்றும் அகணி ஊராட்சியில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* நிலை எழவில்லை.



## பட்டியல் 9

**1—**

## துப்புரவுப் பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 31062—திரு வெ. ஏழுமலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*செஞ்சி வட்டம், மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி ஆலயத்தை சுற்றியுள்ள குப்பை மற்றும் கழிவுகளை அகற்ற கோயில் நிர்வாகம் மூலமாக கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் ஒரு பிரார்த்தனை ஸ்தலமாகும். ஒவ்வொரு அமாவாசையன்றும் பெருந்திரளான சேவார்த்திகள் வருகை தந்து தங்களது பிரார்த்தனைகளை நிறைவேற்றிச் செல்கிறார்கள். இத்திருக்கோயிலில் நிரந்தரமாக ஒரு துப்புரவுப் பணியாளரும், தொகுப்பூதிய அடிப்படையில் நான்கு நபர்களும், இவர்கள் தவிர அமாவாசை போன்ற திருவிழா நாட்களில் கூடுதலாக 11 நபர்கள் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு துப்புரவுப் பணி செய்யப்படுகின்றது. போதுமான அளவு பணியாளர்கள் உள்ளதால் கூடுதலாக பணியாளர்களை நியமனம் செய்யும் அவசியம் எழவில்லை.

**2—**

## கோயிலுக்கு அடிப்படை வசதிகள்

**வினா எண் 46657—திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

திருப்போரூர் ஒன்றியம், முள்ளிப்பாக்கம் ஸ்ரீஎல்லையம்மன் கோயிலுக்கு அடிப்படை வசதி பணி மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், முள்ளிப்பாக்கம், ஸ்ரீஎல்லையம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில். திருப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. விரைவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**3—**

**சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா எண் 47846—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், அண்ணன்பெருமாள் கோயில் குளத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், அருள்மிகு அண்ணன்பெருமாள் திருக்கோயில் குளத்தை சுற்றி சுற்றுச்சுவர் கட்ட தற்போது திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லை. எனவே, திருக்கோஷ்டியூர், சௌம்யநாராயணப்பெருமாள் அறக்கட்டளை மூலம் இப்பணியினை உபயமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 28]

**4—**

**திருக்கோயில் குளம் தூர் வாருதல்**

**வினா எண் 47848—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நாங்கூர் ஊராட்சியிலுள்ள பெருமாள் கோயில், காரைமேடு ஊராட்சியிலுள்ள அண்ணன்பெருமாள் கோயில், திருநகரி ஊராட்சியிலுள்ள திருமங்கை ஆழ்வார் ஆகிய திருக்கோயில் குளத்தினை தூர் வாரி தண்ணீர் நிரப்பிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி ஒன்றியம், நாங்கூர் ஊராட்சியிலுள்ள பெருமாள் கோயில், காரைமேடு ஊராட்சியிலுள்ள அண்ணன்பெருமாள் கோயில் மற்றும் திருநகரி ஊராட்சியிலுள்ள அருள்மிகு திருமங்கை ஆழ்வார் ஆகிய திருக்கோயில் திருக்குளங்கள் தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வறட்சியின் காரணமாக இத்திருக்குளங்களில் தண்ணீர் இல்லாமல் உள்ளது.

**5—**

**திருக்கோயிலில் தங்கும் விடுதி கட்டுதல்**

**வினா எண் 49101—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு முருகன் திருக்கோயிலில் தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு முருகன் திருக்கோயிலில் சேவார்த்திகளுக்கு தங்கும் வசதிக்காக ஏற்கனவே குடில்கள் (91) மற்றும் அறைகள் (177) உள்ளதால் தற்போதைக்கு தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு இல்லை.

6—

## ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

**வினா எண் 32911—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, குன்னம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட ஏற்புடையதாக இருப்பின் வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.

7—

## பேருந்தை கூடுதலாக இயக்குதல்

**வினா எண் 9692—திரு.ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி பொது மக்களின் நலனைக் கருதி 26—சி நகரப் பேருந்தை கூடுதலாக மதியம் 12 மணிக்கு இயக்க அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 28]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகர் பேருந்து தடம் எண் 26—சி கீழ்க்கண்டவாறு பல்முனைத் தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன:—

1. தருமபுரி—அரங்காபுரம் 28 கி.மீ. 4 நடைகள்
2. தருமபுரி—மாங்கரை 26 கி.மீ. 4 நடைகள்
3. தருமபுரி—பெண்ணாகரம் 31 கி.மீ. 6 நடைகள்

இதில் மதியம் 12–00 மணிக்கு பெண்ணாகரத்திலிருந்து தருமபுரிக்கு பேருந்து இயக்கப்படுவதால், மேற்படி பேருந்தை பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி வழித்தடத்தில், பொதுமக்களின் நலன் கருதி 26—சி நகரப் பேருந்தை கூடுதலாக 12 மணிக்கு மாற்றி இயக்கினால், ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். எனவே, கோரிக்கைப்படி பேருந்தின் கால நேரத்தை மாற்றி இயக்கிட இயலாத நிலையுள்ளது.

8—

## புதிய நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 14916—திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி முதல் பெண்ணாகரம், ஒகேனக்கல், ஊட்டமலை, பீலிகுண்டு வழியாக போக்குவரத்து வசதியில்லாத நாட்றாம்பாளையத்திற்கு புதிய நகரப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி முதல் பெண்ணாகரம், ஒகேனக்கல், ஊட்டமலை, பீலிகுண்டு வழியாக நாட்றாம்பாளையம் செல்லும் வழித்தடத்தின் நீளம் 65 கி.மீ. ஆகும். தற்சமயம் தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தருமபுரி முதல் பெண்ணாகரம் வரை நாளொன்றுக்கு 10 நகர் பேருந்துகள் மூலம் 80 நடைகளும், பெண்ணாகரம்-ஊட்டமலை தடத்தில் ஒரு நகர் பேருந்து மூலம் 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. ஒகேனக்கல் முதல் நாட்றாம்பாளையம் வரையுள்ள 17 கி.மீ. தூரமுள்ள சாலை நிலைப் பேருந்துகள் இயக்க இயலாத நிலையில் உள்ளது. இச்சாலையில் தனியார் மினி பேருந்துகள் நான்கு இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, கோரப்பட்டுள்ள தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.*

9—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 15342—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி, வள்ளியூர் பணிமனை மூலம் இயக்கப்படும் தடம் எண் 22, 59ஏ மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில் சார்ந்த தடம் எண் 583-ஐ திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நக்கனேரி கிராமத்தின் வழியாக இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர்கோவிலிலிருந்து இயக்கப்பட்டு வரும் தடம் எண் 22 (கன்னியாகுமரி - ராதாபுரம்) மற்றும் தடம் எண் 583 (கன்னியாகுமரி/அஞ்சுகிராமம் வள்ளியூர்) பேருந்துகள் முறையே நாளொன்றுக்கு 4*



2004 ஜூலை 28]

*நடைகள் வீதம் நக்கனேரி கிராமம் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தடம் எண் 574 மூலம் 2 சுற்றுக்கள் நக்கனேரி கிராமத்திற்கு இயக்கப்படுகிறது. இதைத் தவிர திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 59ஏ பேருந்து தற்போது வள்ளியூர் - கன்னியாகுமரி (வழி) ராதாபுரம் என 4 சுற்றுக்களும், வள்ளியூர் - கூடன்குளம் என 2 சுற்றுக்களும், வள்ளியூர்-கன்னியாகுமரி நேர்வழி என 2 சுற்றுக்களும், வள்ளியூர் - அஞ்சுகிராமம் என 2 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகிறது. இதில் வள்ளியூர் - கன்னியாகுமரி என இயக்குப்படும் 4 சுற்றுக்களிலும், வள்ளியூர் - அஞ்சுகிராமம் என இயக்கப்படும் 1 சுற்றிலும் நக்கனேரி கிராமம் வழியாகவே ஏற்கனவே இயக்கப்பட்டு வருகிறது. மேலும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகம் தடம் எண் 18-இல் 4 சுற்றுக்களும், தடம் எண் 11-இல் 4 சுற்றுக்களும், தடம் எண் 234 மூலம் 2 சுற்றுக்களும் நக்கனேரி கிராமத்திற்கு பேருந்து வசதி உள்ளது. நக்கனேரி கிராமத்திற்கு சிற்றுந்து வசதிகளும் உள்ளன. சுமார் 100 வீடுகளையும் மக்கள் தொகை 500-க்குள்ளும் கொண்ட நக்கனேரி கிராமத்திற்கு மேற்கூறியபடி போதிய அளவு பேருந்து வசதிகள் உள்ளதால் மேற்கொண்டு கூடுதல் சுற்றுக்கள் நக்கனேரி கிராமத்திற்கு இயக்க அவசியமில்லை.*

10—

## சாலை பாதுகாப்புப் பிரிவுத் துறை

**வினா எண் 16128—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சாலை பாதுகாப்புப் பிரிவு என்ற ஒரு துறையை ஏற்படுத்த அரசின் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் சாலை பாதுகாப்புப் பிரிவு (Road Safety Cell) என்ற ஒரு துறையை ஏற்படுத்த அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.*

எனினும், வாகன விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பைக் கருத்தில்கொண்டு சாலை பாதுகாப்பு நிதியின்கீழ் தேசிய நெடுஞ்சாலைகளில் முதற் கட்டமாக 13 இடங்களில் அவசர கால விபத்து பாதுகாப்பு மையங்கள் (Emergency Accident Relief Centres) ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் இரண்டாம் கட்டமாக 20 இடங்களில் இம்மையங்கள் அமைக்கவும், மூன்றாம் கட்டமாக 36 மையங்கள் அமைக்கவும் உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இம்மையங்களை தனியார் மருத்துவமனைகளின் உதவியுடன் செயல்படுத்த போக்குவரத்து ஆணையரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**11—**

## கூடுதலாகப் பேருந்து விடுதல்

**வினா எண் 17642—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கருக்கையிலிருந்து பண்ருட்டிக்கு காலையில் 5 மணி அளவில் கூடுதலாக ஒரு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண் டி.5 நகரப் பேருந்தின் மூலம் 2 நடைகளிலும், தடம் எண் டி.26, நகரப் பேருந்தின் மூலம் 8 நடைகளிலும் பண்ருட்டி-கருக்கை இடையே பேருந்து வசதியளிக்கப்பட்டுள்ளது. நகரப் பேருந்து டி.5 காலை 8.00 மணிக்கு புறப்பட்டு கருக்கை சென்று திரும்பும் வகையில் அமைந்துள்ளது. காலை 5.00 மணியளவில் கருக்கை கிராமத்திலிருந்து பண்ருட்டிக்கு புறப்படும் வகையில் கால அட்டவணையை மாற்றி அமைக்கவும் கூடுதலாக நடைகள் இயக்கிடவும் தற்பொழுதுள்ள பேருந்துகளின் மூலம் நடைமுறைப்படுத்த சாத்தியமில்லை. ஏனெனில் நடைமுறையிலுள்ள கால அட்டவணையை மாற்றி அமைத்தால் தற்சமயம் பயன்பெற்று வரும் கிராம மக்களுக்கு இடையூறு ஏற்படும். இருப்பினும், விழுப்புரம் தமிழ்நாடு அரசு





போக்குவரத்துக் கழகத்தில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கிடும் திட்டம் நடைமுறைப்படுத்தும் நிலையில், கோரிக்கைப்படி கூடுதல் நடைகள் அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12—**

## அரசுப் பேருந்து விடுதல்

**வினா எண் 17721—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி மொடையூரில் காலை 8.45 மணிக்கு பள்ளி மாணவர்கள் நலன் கருதி அரசு பேருந்து விட நடவடிக்கை அரசு எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-1, செஞ்சி கிளையைச் சார்ந்த டி.9 நகரப் பேருந்து செஞ்சியில் காலை 8.10 மணிக்கு நடையெடுத்து 9.00 மணிக்கு கல்லிக்குப்பம் சென்று பிறகு அங்கிருந்து 9.00 மணிக்குப் புறப்பட்டு மேல்சேவூர், கம்மந்தூர், தையூர், குறிஞ்சிப்பை, ஜம்போதி, மேல்எடையாளம், செயங்கொண்டம் கிராமங்களிலிருந்து பள்ளி மாணவர்கள் செஞ்சி பள்ளிக்கூடத்திற்கு செல்வதற்கும், வருவதற்கும் வசதியாக உள்ளது. எனவே இப்பேருந்தை செஞ்சியிலிருந்து காலை 8.45 மணிக்கு புறப்பட்டு நாட்டார்மங்கலம் வழியாக மொடையூருக்கு மாற்றி அமைக்க இயலாது.

**13—**

## இடைப்பாடி நகர் - திருப்பதி பேருந்து இயக்குதல்

**வினா எண் 17830—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், இடைப்பாடி நகரிலிருந்து திருப்பதிக்கு செல்ல அரசுப் பேருந்து ஒன்று புதியதாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடைப்பாடியிலிருந்து, சேலம் 43 கி.மீ. தூரத்தில்தான் உள்ளது. இடைப்பாடி பயணிகள் அம்மாவட்ட கழகப் பேருந்தை பயன்படுத்தி சேலம் வந்து, சேலத்திலிருந்தும், அதன் வழியாகவும் இயக்கப்படும் சேலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை பயன்படுத்தி திருப்பதி செல்ல ஏதுவாக உள்ளது.

| வ. எண் | தடம் எண் | வழித்தடம் | மொத்த பேருந்துகள் | மொத்த நடைகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 809 | சேலம்-திருப்பதி வழி குடியாத்தம் | 2 | 4 |
| 2 | 849 | சேலம்-திருப்பதி வழி வேலூர் | 6 | 12 |
| 3 | 835 | ஈரோடு-திருப்பதி வழி சேலம் | 4 | 4 |
| 4 | 962 எஸ் | கோயம்புத்தூர்-திருப்பதி வழி சேலம் | 4 | 4 |
| 5 | 981 | திருச்செந்தூர்-திருப்பதி வழி சேலம் | 2 | 2 |
| 6 | 964 எஸ் | பொள்ளாச்சி-திருப்பதி வழி சேலம் | 2 | 2 |
| | | மொத்த பேருந்துகள்/நடைகள் | 20 | 28 |



எனவே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேலம் மாவட்டம், இடைப்பாடி நகரிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்து ஒன்று இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**14—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 18003—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து பெங்களூர் செல்லும் அனைத்து பேருந்துகளும் சேலம் பேருந்து நிலையத்தின் உள்ளே வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நேரடியாக சேலத்திலிருந்து பெங்களூருக்கு பேருந்துகள் எதுவும் இயக்கப்படவில்லை. இருப்பினும், சேலம் வழியாக பெங்களூருக்கு நாள்தோறும் 43 பேருந்துகள், 56 நடைகளாக இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்துகள் அனைத்திற்கும் சேலம் கட்டண நிலையாக இருப்பதால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்தும் சேலம் பேருந்து நிலையம் உள்ளே சென்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல சம்பந்தப்பட்ட கிளை மேலாளர் மூலமாக ஓட்டுனர், நடத்துனர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு பணி செவ்வனே நடைபெற்று வருகின்றது. மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம் 1 மற்றும் 2) மூலமாக சேலம்-பெங்களூர் வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**15—**

## சந்தை சிறப்பு பேருந்து இயக்குதல்

**வினா எண் 21031—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி முதல் அரக்காசன அள்ளி வரை செவ்வாய்க்கிழமை நாட்களில் மட்டும் சந்தை சிறப்பு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் நகர் பேருந்து தடம் எண் டி5சி தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி முதல் அரக்காசன அள்ளி வரை நாளொன்றுக்கு 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதில் பயணிகளின் அடர்வு 54 விழுக்காடுகளேயாகும். அதனால், கோரிக்கைப்படி செவ்வாய்க்கிழமை நாட்களில் மட்டும் சந்தை சிறப்பு பேருந்து ஒன்றை இயக்கிட இயலாத நிலையில் உள்ளது.

**16—**

## பேருந்து வழித்தடம்

**வினா எண் 21686—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகரிலிருந்து ஊத்துக்குளி, ஆர்.எஸ். வழியாக திருப்பூர் மற்றும் இந்த வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் ஊத்துக்குளி, ஆர்.எஸ்.-க்கு வராமலேயே போய் வருகிறது என புகார் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ஈரோடு-திருப்பூர் (வழி) ஊத்துக்குளி மற்றும் அவ்வழியே



2004 ஜூலை 28]

இயக்கப்படும் பேருந்துகளும், ஊத்துக்குளி, ஆர்.எஸ். வழியாகவே இயக்கப்படுகின்றன. மேலும், அப்பேருந்துகள் ஊத்துக்குளி, ஆர்.எஸ். வரை இயக்கப்படுகின்றனவா என்றும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

**17—**

## பேருந்து நிறுத்துதல்

**வினா எண் 23027—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீண்ட நேரம் பயணம் செய்யும் பயணிகளின் நலன் கருதி வால்பாறை ஆழியாறு செக்போஸ்ட்டில் பேருந்து 5 நிமிடம் நின்று செல்லுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஜனவரி 2001-ல் நடைபெற்ற ஆழியாறு அணை மற்றும் சுற்றுப்புற மாசுக் கட்டுப்பாடு கூட்டத்தில் பொள்ளாச்சி வட்டாட்சியர், பொதுப் பணித் துறை அலுவலர் மற்றும் வனத் துறை உயர் அலுவலர்கள் பங்கேற்று, ஆழியாறு அணை மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் மாசுபடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஆழியாறு செக்போஸ்ட் பகுதியில் பேருந்துகளை நிறுத்தம் செய்தல் கூடாது என தெரிவித்ததன் அடிப்படையில், அப்பகுதியில் பேருந்துகளை நிறுத்திச் செல்ல இயலாத நிலை உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**18—**

## பேருந்து நிறுத்தம் ஏற்படுத்துதல்

**வினா எண் 23343—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

உசிலம்பட்டி தொகுதி, நாட்டாமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு செல்லும் ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களுக்கு வசதியாக உசிலம்பட்டி, தேனி மெயின்ரோடு அய்யம்பட்டியில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அய்யம்பட்டி (நாட்டாமங்கலம் பிரிவு) என்னும் இடம் மதுரை-உசிலம்பட்டி சாலையில் செல்லம்பட்டியிலிருந்து 1.1 கிலோ மீட்டர் தூரத்திலும், வாலாந்தூரிலிருந்து 1.8 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. செல்லம்பட்டி, வாலாந்தூர் ஆகிய இரு ஊர்களும் இந்த வழியாக இயக்கப்படும் அனைத்து புறநகர் பேருந்துகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பேருந்து நிறுத்தங்களாகும். அனைத்து நகரப் பேருந்துகளும் அய்யம்பட்டியில் நின்று செல்கின்றன. இப்பேருந்துகளைத் தவிர, முத்தாலம்பாறை, பாப்பாபட்டி, எம்.கல்லுப்பட்டி, டி.கிருஷ்ணாபுரம் ஆகிய ஊர்களுக்குச் செல்லுகின்ற குறைந்த தட தூர புறநகர் பேருந்துகள் செல்லம்பட்டி, அய்யம்பட்டி (நாட்டாமங்கலம் பிரிவு) சக்கரைப்பட்டி மற்றும் வாலாந்தூர் ஆகிய இடங்களில் நின்று பள்ளி நேரங்களில் மாணவர்கள்/ஆசிரியர்களின் நலனுக்காக பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. எனவே, தற்போதைய நிறுத்தங்கள் வசதிகளே போதுமானது. அய்யம்பட்டியில் ஏறி இறங்கும் பயணிகள் எண்ணிக்கை இவ்வழியாக இயக்கப்படும் அனைத்து தொலைதூர புறநகர் பேருந்துகளையும் எல்லா நேரங்களிலும் நிறுத்திச் செல்லும் அளவிற்கு போதுமானதாக இராது. மேலும் கூடுதல் நிறுத்தங்கள் நெடுந்தூரப் பயணிகளுக்கு அசௌகரியத்தையும் விளைவிக்கும். எனவே, உசிலம்பட்டி, தேனி மெயின்ரோடு அய்யம்பட்டியில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த இயலாது.

**19—**

## பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 27384—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 28]

(அ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான்குப்பம் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் வழியாக பேருந்துகள் அனைத்தும் வந்து போக அரசு நடவடிக்கை எடுக்க இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, காட்டுக்கூடலூர்-கொள்ளுக்காரன்குட்டை, முத்தாண்டிக்குப்பம் வழியாக பண்ருட்டி செல்வது நேர்வழியாகும். அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மற்றும் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் வழியாக இயக்க முற்பட்டால், இப்பேருந்துகளில் நேரடியாக பயணம் மேற்கொள்ளும்போது பயண நேரம் கூடுதலாகும். தவிரவும், பிரதான சாலையில் அமைந்திருக்கும் முத்தாண்டிக் குப்பத்திலிருந்து அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மற்றும் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் முறையே 0.3 கி.மீ., 0.4. கி.மீ., 0.5.கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளதால் இது நடந்து செல்லக்கூடிய தூரமேயாகும். எனினும், தடம் எண் டி.9 பண்ருட்டி-நெய்வேலி நகரம் தடத்தில் நாளொன்றுக்கு 8 நடைகளிலும், தடம் எண் 260 புறநகர் பேருந்து பண்ருட்டி-விருத்தாசலம் தடத்தில் 6 நடைகளிலும் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம், அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் முத்தாண்டிக்குப்பம் வழியாக இயக்கப்படுகின்றன. இப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுவதால் பேர்பெரியான்குப்பம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் வழியாக பேருந்துகள் அனைத்தும் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

## கனரக வாகனங்களுக்கு சாலை வரி குறைத்தல்

**வினா எண் 27533—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கனரக வாகனங்களுக்கு சாலை வரியைக் குறைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

15,000 கிலோ கிராம் மற்றும் அதற்குக் கூடுதலாக எடையேற்றும் திறன் கொண்ட சரக்கு வண்டிகளுக்கு ரூ. 2,500 மற்றும் கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 1,000 கிலோ கிராம் அல்லது அதன் பகுதிக்கு ரூ.400 என விதிக்கப்பட்ட வரி விகிதம் 1-12-2001 நாளில் இருந்து முன் தேதியிட்டு கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 250 கிலோ கிராம் அல்லது அதன் பகுதிக்கு ரூ.75 என குறைக்கப்பட்டது. மேலும் கூடுதலாக எடையேற்றும் திறன்கொண்ட பல அச்சு (Multi-Axle) கொண்ட சரக்கு வண்டிகளுக்கு ரூ.2,300 மற்றும் கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 250 கிலோ கிராம் அல்லது அதன் பகுதிக்கு ரூ.50 என 1-4-2003 முதல் வரிகுறைப்பு செய்யப்பட்டுள்ளது.

21—

## பேருந்து வசதிகள்

**வினா எண் 31696—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, முத்தமிழ் நகரிலுள்ள முத்துகுமாரசாமி கல்லூரி அருகே இது வரையிலும் பேருந்து வசதிகள் இல்லை. எனவே அங்கே பேருந்துகள் நிறுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முத்துக்குமாரசாமி கல்லூரி, முத்தமிழ்நகர் பேருந்து நிறுத்தத்திற்கு மிகக் குறைந்த தூரத்திலேயே (அதாவது 400 மீட்டருக்கும்





குறைவான தூரத்தில்) அமைந்துள்ளது. அவ்வழியாக இயங்கும், 33 நீட்டிப்பு, சி44, 46ஜி நீட்டிப்பு, எம்116, 138 ஆகிய வழித்தடங்களின் பேருந்துகளை கல்லூரிக்குச் செல்வோர் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், நடந்து செல்லும் தூரத்திலுள்ள சிட்கோ மற்றும் சிட்கோநகர் நிறுத்தங்கள் வழியாக இயங்கும் 170ஈ, 2எ நீட்டிப்பு, 7ஜி, 21சி நீட்டிப்பு, 37ஈ, 64எ, 116, 170டி மற்றும் 38 எல், 46சி ஆகிய வழித்தடங்களின் பேருந்துகளையும் அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

22—

## பேருந்து வசதி

**வினா எண் 34041—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வர்க்கோட்டை ஒன்றியம், கந்தர்வக்கோட்டை ஊராட்சியில் புதுக்கோட்டை—தஞ்சாவூருக்கு புறநகரப் பேருந்து 4 செல்கிறது. இதில் ஒரு புறநகரப் பேருந்தை கந்தர்வக்கோட்டை, புதுப்பட்டி, மோகனூர், நம்புரான்பட்டி, பகட்டுவான்பட்டி, நடுப்பட்டி, நாயக்கர்பட்டி, மருங்குளம் வழியாக தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் வரை செல்ல இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் கந்தர்வக்கோட்டை மருங்குளம் வரை 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் கறம்பக்குடி, ரெகுநாதபுரம், மருங்குளம் வழியாக தஞ்சாவூர் வரை பகுதி, பகுதியாக போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கையில் கேட்டுள்ளபடி புதுக்கோட்டை-தஞ்சாவூர் (நேர்வழி) செல்லும் பேருந்தை கந்தர்வக்கோட்டையிலிருந்து புதுப்பட்டி, மோகனூர், நம்புரான்பட்டி, பகட்டுவான்பட்டி, நடுப்பட்டி, நாயக்கர்பட்டி, மருங்குளம் வழியாக தஞ்சாவூர் இயக்கினால் நேர்வழிப் பேருந்து வசதி திருக்காணூர்பட்டி, புனக்குளம், காடவரயன்பட்டி மற்றும் புதுநகர், கந்தர்வக்கோட்டை வரை

[2004 ஜூலை 28

உள்ள ஊர் மக்களுக்கு பேருந்து வசதி கிடைக்காமல் போய்விடும். மேலும் புதுக்கோட்டை-தஞ்சாவூர் செல்லும் பயணிகளுக்குச் சுற்றுப்பாதையில் பயணக் கட்டணத்தில் கூடுதல் தொகையும், பயண நேரத்தில் கூடுதல் நேரமும் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, கோரிக்கையில் கேட்டுள்ளபடி புதுக்கோட்டை-தஞ்சாவூர் (வழி) கந்தர்வக்கோட்டை, புதுப்பட்டி, மோகனூர், நம்புரான்பட்டி, பகட்டுவான்பட்டி, நடுப்பட்டி, நாயக்கர்பட்டி, மருங்குளம் வழியாக பேருந்து வசதி செய்து தர சாத்தியக்கூறு இல்லை.

23—

## பேருந்து வழித்தடம் நீட்டித்தல்

**வினா எண் 35338—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், தச்சங்குறிச்சி ஊராட்சி, கந்தர்வக்கோட்டையில் இருந்து காலை 8 மணிக்கு புறப்பட்டு கல்லுப்பட்டி வழியாக கிள்ளுக்கோட்டை செல்லும் பேருந்து தச்சங்குறிச்சி வரை நீட்டித்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* தச்சங்குறிச்சி கந்தர்வக்கோட்டையில் இருந்து செங்கிப்பட்டி செல்லும் பிரதான சாலையில் கந்தர்வக்கோட்டையில் இருந்து 10.8 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தடத்தில் அரசுப் பேருந்துகள்/தனியார் பேருந்துகள் மூலம் நாள் ஒன்றுக்கு 76 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

கேட்கப்பட்டுள்ள பேருந்து பட்டுக்கோட்டையிலிருந்து கந்தர்வக்கோட்டை, கோமாபுரம், கல்லுப்பட்டி, நத்தமாடிப்பட்டி, விராலிப்பட்டி வழியாக கிள்ளுக்கோட்டைக்கு இயக்கப்படுகிறது. மேலும் தச்சங்குறிச்சி கிராமம் கல்லுப்பட்டி விலக்கு சாலையிலிருந்து 2.0 கிலோ



2004 ஜூலை 28]

மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. எனவே, கோரிக்கையில் கேட்டுள்ளபடி தச்சங்குறிச்சி வரை நீட்டித்து இயக்கப்பட்டால் இப்பேருந்தினால் ஏற்கெனவே பயன் பெற்று வரும் நேரடிப் பயணிகளுக்கு கூடுதல் பயணக் கட்டணமும், கூடுதல் பயண நேரமும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, தற்பொழுது இயக்கப்படும் நடைகளே போதுமானதாகும். கோரிக்கையில் கேட்டுள்ளபடி பேருந்தை இயக்கச் செயற்குறிப்பு ஏதுமில்லை.

24—

## பேருந்து வசதி

**வினா எண் 35339—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நத்தமாடிப்பட்டி ஊராட்சி, நத்தமாடிப்பட்டிக்கு கந்தர்வக்கோட்டையில் இருந்து கிள்ளுக்கோட்டைக்கு தடம் எண் ஜி3 பேருந்தை காலை 11-30 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் ஜி3 பேருந்து எண்.டி.எண்63/எண்0317 பேருந்து பல்முனைத் திட்டத்தின்கீழ் 6 வழித்தடங்களில் 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பேருந்து காலை 11-00 மணிக்கு எடுத்து திருவோணத்திற்கு 11-40-க்கு சென்று அங்கிருந்து 11-45-க்கு புறப்பட்டு 12-25-க்கு கந்தர்வக்கோட்டையை வந்தடைகிறது. அதேபோல் மாலை 15-25-க்கு எடுத்து கந்தர்வக்கோட்டையிலிருந்து கறம்பக்குடிக்கு 16-15-க்கு சென்று அங்கிருந்து 16-35-க்கு புறப்பட்டு, கந்தர்வக்கோட்டைக்கு 17-25-க்கு வந்தடைகிறது. மேற்படி நடை கறம்பக்குடி பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி வழித்தடத்தினை மாற்றி இயக்கினால் ஏற்கெனவே போக்குவரத்து வசதி பெற்றுவரும் கிராமப் பொதுமக்களுக்கும் மற்றும் பள்ளி மாணவ,

மாணவியர்களுக்கும் இடைஞ்சல் ஏற்பட்டு சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, கோரிக்கையில் கேட்டுள்ளபடி காலை 11-30 மணி அளவிலும் மாலை 4-30 மணி அளவிலும் நத்தமாடிப்பட்டிக்கு பேருந்து வசதி செய்து தர சாத்தியக்கூறு இல்லை.

25—

## புதிய பேருந்து விடுதல்

**வினா எண் 35454—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சி, காயாம்பட்டி கிராமத்திற்கு மாணவர் பள்ளி செல்ல வசதியாக காலை 9 மணிக்கு மாலை 5-30 மணிக்கு புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை-ஆலங்குடி (வழி) காயாம்பட்டி விலக்கு, ஆலங்குடி-புதுக்கோட்டை (வழி) காயாம்பட்டி விலக்கு, புதுக்கோட்டை – புதுக்கோட்டை (வழி) காயாம்பட்டி, செட்டியாப்பட்டி, வடவாளம், ஆலங்குடி-புதுக்கோட்டை (வழி) காயாம்பட்டி விலக்கு சின்னப்பா பூங்கா - செட்டியாப்பட்டி (வழி) காயாம்பட்டி ஆகிய வழித்தடங்களில் 3 நகரப் பேருந்துகளும், ஒரு புறநகர் பேருந்தும், 32 மினிப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கையில் கேட்டிருப்பதுபோல் பேருந்துகளின் நேரத்தை மாற்றி இயக்கினால் ஏற்கனவே போக்குவரத்து வசதி பெற்று வரும் பொதுமக்களுக்கு போக்குவரத்து சிரமம் ஏற்பட்டு சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, காயாம்பட்டி கிராமத்திற்கு தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்து வசதியே போதுமானதாகும். எனவே, கோரிக்கையில் கேட்டுள்ளபடி மேற்படி கிராமத்திற்கு மாணவர்கள் பள்ளி செல்ல காலை 9.00 மணிக்கும், மாலை 5.30 மணிக்கும் புதிய பேருந்து வசதி செய்து தர சாத்தியக்கூறு இல்லை.



26—

## போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 44278—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நிரந்தர சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் தும்மங்குறிச்சி கிராமம் சர்வே எண் 9/4, 9/8 மற்றும் 10/1 பி ஆகிய எண்களில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு முன் நுழைவு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் நிரந்தர சொந்தக் கட்டடம் கட்ட, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

## கார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி நடத்த அனுமதி

**வினா எண் 46073—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் படித்து விட்டு வேலையில்லாத இளைஞர்கள் கார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி நடத்த அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989 விதி எண் 24-ல் குறிப்பிட்டுள்ளவாறு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமையப்பெறும் பட்சத்தில் பயிற்சிப் பள்ளிக்கான உரிமம் சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அதிகாரியால் வழங்கப்படுவதற்கு தடை ஏதும் இல்லை.

*(ஆ)* ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கான உரிமம் கோரி விண்ணப்பம் உரிம அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தால் அந்த மனு ஆய்வு செய்து தகுதி இருப்பின் உரிமம் வழங்க பரிசீலிக்கப்படும்.

**28—**

### அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 46995—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம், சரஸ்வதி வளாகம், மாதிரவேளூர் பட்டியமேடு வழியாக வடரெங்கம் வரை செல்ல அரசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கொள்ளிடம்-வடரெங்கம் (வழி) சரஸ்வதி வளாகம், மாதிரவேளூர், பட்டியமேடு தடத்தின் நீளம் 15 கிலோ மீட்டர் ஆகும். கோரிக்கை தடத்தில், கொள்ளிடம்-சரஸ்வதி வளாகம் 2 கிலோ மீட்டர் தூரத்தில் 0.5 கிலோ மீட்டர் தவிர மற்ற பகுதிகள் தார்சாலையாகும். சரஸ்வதி வளாகம் முதல் கொள்ளிடம் வரை ஆற்றங்கரை மீது உள்ள குறுகிய குண்டும், குழியுமான மண்சாலை ஆகும். கொன்னக்காட்டுப்படுகை வரை இலகு ரக வாகனங்கள் மட்டுமே செல்லக்கூடிய அளவுக்கு உள்ள சாலையாகவும் மற்ற எஞ்சிய பகுதியில், இலகு ரக வாகனங்கள்கூட செல்ல இயலாத அளவுக்கு உள்ள



2004 ஜூலை 28]

சாலையாகவும் அமைந்துள்ளது. மேலும், கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். புதிய வழித்தடப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

### அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 46996—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, புத்தூர், ஆனந்தகூத்தன் வழியாக மாதிரவேளூர் கிராமத்திற்கு அரசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புத்தூர், மாதிரவேளூர் (வழி) ஆனந்தகூத்தன் தடத்தின் நீளம் 10 கிலோ மீட்டர் ஆகும். கோரிக்கை தடத்தின் சாலை பெரிய பேருந்துகள் இயக்க இயலாத குறுகிய மற்றும் பழுதடைந்த தார்ச் சாலையாகும். மேலும், கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். புதிய வழித்தடப் பேருந்துகள் இயக்கிட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**30—**

### ஒயர் கூடை செய்யும் மகளிருக்கு கடனுதவி

**வினா எண் 11499—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் சிறு தொழிலான ஒயர் கூடை செய்யும் மகளிரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிறு தொழிலான ஓயர் கூடை செய்யும் மகளிரை ஊக்குவிக்கும் வகையில் விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கடன் பெற்ற மகளிருக்கு 30% விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தை கதர் வாரியம் செயல்படுத்தி வருகிறது. சேலம் மாவட்டத்திற்கு ரூ.18.42.5 இலட்சம் 2003-2004 ஆம் நிதியாண்டில் மேற்படி திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 7 தனி நபர்களுக்கு ரூ. 51250 விளிம்புத் தொகை மானியமாக வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**31—**

**பனை ஓலை தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்**

**வினா எண் 16537—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



2004 ஜூலை 28]

**32—**

**பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்**

**வினா எண் 16547—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**33—**

**தேனீ வளர்க்க பயிற்சி**

**வினா எண் 26782—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மலைப் பகுதியில் வாழும் இருளர் இன மக்களுக்கு தேனீ வளர்க்க பயிற்சியும், மானியத்துடன் கடனும் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுமா?

[2004 ஜூலை 28

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**34—**

**கைமுறை காகிதத் தொழில் திட்டம்**

**வினா எண் 34509—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரத்தில் கைமுறை காகிதத் தொழில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், 2002-2003 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரத்தில் கைமுறை காகிதத் தொழில் திட்டம் எதுவும் இதுவரை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் செயல்படுத்தப்படவில்லை. ஏற்கெனவே, செயல்பட்டுவந்த மொத்தம் 19 அலகுகளில் பல்வேறு காரணங்களினால் அரசாணையின்படி 15 அலகுகள் ஏற்கெனவே மூடப்பட்டுவிட்டது. கைமுறை காகித அலகுகளில் செயல்பாடுகள் திருப்தி அளிக்காததாலும், தொழிலாளர்களின் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வந்ததாலும், குறைந்தபட்ச ஊதியம் வழங்கிட நிர்பந்தப்படுத்தி வருவதாலும் இவ்வலகுகள் தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி வருவதைக் கருத்திற்கொண்டும் இனிவருங்காலங்களில் புதியதாக கைமுறை காகித அலகுகள் துவக்கிட இயலாது.



2004 ஜூலை 28]

**35—**

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைகள்**

**வினா எண் 36074—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் வழங்குகிறது?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையில் இயங்குவதற்கு அரசு பல்வேறு வகையான சலுகைகளை அளித்து வருகின்றது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

கிராமப்புறங்களில் வசித்து வரும் ஏழை ஆதிதிராவிடர் பெண்/ஆண் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக மத்திய அரசின் கயிறு வாரியம் மூலம் செயல்படுத்தி வரும் சந்தை வளர்ச்சி நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஆண்டு முழுவதும் விற்பனையாகும் கயிறு பொருட்களின் மதிப்பீட்டில் 10 விழுக்காடு மானியமாக வழங்கி வருகிறது. இதில் 50 விழுக்காட்டினைத் தமிழக அரசு தனது பங்காக வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள டீசர்வ் (கணினி ஏல மையம்) மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு தமிழ்நாடு அரசின் விற்பனை வரியான 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகவும், மத்திய

[2004 ஜூலை 28

விற்பனை வரியான 4 விழுக்காட்டிலிருந்து இரண்டு விழுக்காடாகவும் குறைத்து அரசு சலுகை வழங்கியுள்ளது.

இதுபோன்று சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசியை விற்பனை செய்யும் சேகோசர்விற்கு விற்பனை வரி இரண்டு விழுக்காடாக குறைத்து சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, தாட்கோ, டாப்செட்கோ மூலம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதனம் வழங்குதல் போன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைய வேண்டிய பகுதிகளை கண்டறிந்து அந்தச் சங்கங்களுக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் அரசு பங்கு மூலதனம் அனுமதித்து புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைய நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**36—**

## தொழில் உரிமை பெற சான்றிதழ்

**வினா எண் 36402—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் ஆண்டில் தொழில் உரிமை பெற விண்ணப்பித்தவர்களுக்கு உடனடி சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் தொழில் உரிமம் பெற விண்ணப்பித்தவர்களுக்கு தொழில் வணிகத் துறை மூலம் உடனடியாக தற்காலிக சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் கணினி மூலம் (ON LINE) விண்ணப்பித்தவர்களுக்கு 9,971 மற்றும் அலுவலகத்தில் விண்ணப்பித்தவர்கள் 14,880 பேருக்கு அரசினால் 2002-2003 ஆம் ஆண்டில் தற்காலிக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதன் விவரம்:



2004 ஜூலை 28]

| வ. எண் | மாதம் மற்றும் வருடம் | (ON LINE) கணினி மூலம் உடனடி சான்றிதழ். | அலுவலகத்தில் விண்ணப்பித்தவர்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ஏப்ரல் 2002 | — | 1,607 |
| 2. | மே 2002 | — | 1,505 |
| 3. | ஜூன் 2002 | — | 1,394 |
| 4. | ஜூலை 2002 | — | 1,811 |
| 5. | ஆகஸ்ட் 2002 | — | 1,639 |
| 6. | செப்டம்பர் 2002 | — | 1,397 |
| 7. | அக்டோபர் 2002 | — | 1,144 |
| 8. | நவம்பர் 2002 | 1,599 | 807 |
| 9. | டிசம்பர் 2002 | 2,062 | 1,169 |
| 10. | ஜனவரி 2003 | 1,946 | 797 |
| 11. | பிப்ரவரி 2003 | 2,241 | 806 |
| 12. | மார்ச் 2003 | 2,123 | 804 |
| | **மொத்தம்** | **9,971** | **14,880** |

**37—**

## ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள்

**வினா எண் 36405—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களுக்கு மாநில அளவில் ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிறு தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 88, சிறு தொழில் துறை, நாள் 21-10-2003-ல் சிறு தொழில்களுக்கான விருதுகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது அவையாவன:-

| வ. எண் | விருது பெயர் | தேவைப்படும் செலவு | மதிப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறந்த தொழில் முனைவோருக்கான விருது (மாநில விருது) | பணமுடிப்பு<br>நினைவுப் பரிசு | ரூ.25,000<br>ரூ. 3,000 |
| 2. | சிறந்த மகளிர் தொழில் முனைவோருக்கான விருது (பொது) (மாநில விருது) | பண முடிப்பு<br>நினைவுப் பரிசு | ரூ.25,000<br>ரூ.3,000 |
| 3. | சிறந்த தொழில் முனைவோருக்கான விருது, (பொது) (மாநில விருது) | பணமுடிப்பு<br>நினைவுப் பரிசு | ரூ.25,000<br>ரூ. 3,000 |
| 4. | உற்பத்தி பொருளின் தரம் மற்றும்ஏற்றுமதிக்கான விருது (பொது) (மாநில விருது) | பண முடிப்பு<br>நினைவுப் பரிசு | ரூ.25,000<br>ரூ. 3,000 |
| 5. | சிறந்த தொழில் முனைவோர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் (பொது) | நினைவுப் பரிசு | மாவட்டம் ஒன்றிற்கு ரூ.3,000 வீதம் 29 மாவட்டங்-களுக்கு மற்றும் சான்றிதழ் |





மேலே குறிப்பிடப்பட்டுள்ள விருதுகள் வழங்குவதற்காக 2003-2004 ஆம் ஆண்டுக்கு ரூ.2.25 இலட்சங்கள் (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட விருதுகளுக்கானவர்களைக் கண்டறிய இந்திய அரசின் தேசிய விருதுகளுக்கானவர்களைக் கண்டறிவது போலவே தொழில் வணிக இயக்ககத்தின் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட குழுவினை அமைத்து விருது பெறத் தகுதியானவர்களைக் கண்டறிய முதல்நிலை தொழிற் நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | தொழில் வணிக கூடுதல் இயக்குனர் (மாவட்ட தொழில்-மையம்) | தலைவர் |
| 2. | தொழில் வணிக கூடுதல் இயக்குநர் (ஊரகத் திட்டம்) | உறுப்பினர் |
| 3. | இணை இயக்குநர் (பொறியியல்) | உறுப்பினர் |
| 4. | இணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) | உறுப்பினர் |
| 5. | தொழில் வணிக துணை இயக்குநர் (தொழில் முனைவோர் திட்டம்) | உறுப்பினர்-செயலர் |

விருது பெற தகுதியானவர்களைத் தேர்வு செய்வதற்கு கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | செயலர், சிறு தொழில் துறை. |
| 2. | உறுப்பினர்கள் | நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை. |
| 3 | | இயக்குநர், இந்திய தரநிர்ணய நிறுவனம், சென்னை. |
| 4. | | இயக்குநர், சிறுதொழில் சேவை நிலையம். |
| 5. | | தலைவர், தமிழ்நாடு சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கம், சென்னை. |

[2004 ஜூலை 28

| | | |
|---|---|---|
| 6. | | ஏற்றுமதி மேம்பாடு நிறுவனத்தின் பிரதிநிதி, சென்னை. |
| 7. | உறுப்பினர்-செயலர் | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர். |

இந்திய அரசின் வளர்ச்சி ஆணையர் (சிறு தொழில்கள்) தேசிய விருதுகள் வழங்குவதற்கென சில மதிப்பீடுகளை வகுத்துள்ளார். அதே மதிப்பீடுகள் மாநில அளவிலான விருதுகள் வழங்குவதற்கும் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், இந்த விருதுகள் ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு தொழில் பிரிவுகளுக்கு, மேற்குறிப்பிட்ட குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்படும்.

**38—**

## தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

**வினா எண் 40218—திரு கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 2,762 மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர். அதன் விவரம் கீழ்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | வருடம் | பயிற்சி பெற்ற மகளிர் |
|---|---|---|
| 1. | 2001-2002 | 1,050 |
| 2. | 2002-2003 | 1,050 |
| 3. | 2003-2004(31-12-2003 முடிய) | 662 |
| | **மொத்தம்** | **2,762** |



2004 ஜூலை 28]

**39—**

## தொழில் பிரிவுகள்

**வினா எண் 40767—திரு சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தின் பல்வேறு ஒன்றியங்களில் ஏற்படுத்தப்பட்ட தொழில் பிரிவுகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் உற்பத்தி தொடங்கப் பெற்ற திட்டங்களின் விவரம்:—

| வ. எண் (1) | வட்டாரத்தின் பெயர் (2) | திட்டத்தின் பெயர் (3) | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) (4) |
|---|---|---|---|
| 1. | ஆனைமலை | தேங்காய் பொருட்கள் மற்றும் தேங்காய் பதப்படுத்துதல் | 65.50 |
| 2. | அன்னூர் | தேங்காய் ஓட்டுப் பொடி தயாரித்தல் | 68.50 |
| 3. | அன்னூர் | தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய் ஓட்டுப் பொடி தயாரித்தல் | 65.50 |
| 4. | பல்லடம் | கோழித் தீவனம் தயாரித்தல் | 123.83 |
| 5. | பி.என். பாளையம் | பட்டன் காளான் | 58.17 |

| | | | |
|---|---|---|---|
| 6. | எஸ்.எஸ்.குளம் | காய்கறிகள், நெல்,பஞ்சு விதை தரம் பிரித்தல் | 65.45 |
| 7. | சூலூர் | தேங்காய் ஓட்டுப் பொடி தயாரித்தல் | 43.50 |
| 8. | கிணத்துக்கடவு | சுருள் கயிறு தயாரித்தல் | 28.00 |
| 9. | பொள்ளாச்சி (தெற்கு) | நார் மற்றும் சுருள் கயிறு தயாரித்தல் | 105.00 |
| 10. | பொள்ளாச்சி (வடக்கு) | நார் கழிவிலிருந்து கட்டிகள் தயாரித்தல் | 50.50 |

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் உற்பத்தி தொடங்க செயலாக்கத்தில் உள்ள திட்டங்களின் விவரம்:

| வ. எண் (1) | வட்டாரத்தின் பெயர் (2) | திட்டத்தின் பெயர் (3) | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) (4) |
|---|---|---|---|
| 1. | ஆனைமலை | தென்னை நார் மற்றும் சுருள் கயிறு தயாரித்தல் | 54.00 |
| 2. | அவினாசி | தேங்காய் ஓட்டுப் பொடி தயாரித்தல் | 34.51 |
| 3. | பி.என். பாளையம் | பட்டன் காளான் | 49.03 |
| 4. | பொள்ளாச்சி (வடக்கு) | கயிறு மற்றும் கயிறு பொருட்கள் தயாரித்தல் | 50.92 |
| 5. | பொள்ளாச்சி (வடக்கு) | சுருள் கயிறு தயாரித்தல் | 28.00 |
| 6. | பொள்ளாச்சி (தெற்கு) | சுருள் கயிறு மற்றும் நார் பொருட்கள் தயாரித்தல் | 81.80 |



| | | | |
|---|---|---|---|
| 7. | சூலூர் | ஆமணக்கு எண்ணெய் தயாரித்தல் | 140.00 |
| 8 | தொண்டாமுத்தூர் | பால் காளான் தயாரித்தல் | 26.60 |

**40—**

## பகுதி நேர நியாய விலைக் கடைகள்

**வினா எண் 17136—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய எத்தனை கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் புதிதாக திறக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2001 ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் முடிய திறக்கப்பட்ட நியாய விலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு—

1 ராயணம்பட்டி முழுநேரக்கடை 26-03-2001 முதல் செயல்படுகிறது.

2 கொட்டாயூர் பகுதிநேரக்கடை 23-02-2001 முதல் செயல்படுகிறது.

3 இரும்பாளி மூலப்பாதை பகுதிநேரக்கடை 13-09-2001 முதல் செயல்படுகிறது.

4 தொப்பைக்காடு பகுதிநேரக்கடை 21-09-2001 முதல் செயல்படுகிறது.

5 மட்டம்பட்டி பகுதிநேரக்கடை 12-10-2001 முதல் செயல்படுகிறது.

எடப்பாடி தொகுதியில் 92 முழுநேர நியாய விலைக் கடைகளும், 26 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் உள்ளன.

[2004 ஜூலை 28

41—

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 26153—திரு. ஜி.கே. மணி**: *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி வத்தலப்பட்டிக்கு நியாயவிலைக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டாரம், மஞ்சாரஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பூச்சூர் என்ற முழுநேரக் கடைக்கு ஆரல்குந்தி என்ற பகுதிநேர கடை உள்ளது. வத்தலப்பட்டியில் உள்ள கிராம மக்கள் பூச்சூர் நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். வத்தலப்பட்டியில் நியாயவிலைக் கடை ஏதும் இல்லை. பூச்சூர் மற்றும் ஆரல்குந்தி அங்காடிகளுக்கு அரசுச் செலவில் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. இந்நிலையில் வத்தலப்பட்டியில் நியாயவிலைக் கடை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

42—

## கூட்டுறவு கடை கட்டடம் அமைத்தல்

**வினா எண் 26540—திரு க. முருகவேல் ராஜன்**: *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வந்தவாசி தொகுதி, கொடநல்லூர் ஊராட்சிக்கு கூட்டுறவு கடை கட்டடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



2004 ஜூலை 28]

விடை—

**மாண்புமிகு திரு செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியைச் சார்ந்த கொடநல்லூர் கூட்டுறவு நியாயவிலைக் கடை தற்போது ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் வாடகையின்றி இயங்கி வருகிறது. இக்கடை மருதாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 203 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

43—

## விற்பனை வரி

**வினா எண் 35233—திரு. செ. வெங்கடாஜலம்**: *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கில் உற்பத்தியாகும் ஈரமாவை (ஸ்டார்ச்) விற்பனை செய்வதில், விற்பனை வரி விதிக்கப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், 2002-2003-ல் விற்பனை வரி மூலம் அரசு வருவாய் எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச்மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. ஆனால், "சேகோசர்வ்" மூலம் விற்பனையாகும் பொருட்களுக்கு வரிவீதம் 2 விழுக்காடாக, தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் 07-05-2003 முதல் குறைக்கப்பட்டுள்ளது.*

*(ஆ) மரவள்ளிக் கிழங்கு மற்றும் அதன் மாவு விற்பனை மூலம் 2002-2003 (டிசம்பர் 2002 வரை) அரசுக்கு கிடைத்த வருவாய் விவரம் பின்வருமாறு:*

[2004 ஜூலை 28

| சேகோசர்வ் நிறுவனம் மூலம் | | மற்ற வணிகர்கள் மூலம் | |
|---|---|---|---|
| வரி, உபரிவரி, கூடுதல் வரி மற்றும் மத்திய விற்பனை வரி | ரூ.466.63 இலட்சம் | வரி, உபரிவரி, கூடுதல் வரி மத்திய மற்றும் விற்பனை வரி | ரூ.319.62 இலட்சம் |

44—

## நியாய விலைக் கடைகளில் சோதனை

**வினா எண் 35749—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை நியாயவிலைக் கடைகளில், திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது?

(ஆ) தவறுகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அவர்கள்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2002 ஆம் ஆண்டில் வருவாய்த் துறை அலுவலர்களால் மொத்தம் 7,331 நியாயவிலைக் கடைகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். முறைகேடுகள் செய்தது கண்டுபிடிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்பட்டு விற்பனையாளர்களிடம் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1 | இருப்பு அதிகமாக உள்ளது கண்டுபிடிக்கப்பட்ட இனங்கள் | 410 |
| 2 | இருப்பு குறைவு கண்டுபிடிக்கப்பட்ட இனங்கள் | 23,939 |
| 3 | போலி பில்கள் மூலம் முறைகேடுகள் குறித்த இனங்கள் | 7,496 |
| 4 | மேற்கண்ட இனங்களுக்காக வசூல் செய்யப்பட்ட மொத்த அபராதத் தொகை | 3,40,377 |



2004 ஜூலை 28]

(இ) திடீர் தணிக்கையின்போது கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகளுக்காக, அபராதம் விதிக்கப்பட்டு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், சேலம் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் மூலம் துறை ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

45—

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 35815—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி காளஹஸ்தினாதபுரம் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் வட்டாரம், செம்பனார்கோவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் 583 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாயவிலைக் கடையாக காளஹஸ்தினாதபுரம் நியாயவிலைக் கடை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டிக்கொடுக்கப்பட்ட சொந்த கட்டடத்திலேயே 07-04-1997 முதல் செயல்பட்டு வருகிறது.

46—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 36675—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாச்சலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், பாலக்கொல்லையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

விருத்தாச்சலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், பாலக்கொல்லை கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 968 மட்டுமே உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும், பாலக்கொல்லை கிராமத்தில் தற்போது எந்த ஒரு கால்நடை நிலையமும் இல்லாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு மருத்துவமனை துவக்க இயலாது.

47—

### வனக் காவலர்கள் பணி நிரந்தரம்

**வினா எண் 39260—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத் துறையில் நிரந்தரம் செய்யப்படாத வனக்காவலர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**



அரசாணை (நிலை) எண் 90, சுற்றப்புறம் மற்றும் வனத் (வனம் 2) துறை, நாள்: 27-04-2002-ன்படி நிரந்தரம் செய்யப்படாத சமூக வன ஊழியர்கள் மற்றும் வனத்தோட்டக் காவலர் நிலையில் இருந்து பணி நியமனம் செய்யப்பட்ட 418 பேர்களும் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். 1999 டிசம்பரில் வெளியிடப்பட்ட மாநில அளவிலான ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியலில் 5,442 நபர்களில் 1,459 பேர் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள பணியாளர்கள், வனக்காவலர் பணியிடங்கள் காலியிடம் ஏற்படும்போது நிரப்பப்படும். தற்காலிகப் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்ட உடன் நிரந்தரப் பணியாளர்களாக அறிவிக்கப்படுவார்கள்.

48—

### நெற்பயிர் பாதிப்புக்கு நிவாரணம்

**வினா எண் 21173—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் பெய்த கடும் மழையால் எவ்வளவு ஏக்கரில் விளைந்த நெற்பயிர் பாதித்துள்ளது என்று அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) அவர்களுக்கு அரசு வழங்கும் நிவாரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில், 2002 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் கடும் மழையால் பாதிக்கப்பட்ட நெல் பயிர் பரப்பளவு விவரம்.

| | |
|---|---|
| தஞ்சாவூர் | 24,817 எக்டர் |
| நாகப்பட்டினம் | 40,898 எக்டர் |
| திருவாரூர் | 45,750 எக்டர் |

(ஆ) அரசு ஆணை எண் 74, வருவாய் (NCII), துறை, நாள் 11-02-2002 மற்றும் அரசாணை எண் 76, வருவாய் (NCII) துறை, நாள்

12-02-2002-ன்படி முழுவதும் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு 1 எக்டருக்கு ரூ.2,500/-வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

49—

## பூக்கள் கொள்முதல்

**வினா எண் 28842—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள அனைத்து கிராமப் பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவில் பூக்கள் பயிரிடுவதால், பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் உற்பத்தி செய்யப்படும் பூக்களை அரசே கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள அனைத்துக் கிராமங்களிலும் உற்பத்தி செய்யப்படும் பூக்களை அரசே கொள்முதல் செய்யும் திட்டம் ஏதும் இல்லை.

50—

## மாடுகள், டயர் வண்டி வழங்குதல்

**வினா எண் 30614—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் இரு மாடுகளும், டயர் வண்டியும் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் எத்தனை பேர்?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் இரு மாடுகள் வழங்கும் திட்டம் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படவில்லை. டயர் வண்டி வழங்கும் திட்டம் மட்டும் 1995-96 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 25 நபர்கள் டயர் வண்டிகள் பெற்று பயன் பெற்றுள்ளனர்.

51—

## விவசாயிகளின் நிலங்களை மேம்படுத்துதல்

**வினா எண் 37785—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளின் நிலங்களை மேம்படுத்த ஆகும் செலவை (புல்டோசர்) அரசே ஏற்று மேம்படுத்தும் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறை மூலம் நிலங்களை மேம்படுத்த ஆகும் செலவை (புல்டோசர்) அரசே ஏற்று நடத்தும் திட்டம் ஏதும் இல்லை.

52—

## விவசாயக் கருவிகள் விற்பனை மையம்

**வினா எண் 39564—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில், விவசாயக் கருவிகள் விற்பனை மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரத்தில், விவசாயக் கருவிகள் விற்பனை மையம், துறை மூலம் அமைக்க இயலாது. எனினும், வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் தேவையான இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. விவசாய கருவிகளைப் பொறுத்தவரை தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

**53—**

**விவசாயிகளுக்கு டிராக்டர்கள், பவர் டில்லர்கள் வழங்குதல்**

**வினா எண் 39820—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் தொகுதியில் எத்தனை விவசாயிகளுக்கு டிராக்டர்கள், பவர் டில்லர்கள் விண்ணப்பித்து வழங்கப்பட்டன?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோட்டத்தில் 4 விண்ணப்பங்கள் பவர் டில்லர்களுக்கு பெறப்பட்டு 4 எண்களும் வழங்கப்பட்டன. டிராக்டர்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

**54—**

**தரம் வாய்ந்த தேயிலை உற்பத்தி**

**வினா எண் 47099—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 28]

தரம் வாய்ந்த தேயிலையை உற்பத்தி செய்ய வேண்டும் என கோயம்புத்தூர் மாவட்ட தேயிலை தோட்ட நிர்வாகத்தை அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தேயிலை விலை வீழ்ச்சிக்காக கூறப்படுகின்ற முக்கிய காரணங்களில் ஒன்று உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைத்தூளின் தரம் குறைவாக இருப்பதாகும்.

தரம் வாய்ந்த தேயிலை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் தோட்டக்கலைத் துறை, தேயிலை வாரியத்தின் நிதி உதவியுடன் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தேயிலை தரம் மேம்பாட்டுத் திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் அதிக அளவில் சிறு விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டுள்ளதால் இத்திட்டம் சிறு விவசாயிகள் அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் பெரும்பாலான தேயிலைத் தோட்டங்கள் தனியார் குழுமங்கள் (Company estates) வசம் உள்ளது. அவர்கள் தேயிலை சாகுபடியில் அனுபவம் மிக்க வல்லுநர்களை மேலாளராக (Estate Managers) அமர்த்தி தேயிலை உற்பத்தி செய்கின்றனர். சிறு விவசாயிகள் மிகக் குறைந்த அளிவிலேயே தேயிலை சாகுபடி, செய்து வருகின்றனர். எனவே, இத்திட்டம் கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்படவில்லை.

**55—**

**தொழில் நுட்ப இயந்திரங்கள் ஏற்றுமதி**

**வினா எண் 52876—திரு இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண் பொறியியல் கல்லூரியில் உருவாக்கப்படும் தொழில் நுட்ப இயந்திரங்கள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றும்தி செய்யப்படுகிறதா?

(ஆ) அந்த கருவிகள் தனியாருக்கு விற்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண் பொறியியல் கல்லூரியில் உருவாக்கப்படும் தொழில் நுட்ப இயந்திரங்கள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

(ஆ) தயாரிக்கப்படும் கருவிகள் தனியாருக்கும் விற்கப்படுகிறது.

**56—**

## தார்ச்சாலை அமைத்தல் மற்றும் குளம் தூர் வாருதல்

**வினா எண் 4915—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கன்னியாகுடி ஊராட்சி ஆதிதிராவிடர் காலனிக்கு தொகுப்பு வீடுகள், தார்ச்சாலை அமைத்தல் மற்றும் குளம் தூர்வார அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், கன்னியாகுடி ஊராட்சியில் 2002-2003 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 10 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளது. கன்னியாகுடி ஊராட்சியிலுள்ள, கன்னிக்கோயில் குளம் குடியிருப்பில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.30,000 மதிப்பீட்டில் தூர்வாரும் பணி நடைபெற்றுள்ளது, கன்னியாகுடி ஊராட்சி ஆதிதிராவிடர் காலனிக்கு சாலை அமைக்கும்பணி 11-வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ 50,000 மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.



**57—**

## மயானம் அமைத்தல்

**வினா எண் 15344—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, அம்பலவாணபுரம் கிராமம், கலைஞர் காலனி பகுதி மக்களுக்கு சுடுகாடு அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ஆவரைகுளம் ஊராட்சி, அம்பலவாணபுரம், கிராமம், கலைஞர் காலனி பகுதி மக்கள் தற்போது ஆதிதிராவிடர் சம்பந்தப்பட்ட மயானத்தை எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் பயன்படுத்தி வருகின்றனர். அவர்களுக்குத் தனியாக மயானம் அமைக்க போதிய இடம் கிராமத்தில் இல்லை.

**58—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 15581—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அன்னவாசல் ஊராட்சி, பெருமங்கலம் கிராமத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அன்னவாசல் ஊராட்சியில் 67 தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அதில்

பெருமங்கலம் கிராமத்திற்கு 1998-99 ஆம் ஆண்டு 10 தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

**59—**

**தொகுப்பு வீடுகள் மற்றும் தார்ச்சாலை**

**வினா எண் 15583—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சிமிழி ஊராட்சி, கீழநாணஞ்சேரி கிராமத்திற்குத் தொகுப்பு வீடுகள் மற்றும் தார்ச்சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சிமிழி ஊராட்சியில் 29 தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அதில் கீழநாணஞ்சேரி கிராமத்திற்கு 20 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் சிமிழி-கீழநாணஞ்சேரி சாலை 1 கி.மீ. தூரத்திற்கு கருங்கல் கப்பிச் சாலையாக உள்ளது.

**60—**

**தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டுதல்**

**வினா எண் 19139—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, சஞ்சிலி நத்தம் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், பிக்கிலி ஊராட்சியைச் சேர்ந்த சஞ்சிலி நத்தம் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. எனவே, தொலைக்காட்சிப் பெட்டி அறை தற்போது தேவைப்படவில்லை.

**61—**

**தொடக்கப்பள்ளி கட்டடம் மராமத்து செய்தல்**

**வினா எண் 19621—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், போத்தம்பட்டி பஞ்சாயத்து, வி. ஒத்தப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி கட்டடம் மிகவும் மோசமாக உள்ளதை மராமத்து செய்துதர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், போத்தம்பட்டி பஞ்சாயத்து, வி. ஒத்தப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி கட்டடம் ரூ32,500/-மதிப்பீட்டில் 11-வது நிதிக்குழு மானியத்தில் மராமத்து செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**62—**

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி பராமரிப்பு**

**வினா எண் 21164—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சிக்குட்பட்ட கோவில்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி கதவு, ஜன்னல் மிக மோசமான நிலையில் உள்ளதை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சிக்குட்பட்ட கோவில்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் கதவு ஜன்னல் மற்றும் கட்டட பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டது.

**63—**

## தொடக்கப் பள்ளிகளில் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல்

**வினா எண் 21230—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எத்தனை தொடக்கப் பள்ளிகளில் அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்படாமல் உள்ளன?

(ஆ) இந்த நிதியாண்டில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 58 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. அனைத்து பள்ளிகளுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இதில் 6 பள்ளிகளில் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. இதர பள்ளிகளிலும் கழிப்பிட வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 28]

**64—**

## தொலைக்காட்சிப் பெட்டி அறை கட்டுதல்

**வினா எண் 22066—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, தண்டுக்காரன் அள்ளியில் தொலைக்காட்சி பெட்டி அறை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, தண்டுக்காரன் அள்ளி கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. எனவே, இக்கிராமத்தில் தொலைக்காட்சி அறை கட்ட அவசியம் இல்லை.

**65—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 22614—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, ஆந்திரா குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் ஏழை எளிய மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், அணைக்கரை ஊராட்சிக்கு 2000-2001 ஆம் ஆண்டு வரை 20 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அணைக்கரை ஊராட்சி ஆந்திரா குடியிருப்பு பகுதியில் வசித்துவரும் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டிக்கொடுக்க வாய்ப்பில்லை.

**66—**

## அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 25182—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 2001-2002 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியில் பொதுப் பணித் துறை மூலம் கூடுதல் பள்ளிக் கட்டடம் இரண்டு அறை கொண்டது கட்டப்பட்டு பணி முடிக்கப்பட்டுவிட்டது. அந்தப் பள்ளிக்கு எஸ்.எஸ்.ஏ. திட்டத்தின்கீழ் ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டிலான ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் 2002-2003 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது.



2004 ஜூலை 28]

**67—**

## ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்கு பாதுகாப்புச் சுவர்

**வினா எண் 25946—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றிய பாலப்பட்டியில் வேலூர்-மோகனூர் சாலை ஓரத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குப் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், பாலப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.70,000/- மதிப்பீட்டில் பாதுகாப்புச் சுவர் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**68—**

## ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர்

**வினா எண் 26021—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு 2002-2003 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.85,000/- மதிப்பீட்டில் மேற்படி பணி எடுத்து முடிக்கப்பட்டுவிட்டது.

**69—**

**பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா எண் 26023—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி, ஜக்கம்பட்டி ஊராட்சி பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி, ஜக்கம்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் இல்லை.

**70—**

**சமத்துவபுரம் புதுப்பித்தல்**

**வினா எண் 28495—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 28]

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், பள்ளிப்பட்டு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் மழைக் காலங்களில் நீர் கசிவதால் குடியிருக்க முடியாத நிலையுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் ஒன்றியம், பள்ளிப்பட்டு சமத்துவபுரம் வீடுகள் புதிய கட்டடங்கள் என்பதால் கட்டுமான நிலையில்தான் நீர்கசிவு காணப்பட்டது. தற்போது, மழைக் காலங்களிலும் ஈரக்கசிவு காணப்படவில்லை.

**71—**

**தொடக்கப்பள்ளியைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 28642— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சி, கோம்பைக்காடு தொடக்கப்பள்ளி பழுதுபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பள்ளிக் கட்டடத்தைச் செப்பனிட்டுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி, கோம்பைக்காடு தொடக்கப்பள்ளி 11-வது நிதிக்குழு திட்டத்தில் ரூ.25,000/- மதிப்பீட்டில் 2002-2003 ஆம் ஆண்டில் பழுது சரி செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 28

72—

## பள்ளிக் கட்டடம் செப்பனிடல்

**வினா எண் 28713— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சி இராயணம்பட்டி தொடக்கப்பள்ளி பழுதடைந்து உள்ளதால், அதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சி, இராயணம்பட்டி தொடக்கப்பள்ளி 2002-2003 ஆம் ஆண்டில், பதினோராவது நிதிக்குழு மானியத் திட்டத்தின்கீழ் ரூ.20,000/- மதிப்பீட்டில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

73—

## தொகுப்பு வீடுகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 28999—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி கிராமம், பெருச்சாளி நத்தம் அருந்ததியர் காலனியிலுள்ள வீடுகள் மேற்கூரைகள் பழுதடைந்துள்ளதால், அவற்றைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

74—

## தொகுப்பு வீடுகள் செப்பனிடல்

**வினா எண் 29003—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள தொகுப்பு வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதை செப்பனிட்டுத் தர அரசு நடவடிகை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளின் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

[2004 ஜூலை 28

75—

### ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர்

**வினா எண் 29258—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் காட்டூர் ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் காட்டூர் ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் ரூ. 30,000/- மதிப்பீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் 2002-2003 ஆம் நிதியாண்டில் நாகப்பட்டினம் மாவட்ட கட்டட மையம் மூலமாக எடுத்துக் கொள்ளப்பட்டு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.*

76—

### ஊராட்சி மன்றக் கட்டடம்

**வினா எண் 30800—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, பனிக்கன்குப்பம் ஊராட்சியில் ஊராட்சி மன்றக் கட்டடம் சொந்தமாக அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பனிக்கன்குப்பம் ஊராட்சிக்கு சொந்தமாக, ஊராட்சி மன்றக் கட்டடம் 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளது.*

77—

### நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 31338—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் 2003-2004 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சுற்றுச்சுவர் கட்டட தேர்வு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.*

[2004 ஜூலை 28

78—

## காலனி விடுகள் சீர்செய்தல்

**வினா எண் 31980—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், தோளூர் கிராமம், மணிப்புதூரில் அரசால் கட்டப்பட்ட காலனி வீடுகள் இடிந்துவிடும் நிலையில் உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர்செய்யப்படும்.?

**விடை—**

**மாண்புமிகு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

79—

## தொகுப்பு விடுகள் செப்பனிடுதல்

**வினா எண் 33227—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், மாரம்பட்டி ஊராட்சி, வசந்தபுரம், மாரங்கொட்டாய் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

80—

## தொடக்கப் பள்ளியை செப்பனிடல்

**வினா எண் 34547—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி தொடக்கப் பள்ளியைச் செப்பனிட்டு சீர்செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலங்காடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை செப்பனிட்டு சீர்செய்திட 11-வது நிதிக்குழு 2002-2003 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 25,000/- செலவில் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது.

81—

## இலவச விடுகள் கட்டும் திட்டம்

**வினா எண் 35210—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) சேலம் மாவட்டத்தில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் (புதிய வீடுகள்) 2002–2003 ஆம் ஆண்டில் இலவச வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், இலவச புதிய வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், 1,861 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும் 2002-2003 ஆம் ஆண்டில் பாரத பிரதமர் வீடுகள் கட்டும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு அதன் மூலம் 226 பயனாளிகளும் பயனடைந்துள்ளனர்.

**82—**

## பெண்கள் கழிப்பறை வசதி

**வினா எண் 35915—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், முக்கல் நாய்க்கன்பட்டி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பெண்கள் கழிப்பறை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம், முக்கல் நாய்க்கன்பட்டி உயர்நிலைப் பள்ளியில் 2002–2003-ல் கழிப்பிடம் கட்டப்பட்டு தற்போது மகளிருக்கு ஒதுக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது.



2004 ஜூலை 28]

**83—**

## அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 35916—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், முக்கல் நாய்க்கன்பட்டி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முக்கல் நாய்க்கன்பட்டி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

**84—**

## தொடக்கப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண் 36009—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள மருதூர் இலந்தங்குழி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள மருதூர் இலந்தங்குழி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக் கட்டடம் சர்வசிக்ஷா அபியான் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**85—**

## இலவச தொகுப்பு விடுகள்

**வினா எண் 38372—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி கொல்லகுப்பம் கிராமப் பஞ்சாயத்தில் இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, கொல்லகுப்பம் கிராம ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டில் 10 ஆதிதிராவிடர் இன பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**86—**

## காலனி விடுகளை மராமத்து செய்தல்

**வினா எண் 38604—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் பஞ்சாயத்து முதலைக்குளம் ஆதிதிராவிடர் காலனி வீடுகளை மராமத்து செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**87—**

## காலனி விடுகளைச் செப்பனிடல்

**வினா எண் 38605—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் பஞ்சாயத்து, முதலைக்குளம் காலனி வீடுகளை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

[2004 ஜூலை 28

88—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 40681—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், நெய்வெத்தளி ஆதிதிராவிட காலனியில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

89—

## கிராம அலுவலர் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 40821—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், தாதிரெட்டிப் பள்ளியை தலைமையிடமாகக் கொண்ட மகிமண்டலம் எண். 2 கிராம அலுவலர் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், மகிமண்டலம் தலைமையிடமாக உள்ள ஊராட்சிக்கு 2001-2002 ஆம் ஆண்டில்



2004 ஜூலை 28]

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தாதிரெட்டிப்பள்ளிக்கு 2003-2004 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் ரூ.70,000 மதிப்பீட்டில் கட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு தற்போது வேலை நடைபெற்று வருகிறது.

90—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41550—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, பச்சனூர் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துதர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

91—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41557—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஏகணிவயல் தெற்கு ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 28

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**92—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41561—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், கம்மங்காடு ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளின் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**93—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41569—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், விசயபுரம் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**94—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 42228—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மாங்குடி ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**95—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 42245—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், குன்னூர் ஊராட்சி, பள்ளத்திவயல் ஆதிதிராவிடர் காலனி தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

96—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 42246—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியம், பெருமருதூர் ஆதிதிராவிடர் காலனி தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

97—

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 42247—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், வெட்டிவயல் ஊராட்சி, கம்மஞ்சேரி ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 28]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

98—

## பள்ளிக்குத் தடுப்புச் சுவர்

**வினா எண் 46067—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கம்லாபட்டி ஊராட்சி, கோடங்கிபட்டி பள்ளிக்குத் தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கம்லாபட்டி ஊராட்சி, கோடங்கிபட்டி பள்ளிக்குத் தடுப்புச் சுவர் ஊராட்சி ஒன்றிய நிதியில் 2003-2004 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

99—

## திரையரங்கை செயல்படுத்துதல்

**வினா எண் 48065—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள முடிஸ் பகுதியில் மூடியுள்ள திரையரங்கை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை முடிஸ் பகுதியிலுள்ள ஒரு தனியாரது கட்டடத்தில் திரு. ராமகிருஷ்ணன் என்பவர் திரையரங்கினை குத்தகை அடிப்படையில் நடத்தி வந்துள்ளார். கட்டட குத்தகையினை 1996 முதல் நீட்டிப்பு செய்யவில்லை. மேலும் திரையரங்கு இலாபகரமாக செயல்படவில்லை என்பதாலும் மேற்படி திரையரங்கில் செயல்பாட்டினை நீட்டிப்பு செய்ய விண்ணப்பிக்கவில்லை.

*(ஆ)* மேற்படி திரையரங்கை நடத்திட உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும்போது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**100—**

## தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம்

**வினா எண் 48505—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, மோகனூர் பேரூராட்சி, காளியம்மன் கோவில் தெரு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதி, மோகனூர் பேரூராட்சி, காளியம்மன் கோவில் தெரு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு தற்போது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக புதிய கட்டடம் கட்ட போதுமான இடவசதி இல்லை. எனவே புதிய கட்டடம் கட்ட இயலாது.



2004 ஜூலை 28]

## பட்டியல் 10

**1—**

## பயணியர் விடுதி

**வினா எண் 29992—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம் முன்பு பொதுப் பணித் துறை சார்பில் பயணியர் விடுதி கட்டப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* ஊத்துக்குளி, பெருந்துறையிலிருந்து திருப்பூர் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. ஊத்துக்குளிக்கும் திருப்பூருக்கும் இடைப்பட்ட தூரம் 16 கி.மீ. ஆகும். ஊத்துக்குளிக்கும் பெருந்துறைக்கும் இடைப்பட்ட தூரம் 20 கி.மீ. ஆகும். திருப்பூரில் பயணியர் மாளிகை (குமரன் இல்லம்) ஏற்கெனவே கட்டப்பட்டு பொதுப் பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பெருந்துறையிலும் நெடுஞ்சாலை பயணியர் மாளிகை ஒன்று உள்ளது. எனவே. முக்கிய பிரமுகர்கள் ஈரோட்டிலிருந்து ஊத்துக்குளி வழியாக மற்ற பகுதிகளுக்குச் செல்லும்போது ஓய்வெடுப்பதற்கு பெருந்துறை மற்றும் திருப்பூரில் போதுமான பயணியர் மாளிகை உள்ளது. ஆகையால், ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்தில் பொதுப் பணித் துறைமூலம் பயணியர் விடுதி கட்டுவதற்கு கருத்துரு எதுவும் அரசிடம் இல்லை.

*(ஆ)* வினா எழாது.

[2004 ஜூலை 28

2—

## உணவுப் பொருள் சேத விவரம்

**வினா எண் 21226—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழக அரசினால் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அதை உணவுப் பொருள் கிடங்கில் எலிகளினால் எவ்வளவு உணவுப் பொருள் சேதமடைந்துள்ளன?

(ஆ) இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகள் யாவும் விஞ்ஞான முறைப்படி கட்டப்பட்டுள்ளதாகும். மேலும், 2000-2001 ஆம் ஆண்டில் தமிழக அரசினால் கொள்முதல் செய்யப்பட்ட நெல், கிட்டங்கிகளில் விஞ்ஞான முறைப்படி இருப்பு வைக்கப்பட்டதால் எலிகளினால் சேதமடையவில்லை.

(ஆ) எலிகளைக் கட்டுப்படுத்த "ரோபான்" (Roban) எனும் எலி மருந்து எல்லா கிட்டங்கிகளாலும் பயன்படுத்தப்பட்டு எலிகளினால் உணவுப் பொருட்கள் சேதமடையாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

3—

## நெல் கொள்முதல்

**வினா எண் 30605—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு செய்யப்பட்ட நெல் கொள்முதல் விவரம் என்ன?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டு குறுவை பருவத்தின்போது நெல்வரத்து இல்லாததால் கொள்முதல் ஏதும் இல்லை. 2002 ஆம் ஆண்டு, சம்பா பருவத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 16,430 மெட்ரிக் டன் அளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

கிரேடு "ஏ" ரக நெல் 11,560 மெட்ரிக் டன்

கிரேடு "சி" ரக நெல் 4,870 மெட்ரிக் டன்

மொத்தம் 16,430 மெட்ரிக் டன்

4—

## வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு அரிசி

**வினா எண் 44202—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளதாக அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) அவர்களுக்கு கிலோ ரூ.3.50 வீதம் 35 கிலோ அரிசி மாதந்தோறும் வழங்குவதை அரசு கண்காணித்து வருகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ், வறுமைக்கோட்டிற்குமேல் என்ற பாகுபாடின்றி அவரவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அனைவருக்கும் 1998 முதல் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருவதன் அடிப்படையில், சேலம் மாவட்டத்தில் மொத்தம் 7,86,985 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன.

[2004 ஜூலை 28

(ஆ) மைய அரசின் திட்டமான அந்தியோதையா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் ஏழ்மையிலும் ஏழ்மையில் உள்ளவர்களைக் கண்டறிந்து 29,102 குடும்ப அட்டைதாரர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு 35 கிலோ அரிசி, கிலோ ஒன்றுக்கு ரூ.3.00 என்ற விலையில் அரிசி வழங்கப்பட்டு வருவதைக் கண்காணித்து வருகிறது.

**5—**

## மலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 54599—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் முதல் ஏற்காடு வரை உள்ள மலைப்பகுதி சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 1975 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. ஆதலால், சேலம் முதல் ஏற்காடு வரையிலான மலைப்பகுதி சாலையை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**6—**

## திருக்கோயில் ஆலோசனைக் குழு

**வினா எண் 20504—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 28]

(அ) இந்து அறநிலையக் கோயில்களில் வளர்ச்சியை முன்னிட்டு அமைக்கும் ஆலோசனைக் குழுவில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெற அரசு முன்வருமா?

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனையின்பேரில் கோயில் வளர்ச்சிக்குத் திட்டமிடப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 7-ல் துறையின் பல்வேறு நடவடிக்கைகளுக்கும், திருக்கோயில்களின் வளர்ச்சி மேம்பாட்டிற்கும் மாநில அளவில் "ஆலோசனைக் குழு" ஒன்று அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு திருக்கோயிலிலும் ஆலோசனைக் குழு அமைக்கவும், அதில் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் பெற்று திருக்கோயில் மேம்பாட்டிற்கு செயல்பட தற்போதைய 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவுகளில் வழிவகை செய்யப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) திருக்கோயில்களில் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் தேவையான கருத்துகளையும், ஆலோசனைகளையும் சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் வழங்கலாம். அவை திருக்கோயில்களில் உள்ள பழக்கவழக்கத்தின் அடிப்படையிலும், நிதி ஆதாரத்தின் அடிப்படையிலும் சட்டரீதியாகப் பரிசீலிக்கப்படும்.

**7—**

## தெப்பக்குளங்கள் சீரமைத்தல்

**வினா எண் 34050—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், வடிவுடையம்மன் ஆலயத்தின் உள், வெளியே உள்ள தெப்பக்குளங்கள் சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 28

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர், வடிவுடையம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான உள்குளம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, உள்குளத்தினைப் பழுதுபார்க்கவேண்டிய அவசியம் இல்லை. திருக்கோயிலுக்குச் சொந்தமான வெளிக்குளம் திருப்பணிக்கு மதிப்பீடு அங்கீகரிப்பட்டு ரூ.7,60,315/-க்கு டெண்டர் விடப்பட்டு, திருக்குளத் திருப்பணி 80 சதவிகிதம் நிறைவு பெற்றுள்ளது.

**8—**

## கோயிலில் மண்டபம் கட்டுதல்

**வினா எண் 41454—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலையம்மன் கோயிலில் மண்டபம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி அருள்மிகு மலையம்மன் திருக்கோயிலுக்கு தினசரி வந்து வழிபடும் பக்தர்கள் மிகக் குறைவு என்பதாலும், விசேட நாட்களில் வருகின்ற பக்தர்கள் நின்று சுவாமி தரிசனம் செய்ய தற்போதுள்ள மண்டபம் போதுமானதாக உள்ளது என்பதாலும், இத்திருக்கோயிலுக்குப் புதிதாக மண்டபம் ஏதும் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.



2004 ஜூலை 28]

**9—**

## அறங்காவலர் நிர்வாகக் குழுவை நியமித்தல்

**வினா எண் 41507—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, பச்சூர் முருகர் கோயில் மற்றும் சென்னகேசவப்பெருமாள் கோயிலுக்கும் அறங்காவல் நிர்வாகக் குழுவை நியமிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்றாம்பள்ளி தொகுதி, பச்சூர் முருகன் கோயிலுக்கு பரம்பரை அறங்காவலர் உரிமை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதான வழக்கு நிலுவையில் இருந்து வருவதால், இத்திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் நிர்வாகக் குழு நியமிக்கப்படவில்லை. மேலும், சென்னகேசவப்பெருமாள் கோயிலுக்குப் பரம்பரை அறங்காவலர்களாக அறிவிக்கக் கோரி வேலூர் இணை ஆணையர் முன்பாக விண்ணப்பித்து விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் இக்கோயிலுக்கும் அறங்காவலர்கள் குழு நியமனம் செய்யப்படவில்லை. ஆகவே, வழக்குகள் நிலுவையில் உள்ளதால் தற்போது அறங்காவலர் குழு நியமிக்க இயலாத நிலை உள்ளது.

**10—**

## பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

**வினா எண் 43056—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், இருந்திரப்பட்டி முத்துமாரியம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜுலை 28

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், அன்னவாசல் ஒன்றியம், இருந்திரப்பட்டியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்களின் நலன் கருதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

11—

## கோயில் குளங்களைத் தூர் வாருதல்

**வினா எண் 53160—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் உள்ள கோயில் குளங்களைத் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான 475 திருக்குளங்களில், 165 திருக்குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன. 7 திருக்குளங்கள் நல்ல நிலையில் உள்ளன. தூர்வாரப்படாத 303 திருக்குளங்களில், 79 திருக்குளங்களை வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர் வாருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான 462 திருக்குளங்களில், 63 திருக்குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன. 2 திருக்குளங்கள் நல்ல நிலையில் உள்ளன. தூர்வாரப்படாத 397 திருக்குளங்களில், 151 திருக்குளங்களை வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர் வாருவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரு மாவட்டங்களிலுள்ள இதர திருக்கோயில்



2004 ஜுலை 28]

திருக்குளங்களைத் தூர் வாருவதற்கு சம்பந்தப்பட்ட திருக்கோயில்களில் தற்போது நிதி வசதி இல்லாததால், இக்குளங்களை அரசு உதவி பெற்று அல்லது அரசின் வேறு பல திட்டங்கள்மூலம் தூர்வாரும் பணி செய்யப்படவுள்ளது.

12—

## பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகள் தொடங்குதல்

**வினா எண் 26716—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, அரசு கலைக் கல்லூரியில் (கலை) வணிகவியல், அறிவியல் துறைகளில் பட்ட மேற்படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகள் (எம்.ஃபில்., பிஎச்.டி.) தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி, அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி. கணினி அறிவியல் பட்ட மேற்படிப்பும் மற்றும் வணிகவியல் துறையில் பகுதி நேர எம். ஃபில். ஆராய்ச்சிப் படிப்பும், சுயநிதி அடிப்படையில் 2003-2004 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. போதிய வழிகாட்டி ஆசிரியர்கள் இல்லாததால் பிஎச்டி. தொடங்கப்படவில்லை.

13—

## ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 35037—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, காட்டூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடத்தை உடனடியாக நிரப்ப அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, காட்டூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 88 மாணவ/மாணவியர் பயின்று வருகின்றனர். 2 ஆசிரியர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டு 2 ஆசிரியர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். பணியிடம் காலியில்லை.

**14—**

## கலைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 36658—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் உள்ள இராஜேஸ்வரி வேதாசலம் கலைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு கல்லூரிகள் அனைத்தும், 15-10-2002 முதல் அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் உறுப்பு கல்லூரிகளாக மாற்றி ஆணை வழங்கப்பட்டுள்ளதையடுத்து, உறுப்பு கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகளும் ஆய்வகங்களும் கட்டுவதற்கு 'நபார்டு' வங்கியில், நிதி உதவி பெற கருத்துரு அவ்வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அக்கருத்துருவில் செங்கற்பட்டு இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கல்லூரிக்கு, நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்தவுடன் கூடுதலான வகுப்பறைகள் கட்டும் பணி தொடங்கப்படும்.

**15—**

## இலங்கை அகதிகள் முகாம்

**வினா எண் 53702—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) இலங்கை அகதிகள் முகாம் தமிழகத்தில் எத்தனை இடங்களில் உள்ளன?

(ஆ) மொத்தம் எவ்வளவு பேர் உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) 103 இடங்களில் உள்ளன.

(ஆ) 2004 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி பல்வேறு முகாம்களில் 57,920 அகதிகளும், முகாமிற்கு வெளியே 17,780 அகதிகளும் ஆக மொத்தம் 75,700 அகதிகள் தமிழகத்தில் உள்ளனர்.

**16—**

## அறுவை அரங்கு உபகரணங்கள் பழுதுபார்த்தல்

**வினா எண் 17783—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதுநிலை குடிமை மருத்துவமனை அலுவலரிடமிருந்து "அறுவை அரங்கு உபகரணங்கள் பழுதுபார்த்தல்" சம்பந்தமாக அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை அரங்கிற்கு உபகரணங்கள் பழுதுபார்த்தல் சம்பந்தமாக அரசுக்கு கோரிக்கை ஏதும் வரவில்லை. மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள அறுவை அரங்கிற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு நன்கு செயல்பட்டு வருகிறது.

**17—**

## அரசு மருத்துவமனைகளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் ஊசிகள்

**வினா எண் 28313—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் ஊசிகள் (Disposable Syringes) உபயோகிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில், இரத்த வங்கி, இரத்தப் பரிசோதனைக் கூடங்கள், பால்வினை நோய்ப் பகுதி, எய்ட்ஸ் நோய்ப் பகுதி, முழு உடல் இரத்தப் பரிசோதனைப் பகுதி, தீவிர மருத்துவக் கண்காணிப்புப் பகுதி, சிறுநீரகப் பகுதி, இருதயப் பிரிவு, புறநோயாளிப் பகுதி போன்ற பிரிவுகளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் ஊசிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சில துறைகளில், கண்ணாடி பீற்று குழல் பயன்படுத்தப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் உபயோகிக்கப்படுகிறது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள ஆரம்ப சுதாகார நிலையங்களில், ரண ஜன்னி வராமல் தடுக்க கருவுற்ற தாய்மார்களுக்கும் தொண்டையடைப்பான், கக்குவான் இருமல், காசநோய், இளம்பிள்ளைவாதம், தட்டம்மை ஆகிய நோய்கள் வராமல் தடுக்க தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. இவற்றிற்குத் தேவையான ஊசி குழல்கள் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன. இந்த ஊசிகள் கிருமி நாசினி செய்யப்பட்டு திரும்பவும் உபயோகிக்கத் தக்கதாகும்.





**18—**

## லெப்டோஸ்பைரோஸிஸ் சிகிச்சை நிலையம்

**வினா எண் 32094—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைமையிட மருத்துவமனைகளில் லெப்டோஸ்பைரோஸிஸ் சிகிச்சை நிலையங்கள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) லெப்டோஸ்பைரோஸிஸ் சிகிச்சை அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் வழங்கப்படுகிறது. எனவே, இச்சிகிச்சைக்குத் தனியாக சிகிச்சை நிலையம் தொடங்க எந்தக் கருத்துருவும் இல்லை.

**19—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 32710—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆளப்பிறந்தான் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. ஆளப்பிறந்தான் கிராமம்,

[2004 ஜூலை 28

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,28,080 (1991 கணக்கெடுப்பு). இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், ஆளப்பிறந்தான் கிராமத்திற்கும், அறந்தாங்கி அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. மேலும், இக்கிராமத்திற்கு 5 கி.மீ. தொலைவில் கீழாநிலை ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. எனவே, மக்கள் தொகை அடிப்படையிலும், இரு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கிடையே குறைந்தபட்ச இடைவெளி தூரம் என்ற வழிகாட்டுதலின் அடிப்படையிலும் ஆளப்பிறந்தான் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**20—**

## அவசர கால ஊர்தி

**வினா எண் 32898—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அவசர கால ஊர்தி (ஆம்புலன்ஸ்) கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) இதுகுறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2004 ஜூலை 28]

**21—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 34136—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, சன்னாசிநல்லூரை மையமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1,413 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே, பெரம்பலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், சன்னாசிநல்லூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**22—**

## ஸ்கேன் பரிசோதனை செய்ய பயிற்சி பெற்ற மருத்துவர் நியமித்தல்

**வினா எண் 35326—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனையில் Scan பரிசோதனைக்கு சங்ககிரி மருத்துவமனையிலிருந்து Scan பயிற்சி பெற்ற மருத்துவரை மாற்றுப் பணி (Deputation Duty) புரிய அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கும் மெதூர் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**26—**

## வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 39409—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

*(அ) சிங்காநல்லூர் தொகுதிக்குப்பட்ட வெள்ளக்கிணறு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டித் தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கிணறு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**27—**

## மாணவ, மாணவியர்களுக்கு சிகிச்சை

**வினா எண் 39484—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) சேலம் மாநகராட்சி பள்ளிகளில், அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களைக் கொண்டு மாணவ, மாணவியர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிக்கப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு மாணவ, மாணவியர்கள் 2002-2003 ஆம் ஆண்டு சிகிச்சை பெற்றார்கள்?*

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிக்கும்பொருட்டு பிரத்யேகமாக ஒரு மருத்துவக் குழு அமைக்கப்பட்டு பள்ளி சிறார் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 96 பள்ளிகளுக்குச் சென்று 28,264 மாணவ, மாணவியர்களைப் பரிசோதனை செய்து 8,228 மாணவர்களிடம் நோயின் அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும், 24 மாணவர்கள் மேல்சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**28—**

## குடும்பக் கட்டுப்பாட்டுக்கு உதவி

**வினா எண் 41153—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2001–2002 ஆம் ஆண்டில் எந்த மாவட்டத்தில் அதிகமான நபர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டார்கள்?*

*(ஆ) குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களுக்கு அரசு வழங்கும் உதவிகள் யாவை?*

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2001–2002 ஆம் ஆண்டு சென்னை மாவட்டத்தில் அதிகமான நபர்கள் (53,304 பேர்) குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டார்கள்.

(ஆ) (1) அறுவை சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.200/– ஊக்கத் தொகையாக அரசு வழங்குகிறது. மேலும், அவர்களுக்கு மருத்துவச் செலவிற்காக ரூ. 90/– வழங்கப்படுகிறது.

(2) அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு ஆணுக்கும் ரூ.175/– ஊக்கத் தொகையாக அரசு வழங்குகிறது. மேலும், ரூ.25/– மருந்துக்காக செலவு செய்யப்படுகிறது.

**29—**

## பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 44973—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நல்லூர், குன்னம், திருமுல்லைவாசல், கொள்ளிடம் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, நல்லூர், குன்னம், திருமுல்லைவாசல், கொள்ளிடம் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**30—**

## புதிய மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 45240—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002, 2002-2003 ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் எத்தனை மருத்துவர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர்?

(ஆ) அவர்களில் பெண் மருத்துவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் புதிதாக 9 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களில் 8 பேர் பெண் மருத்துவர்கள். 2002-2003 ஆம் ஆண்டில் புதிதாக 13 ஆண் மருத்துவர்களும், 9 பெண் மருத்துவர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

**31—**

## இரத்த சுத்திகரிப்புக் கருவிகள் வழங்குதல்

**வினா எண் 46152—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள அரசினர் தலைமை மருத்துவமனைக்கு இரத்த சுத்திகரிப்புக் கருவிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில்

சிறுநீரகத் துறையில் [எம்.டி.(நெப்ரோலாஜி)] சிறப்பு தகுதியுடைய மருத்துவர்கள் பணியாற்றுவதால் அங்கு மட்டுமே இரத்த சுத்திகரிப்புக் கருவி (டயாலிசிஸ் இயந்திரம்) வழங்கப்பட்டுள்ளது. மருத்துவப் பணிகள் மற்றும் ஊரக நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள், த்தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் சிறுநீரக சிறப்புத் துறை (Department of Nephrology) உருவாக்கப்படாததால் மேற்கூறிய கருவிகள் வழங்கப்படவில்லை. தற்போது அரசு, அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் மட்டும் இரத்த சுத்திகரிப்புக் கருவி (டயாலிசிஸ் இயந்திரம்) வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தாலுகா மருத்துவமனையான சீர்காழி அரசு மருத்துவமனைக்கு மேற்கூறிய கருவிகள் வழங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

### துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமித்தல்

**வினா எண் 47240—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், 11 எருக்கூர் கிராமத்தில் டேனிடா திட்டம் மூலம் இயங்கி வரும் துணை சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின்கீழ் இயங்கி வரும் துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவரை நியமிக்கும் முறைமை செயல்பாட்டில் இல்லை. எருக்கூர் துணை சுகாதார நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள கிராம சுகாதார செவிலியர் அவ்விடம் தங்கி சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றி வருகிறார். மேலும், குன்னம் கூடுதல் சுகாதார நிலையத்தைச் சார்ந்த மருத்துவர் எருக்கூர் துணை சுகாதார நிலையத்திற்குச் சென்று மருத்துவ சிகிச்சை செய்து வருகிறார்.*



**33—**

### பிற்படுத்தப்பட்டோருக்கு விடுதிகள் கட்டுதல்

**வினா எண் 8888—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதியில் பிற்பட்டோருக்கு விடுதிகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில் 3 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் இயங்குகின்றன. இதில் மாதாப்பட்டினம் மற்றும் முக்கூடல் மாணவர் விடுதிகள் அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன. மாதாப்பட்டினம் பள்ளி மாணவியர் விடுதிக்கு (பிந) சொந்தக் கட்டடம் கட்ட 2003-2004-ல் ஆணையிடப்பட்டுள்ளது. நிலம் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

**34—**

### மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 10882—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் மாணவர் விடுதிக்கு ஆதிதிராவிட நலத் துறைக்குச் சொந்தமான (சர்வே எண்கள் 1020, 1021, 1022) இடத்தில் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2004 ஜூலை 28

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பழவூர் மாணவர் விடுதிக்கு ரூ.31.50 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 15, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 15-5-2003-ல் ஆணை வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**35—**

**மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்**

**வினா எண் 19174அ—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளில், வரும் கல்வியாண்டில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் லாலாப்பேட்டை மற்றும் பஞ்சப்பட்டி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பஞ்சப்பட்டி அரசு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்கு 2002-2003 ஆம் ஆண்டுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையான 50-ஐவிட கூடுதலாக 10 மாணவர்கள் சேர்க்க அனுமதிக்கப்பட்டனர். லாலாப்பேட்டை விடுதிக்கு அனுமதியளிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை 75 ஆகும். இவ்விடுதி மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த 2002-2003-ல் கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை.



2004 ஜூலை 28]

**36—**

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் நல விடுதி**

**வினா எண் 33972—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் நல விடுதிகள் உள்ளன? இவற்றில் எத்தனை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) அரசுக் கட்டடத்தில் இயங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/மாணவியர் நலனுக்கென 972 விடுதிகள் இயங்குகின்றன. 31-3-2001 நிலவரப்படி இதில் 202 விடுதிகள் அரசுக் கட்டடத்திலும், மீதி 770 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கின. 2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் 214 விடுதிகளுக்கு அரசுக் கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டு, 31-3-2004 நிலவரப்படி இதில் 114 விடுதிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி 100 விடுதிகளுக்கான கட்டடப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. எஞ்சியுள்ள 556 விடுதிகளுக்கு நிலம் கிடைப்பது மற்றும் அரசின் நிதி நிலையைப் பொறுத்து வரும் ஆண்டுகளில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2004 ஜூலை 28

**37—**

## பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 37738—திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவோணத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் துறை விடுதிக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவோணத்தில் உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 15, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 5-5-2003-ல் ஆணையிடப்பட்டு கட்டடம் கட்டும் பணி பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**38—**

## பிற்படுத்தப்பட்டோர் மாணவ நல விடுதிக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 38399—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ நல விடுதிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி, பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் விடுதிக்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ.31.50 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 15, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 5-5-2003-ல் ஆணையிடப்பட்டு, விடுதிக் கட்டடம் கட்டும் பணிகள் பொதுப் பணித் துறை மூலம் நடைபெற்று வருகின்றன.

**39—**

## இலவச எரிவாயு வழங்கும் திட்டம்

**வினா எண் 10096—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களுக்கு இலவச எரிவாயு வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், சிலிண்டர்களை விநியோகிக்கும் பொறுப்பை யாருக்கு எப்படி வழங்கும் என்பதை அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசின் அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் சலுகை பெறும் அனைத்து புதிதாக திருமணம் ஆன பெண்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் சுய உதவிக் குழு உறுப்பினர் மற்றும் புதிதாக திருமணம் செய்து கொண்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களின் மகளுக்கும் (ஒரு நபர் மட்டும்) இலவச எரிவாயு இணைப்புத் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன களப் பணியாளர்களால் வருவாய், ஊரக வளர்ச்சி மற்றும் சமூக நலத் துறை களப் பணியாளர்களின் ஒருங்கிணைப்புடன் தொடர்புடைய ஆட்சித்

[2004 ஜூலை 28

தலைவரின் ஒட்டுமொத்த கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின்கீழ் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இந்தியன் ஆயில் நிறுவனம், பாரத் பெட்ரோலியம் நிறுவனம் போன்ற பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களைச் சார்ந்த அருகிலுள்ள சில்லறை விற்பனை முகவருடன் தொடர்பு கொள்ளப்பட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படுகிறது.

**40—**

## ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம்

**வினா எண் 37430—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஏற்காடு தொகுதியில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

*(ஆ)* ஆம் எனில், பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

*(இ)* அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம். ஏற்காடு தொகுதியில் அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*(ஆ)* 1 (ஒருவர் மட்டும்).

*(இ)* வழங்கப்பட்ட நிதி ரூ.7,000/-

**41—**

## திருமண உதவித் திட்டம்

**வினா எண் 37432—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஏற்காடு தொகுதியில் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் உதவி கோரியோர் எத்தனை பேர்?

*(ஆ)* அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஏற்காடு தொகுதியில் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 16 பேர் உதவி கோரியுள்ளனர். மேற்காணும் திட்டத்தின்கீழ் 2 பேர் பயனடைந்துள்ளனர்.

*(ஆ)* ஒரு நபருக்கு ரூ. 7,000/- வீதம் இரண்டு நபர்களுக்கு மொத்தம் வழங்கப்பட்ட நிதி ரூ. 14,000/-.

**42—**

## தேசிய பெண்கள் நல நிதி

**வினா எண் 37572—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி மத்திய அரசிடம் தேசிய பெண்கள் நல நிதியை அரசு கோரியுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி மத்திய அரசிடம் தேசிய நல நிதியை அரசு ஏதும் கோரவில்லை. இருப்பினும், குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டினை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள இவ்வரசு, 1993 ஆம் ஆண்டு "டாக்டர் ஜெ ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தினை" ஆரம்பித்து செயலாக்கியது. இத்திட்டத்தின் சமீபத்திய வளர்ச்சிகளைக் கருத்திற்கொண்டு, தொடர் நடவடிக்கையாக 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேம்படுத்தப்பட்டு "தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்" என மாற்றம் செய்யப்பட்டது.

[2004 ஜூலை 28

இத்திட்டம், தமிழக அரசின் துறைகளான சமூக நலன், கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் நலன் மற்றும் இதர சம்பந்தப்பட்ட துறைகளின் பணிகளை ஒருங்கிணைந்து மகளிர் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்கான இத்திட்டத்தின் குறிக்கோள்களை அடையச் செய்வது ஆகும்.

இத்திட்டத்தில் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டு மற்றும் 2006 ஆம் ஆண்டுக்கென இடைக்கால இலக்குகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும்பொருட்டு, மாநில அளவிலான குழு, துறைத் தலைவர்கள் அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழு என குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**43—**

## விதவை மறுமணத் திட்டம்

**வினா எண் 38626—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில், சேலம் மாவட்டத்தில் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டத்தின்கீழ் பயனடைந்தோரின் 8 பேர்.



2004 ஜூலை 28]

**44—**

## பேருந்து பயண இலவச அனுமதி

**வினா எண் 41949—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002-ல் செங்கற்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையத்திலிருந்து அரசுப் பேருந்து பயண இலவச அனுமதி கோரி கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002-ல் செங்கற்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையத்திலிருந்து அரசுப் பேருந்து பயண இலவச அனுமதி கோரி 692 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

(ஆ) அதில் அனைத்து 692 நபர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டது.

**45—**

## தினப் பத்திரிகை வழங்கும் திட்டம்

**வினா எண் 41996—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுய உதவிக் குழுக்கள், நாட்டு நடப்பைத் தெரிந்துகொள்ள தினப் பத்திரிகை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் நாட்டு நடப்பைத் தெரிந்துகொள்ள தினப் பத்திரிகை வழங்கும் திட்டம் எதுவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படவில்லை.

[2004 ஜூலை 28

46—

## கொத்தடிமைகள் மீட்பு

**வினா எண் 25040—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெளி மாநிலத்தில் கொத்தடிமைகளாக இருந்தவர்கள் எத்தனை பேரை 2001-2002 ஆம் ஆண்டில் அரசு மீட்டுள்ளது?

(ஆ) அவர்களுக்கு என்னென்ன வழிகளில் அரசு உதவி புரிந்து வருகிறது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களில் கொத்தடிமைகளாக இருந்த 201 பேரை அரசு மீட்டுள்ளது.

(ஆ) கொத்தடிமைகளிலிருந்து மீட்கப்படும் ஒவ்வொருவருக்கும் உடனடி நிவாரணமாக ரூ. 1000/-மும் அதன் பிறகு நிரந்தர நிவாரணத் தொகையாக ரூ.19,000/-மும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. மேலும், இவர்களுக்கும் இவர்களது குடும்பத்தினருக்கும் அரசால் வழங்கப்படும் அனைத்து நிவாரண உதவிகளும் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன.

47—

## அரசு நலத் திட்டங்கள் குறித்து விளம்பரம்

**வினா எண் 25535—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் கருதி அரசு செயல்படுத்தும் நலத் திட்டங்களின் நலன்கள் குறித்து அம்மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளம்பரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜூலை 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் கருதி அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்து அம்மக்கள் புரிந்துகொள்ளும் வகையில், ஒளி, ஒலி கருவிகளுடன்கூடிய நடமாடும் விளம்பரப் பிரிவு வட மாவட்டங்களுக்கு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டும், தென் மாவட்டங்களுக்குத் திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டும் இரு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மேற்படி நலத் திட்டங்கள் குறித்து கையேடான மக்கள் சாசனம் வெளியிடப்பட்டு பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தொண்டு நிறுவனங்கள், பேரூராட்சிகள் மற்றும் நூலகங்கள் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி நலத் திட்டங்களின் விவரங்கள் இணையதளத்திலும் (website) சேர்க்கப்பட்டுள்ளது.

48—

## பழங்குடி பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் மூலம் நிதியுதவி

**வினா எண் 41579—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் மத்திய அரசின் பழங்குடி பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நிதியுதவி பெறும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஏற்காடு தொகுதியில் மைய அரசின் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நிதியுதவி வழங்கும் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் 29 பேர்களுக்கு வங்கிகள் ஒப்புதல் அளித்து தாட்கோ மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**49—**

## பள்ளி தரம் உயர்த்துதல்

**வினா எண் 41581—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**50—**

## ஆதிதிராவிட மாணவிகள் விடுதி அமைத்தல்

**வினா எண் 49292—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, பொன்பரப்பி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிட மாணவிகள் விடுதி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய ஆதிதிராவிடர் மாணவிகள் விடுதி அமைத்துத் தரும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**51—**

## புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுதல்

**வினா எண் 2018—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள அரசுப் போக்குவரத்து பணிமனையிலிருந்து 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் மூலமாக 2001-2002 ஆம் ஆண்டில் எந்த புதிய வழித்தடங்களிலும் பேருந்துகள் விடப்படவில்லை.

**52—**

## அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 35905—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலிருந்து புத்தூர், குன்னம், பெரம்பூர் வழியாக மாநிரவேளூர், வடரெங்கத்திற்கு அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடத்தின் நீளம் 24 கிலோ மீட்டர் தார்ச் சாலை ஆகும். கோரிக்கை தடத்தில் கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி உள்ளது:

1. சீர்காழி-வடரெங்கம் (வழி) புத்தூர், குன்னம், பெரம்பூர், மாநிரவேளூர் கழக நகர் பேருந்து தடம் எண் ஏ11, 4 நடைகள், தனியார் பேருந்து 18 நடைகள்.

கோரிக்கை தடத்தில் தற்போது கழக நகர் பேருந்து மூலம் நடையிழப்பின்றித் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கை தடத்தில் கூடுதலாகப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

**53—**

## கதர் கிராமத் தொழிலகங்கள்

**வினா எண் 12179—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கதர் கிராமத் தொழிலகங்கள் எத்தனை இயங்கி வருகின்றன?

(ஆ) இந்த நிதியாண்டில் புதிதாகத் தொடங்கப்படவுள்ள தொழிலகங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 26 கதர் கிராமத் தொழிலகங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) வாரியத்தின் நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால் புதியதாகத் தொழிலகங்கள் தொடங்கிட இயலாத நிலை உள்ளது.



**54—**

## கதர் விற்பனை நிலையம்

**வினா எண் 22823—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கதர் விற்பனை நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையில் ஏற்கெனவே, கிராம சில்பா ஒன்று இயங்கி வருகிறது. இதில் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே, புதிதாக வால்பாறையில் கதர் விற்பனை நிலையம் ஏற்படுத்திடும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**55—**

## கதர்த் துணிகள் விற்பனை

**வினா எண் 25541—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு மலிவு விலையில் கதர்த் துணிகளை விற்பனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2004 ஜூலை 28

*(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கதர், பாலியஸ்டர் துணி உற்பத்திக்கான ஸ்லைவர் கதராணைக் குழு நிர்ணயிக்கும் விலையில் கொள்முதல் செய்து இவ்விலையின் அடிப்படையில் துணி உற்பத்தி செய்யப்படுகிறது, கதராணைக் குழு நிர்ணயம் செய்யும் விலைக்கே விற்பனை செய்ய இயலும் என்பதால் மலிவு விலை கதர்த் துணிகள் எதுவும் உற்பத்தி செய்யப்படுவதில்லை.*

**56—**

## கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை மையம்

**வினா எண் 26789—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னையில் கதர் கிராமம் மற்றும் விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) சென்னையில் முக்கிய பகுதியான உயர் நீதிமன்றம் அமைந்துள்ள பகுதியில் 28,248 சதுர அடி பரப்பளவில் குறளகக் கட்டடத்திலும் மற்ற முக்கிய பகுதிகளான அண்ணா சாலை, மயிலாப்பூர், அயனாவரம், வண்ணாரப்பேட்டை, சட்டமன்ற உறுப்பினர் விடுதி, அசோக் நகர் மற்றும் அண்ணா நகர் ஆகிய இடங்களிலும் கதர் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கதரங்காடிகளில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*



2004 ஜூலை 28]

**57—**

## பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 47661—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம் பரவலான முறையில் செயல்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?*

*(ஆ) அதனால் ஏற்பட்ட பலன்கள் யாவை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம் பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்த அரசு பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் திட்ட உதவிகள் வழங்கி வருகின்றது.*

***(1) பகுதி 2 திட்டம்***

*பட்டு விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் அதிக மல்பரி இலை மகசூல் தரும் உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களைச் சாகுபடி செய்ய, ஒரு ஏக்கருக்கு ரூ.500/- ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.*

*பட்டு வளர்ச்சியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், 1000 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க ரூ. 2.20 இலட்சம் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு 20-12-2003 வரை 925 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.*

***(2) மத்திய பட்டு வாரிய நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டம்***

*மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப் பாசன அமைப்புகள் நிறுவ ஒரு ஹெக்டேருக்கு ரூ.24,000/-மானியம் வழங்கப்படுகிறது.*

சுகாதாரமான முறையில் புழு வளர்ப்பு மேற்கொள்ள தனியாகப் புழு வளர்ப்பு மனைகளை ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/- மதிப்பீட்டில் கட்டும் பட்டு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

(அ) . இவைதவிர, சுவிஸ் நிறுவன நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் "பட்டு 2000" மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் "ஜெய்கா" ஆகிய திட்டங்களின்கீழும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழும், பட்டு வளர்ப்புத் தொழில் வளர்ச்சிக்கென பல்வேறு திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி அதன் மூலம் கூடுதல் வருவாய் பெறுவதுடன், கிராமப்புறங்களில் கூடுதலாக வேலைவாய்ப்பும் உருவாக்கப்படுகிறது. மேற்கண்ட நலத் திட்டங்கள் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் பரவலாகச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. புதிய நடவு 1,000 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு புழு வளர்ப்பு மனை மற்றும் தளவாடங்கள் 470 பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு ஏக்கர் மல்பரி நடவு மூலம் கூடுதலாக 5 நபர்கள் வீதம் 5,000 நபர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**58—**

## பட்டுச் சேலை நெசவு மையங்கள்

**வினா எண் 49205—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கதர் வாரியத்தில் பட்டுச் சேலை நெசவு மையங்கள் எங்கெங்கு உள்ளன ?

(ஆ) அதன் விவரம் என்ன ?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கதர் வாரியத்தின் பட்டு சேலை நெசவு மையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:—

1. இராசிபுரம்
2. சேலம்
3. குஞ்சாண்டியூர்
4. சத்தியமங்கலம்
5. காட்டம்பட்டி
6. வெள்ளக்கோவில்
7. தாரமங்கலம்
8. வடவள்ளி

(ஆ) மேற்கண்டவாறு எட்டு இடங்களில் சுமார் 190 நெசவாளர்கள் நெசவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் ஒரு நெசவாளர் குறைந்த பட்சம் ரூ.75 முதல் ரூ.100 வரை ஒரு நாள் ஊதியமாகப் பெற்று வருகின்றனர். மேலும் 12% நல நிதியும் மற்றும் 10% ஊக்கத் தொகையும் சேர்த்து ஊதியம் பெற்று வருகின்றனர். நெசவாளர்களது உற்பத்தித் திறனுக்கேற்ப கதராணைக் குழு மும்பை விலை நிர்ணயப் பட்டியலில் தெரிவித்தவாறு கூலி கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வருடாந்திர உற்பத்தி குறியீடு ரூ.945.00 இலட்சமாகும்.

**59—**

## விவசாயிகளுக்குக் கடன் வழங்கல்

**வினா எண் 43372—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) பண்ருட்டி தொகுதி, பாச்சாரப்பாளையம் கிராமத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் விவசாயக் கடன்கள் விவசாயிகளுக்கு விரைவில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, பாச்சாரப்பாளையம் கிராமத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் அப்பகுதியைச் சார்ந்த விவசாயிகளுக்கு தற்பொழுது அனைத்துக் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அதன் உறுப்பினர்களுக்கு கடன் வழங்குவதிலும் சிரமங்கள் எதனையும் எதிர்கொள்ளவில்லை. எனவே, எப்பொழுதும் விவசாயிகளுக்கு கடன்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) எழவில்லை.

**60—**

**மரங்கள் ஏலம் மூலம் வருவாய்**

**வினா எண் 35860—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டு வனத் துறைக்கு மரங்கள் ஏலம் விடப்பட்டதால் கிடைக்கப் பெற்ற வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் வனத் துறையில் மரங்கள் (சந்தன மரங்களைத் தவிர) ஏலம் விட்டதால் மண்டலங்களில் கிடைக்கப்பெற்ற வருவாய் (விவரம்) வருமாறு:



2004 ஜூலை 28]

| மண்டலத்தின் பெயர் | வருவாய் (ரூ. இலட்சத்தில்). |
|---|---|
| 1. ஈரோடு | 3.08 |
| 2. திருச்சி | 527.10 |
| 3. புலிகள் காப்பகம், திருநெல்வேலி | 0.24 |
| 4. கோவை மண்டலம் | 6.03 |
| 5. மதுரை மண்டலம் | 0.31 |
| 6. திருநெல்வேலி மண்டலம் | 11.68 |
| 7. ஆராய்ச்சி மண்டலம், சென்னை | 0.05 |
| 8. தர்மபுரி மண்டலம் | 12.60 |
| | 561.09 |

மற்ற மண்டலங்களான சென்னை, வேலூர், சேலம், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மரம் விற்கப்படவில்லை என்பதால் வருவாய் விவரம் தரப்படவில்லை.

**61—**

**மரக்கன்றுகள் நடப்பட்ட விவரம்**

**வினா எண் 42072—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதியில் கடந்த 2 ஆண்டுகளில் எந்தெந்த கிராமங்களில் எவ்வளவு செலவில் வனத் துறை மூலம் எத்தனை மரச்செடிகள் நடப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமம், மர

[2004 ஜூலை 28

வளர்ப்பிற்கு செலவு செய்யப்பட்ட தொகை, மரக்கன்றுகள் நடவு செய்த எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | வருடம் | திட்ட கிராமத்தின் பெயர் | நடவு செய்த மரக்கன்றுகளின் எண்ணிக்கை | மரவளர்ப்பிற்கு செலவு செய்த தொகை |
|---|---|---|---|---|
| 1. | 2001 | பழவேலி/திருக்கச்சூர் | 1,02,000 | 15,16,000 |
| 2. | 2001 | நெம்மேலி | 1,27,000 | 18,46,540 |
| 3. | 2001 | தாத்தலூர் | 1,27,000 | 18,46,540 |
| 4. | 2001 | ஈக்குன்னவாக்கம் | 1,27,000 | 22,63,000 |

2002 ஆம் ஆண்டில் இத்தொகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் எந்தக் கிராமத்திலும் செயல்படுத்தப்படவில்லை.

**62—**

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 44436—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆற்காடு வனச் சரகம், தாதிரெட்டிப்பட்டி கிராமத்தில் டிஏபி வனக் குழு மூலமாக சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம் ஆற்காடு வனச் சரகம், தாதிரெட்டிப்பட்டி கிராமம் 1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் திட்ட கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டது. இத்திட்ட கிராமத்திற்கு தேவையான இடைதாங்கு மண்டலத்தின் பணிகள் அனைத்தும் 1999-2000 உடன் செய்து முடிக்கப்பட்டது. தற்போது இக்கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தரும் திட்டம் ஏதும் இல்லை.



2004 ஜூலை 28]

**63—**

## தேயிலைத் தோட்டத் தொழிலாளர் நலன்

**வினா எண் 46308—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள எஸ்டேட்டில் பணிபுரியும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு யானை, சிறுத்தை, புலி போன்ற கொடிய வன விலங்குகளால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், நிர்வாகமும் நட்ட ஈடு வழங்க வேண்டும் என நிர்வாகத்திற்கு வலியுறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள எஸ்டேட் பகுதியில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் யானை, சிறுத்தை, புலி போன்ற வன உயிரினங்களால் ஆபத்து ஏற்படும்போது நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு அரசாலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தாலும் நிவாரணம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.

**64—**

## மரங்கள் வளர்க்கும் திட்டம்

**வினா எண் 46360—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை கீழ்ப்பகுதி ஊராட்சிகளிலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் கட்டாயமாக மரங்கள் வளர்க்க வேண்டும் என்று அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை கீழ்ப்பகுதி ஊராட்சிகளிலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் கட்டாயமாக மரங்கள் வளர்க்க வேண்டும் என்று அறிவிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

65—

## மலைவாழ் மக்கள் நலன்

**வினா எண் 50775—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள டாப்சிலிப், கோழிகமுத்தி ஆகிய இடங்களில் குடியிருக்கும் மலைவாழ் மக்களுக்குப் பாதுகாப்பு வீடுகள் மற்றும் தெரு விளக்குகள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள டாப்சிலிப், கோழிகமுத்தி ஆகிய இடங்களில் குடியிருக்கும் மலைவாழ் மக்களுக்குப் பாதுகாப்பான வீடுகள் மற்றும் தெரு விளக்குகள் (சூரிய ஒளி மூலம் இயங்குபவை) வனத் துறை மூலம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. மேலும், சில வீடுகள் மற்றும் தெரு விளக்குகள் அமைத்துத் தர நடப்பு நிதியாண்டில் நிதி கிடைக்கப் பெற்றதும் அப்பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2004 ஜூலை 28]

66—

## மீனவருக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 47155—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்ட ஊராட்சி, சாவடிக்குப்பம் மற்றும் மடத்துக்குப்பம் மீனவர் பகுதிக்குத் தொகுப்பு வீடு கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஊராட்சி, மடத்துக்குப்பம் மீனவ கிராமத்திற்கு 1994-95 ஆம் ஆண்டில் 25 வீடுகள் ஒப்பளிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சாவடிக்குப்பம் மீனவ கிராமத்திற்குத் தொகுப்பு வீடு வேண்டி உரிய மீனவர் கூட்டுறவுச் சங்கத் தீர்மானத்துடன் கருத்துரு முறையான வழியாகப் பெறப்பட்டால் விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு வாய்ப்புகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில் வீடுகள் ஒதுக்கிட/கட்டித்தர அரசால் பரிசீலிக்கப்படும்.

67—

## மீன் உற்பத்தியை அதிகப்படுத்துதல்

**வினா எண் 51030—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, ஆழியாறு அணையில் மீன்வளர்ப்பு, மீன் உற்பத்தி குறைந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மீன் உற்பத்தியை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியாறு அணையின் மீன்பிடி உரிமம் அரசாணை எண் 638, வனம் மற்றும் மீன் துறை, நாள் 22-6-1977-ன்படி தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு 1-7-1977 முதல் நீண்டகாலக் குத்தகை (30 ஆண்டு காலம்) அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது. இந்நீர்த்தேக்கம், அதிகபட்ச நீர்மட்டமாகிய 120 அடியில் 646 ஹெக்டேர் நீர்ப்பரப்பளவைக் கொண்டதாகும். நீர்த்தேக்கத்தில் 15 பங்கு மீனவர் (யூனிட்) களைக் கொண்ட மீன்பிடிப்பு செய்யப்படுகிறது. [ஒரு அலகில் (யூனிட்டுக்கு) இரு மீனவர் கொண்டது] பங்கு முறையில் மீன்பிடிப்பு செய்யப்படுகிறது.

ஆழியாறு அணையில் மீன் குஞ்சு வளர்ப்பு, மீன் குஞ்சுகள் நீர்த்தேக்க இருப்பு செய்தல், மீன் வளர்ப்பு ஆகியவை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, செயல்படுத்தப்படுகின்றது. சாதா கெண்டை தவிர பிற நுண்மீன் குஞ்சுகள் (உற்பத்திப் பணி இல்லாததால்) கழகத்தின் பிற அலகுகளிலும் மற்றும் மீன் துறை சார்ந்த மையங்களிலும் பெற்று, வளர்ப்புப் பணிகள் நடைபெறுகின்றன. கடந்த காலங்களில் நீர்த்தேக்கத்தில் முழு கொள்ளளவு எய்தாத நிலையிலும் கழகத்திற்கு இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் தீவிர கவனம் செலுத்தி மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பணிகள்/ நீர்த்தேக்க இருப்பு செய்யும் பணிகள், மீன் பிடிப்புப் பணிகள் செம்மையாக மேற்கொள்ளப்பட்டு உற்பத்தியினைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**68—**

## உயர்ந்த ரக மீன்கள் வளர்த்தல்

**வினா எண் 51369—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோலையாறு மற்றும் ஆழியாறு அணையில் உயர்ந்த ரக மீன்கள் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியைச் சேர்ந்த சோலையாறு அணையில் மீன்வளப் பணிகளை தமிழ்நாடு அரசு மீன்வளத் துறை மேற்கொண்டுள்ளது. ஆழியாறு அணையில் மீன்வளப் பணிகளை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. சோலையாறு அணையில் கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை போன்ற உயர்ரக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சோலையாறு அணையில் தற்சமயம் சிறப்பு இனமான பொம்மீன்குஞ்சு பொறிப்பகம் அமைத்து பொம்மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து சோலையாறு அணையில் இருப்பு செய்யும் நடவடிக்கையும் தொடங்கப்பட்டுள்ளது. ஆழியாறு அணையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை போன்ற உயர்ரக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மீன் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

(ஆ) இந்த இரு அணைகளிலும் ஏற்கெனவே பெருரகக் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மீன் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**69—**

## சுற்றுலா வளர்ச்சிக்கு நிதியுதவி

**வினா எண் 54425—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறைக்கு சுற்றுலாத் துறை மூலம் ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் இன்னும் பணி தொடங்கப்படாத காரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மைய அரசு 2001-2002-ல் வால்பாறையில் வழித்தட வசதிகளை ஏற்படுத்த நிதியுதவி வழங்குவதற்கு முன்னுரிமைப்படுத்தியது. அதன் அடிப்படையில் ரூ.30.00 இலட்சத்திற்கான மதிப்பீடு மைய அரசுக்கு

[2004 ஜூலை 28

அனுப்பப்பட்டது. மைய அரசு இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கவில்லை. எனவே, வால்பாறைக்கு சுற்றுலாத் துறை மூலம் ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

70—

## மோட்டல் ஏற்படுத்தும் திட்டம்

**வினா எண் 54430—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலையாறு அணை அருகில் மோட்டல் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): வால்பாறை சோலையாறு அணை அருகில் மோட்டல் ஏற்படுத்தும் திட்டம் தற்பொழுது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

71—

## நடமாடும் மண் ஆய்வு சோதனை மையம்

**வினா எண் 34007—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் நடமாடும் மண் ஆய்வு சோதனை மையம் கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரத்தின் நடமாடும் மண் ஆய்வு சோதனை மையம், மண் மாதிரிகள் ஆய்வு செய்வதோடு, பிற ஆய்வுப் பணிகளான மண் பரிசோதனை, விழிப்புணர்வு முகாம்கள், பகுதி மேம்பாட்டுத் திட்டம்,



கிராம ஏற்புத் திட்டம், ஆராய்வுத் தளைகள் மற்றும் பிற சிறப்பு நடவடிக்கைகளையும் செய்து விவசாயிகளுக்கு மிகுந்த பயனாற்றி வருகிறது.

2. இம்மையம் கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | மண் பரிசோதனை செய்த மாதிரிகளின் எண்ணிக்கை | 13312 | 15036 | 14573 |
| | பயனாளிகளின் எண்ணிக்கை | 10310 | 12315 | 13896 |
| 2. | மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம்கள் | 7 | 6 | 9 |
| | பயனாளிகள் | 221 | 170 | 246 |
| 3. | பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2 | 2 | 2 |
| | பயனடைந்த பரப்பு (ஏக்கர்) | 46 | 35 | 48 |
| 4. | கிராம ஏற்புத் திட்டம் | 1 | 1 | 1 |
| | பயனாளிகளின் எண்ணிக்கை | 50 | 41 | 52 |
| 5. | ஆராய்வுத் தளைகள் | 3 | 2 | 1 |

72—

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு அலுவலகக் கட்டடம்

**வினா எண் 34273—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், உத்தமசோழபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனை மையம் மற்றும் விற்பனைக் குழுமம், அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், உத்தமசோழபுரத்தில், சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் சேலம் விற்பனைக் குழு தலைமை அலுவலகங்களுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அந்த அலுவலகங்கள் 16-9-2002 முதல் முழுமையாகச் செயல்பட்டு வருகின்றன.

**73—**

## விதைகள் சேமிப்புக் கிடங்கு

**வினா எண் 39566—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில் விதைகள் சேமிப்புக் கிடங்கு ஒன்று கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) விதை சேமிப்புக் கிடங்கு என்று வேளாண்மைத் துறையில் தனியாக எதுவும் இல்லை. வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள கிடங்கில் விதைகள் இருப்பு வைக்கப்படுகின்றன.

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் ஒரு முதன்மை வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது.



**74—**

## ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

**வினா எண் 52130—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு மானியத்துடன் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**75—**

## வேளாண்மைப் பொறியியல் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 52189—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் இயங்கி வரும் வேளாண்மைப் பொறியியல் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[2004 ஜூலை 28

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி நகரில் இயங்கும் வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**76—**

**விவசாய கூலிகளுக்கு மண்வெட்டி, கடப்பாரை வழங்குதல்**

**வினா எண் 53475—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள விவசாய கூலிகளுக்கு மானிய விலையில் மண்வெட்டி, கடப்பாரை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மண்வெட்டி, கடப்பாரை வழங்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

**77—**

**வேளாண்மைப் பயிற்சி மையங்கள்**

**வினா எண் 53853—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் வேளாண்மைப் பயிற்சி மையங்கள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) அதன் பணிகள் என்ன?



2004 ஜூலை 28]

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, காஞ்சிபுரம், திண்டிவனம், நவ்லாக் (வேலூர்), சேலம், தர்மபுரி, பவானி, லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, திருநெல்வேலி, திருப்பதிசாரம் ஆகிய 12 இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்களும், வேளாண் துறை சார்ந்த அலுவல்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக புதுக்கோட்டையில் மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையமும் மற்றும் உழவர்களுக்கு நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி வழங்குவதற்கு மதுரையில் நீர் மேலாண்மைப் பயிற்சி நிலையமும், வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) உழவர் பயிற்சி நிலையங்களின் மூலம் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களில் கிராமப்புற பயிற்சி, அமைப்பாளர் பயிற்சி, கள செயல்விளக்கம் மற்றும் மாதிரி செயல்விளக்கங்களும் செய்து காட்டப்படுகின்றன. மேலும், விவசாயிகள் பயன் அடையும் வகையில், உழவர் சுற்றுலாவும், உழவர் தின விழாவும் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் நடத்தப்படும் திட்டங்களின் பயிற்சிகளும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

**78—**

**உழவர் பயிற்சி நிலையங்கள்**

**வினா எண் 54094—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மொத்தம் 12 மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ.எண் | உழவர் பயிற்சி நிலையம் அமைந்த மாவட்டம் | உழவர் பயிற்சி நிலையத்துடன் இணைந்துள்ள மாவட்டங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், திருவள்ளூர் |
| 2. | திண்டிவனம்(விழுப்புரம்) | விழுப்புரம், கடலூர் |
| 3. | நவ்லாக் (வேலூர்) | வேலூர், திருவண்ணாமலை |
| 4. | சேலம் | சேலம், நாமக்கல் |
| 5. | தர்மபுரி | தர்மபுரி, கிருஷ்ணகிரி |
| 6. | பவானி (ஈரோடு) | ஈரோடு, கோவை |
| 7. | லால்குடி (திருச்சி) | திருச்சி, கரூர், பெரம்பலூர் |
| 8. | குடுமியான்மலை (புதுக்கோட்டை) | புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், திருவாரூர், |
| 9. | சாக்கோட்டை (தஞ்சாவூர்) | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 10. | பரமக்குடி (இராமநாதபுரம்) | இராமநாதபுரம், சிவகங்கை விருதுநகர், தேனி |
| 11. | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி |
| 12. | திருப்பதிசாரம் (கன்னியாகுமரி) | கன்னியாகுமரி |

மாநில அரசின் வேளாண் திட்டம் சம்பந்தமாக பயிற்சிகள் உழவர் பயிற்சி நிறுவனம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. வேளாண் துறையின் புதிய கண்டுபிடிப்புகளையும், தொழில்நுட்பங்களையும் விவசாயிகளின் வயல்களில் கடைப்பிடிக்க செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கிராமங்களில் வேளாண்மை பற்றிய





அறிவிப்புப் பலகை வைத்தல், மாதாந்திர பண்ணை மடல் வெளியிடல், வானொலி மற்றும் தினசரிகள் மூலமாகப் பண்ணைச் செய்திகள் வெளியிடல், விவசாயிகளை கல்வி சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லல், உழவர் தின விழா, பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கு நடத்துதல் ஆகியவற்றை உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்படுத்தி வருகின்றன. இதுதவிர, வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு வேளாண் அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் உள்ள விவசாயப் பயிற்சிகளையும் உழவர் பயிற்சி நிலையங்கள் அளித்து வருகின்றன. மேலும், வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் நீர் மேலாண்மை மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு பயிற்சிகளும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**79—**

**நகராட்சி பூங்காவைச் சீரமைத்தல்**

**வினா எண் 504—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெறும் நிலமாக உள்ள எடப்பாடி நகராட்சி பூங்காவிற்கு மானியம் அளித்து சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சி பூங்காவை 2001-2002 ஆம் ஆண்டு 11-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின் மூலம் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு 14-7-2003 முதல் மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

**80—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 6689—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) லால்குடி தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்லாத கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) லால்குடி தொகுதியில் 8 இடங்களில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படாத இடங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பூவாளூர் சாலையில் 4,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், லால்குடி மெயின் ரோடு பூங்கா அருகில் 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டப்பட்டு குடிநீர்க் குழாய்கள் வாயிலாக குடிநீர் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

81—

## பள்ளி தரம் உயர்த்துதல்

**வினா எண் 10229—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, எச்சனேரி நகராட்சி பள்ளியைச் சுற்றி மதிற்சுவரும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவடி நகராட்சி, எச்சனேரி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி பொது நிதியின்கீழ் ரூ.3.75 இலட்சம் செலவில்



2004 ஜூலை 28]

மேற்கொள்ளப்பட்டு 24-2-2003-ல் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற கருத்துரு பெறப்படவில்லை.

82—

## பேரூராட்சிகளை தொகுதி மாற்றி அமைத்தல்

**வினா எண் 13978—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியிலிருந்து தேவூர் பேரூராட்சி, அரசிலாமணி பேரூராட்சி ஆகியவற்றை எடப்பாடி தொகுதியுடன் இணைக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சங்ககிரி தொகுதியிலிருந்து தேவூர் மற்றும் அரசிலாமணி பேரூராட்சி ஆகியவற்றை எடப்பாடி தொகுதியுடன் இணைப்பது தொடர்பாக நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

83—

## தொகுப்பு விடுகள் கட்டும் திட்டம்

**வினா எண் 17454—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி, வடபாதி ஊராட்சியிலுள்ள நடுக்கரைமேட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், எடக்குடி, வடபாதி ஊராட்சியிலுள்ள நடுக்கரைமேட்டில் 2003-2004 ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 5 தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

**84—**

**சாக்கடை வசதி செய்தல்**

**வினா எண் 18883—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது மற்றும் 6-வது வட்டம், நாகூரார் தோட்டத்தில் உள்ள சலவைத் தொழிலாளர் குடியிருப்புகளில் கழிவுநீர் செல்ல சாக்கடை வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது மற்றும் 6-வது வட்டத்தில் உள்ள நாகூரார் தோட்டத்தில் உள்ள சலவைத் தொழிலாளர்கள் குடியிருப்புகளில் கழிவுநீர் செல்ல சாக்கடை வசதி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. பந்து செலுத்துதல் மூலம் இங்குள்ள கழிவுநீர்க் குழாய்கள் சுத்தம் செய்யப்பட்டு தற்போது நன்றாக இயங்குகின்றன. இருப்பினும், உபயோகிப்பாளர்கள் திடப் பொருட்களை கழிவுநீர்க் குழாய்களில் போடுவதால் அடிக்கடி கழிவுநீர் குழாய்களில் அடைப்பு ஏற்படுகிறது. இவை அவ்வப்போது சரிசெய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.



**85—**

**சாக்கடை அமைத்தல்**

**வினா எண் 18894—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 5-வது வட்டத்தில் சலவைத் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் கழிவுநீர் செல்ல சாக்கடை அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி 5-வது வட்டத்தில் உள்ள சலவைத் தொழிலாளர் குடியிருப்புகளில் கழிவுநீர் செல்ல சாக்கடை வசதிகள் ஏற்கெனவே செய்யப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. இதை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் பராமரித்து வருகிறது.

**86—**

**சுடுகாட்டிற்கு சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா எண் 27541—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகர், ஜலகண்டபுரம் ரோட்டில் உள்ள சுடுகாட்டில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி சுற்றுச்சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜலகண்டபுரம் சாலையில் உள்ள சுடுகாட்டில் இருந்து விவசாய ஆக்கிரமிப்பு ஏற்கெனவே அகற்றப்பட்டு, நிலம் அளந்து முட்டு அமைக்கப்பட்டுள்ளது.

**87—**

**சாக்கடை குட்டையினை மூடிடும் திட்டம்**

**வினா எண் 27682—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தொகுதி, விள்ளாநல்லூர் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் முன்புள்ள சாக்கடைக் குட்டையினை மூடிடும் திட்டம் அரசின் வசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விள்ளாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் முன்பு உள்ள குட்டை (பள்ளம்) ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரின் பொறுப்பில் உள்ளது. மேற்படி குட்டையில் பேரூராட்சி மூலம் எவ்வித கழிவு நீரும் விடுவதில்லை. எனவே, தற்போது மேற்படி பள்ளத்தினை பேரூராட்சியிலிருந்து மூடிடும் திட்டம் எதுவும் இல்லை.

**88—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 29195—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சோமநாதபுரத்தில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட சோமநாதபுரத்தில் தற்போது பொதுமக்களுக்கு போதுமான அளவு குடிநீர் நாள்தோறும் விநியோகம் செய்யப்படுகிறது.

**89—**

**கிராம நிர்வாக அலுவலகம் கட்டும் திட்டம்**

**வினா எண் 30441—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எலத்தூர் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், அகர எலத்தூர் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் ரூ.70,000/- மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**90—**

**கோழிப் பண்ணையைப் பராமரித்தல்**

**வினா எண் 32012—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) முசிறி பேரூராட்சியில் 6-வது வார்டு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கோழிப் பண்ணையின் வாயிலாக ஏற்படக்கூடிய சுகாதாரக் கேட்டைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட 6-வது வார்டு குடியிருப்புப் பகுதிக்கு அருகில் உள்ள மூன்று கோழிப் பண்ணைகளைச் சுத்தம் செய்து பராமரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோழிப் பண்ணையின் ஈக்கள் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிக்கு வராதவண்ணம் மருந்துகள் தெளித்து சுகாதாரச் சீர்கேடு ஏற்படாதவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**91—**

## திருமண மண்டபம் கட்ட இடம் ஒதுக்கீடு

**வினா எண் 33183—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் திருமண மண்டபம் கட்டுவதற்கு பேரூராட்சி மூலம் இடம் ஒதுக்கீடு செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை பேரூராட்சி பகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் பேரூராட்சிக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் இடம் உள்ளது. இதில் திருமண மண்டபம் கட்ட வால்பாறை பேரூராட்சி வாயிலாக இடம் ஒதுக்கீடு செய்து



2004 ஜூலை 28]

அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திருமண மண்டபம் கட்ட ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தருவதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பின்னர் திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**92—**

## சாலையிலுள்ள தரைக் கடைகளை அகற்றுதல்

**வினா எண் 34495—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் கடலூர் சாலையில் இருமருங்கிலும் ஆக்கிரமிப்புகள் செய்து தரைக் கடைகள் வைத்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதனை அகற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் சாலையின் இருமருங்கிலும் உள்ள ஆக்கிரமிப்புகள் 1-11-2003 மற்றும் 2-11-2003 ஆகிய தேதிகளில் நெடுஞ்சாலைத் துறை மற்றும் நகராட்சியால் அகற்றப்பட்டுவிட்டன.

(ஆ) வினா எழவில்லை.

**93—**

## தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 38373—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 28

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பத்தலபல்லி கிராமத்தில் தொகுப்பு வீடுகள் வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், பத்தலபல்லி ஊராட்சியில் 2000-2001 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் அல்லாத இதர வகுப்பினருக்கு 15 தொகுப்பு வீடுகளும் 2001-2002 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் வகுப்பினர்களுக்கு 10 தொகுப்பு வீடுகளும் ஆக மொத்தம் 25 தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

**94—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 41555—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மன்னகுடி ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.



2004 ஜூலை 28]

**95—**

## பூங்கா அமைக்கும் திட்டம்

**வினா எண் 43847—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூர் நகரில் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் பேரூராட்சி எல்லைப் பகுதியில் பூங்கா அமைக்க பேரூராட்சி மன்றம் தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை. பரமத்திவேலூர் பகுதியில் பூங்கா அமைக்கும் திட்ட முன்மொழிவு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**96—**

## கழிப்பறைகளை மேம்படுத்தும் திட்டம்

**வினா எண் 44765—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி பகுதியில் கழிப்பறைகளை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் 28 கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். VAMBAY திட்டத்தின்கீழ் மேலும் 30 பொதுக் கழிப்பறைகள் கட்ட செயல்படுத்தும் திட்டம் நடவடிக்கையில் உள்ளது.

**97—**

## இலவச விடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 47999—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மேல்பச்சூர் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவசமாக வீடு கட்டித்தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொதுவாக தாழ்த்தப்பட்ட மற்றும் இதர இனத்தவருக்கு என குறிப்பிட்டு தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் நாட்ராம்பள்ளி ஒன்றியம், பச்சூர் ஊராட்சி, மதுரா மேல்பச்சூர் கிராமத்தில் 5 இதர இன வகுப்பினருக்குத் தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தொகுப்பு வீடு ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.





**98—**

## இலவசத் தொகுப்பு விடுகள்

**வினா எண் 48286—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 73 திருநகரி ஊராட்சிக்குட்பட்ட மாரிவேட்டைத் தெரு, தலையநரித் தெரு, சின்னத் தெரு ஆகியவற்றில் குடியிருப்போருக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம் திருநகரி ஊராட்சிக்குட்பட்ட மாரிவேட்டைத் தெரு, தலையநரித் தெரு மற்றும் சின்னத் தெரு ஆகியவற்றில் குடியிருப்போருக்கு 2000-2001 ஆம் நிதியாண்டில் பிரதம மந்திரி கிராம வளர்ச்சி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 15 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**99—**

## பாலம் கட்டுதல்

**வினா எண் 48737—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை நகராட்சி, பி.பி.குளம், நேதாஜி சாலை, சிவக்காடு பகுதியை இணைக்க பாலம் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநராட்சி, சமயநல்லூர் தொகுதியான பி.பி.குளம், நேதாஜி சாலை, சிவகாடு பகுதியை இணைக்க பாலம் கட்டுவதற்கு நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை ஏதுமில்லை.

**100—**

## கச்சா விடுகள் மேம்பாடு

**வினா எண் 50508—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003-2004 ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சி மூலம் மேம்படுத்தப்பட்ட கச்சா வீடுகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டில் கச்சா வீடுகள் ஏதும் மேம்படுத்தப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]





# 2. உரிமைப் பிரச்சினை

## உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட பிரச்சினை குறித்து எவரும் விவாதிக்கவோ, விமர்சிக்கவோ கூடாது என்ற ஆணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 23-7-2004 அன்று அவையில் 2004-2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்கு நிதி அமைச்சர் பதிலளிக்கும்போது, முந்தைய நேர்வுகளில் முன்னளி மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி அவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது குறித்துப் பேசினார். அவர் பேசிய பேச்சு பின்வருமாறு:

"சட்டப் பேரவையைப் பொறுத்தவரைக்கும் 22-7-2004 அன்று நாம், இந்தக் கூட்டத்தைத் துவக்கியிருக்கிறோம். 11-2-2004-இல் தற்போது, இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு 5 மாதங்களுக்குப் பிறகு, பல்வேறு மாற்றங்கள் அரசினுடைய திட்டங்களின் மாற்றங்கள் என்று பல்வேறு நிலைக்கு உட்பட்டபோது, 31 ஆம் தேதி மதியம் ஒன்றரை மணிக்குள் Appropriation Bill, அதை ஈடேற்றியாக வேண்டும். இது சட்ட நிலை. இந்தச் சட்ட நிலையை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் புரியாதவர்கள் அல்லர். விவாதமின்றி முன்னளி மானியக் கோரிக்கைகள் ஈடேறியுள்ளன என்பதற்கு சில முன்னுதாரணங்களைக் குறிப்பிடுகிறேன். இதற்கு முன்னால், இப்படிப்பட்ட விவாதமின்றி Demands ஈடேற்றப்பட்டுள்ளனவா என்றால், பலமுறை இப்படி நடந்திருக்கிறது. 1957-58 இல் 48 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. அதைப்போலவே, 1962-63-இல் 45 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. அதைப்போலவே, 1967-68-இல் 47 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி முடிந்திருக்கின்றன. 1979-80-இல் 58 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி கூறியதாக, சில உண்மைக்கு மாறான அவை மீறிய செய்திகள் 26-7-2004 நாளிட்ட முரசொலி நாளிதழில் வெளிவந்துள்ளன.

'அய்யா மந்திரியாரே, மானியம் வேறு, மசோதா வேறு. மானியத்திற்கும், மசோதாவிற்கும் வித்தியாசம் தெரியாதவர்களெல்லாம் மந்திரிகளாக உட்கார்ந்துகொண்டு மக்களைக் குழப்பாதீர்கள் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டப்பேரவையில் யாரும் இல்லாத நேரத்தில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், யார் கேட்கப்

போகிறார்கள், பத்திரிக்கையாளர்கள் ஒப்பிட்டுப் பார்க்கப் போகிறார்களா, ஜனநாயகத்திலே எல்லாக் கதவுகளையும் நாம் மூடி விட்டோம். ஆகவே, எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற அந்த நிலையிலேதான் பொன்னையன் இவ்வளவு பெரிய பொய்யை சட்டமன்றத்திலே இரண்டு நாட்களுக்கு முன்பு சொல்லியிருக்கிறார். இது உண்மைக்கு மாறான தகவல் என்பதால் உரிமைப் பிரச்சினைக்குக்கூட உரியது.'

ஆனால், சட்டமன்ற உறுப்பினர் திரு. கருணாநிதி கூறியதாக வந்துள்ள மேற்கூறிய செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும், பேரவையில் எந்த இடத்திலும் மசோதா என்ற வார்த்தையைக் குறிப்பிடவேயில்லை, அனைத்து இடங்களிலும் Demands அல்லது மானியக் கோரிக்கைகள் என்றுதான் கூறியுள்ளேன்" என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 26-7-2004 அன்று தெளிவாகத் தெரிவித்ததன் காரணமாக, இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகவே உரிமை மீறல் இருப்பதாகக் கருதி, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கீழ்க்கண்ட உரிமை மீறல் தீர்மானத்தை அவையில் எழுப்புவதற்கு அனுமதியளித்தேன்.

"26-7-2004 ஆம் நாளிட்ட முரசொலி பத்திரிகையில் திரு. கருணாநிதி, அவையில் நான் பேசிய செய்தியை நேர்மாறாகத் திரித்து, உண்மையல்லாதவற்றைப் பேசி, தமிழக மக்களைத் திசை திருப்பும் வகையிலும், அவதூறான வகையில் அவைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலும் கூறியிருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும். எனவே, திரு. கருணாநிதி, பேரவை நடவடிக்கைகளுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில், அவையின் உரிமையை மீறுகிற வகையில், பேரவையில் நடைபெற்ற செய்தியைத் திரித்து உண்மையல்லாதவற்றைக் கூறி, மக்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் அவைக்குக் களங்கம் உருவாக்கி அவையின் விதிமுறைகளுக்கு மாறாகச் செய்தி வெளியிட்டிருப்பது அவை உரிமை மீறிய செயலாகும். எனவே, இப்பிரச்சினையை உரிமைக் குழு ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்."

மேற்கூறிய தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. ஆனால், இப்பிரச்சினை உரிமைக் குழுவின் ஆய்விற்கு அனுப்பப்பட்டு அக்குழுவின் ஆய்வில் இருக்கும்போதே, 27-7-2004 தேதியிட்ட முரசொலியில் சட்டமன்ற



உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்கள், 1979-80 ஆம் ஆண்டில் மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி நிறைவேற்றப்பட்டன என்று மாண்புமிகு நிதியமைச்சர் கூறியிருப்பது உண்மைக்கு மாறானது என்று மறுபடியும் அவைக்கு வெளியே கூறியுள்ளார். இவ்வாறு உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட பிரச்சினை குறித்து அவைக்கு வெளியே விமர்சனம் செய்வது அவை உரிமை மீறிய செயல் என்பது அனைவரும் அறிந்ததே.

*முற்பகல் 11-05*

27-7-2004 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் இது குறித்து அவையில் விளக்கம் கோரியபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு பதிலளித்துள்ளார்கள்:

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவையில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் குறித்து அவைக்கு வெளியிலே பேசுவது அவை உரிமை மீறிய செயல் என்பதை மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்கள், அந்தப் பொருள்படும்படி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். திரு. கருணாநிதி அவர்கள் அவைக்கு வருவதும் இல்லை, அவை விவாதங்களில் கலந்துகொள்வதும் இல்லை, அவை விவாதங்கள் எப்படி நடைபெறுகின்றன, என்னென்ன பேசப்படுகின்றன என்று குறிப்புகளைப் பார்ப்பதும் இல்லை. அவற்றை விடுத்து, அவையை மிகவும் அவமதிக்கின்ற முறையில் அவை பற்றிய நிகழ்வுகளை வெளியில் விமர்சிப்பது உண்மை அறியாமல் விமர்சிப்பது, கண்டிக்கத்தக்க ஒன்று என்பது உண்மை நிலை. நான் அவையிலே பேசுகிறபோது Vote on Account on Demands for Grants, அதாவது முன்னளி மானியக் கோரிக்கைகள்மீது பேரவையில் விவாதம் நடைபெற்று, பின்னர் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது பற்றிப் பேசினேன். Vote on Account on Demands for Grants, அதாவது முன்னளி மானியக் கோரிக்கைகள் மீது பேரவையில் விவாதம் நடைபெற்று, பின்னர் பலமுறை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. விவாதம் இன்றியும் முன்னளி மானியக் கோரிக்கைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அன்றையதினம் விவாதமின்றி இத்தகைய மானியக் கோரிக்கைகள் அவையில் ஈடேற்றப்பட்டது குறித்து முன்னுதாரணங்களைக் குறிப்பிட்டேன். அவையில் நான் பேசியவற்றை அவைக்குறிப்பிலிருந்து முழுமையாகப் படித்துப் பார்த்தால் நான் அவையில் குறிப்பிட்டது சரியானது என்பது தெளிவுபடும்."

[பேரவைத் தலைவர்] [2004 ஜூலை 28

உரிமைக் குழுவிற்குப் பேரவையினால் ஒரு பிரச்சினை ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அனுப்பப்பட்ட பிறகு அப்பிரச்சினை உரிமைக் குழுவின் ஆய்வில் இருக்கும்போது, அது குறித்துச் சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது வெளியாரோ அல்லது பத்திரிகைகளோ விவாதம் அல்லது விமர்சனம் செய்வதோ அல்லது அத்தகைய விவாதத்தை அல்லது விமர்சனத்தை பத்திரிகைகளில் வெளியிடுவதோ தண்டனைக்குரிய அவை உரிமை மீறிய செயலாகும். இத்தகைய சட்டப் பேரவையின் விதிமுறைகளைக் கருத்தில்கொண்டு அவை உரிமையை மீறும் செயலில் ஈடுபடாமல் பத்திரிகைகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் செயல்பட வேண்டுமென்பது சட்ட நிலை என்பதனைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். பத்திரிகைகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் சட்டப்பேரவையின் விதிகளுக்கு மதிப்பளித்து அவையின் கண்ணியத்தைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. கருணாநிதி, இந்தப் பிரச்சினை குறித்து இனியும் வெளியில் எதுவும் பேசுவதையோ எழுதுவதையோ தவிர்த்து, ஏற்கெனவே இந்தப் பிரச்சினை அவை உரிமைக் குழுவின் ஆய்வில் உள்ளதால், சட்டப்பேரவை விதிமுறைகளைக் கடைப்பிடித்து, அவை உரிமைக் குழுவிற்கு நேரில் வந்து, இந்தப் பிரச்சினை குறித்த தன்னுடைய விளக்கங்களையும், ஆதாரங்களையும் அவை உரிமைக் குழுவில் தந்து தனது நிலையினைத் தெரிவிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து அவை உரிமைக் குழுவினுடைய ஆய்வும் முடிவும் அவையில் அறிவிக்கப்படும் வரை, இப்பிரச்சினை குறித்துப் பத்திரிகைகள் உட்பட எவரும் வெளியில் விவாதிக்கவோ, விமர்சிக்கவோ அல்லது வெளியிடுவதோ கூடாது என ஆணையிடுகிறேன். இத்துடன் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வடரங்கம் ஊராட்சி அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சந்திரமோகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.



2004 ஜூலை 28]

***திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் ஊராட்சியில் கொள்ளிடம் ஆற்றில் கடல் நீர் மேலேறுவதனால் குடிநீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க, வடரங்கம் ஊராட்சி அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டவேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.535.92 இலட்சங்களுக்கு (2003–2004 ஆம் ஆண்டிற்கான விலை விகிதப்படி) தளப்பொறியாளர்களால் தயாரிக்கப்பட்டு தற்போது தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கீழ்க்கண்ட பயன்கள் அடைய வாய்ப்புள்ளது.

1) நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

2) கடல்நீர் உட்புகுவது தடுக்கப்படும்.

3) நீரேற்று நிலையங்களுக்கு மேல் மட்டத்திலேயே நீர் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர் திட்ட உருவாக்கம் பரிசீலனைக்குப் பின் அவரது அறிக்கைக்கிணங்க நிர்வாக ஒப்புதல் வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். திட்ட உருவாக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும், திட்ட உருவாக்கத்தின் பரிசீலனைக்குப் பிறகு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படும் என்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்

அறிவித்துள்ளார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடரங்கம் ஊராட்சிக்கு அருகே கொள்ளிடம் ஆற்றில் உபரியாகக் கலக்கும் தண்ணீரைத் தேக்கம் செய்து குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் பயன்படுத்திட வேண்டும். கோடைகாலங்களில் கடல் நீர் மேலேறுவதைத் தடுக்கவும் குடிநீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க வேண்டும். கடல்நீர் மேலெழுவதால் இப்பகுதியில் 10 கி.மீ. சுற்றியுள்ள நாதன்படுகை, திட்டுப்படுகை, அளக்குடி, மகேந்திரபள்ளி, காட்டூர், செம்மங்காடு, சரஸ்வதிவிளாகம், அனுமந்தபுரம் போன்ற கிராமங்களில் குடிநீர் எல்லாம் கடல்நீராக, உவர் நீராக மாறிவிடுவதாலும், நிலத்தடி நீர் உவர் நீராக மாறிவிடுவதாலும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ளது. எனவே, சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்திட மேற்கண்ட வடரங்கம் ஊராட்சி அருகே ஒரு ரெகுலேட்டரை அவசியம் கட்டிக் கொடுக்க வேண்டும். மேலும் கொள்ளிடம் ஆற்றிலிருந்துதான், சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இதன் அவசியம் கருதி, இவ்வாண்டே இப்பணியை எடுத்து முடித்துத் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, வடரங்கம் அருகே கடற்கரையிலிருந்து 12-வது கிலோ மீட்டரில் மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள இடத்தில், Regulator கட்டுவதற்குக் கோரியுள்ள இடத்தில் ஆற்றின் இயற்கையான அமைப்பு மற்றும் கரைகளின் தன்மை Regulator கட்ட சாத்தியமாக இல்லை. இருப்பினும் கடல்நீர் மேலேறி, குடிநீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க ஆற்றின் தளமட்டத்திற்குக் கீழ் ஒரு துணை மேலணை Sub-surface bed dam கட்டினால் கடல்நீர் ஊடுருவுவது முழுவதுமாகத் தடுக்கப்படும். இதற்கான முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் விவர மதிப்பீடு தயாரித்து, திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் அவர்களது பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு இதைக் கனிவுடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



# 4. அறிக்கைகள் அளித்தல்

## (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐந்தாவது முதல் இருநூற்று இருபதாவது வரையிலான 16 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய பணிவான வணக்கத்தை முதலில் வைக்கிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினோராவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (இ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி நான்காவது முதல் இருபத்தி ஆறாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2004 ஜூலை 28

(ஈ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது முதல் அறுபத்து எட்டாவது வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அறிவிப்பு

### இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2004 ஜூலை 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.





ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-15

# 7. மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள், 1991-1992, 1992-1993, 1993-1994, 1994-1995, 1995-1996 மற்றும் 1996-1997, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1991–1992, 1992–1993, 1993–1994, 1994–1995, 1995–96 மற்றும் 1996–1997ஆகிய ஆண்டுகளுக்கான மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதி அமைச்சர்.*

## 1991–1992 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–1992 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல், சில இனங்களில், மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு, 1991–1992 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1991–1992 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று

பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1991–1992 ஆம் ஆண்டு தொடர்பான ரூ.176.82 கோடி மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

1991–1992 ஆம் ஆண்டில் 'கல்வி', 'வேளாண்மை' மற்றும் 'நுகர்பொருள் வழங்கல்' ஆகியவற்றின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர் பதவியில் ஆற்றிய பணியைக் கணக்கில் கொண்டு, அவர்களுக்குத் தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைத் தகுதிகள் அளித்ததாலும், ஊதியக் குழு நிலுவைத் தொகைகளை வழங்கியதாலும், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளருக்குக் கருணைத் தொகை வழங்கியதாலும், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கியதாலும் 'கல்வி' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

தமிழ்நாடு மின்வாரியத்திற்கு அளிக்கப்பட்ட கடனை, விவசாயிகளுக்குச் சலுகை வீதங்களில் மின்சாரம் வழங்கியதற்கான உதவித் தொகையாக மாற்றிய காரணத்தால், 'வேளாண்மை' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

உணவுக் கடன் நிலுவையைப் பொறுத்தமட்டில், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி நிலவரப்படியான பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக வணிக வங்கிகளின் உதவியுடன் செய்துகொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் காரணமாக, 'நுகர்பொருள் வழங்கல்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

1991–1992 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



**1991–1992 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| **அ.** | **வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 5 | முத்திரைத்தாள்கள்–நிருவாகம் | 5,97,743 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் | 13,63,999 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 1,57,80,744 |
| 17 | கல்வி | 76,80,21,135 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 3,43,10,021 |
| 20 | வேளாண்மை | 64,95,05,570 |
| 35 | நுகர்பொருள் வழங்கல் | 10,28,00,583 |
| 37 | பொதுப் பணிகள்–கட்டிடங்கள் | 1,37,49,679 |
| 39 | சாலைகளும் பாலங்களும் | 4,70,52,570 |
| 44 | எழுதுபொருள்–அச்சுத் துறை | 4,78,582 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 31,01,895 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 33,75,985 |
| 50 | நகராட்சி நிருவாகம் | 23,836 |
| **மொத்தம்– அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | **164,01,62,342** |

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**

| | | |
|---|---|---|
| 57 | சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 3,06,32,146 |
| 58 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்-கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 39,22,690 |
| **மொத்தம்– ஆ.** | **வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | 3,45,54,836 |
| | **பெருமொத்தம்** | 167,47,17,178 |

**1992–1993 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–1993 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மான்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு, 1992–1993 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1992–1993 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1992–1993 ஆம் ஆண்டு தொடர்பான ரூ. 49.37 கோடி மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

1992–1993 ஆம் ஆண்டில் 'வேளாண்மை', 'ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்' மற்றும் 'மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்' ஆகியவற்றின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.



எண்ணெய் வித்துகள் உற்பத்தி, நிலக்கடலை வித்துகள் விநியோகம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொருட்களுக்கான அதிகரித்த செலவு ஆகியவற்றால், 'வேளாண்மை' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. தனிச் சம்பளம், கூடுதல் அகவிலைப்படி தவணைத் தொகை வழங்கியது மற்றும் சில செலவினங்களை மறுவகைப்பாடு செய்தது ஆகியவற்றாலும் மிகைச் செலவு ஏற்பட்டது.

அலுவல் குழுவின் பரிந்துரைகளின்பேரில் ஓய்வூதியம் மற்றும் இறப்பு-ஓய்வுகால பணிக்கொடை நிலுவைத் தொகைகளை வழங்கியதாலும், உயர்த்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அளித்ததாலும், 'ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

உலக வங்கி உதவி பெறும் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கு திட்டங்கள் குறித்த செலவிற்காக, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் – வடிகால் வாரியத்திற்கு வழிவகை முன்பணங்கள் வழங்கப்பட்டதால், 'மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

1992–1993 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

**1992–93 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|---|
| **அ.** | **வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 5 | முத்திரைத்தாள்கள்-நிருவாகம் | 27,15,256 |
| 7 | மாநிலச் சட்டமன்றம் | 8,37,330 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 1,60,63,237 |
| 20 | வேளாண்மை | 14,96,50,355 |
| 24 | தொழில்கள் | 27,85,202 |
| 34 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 4,77,89,386 |

| | | |
|---|---|---|
| 35 | நுகர்பொருள் வழங்கல் | 3,81,747 |
| 37 | பொதுப் பணிகள்-கட்டிடங்கள் | 4,38,41,387 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 5,24,62,270 |
| 44 | எழுதுபொருள்-அச்சுத் துறை | 63,07,403 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 3,10,50,554 |
| | **மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **35,38,84,127** |

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**

| | | |
|---|---|---|
| 57 | சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 35,68,278 |
| 60 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 3,17,261 |
| | **மொத்தம்-ஆ.வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **38,85,539** |

**இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்**

| | | |
|---|---|---|
| 62 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 13,34,38,551 |
| | **பெருமொத்தம்** | **49,12,08,217** |



## 1993-1994 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-1994 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல், சில இனங்களில், மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு, 1993-1994 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1993-1994 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1993-1994 ஆம் ஆண்டு தொடர்பான ரூ.39.42 கோடி மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

1993-1994 ஆம் ஆண்டில், "வேளாண்மை", "சாலைகளும் பாலங்களும்" மற்றும் "இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்" ஆகியவற்றின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வெள்ள நிவாரண உதவி அளிக்கப்பட்டதாலும், களப் பணியாளர்களுக்குப் பயணச் செலவு அளிக்கப்பட்டதாலும், பல்வேறு வேளாண்மை இடுபொருள் இனங்களின் விலை அதிகரித்ததாலும், சில செலவினங்கள் தவறாக வகைப்படுத்தப்பட்டதாலும், "வேளாண்மை" என்பதன்கீழ், மிகைச் செலவு ஏற்பட்டது.

ஊரகச் சாலை மேம்பாட்டு நிதிக்கான முந்தைய ஆண்டு பங்களிப்புத் தொகை, 1993-1994 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டதால், "சாலைகளும் பாலங்களும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

கேளிக்கை வரி என்பதன்கீழ், அதிக வரவுகள் இருந்ததால், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டதால், "இழப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடுகள்" என்பதன்கீழ், மிகைச் செலவு ஏற்பட்டது.

1993–1994 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

**1993–1994 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| **அ.** | **வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 11 | மாவட்ட நிருவாகம் | 13,05,634 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 1,99,09,539 |
| 20 | வேளாண்மை | 8,29,60,053 |
| 22 | கால்நடை வளர்ப்பு | 40,13,494 |
| 37 | பொதுப் பணிகள் – பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும் | 1,05,69,250 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 17,06,86,956 |
| 45 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 3,87,09,652 |
| 49 | நகராட்சி நிருவாகம் | 84,67,745 |
| **மொத்தம்–அ.** | **வருவாய்க் கணக்கில் செலவு** | **33,66,22,323** |
| **ஆ.** | **வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 56 | சாலைகள்–பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 2,11,72,544 |
| **மொத்தம்–ஆ.** | **வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **2,11,72,544** |
| | **பெருமொத்தம்** | **35,77,94,867** |



**1994–1995 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994–1995 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல், சில இனங்களில், மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு, 1994–1995 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1994–1995 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1994–1995 ஆம் ஆண்டு தொடர்பான ரூ.208.20 கோடி மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

1994–1995 ஆம் ஆண்டில், "வேளாண்மை", "ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" மற்றும் "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" ஆகியவற்றின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், விதை நெல் வாங்கி வழங்கியதாலும், உள்ளூர் அங்காடி விலையை அடிப்படையாகக் கொண்டு விதைப் பண்ணைகளிலிருந்து பயறு விதைகள் மற்றும் எண்ணெய் வித்துகள் வாங்கியதாலும், ஊதிய விகிதம் மாற்றியமைக்கப்பட்டதாலும், பணியாளர்களின் அகவிலைப் படி மற்றும் ஏனைய படிகள் அதிகரிக்கப்பட்டதாலும், வாகனங்களின் எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும், "வேளாண்மை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

ஓய்வூதியதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட வீதத்தில், அகவிலைப் படியும், மருத்துவப் படியும் வழங்கியதாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் உயர்த்தப்பட்டதாலும், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், "ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" என்பதன்கீழ், மிகைச் செலவு ஏற்பட்டது.

நிதியாண்டின் இறுதியில், தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்திற்கு வழிவகை முன்பணங்கள் அனுமதிக்கப்பட்டதால், "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பதன்கீழ், மிகைச் செலவு ஏற்பட்டது.

1994–1995 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

## 1994–1995 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|---|
| **அ.** | **வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 7 | மாநிலச் சட்டமன்றம் | 8,74,108 |
| 8 | தேர்தல்கள் | 7,94,049 |
| 20 | வேளாண்மை | 1,47,95,37,271 |
| 21 | மீனளம் | 2,54,10,751 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 35,29,162 |
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 8,00,626 |
| 36 | பொதுப் பணிகள் – கட்டடங்கள் | 17,13,018 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 4,68,87,912 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 23,99,77,503 |
| 42 | பல்வகை | 4,79,48,735 |
| | **மொத்தம்–அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **184,74,73,135** |
| **ஆ.** | **வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 53 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1,52,91,093 |
| 56 | சாலைகள்–பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 3,58,84,553 |
| 57 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்–கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 45,80,155 |
| 60 | பல்வகை மூலதனச் செலவு | 5,23,22,806 |
| | **மொத்தம்–ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **10,80,78,607** |
| **இ.** | **கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 61 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 12,14,10,935 |
| | **பெருமொத்தம்** | **207,69,62,677** |



## 1995–1996 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995–1996 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல், சில இனங்களில், மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு, 1995–1996 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1995–1996 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1995–1996 ஆம் ஆண்டு தொடர்பான ரூ.112.50 கோடி மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

1995–1996 ஆம் ஆண்டில், "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்", "சாலைகளும் பாலங்களும்" மற்றும் "ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" ஆகியவற்றின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

ஊரக வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிட பயனாளிகள் செலுத்தத்தக்க வட்டித் தொகை வகையில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், நிதியுதவி நிறுவனங்களுக்கும், அரசுக்கும் செலுத்திய வட்டித் தொகைச் செலவை, ஈடுசெய்த காரணத்தால், "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. மேலும், ஆதிதிராவிட மாணவர் இல்லப் பணியாளர்களின் சம்பளங்கள், உணவுச் செலவுகள், இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களின் ஏனைய பராமரிப்புச் செலவுகள் என்பதன்கீழ் ஏற்பட்ட செலவாலும், மிகைச் செலவு ஏற்பட்டது. மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகங்கள் கையகப்படுத்திய நிலத்திற்காக, அந்நிலத்தின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை அளித்த வகையிலும் மிகைச் செலவு ஏற்பட்டது.

முற்பகல் 11–25

வேலை நிதி ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு உயர் வீதத்தில் சம்பளம், அகவிலைப் படி, ஊதியக் கொடை, இடைக்கால நிவாரணம் முதலியவற்றை அளித்ததாலும், சாதாரண பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மேற்கொள்ளப்படும் சாலைப் புதுப்பிப்புப் பணிகளுக்கும் தேவையான பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்களுக்கான ஊதியம் அதிகரித்ததாலும் "சாலைகளும், பாலங்களும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.



ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்டதையடுத்து, குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்குதல் மற்றும் இறப்பு-ஓய்வூதியக் கொடை குறித்த கோரிக்கைத் தொகை அதிகரித்ததாலும் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்ததாலும், "ஓய்வூதியங்களும்-ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

1995–1996 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

**1995–1996 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|---|
| | **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 30 | பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 12,33,68,843 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 63,14,325 |
| 34 | நுகர்பொருள் வழங்கல் | 13,89,417 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 39,49,84,149 |
| 40 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 4,25,76,363 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 42,76,41,268 |
| 45 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 5,89,18,077 |
| | **மொத்தம்–அ. வருவாய்க் கணக்கில் செலவு** | 105,51,92,442 |
| | **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 56 | சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 6,82,22,632 |
| | **மொத்தம்–ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | 6,82,22,632 |
| | **பெருமொத்தம்** | 112,34,15,074 |

## 1996–1997 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–97 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு, 1996–1997 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1996–1997 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1996–1997 ஆம் ஆண்டு தொடர்பான ரூ.284.32 கோடி மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

1996–1997 ஆம் ஆண்டில் "வேளாண்மை", "ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்", "சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு" மற்றும் "பாசனம்" ஆகியவற்றின் கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

பணியாளர்களுக்குச் சம்பளங்கள், அகவிலைப்படி, இடைக்கால நிவாரணத் தொகை ஆகியவை வழங்கியதாலும், கணக்குத் தலைப்பின் தவறான வகைப்பாட்டின் காரணமாகவும் "வேளாண்மை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

ஓய்வூதியத்தைக் கணக்கிடும் முறை திருத்தியமைக்கப் பட்டதையடுத்து, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்குதல், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை அதிகரித்ததாலும், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், "ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.



கணக்குத் தலைப்பு தவறாக வகைப்படுத்தப்பட்டதாலும், கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்காகத் தொகை கொடுத்ததாலும் "சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

கணக்குத் தலைப்பு தவறாக வகைப்படுத்தப்பட்டதாலும், கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்காகத் தொகை கொடுத்ததாலும் "சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

பல்வேறு பெருந்தலைப்புகளின்கீழ், வீதாச்சாரக் கட்டணங்கள் தொடர்பான செலவை மாற்றுவதன்மூலம் கணக்குகளில் சரிக்கட்டல் செய்யப்பட்டதாலும், கணக்குத் தலைப்பின் தவறான வகைப்பாட்டின் காரணமாகவும் "பாசனம்" என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

1996–1997 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

## 1996-97 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய்) |
|---|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | |
| 5 | முத்திரைத் தாள்கள்–நிருவாகம் | 8,80,837 |
| 8 | தேர்தல்கள் | 42,12,121 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 33,03,699 |
| 20 | வேளாண்மை | 28,78,09,784 |
| 26 | கதர்–கிராமத் தொழில்கள் | 1,266 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 1,14,60,900 |

| | | |
|---|---|---|
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,695 |
| 35 | பாசனம் | 7,95,15,568 |
| 36 | பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 7,79,796 |
| 39 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 35,86,207 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 1,72,54,07,564 |
| 45 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 23,38,96,272 |
| 50 | சுற்றுலா | 18,34,528 |
| | **மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு** | 245,26,91,237 |

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**

| | | |
|---|---|---|
| 53 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1,09,69,507 |
| 56 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 35,57,49,749 |
| 57 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1,98,83,302 |
| 59 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 27,08,252 |
| | **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | 38,93,10,810 |
| | **பெருமொத்தம்** | 284,20,02,047 |



## 8. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை**

### (அ) கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004–2005 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.411,29,57,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். திரு. ப. அரசன். இருக்கையில் இல்லை. திரு. சே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

### (ஆ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4 - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.390,94,96,000/–, மூலதனக் கணக்கில் ரூ.53,71,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 208, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் பழங்குடியினருக்கு 1000 இலவச வீடுகள் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.390,94,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,71,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

(முற்பகல் 11–30

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த

@ 351 முதல் 444 வரையிலான பக்கங்களில் இணைப்பு—I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் ஆகியவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின்பேரிலே கருத்து அளிக்க வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின் பேரிலே இந்த மாமன்றத்திலே 13–வது முறையாக விவாதத்திலே பங்கேற்கிற ஒரு நல்ல வாய்ப்பைப் பேரவைத் தலைவர் அவர்கள் வழங்கி உள்ளார்கள். இந்தச் சட்டப் பேரவையிலே இந்த மானியக் கோரிக்கையிலே 13 முறை

@445 முதல் 524 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விவாதத்திலே பங்கு கொண்டவன் என்கிற அந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய பேரவைக்கு நான் மிகுந்த நன்றிக் கடப்பாடு உடையவன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மூத்த உறுப்பினர்.

**திரு. செ.கு. தமிழரசன்:** தமிழகத்திலே உள்ள மக்கள் தொகையிலே ஏறக்குறைய 20 சதவிகிதம் பேர் ஆதிதிராவிட மக்களாகவும், ஒரு சதவிகிதம் மலைவாழ் மக்களாகவும், ஆக 21 சதவிகிதம் பேர் தமிழக மக்கள்தொகையில் நலிந்த மக்களாய், பழங்குடி மக்களாய் வசித்துக் கொண்டிருக்கின்றனர். ஐந்திலே ஒருவர் தமிழகத்திலே ஒரு தலித் ஆக இருக்கிறார். ஆக இவ்வளவு பெரிய மக்கள்தொகையை உள்ளடக்கிய இந்தச் சமூகத்தின் நலன்களை, உரிமைகளைப் பாதுகாக்கிற இந்த நலத் துறை மானியக் கோரிக்கையிலே நான் இந்தத் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய, இந்த மக்களின் நலன்களுக்காக, உரிமைகளுக்காகச் சில கோரிக்கைகளை, நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்றே கருதுகிறேன். ஏனெனில் சட்டப் பேரவை உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று விரும்பியதே இந்த மானியக் கோரிக்கைகளிலே என் கருத்துகளைப் பதிய வைக்க வேண்டுமென்பதற்காகத்தான்.

இன்றைக்கு சமூக நலத் துறையும், ஆதிதிராவிடர் நலத் துறையும் இணைந்து இந்த மாமன்றத்திலே மானியக் கோரிக்கைகளை வைத்திருக்கிறது. ஒருகாலத்திலே ஆதிதிராவிடர் நலத் துறை என்பதே சமூக நலத் துறையோடுதான் இணைந்து இருந்தது. 1986–87–களிலே சமூக நலத் துறையிலிருந்து ஆதிதிராவிடர் நலத் துறையைப் பிரித்து அதற்காக ஒரு துறை வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் நாங்கள் கோரிக்கையை வைத்தபோது 1987–லே அதைப் பிரித்து 1988–லே நடைமுறையாக்கி, 1988–க்குப் பிறகு இப்போதுவரை 16 ஆண்டுகாலமாக ஆதிதிராவிடர் நலத் துறை தனித்தே இயங்கி வருகிறது.

பிற்பகல் 11–35

80 சதவிகித ஆதிதிராவிட மக்கள், நலிந்த மக்கள் கிராமப்புறங்களிலேதான் வாழ்கிறார்கள். 20 சதவிகிதத்திற்குக் கொஞ்சம் மேலேதான் நகர்ப்புறங்களிலே இந்த மக்கள் வசிக்கிறார்கள். 80 சதவிகித மக்கள் கிராமப்புறங்களிலேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே அவர்களுடைய நிலைமை என்னவென்றால், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும், ஊர் என்றும்,



சேரி என்றும் தனித்தனியாகத்தான் இன்னமும் வாழும்நிலை. ஊர் வேறு, மேட்டுக்குடி மக்கள் வசிக்கின்ற பகுதி வேறு, தாழ்ந்த நலிந்த சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட, அடித்தளத்தில் இருக்கிற இந்த மக்கள் வசிக்கின்ற, வாழ்கின்ற பகுதி வேறு என்கின்ற வகையிலேதான் இன்னமும் கிராமப்புறங்களிலே ஊர் ஒன்றாய், சேரி ஒன்றாய் இருந்து கொண்டிருப்பதை நாம் பல நூறு ஆண்டு காலமாகப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தச் சேரிப்புறங்களில் சமூகப் பொருளாதார நிலைமை எப்படி இருக்கிறது என்றால் இன்னமும்கூட முழுமையாக அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. சாலை வசதி, மின்சார வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி போன்ற முழுமையாக அடிப்படை வசதிகள் தமிழ்நாட்டிலே இருக்கிற சுமார் 16 ஆயிரத்திற்கு மேற்பட்ட சேரிவாழ் மக்களுக்கு முழுமையாகக் கிடைத்து இருக்கிறதா என்றால் நிச்சயமாக இதற்கு ஒரு முழுமையான பதிலை நாம் தரமுடியாது. ஏதோ தமிழ்நாட்டிலேதான் இந்த நிலைமை இருக்கிறது என்று நான் சொல்ல மாட்டேன். காஷ்மீரிலே இருந்து கன்னியாகுமரி வரை ஒடுக்கப்பட்ட மக்கள், நலிந்த மக்கள், தாழ்ந்த மக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இந்த நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது.

சென்னையைப் போல மாநகரங்களில் வசிக்கிற 20 சதவீத தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டு வேலை செய்கிறவர்களாக, அடிப்படை வேலை செய்கிறவர்களாக இங்கே நடைமுறையில் நகரங்களிலே வாழ்ந்துகொண்டு இருக்கிற அவலத்தைப் பார்க்க முடிகிறது. நரகம் என்ற ஒன்று இருந்தால் சென்னை மாநகரங்களிலே இருக்கிற சேரிகளாகத்தான் அது இருக்க முடியும். இந்த 80 சதவீத கிராமப்புற தலித் மக்களும், 20 சதவீத நகர்ப்புற தலித் மக்களும் என்ன வேலைகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்றால், முடி வெட்டுவது; மனிதனுக்கு அவசியமான வேலை என்றால் முடி திருத்தும் வேலை செய்கிறவன் ஒதுக்கப்பட்டவனாக இருக்கிறான். துணி துவைப்பது சுகாதாரத்திற்கு அவசியமான வேலை என்று சொன்னால் துணி துவைக்கிற சலவைக்காரன் ஒதுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவனாக இருக்கிறான். செருப்பு அணிவது ஒரு மனிதனுக்கு மிகப் பாதுகாப்பானது என்று சொன்னால் செருப்புத் தைக்கிறவன் நலிந்தவனாக இருக்கிறான். மலம் வாருவது இந்த மண்ணைச் சுகாதாரப்படுத்துவது என்று சொன்னால், மலத்தை வாருகிறவன் ஒதுக்கப்பட்டவனாக, தாழ்த்தப்பட்டவனாக இருக்கிறான். பிணம் சுடுவது சமூகச் சூழ்நிலைக்கு, சமூக விஞ்ஞானத்திற்கு அவசியம் என்று சொன்னால் அந்தப் பிணம்

[திரு. செ.கு. தமிழரசன்] [2004 ஜூலை 28

சுடுகிறவன் சுடுகாட்டிலே இருக்கிறவன் அவனாகத்தான் இருக்கிறான். ஆக முடி வெட்டுகிறவன், சலவை செய்கிறவன், செருப்புத் தைக்கிறவன், துப்புரவுத் தொழிலில் ஈடுபடுகிறவன், பிணம் சுடுகிறவன், மலம் வாருகிறவன் எது எது மனித சமூதாயத்திற்கு அத்தியாவசியமான வேலையோ, எது எது அவசியமான வேலையோ, எது எது இன்றியமையாத வேலையோ, அந்த வேலையைச் செய்து கொண்டு இருக்கிறவன் எல்லாம் தாழ்த்தப்பட்டவனாய், நலிந்தவனாய், ஒதுக்கப்பட்டவனாய், அடக்கப்பட்டவனாய், சுரண்டப்பட்டவனாய், இந்தச் சமூகத்திலே இன்னமும் இருந்து கொண்டு இருக்கிறான். இதுதான் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிற நிலைமை.

இதற்கு மேலே விவசாயம் என்பது இந்தியாவில் ஒரு இன்றியமையாத தொழில் என்றால், மனித உயிர்களைப் பாதுகாக்கிற அடிப்படைத் தொழில் என்றால், அந்த விவசாயக் கூலிகளாய், பண்ணை அடிமைகளாய், கொத்தடிமைகளாய் இருந்துகொண்டு இருக்கிறவன் நலிந்தவனாக இருக்கிறான். ஆக அந்தச் சமூகத்தின் பிரச்சினைகளை இந்த மாமன்றத்தில் பேசுகின்றபோது, இந்த மன்றத்தின் பெருமை கருதி பாரம்பரியம் கருதி, நீங்கள் நேரத்தையும் கொஞ்சம் ஒதுக்க வேண்டும். அதனால்தான் இன்றைக்குத் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தத் துறைக்கு மட்டுமே-நேற்றைய தினமோ, நேற்றைய முன்தினமோ பல்வேறு துறைகளின் விவாதங்கள் ஒருசேர நிகழ்ந்தது. ஆனால், இன்றைக்கு சமூக நலத் துறை, அதையொட்டி, ஆதிதிராவிடர் நலத் துறை. இந்த இரண்டு துறைக்கு மட்டுமே-ஒரு நாள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால் நான் முதல்வர் அவர்களுடைய அந்தக் கனிந்த நோக்கை இந்தச் சந்தர்ப்பத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த 80 சதவீத நலிந்த மக்கள், இவ்வளவு அடிப்படைத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும்கூட, கடந்த காலத் தேர்தல் அரசியல் வரலாற்றைப் பார்த்தால், இந்த 80 சதவீத மக்கள்தான், அரசியலிலே 80 சதவிகித மக்களாக இருந்துகொண்டு இருக்கிறார்கள் முடிவெடுப்பதிலே. வாக்களிக்கிற தன்மையிலே மட்டும்-தாழ்த்தப்பட்ட குடியிருப்புகளிலே வாக்களிக்கிற தன்மையை நீங்கள் கடந்த காலங்களிலே எடுத்து ஆராய்ச்சி செய்தால் 80 சதவீதம், 70 சதவீதத்திற்குக் குறையாமல் வாக்களிக்கும் தன்மை இருந்திருக்கும். உயர்குடி மக்கள், பெரும் தொழில் அதிபர்கள், மேலே இருக்கிறவர்கள், அந்தப் பகுதியிலே இருக்கிற வாக்களிக்கிற தன்மையைப் பார்த்தால் 25 சதவீதம் கூட இருந்து இருக்கிறது. இது நான் தருகிற புள்ளி விவரம் அல்ல. தேர்தல் ஆணையம் தருகிற



2004 ஜூலை 28] [திரு. செ.கு. தமிழரசன்]

புள்ளிவிவரம். வாக்களிப்பதிலே 80 சதவீதம் ஆர்வம் உள்ளவர்களாய், தேர்தல் அரசியலிலே 80 சதவீதம் ஆர்வமாக உள்ளவர்களாய், ஆட்சியை நிர்மாணிக்கிற அரசியலில் 80 சதவீத பங்கு பெறுகிற இந்த மக்களுடைய நிலமையை என்னவென்றால், இன்னமும் சட்டபூர்வமாகத் தீண்டாமை ஒழிந்துவிட்டதே தவிர நடைமுறையில் தீண்டாமையையோ, ஜாதிய உணர்வுகளையோ, கொடுமைகளையோ நாம் ஒழிக்க முடியவில்லை. ஒழியவும் இல்லை.

முற்பகல் 11–40

தீண்டாமை இரண்டு விதமாக இருக்கிறது. நேரடித் தீண்டாமை; மறைமுகத் தீண்டாமை. நேரடித் தீண்டாமையை நாம் சட்டபூர்வமாக ஒழித்திருக்கிறோம். ஆனால் மறைமுகத் தீண்டாமையை மனதளவிலேதான் ஒழிக்க முடியும். அதைச் சட்டத்தால் எந்த நிலையிலும் ஒழிக்க முடியாது. ஆக, அந்த மனதை ஒழிக்க முடிந்திருக்கிறதா? அந்தச் சமூக மாற்றத்தை மனித சமுதாயத்திலே உருவாக்க முடிந்திருக்கிறதா' என்றால், நாம் இந்த மறைமுகத் தீண்டாமையை, மனதளவிலே இருக்கிற தீண்டாமையை இன்னமும் ஒழிக்கவே முடியவில்லை. அதன் யதார்த்தங்களை நாம் பல விதங்களிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, அவர்களுடைய அந்த ஆட்சியின் கண்ணோட்டத்தைத் பொறுத்தவரையிலே நான் மிக நன்கு அறிந்தவன் என்கிற வகையிலே சொல்லுவேன், அவர்களுடைய நல்லெண்ணம் இந்த மக்களைக் கைதூக்கிவிட வேண்டும், இந்த மக்களுக்கு ஒரு புதிய மாறுதலான திட்டங்களை உருவாக்க வேண்டும் என்பதிலே அவர்கள் இந்தியாவிற்கே முன்னுதாரணமாக இருக்கிறவர்கள்.

1991–96–லே, அந்த ஐந்தாண்டு கால புரட்சித் தலைவியினுடைய ஆட்சி இருக்கிறதே, அந்த ஆட்சியிலே தமிழ்நாட்டிலே கடந்த 50 ஆண்டு காலமாகக் கிடைக்க முடியாத பல திட்டங்கள் அந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே உருவாயின என்பதை நான் நன்கு அறிவேன். பல திட்டங்கள். தலித்துகளுக்காக ஒரு தொழிற்பேட்டையை, Separate Industrial Estate for Dalits என்கிற ஒரு தொழிற்பேட்டையை இந்தியாவிலேயே முன்னுதாரணமாகத் தமிழ்நாட்டிலே உருவாக்கியது புரட்சித் தலைவியினுடைய ஆட்சி. ஈரோட்டிலும், திருப்பூரிலும் 100, 100 தொழில் அதிபர்களை உருவாக்க வேண்டும், அதுவும் 1 கோடி ரூபாய் முதலீட்டிலே அந்த தொழில் அதிபர்களை உருவாக்க வேண்டுமென்பதற்காக ஈரோட்டிலே 100 தொழில் நிறுவனங்களையும்,

திருப்பூரிலே முதலிபாளையத்திலே 100 தொழில் நிறுவனங்களையும் உருவாக்கினீர்கள் தாட்கோவின் சார்பிலே. ஆனால் அது இன்றைக்கு என்ன நிலைமையிலே இருக்கிறது? 54 பயனாளிகளுக்கு மேலே பயன்பெற முடியவில்லை. 19 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கும் துவக்க முடியவில்லை. அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதற்கு முட்டுக்கட்டை போட்டது. ஆனால் மீண்டும் நம்முடைய ஆட்சி வந்த பிறகும் கடந்த மூன்றாண்டு காலமாக அதை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்கள் பின்னலாடைத் தொழிற்பேட்டையிலே கடந்த மூன்றாண்டுகளாக அதற்குண்டான முயற்சிகள் எடுக்கப்பட்டும் பணிகள் தொடங்கப்படவில்லை என்ற குறைபாட்டை இங்கே எடுத்துரைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஆதிதிராவிட தொழில் முனைவோருக்காக ஏற்படுத்தப்பட்ட பின்னலாடைத் தொழிற்பேட்டைகள் திட்டம் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் சரியாக நடத்தாமல் கிடப்பில் போடப்பட்டதை அறிந்து 12–7–2002 அன்று ஆய்வு மேற்கொண்டு, இத்திட்டத்தை மாற்றி அமைத்து, புதியதாக விண்ணப்பங்களைப் பெற்று பயனாளிகளைத் தேர்வு செய்து, கடன் உதவிகள் வழங்கலாம் என ஆணையிட்டார்கள். இதை எதிர்த்துச் சிலர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததால் மேல் நடவடிக்கை எடுப்பது தாமதப்படுத்தப்பட்டது. தற்போது வழக்குத் தொடுத்துள்ள 5 நபர்களுக்குத் தொழிற்கூடங்கள் ஒதுக்குவதை நிலுவையிலே வைத்து மீதித் தொழிற்கூடங்களுக்குப் பயனாளிகளைத் தேர்வு செய்ய உயர் நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடங்கப்பட்ட நிலையிலே இருந்து, வழக்கு நடந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலம்வரை அதனுடைய முழுச் செய்திகளும் எனக்குத் தெரியும். பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்– ஏறக்குறைய 95–வது ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள், இன்றைக்கு 2004, ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன–தலித்துகள் ரூபாய் 5 இலட்சம், 7 இலட்சம், 10 இலட்சம் என்று அவர்களுடைய வசதிக்கு மேலாக, அவர்களுடைய சூழ்நிலைகளுக்கும் மேலாகப் பணத்தை T.I.I.C. நிறுவனத்திலே முதலீடாகச் செலுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு காலமாக அவர்களுக்குத் தொழிலும் கிடைக்கவில்லை, அந்தப் பணமும் அங்கேயே இருக்கிறது என்று சொன்னால் அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும்? அவர்கள் வேலைவாய்ப்பையும் இழந்தவர்கள். படித்தவர்கள், B.E. படித்தவர், B.A. படித்தவர், M.Sc. படித்தவர். ஒன்பது ஆண்டு காலமாக அவர்கள் தொழில் தொடங்க முடியாமல் அந்தப் பணத்தையும் முதலீடு செய்துவிட்டு, ஒவ்வொரு நாளும் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அந்த அலைக்கழிப்பைத்தான் நான் சொல்ல வருகிறேன்.



சலுகைகளைப்பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். "சலுகைகள் இருக்கிறதே, அரசாங்கத்தினுடைய சலுகைகள், ஐஸ் கட்டியைப் போல. மேலே இருந்து கடைசியில் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவனுக்குப் போய்ச் சேருகிறபோது அது ஐஸ் கட்டியாக இருக்காது, வெறும் தண்ணீராக இருக்கும்" என்று அண்ணா இந்த அவையிலே சொன்னார். (குறுக்கீடு) வெளியிலே சொன்னார். ஆக, அப்படிப்பட்ட ஒரு நிலைமை வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள். நாம் எவ்வளவுதான் சட்டங்கள் போட்டாலும் அந்தச் சட்டங்களைச் செயல்படுத்துகிறவர்கள் அதற்குச் சரியாக அமையாதவரை சட்டத்தின் தன்மைக்குப் பொருளே இருக்காது. அந்தச் சட்டத்தின் தன்மையே அழிந்துபோய் விடும் என்று சட்டத்தை எழுதிய பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள். ஆகையினால், நான் என்னுடைய கருத்தைப் பொறுத்தளவில், Ambedkarist-ஆக இந்தத் துறையில் 30 ஆண்டுக் காலம் பணிபுரிபவன் என்ற வகையில் சொல்கிறேன். புரட்சித் தலைவி அவர்களுக்கு, இந்தச் சமூகத்தைக் கைதூக்கி விடவேண்டும், அடித்தளத்து மக்களை உயர்த்த வேண்டும் என்பதிலே அளப்பரிய ஆசையும், பேரார்வமும் இருக்கிறது. ஆனால் நிருவாகத்திலே ஏற்படுகிற சிக்கல்கள், முட்டுக்கட்டைகள், அதிலே ஏற்படுகிற அந்தக் குளறுபடிகள், அவருடைய அந்த உயரிய இலட்சியத்தை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தப் புரட்சியைப் பொறுத்தவரை, இது இந்தியாவிலேயே இல்லாத ஒரு முன்னுதாரணம். 200 பேரை, ஒடுக்கப்பட்ட மக்களை, தமிழ்நாட்டிலிருந்து 200 தொழிலதிபர்களை உருவாக்குவது என்பது, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும், மராட்டிய மாநிலத்தில்கூட

இல்லாத ஒரு மிகப் பெரிய மாறுதலான சிந்தனை, ஒரு திட்டம். ஆனால் 6, 7 ஆண்டு காலமாக அது கிடப்பிலேயே கிடக்கிறது. அந்த 19 பேரை, வழக்குத் தொடுத்தவர்களை, வழக்கிலிருந்து நான் வெளியே கொண்டு வர விரும்புகிறேன். ஒரு கோடி ரூபாய் முதலீடு என்பதால் நீங்கள் அதை முழுமையாக ஆய்வு செய்து கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் நான் இவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 11–45*

அதேபோல இந்த ஆதிதிராவிட நலத் துறையிலே பெரிய பலவீனம் என்னவென்றால், இதனுடைய மொத்தப் பணத்தில் 70 சதவிகிதம் ஆதிதிராவிட நலத் துறையால் நடத்தப்படுகிற பள்ளிகளுக்குச் செலவிடப்படுகிறது. விடுதிகளுக்கு, உயர்நிலைப் பள்ளிகளுக்கு, தொடக்கப் பள்ளிகளுக்கு, மேல்நிலைப் பள்ளிகளுக்கு என்று நீங்கள் ஒதுக்குகிற மொத்தப் பணத்தில் 70 சதவிகிதம் அந்தப் பள்ளிகளுக்குப் போய்விடுகிறது. 30 சதவிகிதத்திலே ஏறக்குறைய 15 சதவிகிதம் நிருவாகச் செலவுக்குப் போய்விடுகிறது. ஆக இங்கே ஒதுக்கப்படுகிற 100 ரூபாயில் 70 ரூபாய் கல்விக்காகவும், 15 ரூபாய் நிருவாகச் செலவுக்காகவும், போய்விட்டால், மீதி 15 ரூபாய்தான் நலப்பணிகளுக்காக, அவர்களுடைய வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவழிக்கப்படுகிறது. மனைப் பட்டாவுக்காக, வேறு கடன் வழங்கும் திட்டத்திற்காக. இப்படிப்பட்ட நிலைமை உருவாகிறது. ஆகவே நான் பலமுறை இந்த மாமன்றத்திலேயும், தனிப்பட்ட முறையிலேயும் அமைச்சரிடத்திலே வலியுறுத்தியிருக்கிறேன். இந்தப் பள்ளிகளை கல்வித் துறையிலே நேரடியாக எடுத்துக் கொண்டு—Director of Matriculation Schools ஒருவர் இருக்கிறார், Director of Anglo Indian Schools ஒருவர் இருக்கிறார், Director of Primary Schools ஒருவர் இருக்கிறார், Director of Adidravidar என்று Education–ல் ஒருவர் இருந்துவிட்டுப் போகட்டும். இந்தப் பள்ளிகளைக் கல்வித் துறையிலே நேரடியாகச் சேர்த்து—கல்வித் துறையிலிருந்து நிதி தரட்டும். யானைக்குத் தீனி போடுவது போல, இந்தத் துறை 70 சதவீதம் பணத்தை கல்விக்காகச் செலவிடுகிறது. மீதி 30 சதவீதத்திலே 15 சதவீதத்தைத்தான் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம். ஆக, அதற்காகத்தான் நர்ன் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், Special Component Plan என்று சொல்லப்படுகிற சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தை முழுமையாக இந்த அரசு செயல்படுத்த வேண்டும்.





நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2001–02 ஆம் ஆண்டு, 2002–03 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைகளிலே, 2 பட்ஜெட்டிலேயும் Special Component Plan இருக்கிறதே, ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். சிறப்பு உள்ளடக்கத் திட்டம்; இதிலே ஆதிதிராவிட மக்களுக்கு முழுமையாக நம்மால் செலவழிக்க முடியவில்லை என்ற கருத்தைப் பொது நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் 2001–02 மற்றும் 2002–03 லே சொல்லியிருக்கிறார். இன்றைக்கு ரூ.8001 கோடிக்கு நாம் பட்ஜெட் போட்டிருக்கிறோம். Special Component Plan-படி சிறப்பு உள்ளடக்கத் திட்டம், 1980–லே 6–வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அன்றைக்கு பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்களால் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட வேண்டுமென்று Planning Commission–க்கு, திட்ட ஆணையத்திற்கு வரைமுறை செய்யப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி ஏறக்குறைய ரூ.1700 கோடி—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் விகிதாச்சார அடிப்படையில் ஆதிதிராவிடர்களுக்குச் சேரவேண்டிய தொகை, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் கூடுதலாகச் செலவு செய்யப்பட்டு ஆதிதிராவிட மக்களுக்கு உரிய பயன்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இச்சாதனை 2002–03 ஆம் ஆண்டு 108.06 சதவீதமும், 2003–04 ஆம் ஆண்டு 119.31 சதவீதமும் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான நடவடிக்கையின் மூலமாக இது இந்தியாவிலேயே முன்னுதாரணமாக, இந்தியாவிற்கே முன்னோடியாகத் தமிழ்நாடு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தில் திகழ்கிறது என்பதை மெத்தப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களே முழுமையாகச் செய்ய முடியவில்லை என்பதை அவர் அளித்த நிதிநிலை அறிக்கைகளிலேயே, 2001–02 மற்றும் 2002–03 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைகளிலேயே, சொல்லியிருக்கிறார்கள். ஆக, அவரே ஒன்று சொல்கிறபோது, அதையொட்டித்தான் நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். 1,728

கோடியே 36 இலட்சம் இந்த Special Component Plan-படி ஆதிதிராவிட மக்களுக்கு மொத்த பட்ஜெட்டில் நாம் செலவழிக்க வேண்டும். ஆனால் 354 கோடியே, 71 இலட்சம்தான் இந்தத் திட்ட மதிப்பீட்டிலே நம்முடைய Head. நாம் ஒதுக்கியிருக்கிற பட்ஜெட்டிலே இவ்வளவு வந்திருக்கிறது. மறைமுகமாக பல வழிகளிலே செலவழிக்கப்படுவதாக அப்படிச் சொல்லலாம். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், மராட்டிய மாநிலத்திலே இருப்பதைப்போல, வேறுசில மாநிலங்களிலே இருப்பதைப்போல, இந்த மொத்த Special Component Plan சிறப்பு உட்கூறு திட்டத்தினுடைய நிதியை ஆதிதிராவிடர் நலத் துறைக்குக் கொடுங்கள்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் மீண்டும் ஒரு தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே பக்கம் 27–லிலிருந்து படித்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு புரியும் என்று தெரிவிக்கின்றேன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆழமான விவாதத்திற்குப் போகவில்லை. நான் மேலெழுந்தவாரியாகச் சொல்கிறேன். அதை முழுக்கப் படித்திருக்கிறேன். இப்போது சமூக நலத் துறை இங்கே வைத்திருக்கிற கொள்கைக் குறிப்பிலேகூட Special Component Plan–லே சமூக நலத் துறை எவ்வளவு செலவழித்திருக்கிறது என்பதைத் தந்திருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படித் தனித் தனித் துறையாக நீங்கள் தரத் தேவையில்லை. மொத்தமாக ஆதிதிராவிடர் நலத் துறைக்கு நீங்கள் பணத்தைக் கொடுங்கள். ஆதிதிராவிடர் நலத் துறை ஒவ்வொரு துறைக்கும்—48 துறைகளுக்கு—ஆதிதிராவிடர் நலத் துறை பணம் ஒதுக்குகிறது. அந்த 48 துறைகளுக்கும் நீங்கள் பணம் ஒதுக்கிவிடுங்கள். நீங்கள் Nodal Agency-ஆக இருக்கிறீர்கள். Nodal Agency ஆக இருக்கக்கூடிய நீங்களே, monitoring செய்யக்கூடிய, நீங்களே நேரடியாகப் பணத்தைக் கொடுங்கள் என்பதுதான் என்னுடைய வாதமே தவிர, வேறொன்றும் இல்லை. அது ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சருக்கு மிகப் பெரிய நிதியை ஏற்படுத்திக் கொடுக்கிற வகையிலேதான் இந்தக்



கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் அந்த நிதியை மற்றவர்களுக்குக் கொடுங்கள். இதற்கு ஒரு Monitoring Committee இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்னிலத்திற்கு வாருங்கள். உங்கள் தொகுதிக்கு வாருங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** வந்துவிடுகிறேன். இதற்கு ஒரு Monitoring Committee—கண்காணிப்புக் குழு என்ற குழு—இருக்கிறது. Planning Commission–லே இருக்கிற ஒரு உறுப்பினர் தலைமையிலே இந்தக் கண்காணிப்புக் குழு நம்முடைய முறையின்படி இருக்க வேண்டும். அந்தக் கண்காணிப்புக் குழுவை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்தக் கண்காணிப்புக் குழுவினுடைய தலைவராக, நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரே இருந்தாலும் சரி; இருக்க வேண்டும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே மிகப் பெரிய பிரச்சினையாக, ஒடுக்கப்பட்ட மக்களுடைய மிக எரிந்துகொண்டிருக்கிற பிரச்சினையாக இருப்பது தனியார் துறையிலே இட ஒதுக்கீடு வேண்டும் என்பது. ஏனென்றால் பல துறைகளும் இன்றைக்குத் தனியார்மயமாக்கப்பட்டு வருகின்றன. மத்திய துறைகள் எல்லாம் பெருமளவிலே தனியார் துறையாக்கப்பட்டுவிட்டன. மாநிலத்திலே பல நிறுவனங்களைத் தனியாருக்குத் தருவதற்கான--அப்படிப்பட்ட இழப்பைச் சமாளிக்க முடியாமல்--அந்த முயற்சியிலே ஈடுபட்டு வருகிறோம். மொத்தமும் தனியார் துறைக்குப் போய்விட்டால் ஒடுக்கப்பட்ட நலிந்த மக்களுடைய வேலைவாய்ப்பு என்பது ஒரு பகற் கனவாய், கேள்விக் குறியாய்ப் போய்விடும். ஆகவேதான் மத்திய அரசாங்கம்கூட, ஏற்கெனவே இருந்த பாரதிய ஜனதா அரசாங்கமாக இருந்தாலும், இன்றைக்கு இருக்கிற காங்கிரஸ் அரசாங்கமாக இருந்தாலும், தனியார் துறை இட ஒதுக்கீட்டுக்கு நாம் அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வருவோம், அதைப் பொது விவாதம் வைத்துப் பேசுவோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசும் தனியார் துறையிலே இட ஒதுக்கீட்டை வழங்குவதற்கு உரிய சட்டத்தை இந்த மாநிலத்தில் செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கும் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி இந்தச் சட்டமன்றத்திலே அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியிலே--இந்த இட ஒதுக்கீட்டிலே இழைக்கப்பட்ட கொடுமை இருக்கிறதே; 44 G.O. என்று திராவிட முன்னேற்றக் கழக அரசிலே போட்டார்கள். அந்த 44 G.O.–வை, அரசாணையை, அவர்களே மாற்றி, 33 G.O. போட்டார்கள்.-- 33 G.O. போட்டபோது, அன்றைக்குத் தமிழ்நாட்டிலே அடித்தளத்து மக்களுக்கு ஆதரவாக நலிந்த மக்களுக்கு ஆதரவாக, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் குரல் எழுப்பினார்கள். 44 G.O.–வைத்தான் நடைமுறைப்படுத்த வேண்டும். 33 G.O.–வை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்குக் குரல் எழுப்பினார்கள். நாங்கள் எல்லாம் உடனிருந்து குரல் எழுப்பினோம். அதற்குப் பின்னாலே நம்முடைய ஆட்சி வந்தபின்னாலே 44 G.O.–வுக்கு மாறாகப் போடப்பட்ட 33 G.O.–வை மாற்றி 91 G.O. என்ற ஒரு G.O. போட்டோம். ஆனால் அந்த 91 G.O. இன்றைக்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா? நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையிலே 91 G.O.–வை மாற்றி -- வந்தவுடனே அவர்கள் சொன்ன உறுதியை -- ஆணையாக ஆக்கினார்கள் -- சட்டமாக ஆக்கினார்கள். ஆனால், நடைமுறையிலே அரசு அதிகாரிகள் அதை முழுமையாகச் செயல்படுத்துகிறார்களா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். அவர்களை நீங்கள் கண்காணிப்பதற்கு ஒரு தனிக் கண்காணிப்புக் குழுவை -- ஒரு சட்டமன்றக் குழுவைக்கூடப் போடலாம். பல குழுக்கள் இருக்கின்றன; பல மாநிலங்களிலே பல குழுக்கள் இருக்கின்றன. இங்கேயும் இருக்கின்றன. இங்கே ஆதிதிராவிடர் நல உறுப்பினர்களை உள்ளடக்கிய ஆதிதிராவிடர் நல சட்டமன்ற உறுப்பினர் குழு ஒன்று ஏற்படுத்தலாம். அதை ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்குக்கூட கோவை காளப்பட்டியிலே அங்கே இருக்கிற நலிந்த மக்கள் தாக்கப்பட்டார்கள். நான் சொன்னதைப்போல...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இட ஒதுக்கீடு ஆய்வு இப்போது அரசு நியமனம் இல்லாத காரணத்தால், அது தற்போது தாமதப்பட்டிருக்கிறது. இப்போது தற்காலிகமாகப் போடப்பட்ட டாஸ்மாக்கில் 32 ஆயிரம் பணியாளர்கள்; அதிலே 11 ஆயிரம் பேர் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின (மேசையைத் தட்டும் ஒலி) நபர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.





முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்களே, பேச்சை முடித்துவிடுங்கள். இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** பேச்சை முடித்துவிடுகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னமும்கூட இவ்வளவும் வளர்ந்தும்கூட, தேர்தல் ஜனநாயக நெறிமுறைகள் வளர்ந்தும்கூட பாப்பாரபட்டியிலோ, கீரிப்பட்டியிலோ, நாட்டார்மங்கலத்திலோ நாம் பஞ்சாயத்துத் தலைவர்களைக்கூட உருவாக்க முடியவில்லை. அங்கே உள்ள அந்த ஒடுக்கப்பட்ட மக்களும் இதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், இதுகுறித்து என்னுடைய கருத்து என்னவென்றால் நம் சட்டத்தின் ஆட்சிக்கு, நம்முடைய ஆட்சி அதிகாரத்திற்கு கட்டுப்படாத அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படுகிற அனைத்து நிதிகளையும் அரசு இரத்து செய்ய வேண்டும். அந்தப் பஞ்சாயத்துகளுக்கு ஏன் நாம் நிதி வழங்க வேண்டும்? பஞ்சாயத்தையே அவர்கள் ஒப்புக்கொள்ளாதபோது அந்தப் பஞ்சாயத்துகளுக்கு எதற்காக நாம் நிதி வழங்க வேண்டும்? நாம் வழக்கமாக வழங்கிக் கொண்டிருக்கிற நிதி கிடைத்துக் கொண்டிருப்பதனாலே அவர்களுக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆகவே, அந்தப் பஞ்சாயத்துகளுக்கு வழங்குகிற, அந்தப் பஞ்சாயத்துகளுக்கு அரசின் மூலம் தரப்படுகிற அனைத்துச் சலுகைகளையும், அனைத்து நிதிகளையும், குடிநீர், மின்சாரம், நிதி போன்ற அனைத்தையும் இந்த அரசு இரத்து செய்ய வேண்டும். ஏற்கெனவே இப்படி ஒரு முறை நடந்தது. அன்றைக்கு, சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் மதுரையிலே நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார். இது நீண்ட காலத்திற்கு முன்னாலே நடந்த வரலாறு. பலருக்குத் தெரியாது. திரு. சௌந்திரபாண்டிய நாடாருக்கு அரசாங்கத்தின் சார்பிலே நாம் சிலை வைத்திருக்கிறோம். போக்குவரத்திலே அங்கே ஓடிய நகரப் பேருந்திலே ஒரு தலித் ஏறமுடியவில்லை என்று சொன்னதால் அந்த பஸ் பர்மிட்டையே இரத்து செய்துவிட்டார். தலித்தை ஏற்றாத அந்த பஸ் பர்மிட்டை நான் எதற்காக வழங்க வேண்டும் என்று பஸ் பர்மிட்டை இரத்து செய்தவர் W.P. சௌந்தரபாண்டிய நாடார். அதைப்போன்ற நடைமுறைகள் இருக்கின்றன. அவர் இருந்தபோது செய்தார். அதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்போல இன்றைக்கு அந்தப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்படுகிற அனைத்துச் சலுகைகளையும் இரத்து செய்ய வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** பேரவைத் துணைத் தலைவருக்கு தெரியாத செய்தி அல்ல. நாம் தாட்கோவிலே கடன் கொடுக்கிறோம். ஆடு வாங்க, மாடு வாங்க, ஏதாவது ஒரு சிறுதொழில் செய்ய, மளிகைக் கடை வைத்துக்கொள்ள, சைக்கிள் ஷாப் வைத்துக்கொள்ளக் கடன் தருகிறோம். ஆனால், வங்கிகளிலே margin money தந்துவிட்டால் வங்கிகள் உடனே தருவதில்லை. அதில் நடக்கின்ற அலைக்கழிப்பு இருக்கிறதே, ஒரு விண்ணப்பத்தைப் போட்டால்; இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிந்த செய்தி. பாவம், சட்டமன்ற உறுப்பினர்கள்; இந்தச் செய்தியிலே அவர்கள் இப்படிப்பட்ட நிலையிலே; இதைவிட அவர்களுக்கு ஏற்படுகிற பாதிப்பு இருக்கிறதே! தாட்கோவிலே அவர்கள் தருவார்கள், margin money தருவார்கள். ஆனால், வங்கியிலே தரமாட்டார்கள். அவர்கள் திருப்பித் திருப்பி வந்து சட்டமன்ற உறுப்பினர்களையே கேட்பார்கள், அவர்கள் மிகவும் பாவம், அவர்களுக்கும் தெரியாது. அவர்களால் முடியாது. வங்கிகள் இப்படி அலைக்கழிக்கின்றன.

நான் என்ன கேட்கிறேன் என்றால், ஓராண்டிற்கு மிகக் குறைந்தபட்சம் ரூ.60 கோடி, 70 கோடி தாட்கோவினுடைய பணத்தை நாம் வங்கிகளிலே deposit செய்கிறோம். நீங்கள் இன்னொரு வங்கியிலே deposit செய்த பிறகு அந்த வங்கிக்காரன் இப்படி அலைக்கழித்து சட்டமன்ற உறுப்பினர்களும் செய்ய முடியாமல், மற்றவர்களும் செய்ய முடியாமல் அலைக்கழிப்புக்குள்ளாவதைத் தவிர்க்க நீங்களே ஏன் ஒரு தனி வங்கியை, தாட்கோவே, உருவாக்கக் கூடாது? இதற்கு முன்னுதாரணம் இல்லை என்று சொல்ல முடியாது. ரெப்கோ வங்கி இருக்கிறது. REPCO Bank என்பது Refugees-க்காக, அகதிகள், மறுவாழ்விற்காக இருப்பது. அகதிகளுக்காகவே ஒரு தனி வங்கி இருக்கிறபோது ஆதிதிராவிட மக்களுக்காக இத்தனை கோடி deposit செய்கிறபோது நீங்கள் ஏன் ஒரு தனி வங்கியை வைத்துக்கொள்ளக் கூடாது? அல்லது குறைந்தபட்சம் Central Co-operative Bank இருக்கிறதே அது நம்முடைய அரசாங்கத்தினுடைய ஒரு சார்பு வங்கி. அதோடாவது ஒரு agreement போடலாம். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அந்த நிலையைத் தராமல் இப்படிப்பட்ட அரசாங்க சார்பு வங்கிகளோடு நீங்கள் தொடர்பு வைத்துக் கொண்டால், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் எளிதாக இருக்கும். அந்த இலக்கை நீங்கள் அடைய முடியும் என்பதனாலே, நான் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக, இதைச் சொல்ல விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** தாட்கோவிலேகூட அந்த வங்கி கடன் கொடுக்கிறபோது ஏற்படுகிற குழப்பம் இருக்கிறதே! இப்போது நான் இருக்கிறேன். என்னுடைய சொந்த ஊரிலே வேலூருக்குப் பக்கத்திலே ஒரு கிராமம். அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் கார் கேட்டு லோன் போடுகிறான். அவனுக்கு Community Certificate எங்கே இருக்கும்? அந்தக் கிராமத்திலே இருந்து இருக்கும். விண்ணப்பம் வந்து நேர்முகத் தேர்விலே ஆய்வு செய்கிறபோது மாவட்ட ஆட்சியர் தலைமையிலேதான் அந்த நேர்முகத் தேர்வு நடக்கிறது. அவர்கள் என்ன சொல்கிறார்கள், நீ கிராமத்திலே இருந்து வருகிறாய், கிராமத்திலே எப்படி டாக்ஸி ஓடும் என்கிறார்கள். எனவே, அது நிராகரிக்கப்பட்டது. கிராமத்திலே இருந்து 3 கிலோ மீட்டரில் உள்ள நகரத்திலே வந்து டாக்ஸி ஓட்ட முடியாதா? 5 கிலோ மீட்டர் பக்கத்திலே வந்து ஒரு டாக்ஸி ஓட்ட முடியாதா? அந்தக் கிராமத்திலே இருப்பவனுக்கு, கிராமத்திலே டாக்ஸி ஓடாது ஆகவே அந்த மனு நிராகரிக்கப்பட்டது என்று சொன்னால் எப்படி? இப்படிப்பட்ட குளறுபடிகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இவைகளை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஒரே ஒரு நிமிடம், முடித்துவிடுகிறேன். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நான் பல முன்னுதாரணங்களைச் சொன்னதைப போல, தமிழ்நாட்டிலே வேறு எங்குமே இல்லாத அளவிற்கு ஆதிதிராவிட மக்களுக்காக, உழைப்பவர்களுக்காக, சமாதான சமத்துவத்தைப் படைக்க வேண்டும் என்ற இப்படிப்பட்ட போராளிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் பெரியார் பெயரிலும், அம்பேத்கர் பெயரிலும் அம்பேத்கர் விருது என்றும், பெரியார் விருது என்றும் அறிவித்தார்கள். 1993–லே சென்னை, தங்கசாலையிலே பேரறிஞர் தந்தை சிவராஜ் அவர்களுடைய சிலையைத் திறந்தபோது அந்த விழாவிலே, நாம் இப்படி ஒன்றைச் செய்யலாம் என்ற கோரிக்கை வைத்தபோது அந்தக் கோரிக்கையை அங்கேயே ஏற்று, அங்கேயே அறிவித்தார்; நடைமுறைபடுத்துகிறோம் அம்பேத்கர் விருது தருகிறோம்; அது வந்து ஒரு மூன்று ஆண்டுகளுக்குத்தான் தரப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த அம்பேத்கர் விருது யாருக்குமே தரப்படவில்லை. யாருக்காவது கொடுங்கள். யாருக்காவது கொடுங்கள் ஒரு இலட்ச ரூபாயை. இந்தச் சமுதாயத்திற்காக உழைக்கின்றவர்களுக்கு, இந்த மக்களுக்காக உழைக்க முன்வருபவர்களுக்கு அது ஓர் உற்சாகத்தை,

ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தும். மூன்று ஆண்டுகளாகத் தர முடியவில்லை. ஆகவே, அவற்றை எல்லாம் இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்களுக்கு கொண்டுபோக வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** அதேபோல இந்தப் போலிச் சான்றிதழ்கள்; நம்முடைய கொள்கைக் குறிப்பிலேகூடப் போலிச் சான்றிதழ்களைப் பற்றிச் சொல்கிறார்கள். எவ்வளவு சிக்கல் இருக்கிறது. ரெட்டியார் என்று சொன்னால் அது பிற்படுத்தப்பட்ட வகுப்பு. கொண்டா ரெட்டியார் என்று வாங்கிக்கொண்டால், உடனே அவன் மலை சாதி ஆகிவிடுவான். நாயக்கர் என்று சொன்னால் அது பிற்படுத்தப்பட்ட வகுப்பு. காட்டு நாயக்கன் என்று வாங்கிக் கொண்டால் உடனே அவன் மலை சாதி வாசன் ஆகிவிடுவான். வண்ணான் என்று சொன்னால், அது பிற்படுத்தப்பட்ட சமுதாயம். குதிரை வண்ணான் என்று சொன்னால் உடனே அவன் மலைவாழ் குடிமகன் ஆகிவிடுவான். ஒரே ஒரு எழுத்து மாறினால் போதும். குறும்பர் என்று சொன்னால் அவன் மலைவாழ் மக்கள். குறும்பா என்று சொன்னால் அவன் வேறு ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயம்; இந்த ஒரு எழுத்து மாறிவிட்டால் ன், ர் ஆகிவிட்டால்; ஆகவே, எவ்வளவு விழிப்பாக இந்தப் போலிச் சாதி சான்றிதழ்களை நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. ஆந்திராவிலேயே கொண்டா ரெட்டி என்று ஒரு சமூகம் இல்லையென்று, ஆந்திர மாநில அரசு, அந்தப் போலிச் சாதிச் சான்றிதழ் தந்தால் அது தவறு என்று நடவடிக்கை எடுத்தது. ஆனால் தமிழகத்திலே இன்றைக்கு கொண்டா ரெட்டியார்கள் என்று சொன்னால் அது ஒரு சமூகம். ரெட்டி என்று வாங்கிக்கொண்டால் உடனே S.T. ஆகிவிடுகிறான். S.T.-யினுடைய இட ஒதுக்கீட்டுக்கு வந்துவிடுகிறான். ஆக இந்தப் போலிச் சான்றிதழை ஒழிக்க, நீங்கள் ஓர் உயர் நீதிமன்ற (மணியடிக்கப்பெற்றது) நீதிபதியினுடைய ஆணையத்தின்கீழே, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும், யார் அதில் ஈடுபட்டாலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியுங்கள். ஒரே வார்த்தையிலே முடியுங்கள்.





**திரு. செ.கு. தமிழரசன்:** நான் விரும்புவதே புரட்சித் தலைவி அரசைப் பொறுத்தவரையிலே பல முன்னுதாரணங்களைச் சொல்லலாம். தொழிற்பேட்டையானாலும், அம்பேத்கர் விருது தந்ததானாலும், பேரறிஞர் அம்பேத்கர் பெயரிலே ஒரு மாவட்டத்தை உருவாக்கியதானாலும், பேரறிஞர் அம்பேத்கருக்கு சென்னை மாநகரத்திலே ஒரு சிலை வைத்ததானாலும், பேரறிஞர் அம்பேத்கருக்கு மட்டுமல்லாமல் தந்தை சிவராஜுக்கு ஒரு சிலை வைத்ததானாலும், அதற்குமேலே அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு ஆரம்பத்திலேயே அந்த பெயர் வைத்து அனுமதி அளித்ததானாலும், இப்படிப் பல செய்திகளை இந்தப் புரட்சித் தலைவி அரசு ஒரு முன்னுதாரணமாக இருந்து செய்துகொண்டு இருக்கின்றது. இந்த அரசினிடம் இந்தக் கோரிக்கைகளை--இரட்டைமலை சீனிவாசனுடைய குடும்பம் நலிந்து கிடக்கிறது என்பதை நாங்கள் நினைவுபடுத்தியபோது ஒரு இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு நிதி உதவி தந்தார்கள். ஆக இன்றைக்கு இரட்டைமலை சீனிவாசனை நாங்கள் நினைவுபடுத்துகின்ற வகையிலே, இரட்டைமலை சீனிவாசன் பெயரிலே, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்துப் பேருந்துகள் கழகம் தொடங்கப்பட்டபோதுகூட ஏதோ ஒரு நினைவை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். அவர் பெயரிலே ஒரு நினைவுச் சின்னமோ அல்லது சிலையோ நீங்கள் உருவாக்க வேண்டும் என்று நான் சொன்னேன். பல முன்னுதாரணங்களைப் படைத்த இந்த அரசு இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும், செவி மடுக்கும் என்கின்ற உணர்வோடுதான் இவைகளை நான் சுட்டிக்காட்டினேன். வாய்ப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி இரா. சரோஜா.

**திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்களுடைய பொற் பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தினைக் காணிக்கையாக்கி இன்றைக்குச் சமூக நலத் துறையிலே இருக்கின்ற கருத்துகளை எடுத்துக்கூற விழைகிறேன். கள்ளிப் பால் ஊற்றி, பெண் சிசுக் கொலை செய்த தமிழகத்தில் அன்புப் பால் அளித்து, தொட்டில் குழந்தைத் திட்டம் என்னும் மகத்தான திட்டத்தை இந்தியாவில் முதன் முதலில் 1992–ல் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கொண்டுவந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட

விரும்புகிறேன். இடையிலே வந்த கருணாநிதி ஆட்சி காலத்தில் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனால் அன்று சில குழந்தைகள்கூட இறக்க நேரிட்டது. மீண்டும் எங்களுடைய அம்மா 2001–ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அத்திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவ்வாறு குழந்தை சாவினைத் தடுத்தவர் எங்களுடைய அம்மா ஆவார்கள்.

*பிற்பகல் 12–05*

இத்திட்டத்திற்காகச் சேலத்தில் வரவேற்பு மையத்தை upgrade செய்திருக்கிறார்கள். மதுரை, தேனி திண்டுக்கல் மற்றும் தருமபுரியில் ஏற்படுத்த ரூ.12.96 இலட்சமும், 2002–2003–ல் ரூ.11.19 இலட்சமும், 2004–2005–ல் ரூ.14.58* இலட்சமும் ஒதுக்கிக் குழந்தைகளைக் காத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி. சிவசாமி தலைமை)

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் —ஆண் குழந்தை மோகம் கொண்டு, பெண் குழந்தை இறப்பைத் தடுக்க—அம்மா அவர்கள் கொண்டு வந்த மகத்தான திட்டத்திற்கு—நடப்பாண்டில் 20 கோடி ரூபாய் ஒதுக்கி பெண் குழந்தைகளைப் பாதுகாத்த நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களை மக்கள் போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள். ஆதரவற்ற குழந்தைகள் நலன் பொருட்டு அமைக்கப்பட்டதே அரசு குழந்தை காப்பகங்கள். 25 காப்பகங்களில் ஒன்று முதல் 5 வரை படித்த பின் ஆறு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கவும், தொழிற்கல்வி படிக்கவும் வழிவகை செய்யும் மகத்தான திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.494.19 இலட்சம் நிதியுதவி அளித்து காக்கும் அரசு நம் தலைவி புரட்சித் தலைவி அம்மாவின் அரசாகும் என்பதை நான் இங்கே நினைவு கூர்கிறேன். வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் காப்பகத் திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.40 இலட்சம் ஒதுக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமண நிதியுதவித் திட்டத்தில் ஏழை விதவைத் திருமண உதவித் தொகை, ஆதரவற்ற பெண்கள் உதவித் தொகை, விதவை மறுமணத் தொகை என தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குகிறார்கள். கலப்புத் திருமண



நிதியுதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் வழங்குகிற இத்திட்டத்திற்கு 397 இலட்சம் நிதி ஒதுக்கிய அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்களுக்காகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை அறிமுகப்படுத்தி 79 தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 40,384 பெண் பயனாளிகளும், 16 எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 913 பயனாளிகளும், இங்கே 8 இதர சங்கங்கள் மூலம் 1,037 பெண் பயனாளிகளும் ஆக மொத்தம் 42,334 பெண்கள் பயனடையும் இத்திட்டத்தில் சீருடைகளை பாலியஸ்டர் துணியால் தைத்து வழங்க ஆணை பிறப்பித்துப் பெண்களுக்கும் அதே போல், குழந்தைகளுக்கும் பயன் தரும் மகத்தான திட்டத்தை மக்கள் பாராட்டும் வண்ணம் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மகளிர் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலைவாழ் மகளிர் பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் இரண்டும், நாமக்கல் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் தலா ஒன்றுமாக நான்கு தையல் பயிற்சி மையங்கள் மூலம் ஒவ்வோர் ஆண்டும் 65 மலைவாழ் மகளிர் பயிற்சி பெறும் இத்திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் ரூ.6.48 இலட்சம் ஒதுக்கியும், தமிழகத்திலே முதன் முதலாக ஒரு மலைவாழ் பெண்ணான எனக்கு அமைச்சர் பதவியை அளித்தும் எங்கள் மலைவாழ் பழங்குடியினர் மகிழும் வண்ணம் செய்த மலையரசியான எனது தாய் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், பழங்குடியின மக்களின் சார்பாகவும், சிரம் தாழ்ந்த நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்"

என்ற மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டத்தினைக் கண்காணிக்க, அவர் காலத்தில் அம்மா அவர்களை நியமனம் செய்தார்கள்.

*பிற்பகல் 12–10*

ஏழைக் குழந்தைகள் பசியின்றிக் கல்வி கற்க வேண்டி நடப்பு நிதியாண்டில் ரூபாய் 705.3 இலட்சம் கோடி ஒதுக்கீடு செய்து சிறப்புச் சத்துணவாக, வேகவைத்த உருளைக்கிழங்கு, வேகவைத்த

கொண்டைக்கடலை, பச்சைப் பயறு, முட்டை வழங்கி குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்கு அடித்தளம் அமைத்து ஆட்சி புரியும் என் அன்னையே, சத்துணவு சாப்பிடும் 83 இலட்சத்து, 39 ஆயிரத்து 862 குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கி சமதர்மம் கண்ட சரித்திர நாயகிக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிர் நல மேம்பாடு என்ற மகத்தான திட்டத்தின்மூலம் கிராமப்புற சுய உதவிக் குழுக்கள் அமைத்து, வங்கிகள்மூலம் குறைந்த வட்டியில் கடனைப் பெற்று வளம் காணும் மகத்தான திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் கொண்டுவந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

ஊனமுற்றோர் மறுவாழ்வு; ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் ஊனம் இல்லாத நபர்களுக்கு சலுகைகள் அளித்தும், மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிருக்குப் பாதுகாப்பு இல்லம் அமைத்தும், தமிழகத்தில் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களையும், அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லங்களையும் அமைத்து, ஊனமுற்றவர்களுக்கு ஊன்றுகோலாக விளங்கும் இயல் குணம் கொண்ட எங்கள் தாய்க்கு, அம்மாவிற்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

'சாதிகள் இல்லையடி பாப்பா–குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'

என்ற பாரதியாரின் வாக்குப்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்மேல் அதிக அக்கறையும், அவர்களைப் பொருளாதார சமூக அந்தஸ்தில் உயர்த்த, அவர்களை முன்னேற்ற, 24 மணி நேரமும் சிந்தனையுடன் செயல்படும் எங்கள் அம்மா ஆட்சியில்தான் அவர்கள் மன நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்கின்றனர் என்பதை மார்தட்டிக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடைகள் இலவச மிதிவண்டி வழங்கியதோடு பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச பஸ் பாஸ் கல்லூரி செல்லும் மாணவ மாணவியருக்கு பாதிக் கட்டணத்தில் பஸ் பயணம் செல்லவும் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். அதேநேரத்திலே இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுடைய தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட, பழங்குடியின மாணவிகளுக்கு



மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கும் மிதி வண்டிகளை வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 3 ஆண்டுகளில் பிளஸ் 2–ல் மாண்புமிகு முதலமைச்சரின் தகுதிப் பரிசுகளை 4,827 பேர் பெற்றுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தீண்டாமையை ஒழிக்கவும், அதனைத் தீவிரமாகப் பிரச்சாரம்மூலம் கட்டுப்படுத்தவும் சிறப்பான நடவடிக்கைகள் (மணியடிக்கப்பெற்றது) மேற்கொண்ட அரசு அம்மாவின் அரசாகும்.

ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்கு வீட்டு வசதி மானியம், சமுதாயக் கூடங்கள், மயானம், மயானப் பாதை வசதி, ஈமச் சடங்கிற்கு 500 ரூபாய் அளித்தும், சிறப்பு உள்ளடக்கத் திட்டங்களை செயல்படுத்தவும், சிறப்பான திட்டங்களை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது என்பதை நான் இங்கே நினைவூட்டுகிறேன். மேலும் பழங்குடி மக்கள், குறிப்பாக, மலைவாழ் மக்கள் ஜாதிச் சான்றிதழ் பெற பல இன்னல்களை அடைகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக ஜாதிச் சான்றிதழ் கிடைக்க ஆவன செய்ய மாண்புமிகு அம்மா அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

ஜாதிச் சங்கங்கள் என்று சொல்லிக்கொண்டு தமிழகத்திலே 36 வகையான பழங்குடியினர் இருக்கின்றனர். அவர்களில் 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, ஒட்டா, குரும்பர், இருளர், பனியா, காட்டுநாயக்கன் ஆகியோர் பண்டைய பழங்குடியினர் என்று கண்டறியப்பட்டதாக அரசு செய்தி கூறுகிறது. ஆனால், அவர்கள் வாழும் இடங்கள் வரையறுத்துக் கூறப்படவில்லை. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், குளத்தூர் திண்ணம்பட்டி கிராமத்தைச் சார்ந்தவர்கள், ரெட்டியார் இனத்தைச் சார்ந்தவர்கள், மருத்துவப் படிப்பிற்கான தேர்வில் இடம் பெறவேண்டும் என்ற நோக்கோடு கொண்டா ரெட்டி என்ற சான்றிதழைப் பெறுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் இங்கே சுட்டிக்காட்ட விழைகிறேன். எனவே, வசதிபடைத்த இன மக்கள் அந்த இன மக்களிடையே சேர்ந்து பழங்குடி இன மக்களின் நல்லதொரு திட்டச் சலுகைகளைப் பறித்துச் செல்கிறார்கள் என்பதை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி இரா. சரோஜா] [2004 ஜூலை 28

பிற்பகல் 12–15

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏற்கெனவே உப்பிலியாபுரம் தொகுதியில் தேர்தலில் போட்டியிட்டவரை, கொண்டாரெட்டி என்னும் இனம் தமிழ்நாட்டில் இல்லை, ஆந்திராவில்தான் கொண்டா என்ற மலைப் பகுதியிலேதான் அவர்கள் வசிக்கிறார்கள் என்று அந்த கொண்டாரெட்டி பற்றிய தீர்ப்பில் அன்றைக்கு உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. கொளத்தூர் தின்னம்பட்டி Vignesan, S/o Devarajan, Gayathri, D/o Nandaraj, இவர்கள் இருவரும் உயர் நீதிமன்றத்திலே வழக்குகள் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நீதிமன்ற வழிகாட்டி நெறிமுறைகளுக்கு முரணாக உள்ளதால் தீர்ப்பின் மீது --பழங்குடி இன மக்களின் உள்ளங்களில் பசுமையாக வீற்றிருக்கும் அம்மா அவர்கள்-- மேல்முறையீடு செய்து அதன்மூலம் உண்மையான பழங்குடியின மக்களுக்குச் சலுகைகள் சென்றடைய உதவிடுமாறு அம்மா அவர்களை இருகரம் கூப்பி, உங்கள் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்களுக்கு அரசுகள் வழங்கும் ஒரு சதவிகித சலுகையை உயர்த்தி இரண்டு சதவிகிதமாகக் கொடுக்க அம்மா அவர்களின் அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களிடம் நான் சமூக நலத் துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கைகளாக இருந்தாலும்கூட--என்னுடைய தொகுதியின் பிரச்சினைகளை இங்கே நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். 2002–லே மாண்புமிகு அம்மா அவர்கள் பை-பாஸ் ரோட்டிற்காக என்னுடைய தொகுதிக்கு 3 கோடியே 40 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். அந்த பை-பாஸ் ரோட்டுக்கான நில அளவுகள் அளக்கப்பட்டு, அதற்கு 98 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதை விரைவாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விழைகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியிலே சாலைகள் மிகவும் மோசமாக உள்ளன. முசிறி–துறையூர்–ஆத்தூர் சாலை மிகவும் மோசமான நிலையிலே இரண்டு ஆண்டுகளாக உள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்டி அந்த ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்க விழைகிறேன். அதேபோல என்னுடைய தொகுதி விவசாயத்தையே நம்பியுள்ள தொகுதி..



2004 ஜூலை 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதேபோன்று மீதிக் கோரிக்கைகளை அமைச்சரிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திருமதி இரா. சரோஜா:** ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி இரா. சரோஜா:** என்னுடைய தொகுதி விவசாயத்தை நம்பியுள்ள தொகுதியாக இருப்பதால் என்னுடைய தொகுதியில் புதிய ஏரிகளை அமைத்து, அந்த ஏரிகள் மூலம் எங்களுடைய விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள உதவிட வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அண்ணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் மனுக்களைக் கொடுத்திருக்கிறேன். அதையெல்லாம் பரிசீலிப்பார், செய்து கொடுப்பார் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எங்களுடைய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். என்னுடைய தொகுதியைச் சார்ந்த பச்சமலை, டாப் செங்காட்டுப்பட்டி என்னும் கிராமத்தில் பிளஸ்–2 படிக்கின்ற இரண்டு இனங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு அங்கே விடுதிகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்கள் விடுதி இல்லாமல் மூன்று வேளையும் சாப்பிட்டுவிட்டு, கல்வியைப் பயின்றுவிட்டு பல மைல் தூரம் சென்று அடைகின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். எனவே, அந்த மாணவ, மாணவிகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சசிகலா. (குறுக்கீடு) சரி, உரையை முடியுங்கள்.

**திருமதி இரா. சரோஜா:** நீங்கள் விடுதிகள் கட்டிக் கொடுத்து அந்தத் தொகுதியினுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த மலைவாழ் பள்ளி மாணவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கே நல்லதொரு வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சசிகலா.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'பெண்கள் நாட்டின் கண்கள்' என்ற பொன்மொழிக்கேற்ப, அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு முன்னுரிமை அளித்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எனது உரையைத் தொடங்குகிறேன்.

சமூக நலத் துறை, அனைத்துப் பிரிவு மக்களும் நேரடியாக, குழந்தைகள் முதல் முதியவர் வரை, பயனடையக்கூடிய ஒரு துறையாக விளங்குகிறது. இத்துறையின்மூலம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல திட்டங்களைத் தீட்டி மக்களுக்கு நேரடியாக நலத் திட்டங்கள் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் மக்கள் சேவை செய்வது பாராட்டுக்குரியதாகும்.

புதிய பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில், ஒரு பெண் குழந்தை மட்டும் பெற்றெடுத்த பெற்றோர் குடும்பக் கட்டுப்பாடு செய்திருந்தால், அந்தப் பெண் குழந்தையின் பெயரில் ரூபாய் 22,200 deposit செய்து அந்த வருமானத்தில் ஒன்று முதல் 10 ஆம் வகுப்பு வரை படிப்பதற்கும், அதிலிருந்து வருகிற வருமானத்தில் மாதத்திற்கு ரூபாய் 150 வட்டியும் இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களின் கல்விப் பாதுகாப்புக்காக 20 ஆண்டுகளுக்குப் பிறகு, மேற்படிப்புத் தொடரவோ அல்லது அந்தப் பெண் குழந்தையின் திருமணத்திற்கோ அத்தொகை எடுக்கப்பட்டு, வாழ்வில் பெண்கள் ஓர் உயரிய இடத்திற்குச் செல்ல வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த முன்னோடித் திட்டம் முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடி முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குவதையே காட்டுகிறது.

பெண் சிசுக் கொலையைத் தடுக்கும்பொருட்டு, 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு நமது அம்மாவின் எண்ணத்தில் உதித்த திட்டம்தான் தொட்டில் குழந்தைத் திட்டமாகும். சேலத்தில் ஒரு வரவேற்பு மையம் தொடங்கப்பட்டு, 188 இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டு பெண் சிசு வதையைத் தடுத்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அனைத்துத் தரப்புப் பெண்களின் பாராட்டையும் பெற்று நல்லாட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.



குழந்தைகளின் உடல் நலனில் அக்கறை கொண்ட அம்மா அவர்கள் ஆட்சியிலே, குழந்தைகளின் ஆற்றலை வளர்க்கும் விதத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் மூலம், நகர்ப்புறம் முதல் கிராமப்புறம் வரையுள்ள குழந்தைகளுக்கும், ஓய்வூதியம் பெறும் முதியவர்களுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, முட்டையுடன்கூடிய புரதச் சத்து நிறைந்த உணவு கொடுக்கப்படுகிறது. மொத்தம் 83,39,862 பேர் இதனால் பயனடைகிறார்கள் என்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாக உள்ளது என்று அனைத்துத் தரப்பு மக்களும் அம்மாவின் அரசைப் பாராட்டுகிறார்கள்.

ஒவ்வொரு சுய உதவிக் குழு உறுப்பினர்களும் கடன் பெறும் தகுதியை அடைந்தவுடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. 31–3–2004 நிலவரப்படி, வேளாண்மை, தோட்டக் கலை, பட்டுப் பூச்சி வளர்ப்பு, கால்நடை வளர்த்தல், குடிசை மற்றும் கிராமப்புறத் தொழில்கள் போன்ற தொழில்கள் செய்ய, இதுவரைக்கும் 1,24,258 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூபாய் 674.19 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சுய உதவிக் குழு பெண்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டது நமது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு; உலக மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்கள் 19 சதவீதமும், பழங்குடியினர் 1.4 சதவீதமும் உள்ள மக்கள், சமூகரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள், இவர்களுடைய வாழ்க்கையின் தரம் உயர சிறப்புக் கவனம் செலுத்தி, இவர்களுக்குத் தரமான கல்வி, கடன் வசதி, வீட்டு வசதி போன்றவை எளிதில் கிடைக்கச் செய்வதன்மூலம், இவர்களுக்கு சமூகத்தில் சம அந்தஸ்து கிடைக்க அம்மா அவர்கள் செயல்பட்டு வருவது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களிடையே மிகுந்த பாராட்டைப் பெற்று வருகிறது. அம்மா அவர்களின் நல்லாட்சிக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

பிற்பகல் 12-25

மாநில மக்கள் தொகையில் கல்வி அறிவு பெற்றவர்களுடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி அறிவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் பின்தங்கி இருப்பதை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள் 2002-2005 ஆம் ஆண்டில் இத்துறைக்கு ரூ.448.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அதில் 70 சதவிகிதம் கல்வி சார்ந்த திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து அனைத்து ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் பள்ளிகளுக்கும் அனைத்து வசதிகளும் செய்து தர ஆணையிட்டுள்ளார்கள்.

குறிப்பாக, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் 31 உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினி வழங்கியும், 61 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினி வழங்கியும் முனைப்புடன் அம்மாவின் அரசு செயல்பட்டதன் காரணமாக 12 ஆம் வகுப்பு கணினி அறிவியல் பொதுத் தேர்வில் தேர்ச்சி விகிதம் 99.8 சதவிகிதம் என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதிதிராவிட மாணவ மாணவிகளின்மேல் வைத்த நம்பிக்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 59 ஆய்வுக் கூடங்களும், 4 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுக் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருவது அரசின் பாராட்டிற்குரிய செயலாகும்.

100 சதவிகித பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கும் விதத்தில், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 50 வழங்கி, 10 மாதத்திற்கு ரூபாய் 500 வழங்கி பெண் கல்விக்குப் பெருமை தேடித் தந்த நமது அம்மாவின் அரசைப் பாராட்ட அளவே இல்லை என்று சொல்லலாம். 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட மாணவர்களின் பள்ளிப் படிப்பு பாதித்துவிடக் கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு நமது அம்மா அவர்கள் இலவச சைக்கிள் திட்டத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக மாணவிகள் அனைவரும் தங்கள் பள்ளிப் படிப்பைத் தொடர புரட்சித் தலைவி அம்மா அவர்களே காரணம் என்று புகழ்பாடும் வகையில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு முன்னோடி திட்டமாக அம்மா திட்டம் விளங்குவது பாராட்டுக்குரியதாகும்.

ஆதிதிராவிட மாணவ மாணவிகள் தங்கிப் படிக்கும் விடுதிகள் அனைத்தையும், அனைத்து வசதிகளுடன் கூடிய—போதிய இட வசதி, மின்சார வசதி, தண்ணீர் வசதி போன்ற அனைத்து சிறப்பான



படிப்பிற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்தி, அரசின் சொந்தக் கட்டடங்களாக்குவதைக் கொள்கையாகக் கொண்டிருக்கும் அம்மா அவர்களுக்கு மாணவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்ற மாநிலங்களில் கொத்தடிமையாக இருந்தவர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் உறுதி கொண்ட அம்மாவின் அரசு உடனடியாக அவர்களுக்கு 1000 ரூபாயும், தொழில் தொடங்க 19 ஆயிரம் ரூபாயும் வழங்கி வருகிறது. இதுவரை ரூபாய் 1301.41 இலட்சம் செலவில் 12,931 நபர்கள் விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்த நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பெண்கள் சொந்தத் தொழில் செய்ய, பொருளாதாரத்தில் அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் தாட்கோ மூலம் வழங்கப்படும் மொத்த மானியத்தில் 75 சதவிகிதம் பெண்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு, வருவாய் ஈட்டும் திட்டத்திற்கு அம்மா அவர்கள் நிதி வழங்கி அத்திட்டம் செவ்வனே செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

2004-2005 ஆம் ஆண்டில் நிலம் வழங்கும் திட்டம் என்ற புதிய திட்டத்தை அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதன்மூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பெண்கள் நிலம் வாங்குவதற்கு ரூபாய் 70 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் நிலம் வாங்க ரூ. 1 இலட்சமும், பருவக் கடன் ரூ. 1 இலட்சமும் வழங்கப்பட்டு, இதில் 50 சதவிகிதம் மானியமாக அம்மா அவர்கள் அறிவித்து ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்பதில் அக்கறை காட்டிய அம்மா அவர்களுக்கு ஆதிதிராவிட பெண்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சில கோரிக்கைகள். காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள கடவூர்-வையப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி அங்கு வசிக்கும் 523 கிராம மக்களும் குடிநீர் வசதி பெற அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமாய், பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். கடவூர் ஒன்றியத்தில் செந்தலைவாழ்கரடு அணைத் திட்டம் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்பட்டால் அங்குள்ள ஏழை எளிய விவசாய மக்கள் விவசாயம்

செய்ய ஏதுவாகவும், நீர்வரத்துப் பெருகவும் வாய்ப்பு ஏற்படும். எனவே ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமாய் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி டெல்டா மாவட்டங்களாகிய தஞ்சை, நாகை மாவட்டங்களுக்குச் சிறப்பு சலுகையாக விவசாயிகளின் நலனைக் காக்க மோட்டார் மின் இணைப்பு வழங்கியதுபோல் கரூர், திருச்சி டெல்டா பகுதிக்கும் மோட்டார் மின் இணைப்பு வழங்கி நெல், கரும்பு, வாழை, வெற்றிலைப் பயிர்களைப் பாதுகாக்க வேண்டுமாய், விவசாயிகளின் சார்பாகச் சிறப்புச் சலுகை வழங்க வேண்டுமாய் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–30*

*234* தொகுதிகளையும் தனது தொகுதியாக மதித்து, அங்கு வாழும் *6* கோடி மக்களையும் தனது மக்களாக நினைத்து அவர்களது வாழ்வில் ஓர் அங்கமாக இருந்து, அவர்களுடைய நலனுக்காக *20* மணி நேரம் தொடர்ந்து உழைத்து, நேர்மையான ஆட்சியையும், சிறப்பாகச் சட்டம் ஒழுங்கையும் நிலைநிறுத்தி, தமிழ்நாட்டை ஆட்சி செய்யும்—இந்தியாவிலேயே தலைசிறந்த மாண்புமிகு முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக விளங்கும்—தங்களின் பொற்கால ஆட்சி தொடர, அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு, வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வி. சிவகாமி.

***திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன், சத்துணவு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மானியக் கோரிக்கைகளின்மீது பேச எனக்கும் அனுமதியளித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதம் தொட்டு, அவை முன்னவர், அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத் துறை. காலம் காலமாக தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஏழையெளிய மக்கள், அங்கத்தினர்களே; இவர்களும் சமூகத்தின் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது ஆதிதிராவிடர் நலத் துறை. மாண்புமிகு இதய தெய்வம் ஆட்சியிலே



ஆதிதிராவிடர்களுக்கு முதன்முதலாக *6,000* கோயில்களுக்கு *25,000* ரூபாய் வழங்கியதற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டுமனைப் பட்டா, தொகுப்பு வீடுகள், இலவச சைக்கிள், இலவசப் பட்டப்படிப்பு இதுபோன்ற பல்லாயிரக்கணக்கான திட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் அறிவித்தார்கள். ஏனைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அரசினுடைய சாதனைகளை நிறைய விளக்கிக் கூறினார்கள்.

கடந்த ஆட்சியிலே நடந்த முறைகேடுகள் சிலவற்றை உங்களிடம் நான் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், இன்றைய சட்டமன்றக் குறிப்பேடு நாளைய வரலாறு. நாளைய வரலாற்றிலே மக்கள் இதைத் தெரிந்தேயாக வேண்டும். மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய ஆட்சியிலே எவ்வாறு இந்த மக்களுக்கு, ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கு, அவர்கள் முன்னேற்றத்திற்காக, எவ்வளவு திட்டங்களை அறிவித்தார்கள் என்பதை இந்த நாடு அறியும், ஆதிதிராவிட, பழங்குடியின மக்கள் அறிவார்கள். ஆனால், சமத்துவபுரம் என்கிற ஒரு திட்டத்தினை முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் சட்டமன்ற உறுப்பினரும்--சட்டமன்றத்திற்கே வராத ஓர் உறுப்பினர்--கொண்டு வந்தார். அதில் ஒரு கோடி திட்டம். ஒரு கோடியிலே *50* இலட்சம் ஆதிதிராவிட நலத் துறையிலேயிருந்து எடுத்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுத்த வீடுகள், *18* வீடுகள். அதுமட்டுமல்ல, இன்று பட்டா உள்ளவர்கள் யாருமே அங்கு குடியிருக்கவில்லை. அங்கே அந்த *18* பேர்கள் குடிபெயர்ந்துவிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய ஆட்சியிலே ஆதிதிராவிடர் நலத் துறையிலே எத்தகைய வேலையாக இருந்தாலும், எத்தகைய நலத் திட்டங்களை அறிவித்தாலும், அதற்கெல்லாம் ஒரு ஆய்வுக் குழு போட வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் *5, 6* பேர்கள் கொண்ட ஒரு குழுவைப் போட்டு, இந்த வேலை நடக்கிறதா, இந்தத் தொகுப்பு வீடுகள் பணி நடக்கிறதா என்று ஆய்வு செய்ய வேண்டும்.

ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக இப்போது பார்த்தீர்கள் என்றால், அவர்களுக்கு சுடுகாட்டிற்கு நிலம் கிடைப்பதே இல்லை. ஒரு ஊரைப் புதிதாக உருவாக்கி, அந்த ஊருக்குப் பட்டா கொடுத்து, மாண்புமிகு இதய தெய்வம் வீடு கட்டிக் கொடுத்தாலும்கூட, அங்கே சுடுகாட்டிற்கு இடம் கிடைப்பது ரொம்ப கடினமாக இருக்கிறது. அவர்கள் சுடுகாட்டிற்குப் போக *5, 6* மைல்கள் தூரம் நடக்கிறார்கள். அதில்கூட கொஞ்சம் அதிகப் பணமாகப்போட்டு அந்த சுடுகாட்டை, பக்கமாக

வாங்கிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இதற்கு மாண்புமிகு இதய தெய்வம் ஏற்பாடு செய்ய' வேண்டும்.

*பிற்பகல் 12-35*

அதுமட்டுமல்ல. நாளைய வரலாற்றிலே--நிறைய நிறையச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்குக் கொஞ்சம் நேரம்தான் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் பெருமக்கள் எல்லாம் என்மீது இரக்கம் கொண்டு சற்று நேரம் எனக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் சொல்லாமல் போய்விடக் கூடாது. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். நான் ஏணி மேல் ஏறி, ஏணி எடுக்கப்பட்டவள். எந்த நிமிஷமும் எப்படி வேண்டுமானாலும் ஆகலாம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

காவிரியிலே நீர் திறந்து விட்டேன் என்று நன்றி கூறினார்கள் சோனியா காந்திக்கும், பிரதமருக்கும். ஆனால், கபினி அணை உடையும் தறுவாயில் அவர்கள் அதைத் திறந்துவிட வேண்டுமென்பது காலக் கட்டாயம். அமைச்சர் அவர்கள் அழகாக அதைச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு கபினியிலே தண்ணீர் கொஞ்சம் குறைந்து கொண்டிருக்கிறது. இவர்கள் தமிழகத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்று சொன்னால் இப்போது ஒரு கடிதம் எழுதலாம். எங்களுக்கு ஆடிப் பட்டம் பக்கத்தில் வருகிறது. எங்களுக்குத் தண்ணீர் விடுங்கள் என்று இவர்கள் கேட்கலாமே? இவர்கள் ஆட்சிதானே? ஆனால், ஏனென்று கேட்க மாட்டார்கள். இவர்கள் வேண்டுமானால் தன்னுடைய கையிலே காயம் பண்ணி, அதிலே இரத்தத்திலேகூட எழுதி - இதெல்லாம் எங்கள் blood எனலாம். அப்படி வலிக்கும் என்று நினைத்தால்கூட கோழி, ஆடு இரத்தத்தில் எழுதி, இதெல்லாம் எங்களுடைய இரத்தத்தில் கடிதம் எழுதுகிறோம், எங்களுக்குத் தண்ணீர் திறந்து விடுங்கள், இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் மிகவும் இழிவாகப் பேசுகிறார்கள், நாங்கள் சட்டமன்றத்திற்கே போவதில்லை, எங்களை மக்கள் ஊருக்குள் விடுவதில்லை, எங்களுக்கு ஏதாவது தண்ணீர் திறந்துவிட வழி செய்யுங்கள் என்று கேட்டிருக்கலாம்.

நானும், சட்டமன்ற உறுப்பினர் சகோதரி, இன்னும் சகோதரர், முன்னாள் அமைச்சர் கூட நம்முடைய அன்புத் தோழர் எல்லாம் ஒரே வண்டியில்தான் வந்தோம் இரயிலில். அப்போது இங்கே உள்ளவர் ஒருவரும் வந்தார் அந்த வண்டியில். இங்கு நீங்கள் சட்டமன்றத்திற்கே



வருவதில்லை என்று அன்புச் சகோதரர் கேட்டார். அப்போது அவர் சொன்னார்; " நான் என்ன செய்யட்டும், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சகத்தில் வீழ்ந்தானடி கர்ணன்; வஞ்சகன் கண்ணனடி" என்று சொன்னார். அப்போது நான்கூட எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன். என்ன செய்வது சட்டமன்ற உறுப்பினராகி விட்டால் மக்களுக்காக எதையும் செய்வோமென்று சொல்கிறார்கள் பாராளுமன்றத்தைப் புறக்கணிக்க வேண்டாமென்று இவர்கள் சொல்கிறார்கள். ஆனால், இவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களை இங்கே வர அனுமதிப்பதில்லை.

மாண்புமிகு இதய தெய்வம் இன்று தன்னை நாட்டுக்காக அர்ப்பணித்தார். தன்னுடைய சுக வாழ்வை நாட்டுக்கு அர்ப்பணித்தார். அவர் செல்வந்த புத்திரி, அவர் வாழ்ந்த வாழ்க்கை வரலாறு. தயவுசெய்து ஒன்றை மட்டும் சொல்கிறேன்; நாளை வரும் ஞானிகள் இந்தக் குறிப்பை எடுத்துப் பார்க்கும்போது நான் சொன்ன வார்த்தை இருக்க வேண்டும். ஏனென்றால், அதிலே புரட்சித் தலைவியைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை; உலக அதிசயத்திலே இணை கண்டார், இதிலே இன்னும் இதுவரையில் யாரும் இருக்கிறார்களா? இல்லீங்களே. புரட்சித் தலைவி நிகருக்கு யாரும் இல்லை என்பார், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் பேசும் அத்தனை பேரும் அம்மாவுக்கு இணையாக அவர்களேதான் இருப்பார்கள். இதை நான் சொல்லவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் உங்களுடைய பேரன், பேத்தி, என்னுடைய பேரன், பேத்தி இங்கே இருக்கும் பத்திரிகைக்காரர்கள்—இங்கே இருக்கும் சட்டமன்றத்திற்கு வராத இவர்களுடைய குடும்பங்கள் எல்லாமே, இப்படி நாட்டுக்கே தன்னை அர்ப்பணித்த, ஒரு குண்டுமணி தங்கத்தைக்கூட, தான் போட்டுக்கொள்ளாமல், தமிழக மக்கள் தனக்கு ஒரு சிறப்பான ஒரு பதவியைக் கொடுத்து வைத்தார்களே என்று அத்தனையும் அர்ப்பணித்தார்களே, அவர்களுடைய காலத்திலேதான் என்னுடைய பாட்டி, சிவகாமி பாட்டி என்று ஒருத்தி இருந்தாள், அவளும் சட்டமன்றத்திலே உட்கார்ந்து அம்மாவுக்கு முன்னால் நீண்ட நாட்களாகப் பணியாற்றியிருக்கிறார் என்று சொல்வார்கள். இந்தப் பெருமை தமிழகத்திற்குச் சேரும். இப்படி ஒரு தெய்வத்தை ஈன்றெடுத்த தாய்க்கு, இப்போதுகூட நான் நன்றி சொல்கிறேன்.

அம்மாவைப்போல் இன்னொருவர் பிறக்க முடியாது. ஏனென்றால் அவருக்கு நிகர் அவர்தான். நீண்ட நாட்களாக இந்த வார்த்தையைக் கோர்த்து உலக அதிசயத்தில் இணை கண்டார் இல்லை, புரட்சித்

தலைவிக்கு நிகர் இல்லை என்பார், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னோர்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் கூறும் நல்லோர். இந்த வார்த்தை என்னுடைய சொந்த வார்த்தை. ஏனென்றால், இந்த உயிர் அம்மா கொடுத்த உயிர். இது எப்போதோ போய்விட்டு இருக்கும். அத்தனைபேருக்கும் தெரியும். அவர் கொடுத்த உயிர். அவருக்காக தியாகம் பண்ணுகிறேன். அவருக்காக வாழ்கிறேன். ஏனென்றால் இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால் – காங்கிரஸ்காரர்கள், வந்த வரலாறு தெரியும். அரசியல் என்பது புனிதமானது. யாராவது தலைவர் – தி.மு.க. தலைவர் எப்படி வந்தார்? எந்த வழியாக வந்தார்? இரயிலில் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்தாரா? இல்லை வாங்கிக்கொண்டு வரவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வந்தபோது அவரிடம் இருந்த சொத்துகள் என்ன? தேச நலனையே மனதில் வைக்காத, தன்னுடைய குடும்ப நலனை மட்டும் மனதில் வைத்த ஒரு தலைவர்.

*பிற்பகல் 12–40*

இத்தனை பேரும்--இந்தச் சட்டமன்றத்திற்கு உங்களை அனுப்பி வைத்தார்கள் மக்கள்--அன்றைக்கு ஐயா சாமி எனக்கு ஓட்டுப் போடுங்கள். நான் அதைச் செய்கிறேன், ரோடு போட்டுத் தருகிறேன், வீடு கட்டித் தருகிறேன், பட்டா வாங்கித் தருகிறேன். அதை வாங்கித் தருகிறேன் என்று சொல்லி ஓட்டு கேட்பது; ஓட்டு போட்டு முடிந்தவுடனே, தான் ஆட்சியிலே அமரவில்லை, தான் ஆட்சிக்கு வரவில்லை, majority இல்லை என்றவுடனே, சட்டமன்றமே வேண்டாம், இந்த ஆட்சியையே கவிழ்க்கவேண்டும் என்று சொல்வது. என்ன ஐயா இது?அநியாயம். (மேசையைத் தட்டும் ஒலி) எதுவாக இருந்தாலும், உங்களிடம் வெறுப்பு இருந்தாலும், விருப்பு இருந்தாலும் இங்கே வந்து சொல்லலாமே? அம்மாவிடம் நேருக்கு நேர் கேட்கலாமே? எங்களுக்கு இதைச் செய்யவேண்டும், எங்களுக்கு அதைச் செய்யுங்கள், இந்தச் சட்டமன்றம் நீண்ட நாட்கள் நடத்த வேண்டும், எதையாவது சொல்லுங்களேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினை ஆயிரம் இருக்கிறது. ஆனால், அதைச் சொல்லமுடியாமல் போய்விட்டதே என்று இருக்கிறது. மன்னிக்கத் தெரிந்த அம்மா. அவர் மாபெரும் கடல். விலைமதிக்க முடியாத சொத்தை நாம் சம்பாதித்திருக்கிறோம். ஓட்டு போட்டுத் தேர்வு செய்திருக்கிறோம். அவர் இந்த நாட்டுக்கு எவ்வளவு-- தன்னுடைய நாட்டை முன்னோடியான நாடாக, தமிழகத்தை உலகத்திலேயே ஒரு உயர்ந்த மாநிலமாகக் காட்டவேண்டும் என்பதற்காக



24 மணி நேரமும்--இயங்கும் இயந்திரமாக இருக்கிறார். அடப்பாவிகளா! நடப்பதை நினைத்தால் எவ்வளவு வேதனையாக இருக்கிறது? சரியான சொல்லுக்கு மரபு இல்லை. மரபிலே சொல்லக்கூடாது. இவர்கள் எல்லாம் நல்லெண்ண வார்த்தைகளைச் சொல்லலாம். ஆனால், இன்று ரொம்ப வேதனைப்படுகிறேன், ஒரு வாரமாக; இப்படியெல்லாம் ஓட்டுப் போட்ட மக்களுக்கு இவர்கள் துரோகம் பண்ணுகிறார்கள். ஓட்டுப் போட்ட மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று ஒரு சிறிதளவுகூட இவர்கள் உள்ளத்தில் நினைத்திருந்தால் என்னைப் போல எல்லோரும் வந்து இங்கே உட்கார்ந்திருப்பார்கள். சுயநலவாதிகள் அல்லவா அவர்கள்? ஆனால் இவர் ஆட்டி வைக்கிறார் அவர்களை. ஒன்று சொல்கிறேன். 'ஆட்டி வைக்கிறான் கண்ணன், ஆடாதேடா கண்ணா', அன்றே சொல்லிவிட்டார். மனிதர்கள் பிறக்கிறோம், வாழ்கிறோம். எப்போது வேண்டுமானாலும் சாகலாம். எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், இவன் இருக்கும் காலத்திலே இதைச் செய்தான்; புரட்சித் தலைவியினுடைய காலத்திலே இவ்வளவு சாதனைகள் நடந்தன; இந்த மக்களுக்கு நன்மை கிடைத்தது; இந்த மக்கள் விடுதலை அடைந்தார்கள்; இந்த மக்களுக்குச் சரியான பாடம் கற்பித்துக் கொடுத்தார்கள்--இவர்களுக்கு--எப்போது பாடம் கற்பிக்கப் போகிறாரோ தெரியவில்லை. யாராவது சட்டமன்றத்திலே போய் அடிதடி பண்ணிவிட்டால், 'ஆகா, ஓகோ, பேஷ், பேஷ்' என்று அவர்களைப் பாராட்டுகிறார்கள். என்ன அநியாயம்? என்ன இது, அநியாயம்?

சட்டமன்றத்திலே போய் கலாட்டா பண்ணுவதற்கு என்றே ஒரு group-ஐ அனுப்பியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றம் என்பது நாட்டினுடைய எல்லாவற்றையும் நிர்ணயிக்கக்கூடியது. நாட்டுத் திட்டங்களை வகுக்கக்கூடியது. நாட்டினுடைய நன்மை, தீமைகள் எல்லாவற்றையும் பேச வேண்டியது இந்தப் புனிதமான இடம். எத்தனை எத்தனை ஞானிகள், எத்தனை எத்தனை அறிவாளிகள், எத்தனை எத்தனை பேர் இங்கே அமர்ந்து, நாட்டு மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உரையாற்றியிருப்பார்கள்! ஏன் நீங்கள் உரையாற்றவில்லை? உங்களிடம் மடியிலே கனம் இருக்கிறது. எப்போது இந்த ஆட்சி கவிழும், அவர்களைக் கொண்டுபோய் அமைச்சரவையிலே உட்கார வைக்கலாம். அப்படி உட்கார வைத்தாலும், ஒன்றுமே செய்யமாட்டார்கள். போன முறை இவ்வளவு அநீதி பண்ணியிருக்கிறீர்கள். ஒன்றா, இரண்டா? சொல்லப்போனால் நூறு சொல்லலாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்

மரபு மாறாதவர், என்னை உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொல்லி தயவுசெய்து மணி மட்டும் அடித்துவிடாதீர்கள்; அதுதான் எனக்கு allergy. ஆனால், நல்ல சமயம் இல்லை.

அதுமாதிரி இன்றைக்கு எடுத்துக்கொண்டீர்கள் என்றால், நாட்டுக்கு இவர்கள் செய்தது ஒன்றுமே இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இவர்கள் செய்து வந்த அநீதியை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் நினைக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 42 இலட்சம் ஓட்டுகள் என்று. ஆமாம். நம்முடைய ஊரிலே, தாராபுரத்தில் பார்த்தீர்கள் என்றால் ஒரு booth-லே மட்டும் A.D.M.K. ஓட்டுகள், 740 ஓட்டுகள் இல்லை. அங்கேயெல்லாம் வயிறு, வயிறாக அடித்துக்கொண்டு, 'ஐயோ, நாங்கள் case போடுகிறோம்' என்று சொன்னார்கள். ஒரே booth-லே 740 ஓட்டுகள் இல்லை. அவர் குடும்பமே அப்படியே அலறி அடித்துக்கொண்டு, ஐயோ எங்களுக்கு ஓட்டுப் போட முடியவில்லையே, காலம் காலமாக நாங்கள் இரட்டை இலையைத் தவிர வேறு எதுவும் பார்க்காதவர்களுக்கு ஓட்டு இல்லாமல் போய்விட்டதே என்று அப்படியே கண்ணீர் விட்டுக் கதறினார் ஒரு மனிதர். அவருடைய பெயரைக்கூட நான் சொல்ல விரும்புகிறேன். கந்தசாமி என்பவர், அவர் பெயரே A.D.M.K. கந்தசாமி. அவர் அவ்வளவு வேதனைப்பட்டார். என்னிடத்திலே கண்ணீர் விட்டு அழுதார். இதையெல்லாம் செய்த, இந்தப் பாவம்; நாட்டுக்கு ஓட்டுப் போடவேண்டும், நாட்டு மக்கள் நலன் கருதி எல்லோரும் ஓட்டுப் போடவேண்டும். அந்த ஓட்டு சாதாரணமான ஓட்டு அல்ல. ஒரு ஓட்டு விலை மதிக்க முடியாதது. இப்பேர்ப்பட்ட ஒரு அநீதியைச் செய்துவிட்டு, இன்றைக்கு சாதாரணமாக ஒவ்வொன்றுக்கும் அறிக்கையினைக் கொடுப்பது; ஏன் அறிக்கையினை வெளியிலேயிருந்து கொடுக்கிறீர்கள்? காலையிலே நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; வெளியிலேயிருந்து சட்டமன்றத்தை விமர்சனம் பண்ணுகிறீர்கள்; ஏன், உள்ளே உங்களுடைய ஆட்களை அனுப்பி, அவர்கள் மூலமாக அந்தக் கேள்வியைக் கேட்கலாமே? கேட்பதற்கு உங்களுக்கு மனசு இல்லை. அம்மா அளித்த இந்த பட்ஜெட் வரியே இல்லாத பட்ஜெட் ஆச்சே! இதிலே எதையுமே எதிர்த்துக் கேட்க முடியாதே அவர்களாலே? கேட்க முடியுமா? இன்னமும் நாட்டிற்கு நல்லது செய்யவேண்டும் என்பதற்காக எத்தனையோ திட்டங்களை அம்மா அவர்கள் கொண்டு வருகிறார்கள். அருமையான திட்டத்தை நமக்கு ஒரு நிமிடத்திலே சொன்னார், ஏழையெளிய மக்களுக்காக, விவசாயிகளுக்காக முதலீட்டைப் போட்டு,



அங்கே விளைய வைத்து, அவர்கள் அதை எடுத்துக்கொண்டு, மீதியுள்ளது; இது அருமையான திட்டம். இந்தத் திட்டத்தையெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்.

பிற்பகல் 12–45

அதுமட்டுமல்ல; இன்றைக்குக் கோவில்களுக்குக் கொடுக்கும் பணத்தை மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் இன்னும் 25 ஆயிரம் ரூபாயை அதிகமாகக் கொடுத்தால் அது ரொம்ப ரொம்ப பிரயோஜனமாக இருக்கும். அதுமட்டுமல்ல; எனது தொகுதியைப் பற்றிப் பேசுகிறேன். என்னுடைய தொகுதியிலே குடிமங்கலம், மடத்துக்குளம், தாராபுரம் ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆனால், இன்னமும் 30 படுக்கைகள் கொண்ட Hospital ஒன்றுகூட இல்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டும்.

அதுபோல, என்னுடைய தொகுதியிலே வறட்சி; மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் போன நிதியாண்டிலே ரூபாய் 20 கோடியே 68 இலட்சத்தை ஒதுக்கியதற்காக, முதன்முதலாக நன்றி சொல்ல வேண்டுமென்று இருந்தேன். ஆனால், ஏதோ ஒரு ஞாபகத்திலே, எனக்குப் பேச வாய்ப்பு கிடைக்காதோ என்ற tension-ல் அதை நான் சொல்லவில்லை. மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் 20 கோடியே 68 இலட்சம் ரூபாயை தாராபுரம் நகருக்கும், ஒன்றியத்திற்கும், காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய உளமார்ந்த நன்றியை மட்டுமல்ல; என் உயிரையே காணிக்கையாக்கி நன்றியாகத் தருகிறேன். என் தொகுதியிலுள்ள அனைத்து மக்கள் சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அதேபோல, விவசாயப் பெருங்குடி மக்களுக்காக ஒரு ரோடு; நீண்ட நாட்களாகப் பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டேன். 30 இலட்சம் ரூபாய்க்கு உடனே ஏற்பாடு செய்து, போட்டுக் கொடுத்திருக்கிறார். இன்னமும் ஒரு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே முடித்துவிடுங்கள்.

**திருமதி வி. சிவகாமி:** தயவுசெய்து இந்த மணியை மட்டும் கொஞ்சம் அடிக்காதீர்கள். நானே நிறுத்திவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுவரையில் அடிக்காமல்தான் இருந்தேன். (சிரிப்பு)

**திருமதி வி. சிவகாமி:** இன்னும் 300 மீட்டர் ரோடு போடவேண்டும். அதை மட்டும் போட்டுக் கொடுத்து விடுங்கள். நான் ரொம்ப நன்றியுள்ளவளாக இருப்பேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே ஒரு check dam, ஆற்றிலே ஒரு தடுப்பணை, கட்டிக் கொடுக்க வேண்டும். நீண்ட நாட்களாக இந்தக் குடிநீர்ப் பிரச்சினை இருப்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். தமிழ்நாட்டிலே தாராபுரம்தான் குடிநீருக்கு மிக பஞ்சமான ஏரியா. எனவே, தண்ணீருக்காக check dam, தடுப்பணை ஒன்று கட்டிக் கொடுப்பீர்களேயானால், நான் நன்றியுள்ளவளாக இருப்பேன்.

அதுமட்டுமல்ல; என்னுடைய தொகுதியிலே திருமூர்த்தி அணையிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவருவதற்கு முதலில் திட்டங்கள் தயார் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைத் துரிதமாகச் செய்யவேண்டும். அமராவதி அணையிலிருந்து கொஞ்சம் தூரம்; 40 கி.மீ. தூரத்திற்குக் குழாய் பதித்தால், நேரடியாக தாராபுரம் நகருக்குத் தண்ணீர் வரும். அதையும் கொஞ்சம் கருத்தில் கொள்ளவேண்டும்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே 2 கோடி ரூபாயிலே சின்ன அணை ஒன்று, சின்னக்கரை ஓடை என்பது. நீண்டகாலமாக அது நிலுவையிலே இருக்கிறது. அந்த அணையைக் கட்டினால் நிலத்தடி நீர் ரொம்ப நன்றாக இருக்கும்.

என்னுடைய தொகுதியிலே College இல்லை. கலைக் கல்லூரியே இல்லை. 100 கி.மீ. போகவேண்டும். அதனாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்குக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும். நான் இருப்பது சில காலங்கள். அதற்குள் என்னுடைய தொகுதி மக்களுக்காக ஏதாவது செய்யவேண்டும். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் எனக்கு எவ்வளவோ செய்திருக்கிறார்கள். என்னுடைய வாழ்நாள் பூராவும் அவருக்கு நன்றியுள்ளவளாக இருப்பேன்.

இப்போது bus pass-ஐப் பார்த்தீர்கள் என்றால், 30 கிலோ மீட்டருக்குக் கொடுக்கிறீர்கள். அதை 100 கி.மீ. தூரத்திற்குக் கொடுங்கள். ஏனென்றால், அங்கேயிருந்து ஈரோடு செல்லவேண்டுமென்றாலும் 75 கி.மீ. பொள்ளாச்சி College-க்குச் செல்ல வேண்டும் என்றாலும் 65 கி.மீ.,



பழனி செல்ல வேண்டும் என்றாலும் 38 கி.மீ. எனவே bus pass-ஐ 100 கிலோ மீட்டருக்குக் கொடுத்தால் ரொம்ப உதவியாக இருக்கும். அதுவுமில்லாமல், இந்த மினி பஸ்களை அரசே எடுத்து நடத்தினால் நிறைய இலாபம் வரும் அரசுக்கு.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12-50

அதுமட்டுமல்ல, நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சியில், நம்முடைய ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு, இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பட்டா கொடுக்க வேண்டும். அந்தப் பட்டா வந்து; நகர்ப்புற மக்களைப் பொறுத்தவரை, ஒரு குடும்பத்தில் பார்த்தால் 4 பேர் இருப்பார்கள், நான்கு பேரும் ஒரே ஒரு வீட்டில் குடியிருப்பார்கள் நகரத்திலே. ஏனென்றால் அவர்கள் வெளியிலே போக முடியாது. அவர்கள் outer-இல் வந்து, கிராமத்திலே கொடுத்தால்கூட, போவதற்கு ரெடியாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்சம் என்னுடைய தொகுதியிலே இந்த நடப்பு நிதியாண்டிலே ஒரு ஆயிரம் பேருக்காவது பட்டா கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, என்னுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த காலத்திலே குடிநீர்ப் பிரச்சினைக்காக வறட்சி நிதியிலேயிருந்து என்னுடைய தொகுதியான தாராபுரத்திற்கு நிறைய fund கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் எங்கள் ஊரில் வறட்சி இருந்தது. ஆனால் வறுமை இல்லை. எல்லாமே சரியானபடி நடந்தது. ஆங்காங்கே குழாய்களைப் போட்டு சின்டெக்ஸ் டாங்குகளை வைத்து மக்களுக்காக என்றும் மாறாத வண்ணம் தண்ணீர் வழங்கினார்கள். எத்தனையோ தி.மு.க.காரர்கள் தூண்டிவிட்டார்கள். உண்ணாவிரதம் இருங்கள், போராட்டம் பண்ணுங்கள், அது கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் மக்கள், நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் பற்றி எங்களுக்குத் தெரியும், காவிரி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் வேலைகள் முடிந்துவிடும், நீங்கள் போராட்டம் பண்ணச் சொன்னாலும் நாங்கள் பண்ண மாட்டோம் என்று அடித்துக் கூறினார்கள். அந்த மக்களுக்கு நன்றிக் கடனாக நான் ஏதாவது ஒன்று செய்ய வேண்டும். அதனால், நீங்கள், நான் சொன்ன அத்தனை கோரிக்கைகளையும் குறித்து வைத்துக்கொண்டு எனக்காக

நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வாழ்நாளிலே அம்மாவை நிச்சயம் மறக்க மாட்டேன். மறக்கிறதா? நான் என் உயிர், உடல், ஆவி அத்தனையையும் அம்மாவுக்காக அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் ஒருத்தர் சொல்லுவார். இது மாதிரி நான் ஒரு பக்கம் போய் இருந்தேன். அங்கே ஒருவரைப் பார்த்தேன், கேட்டேன், சொன்னேன், என்பார்கள், அந்த நிலை இல்லை, சொல்லவும் வேண்டாம், கேட்கவும் வேண்டாம், ஒருத்தரைப் பார்த்தாலே அம்மா செய்கின்ற நிலையிலே இருக்கிறார்கள். தட்டுங்கள் திறக்கப்படும் என்பார்கள், தட்டாமலே எனக்குக் கொடுத்தார்கள், கேளுங்கள் கொடுக்கப்படும் என்பார்கள், கேட்காமலே அம்மா எனக்குச் செய்தார்கள். காணவில்லை, தேடுங்கள் கண்டடைவீர்கள் என்பார்கள், நான் தேடாமலே எனக்கு எல்லாவற்றையும் செய்த தெய்வத்தை நான் மறக்கமாட்டேன்; என் தொகுதிவாழ் மக்களும் மறக்கமாட்டார்கள். இந்த அரிய வாய்ப்பை எனக்கு அளித்த முன்னவர், பேரவைத் தலைவர் – நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் காலையிலே மன்றாடினேன், ஐயா எனக்குக் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும், கண்டிப்பாக இந்த வாய்ப்பை அளிக்க வேண்டும் என்றேன். மூவேந்தர் வழி வந்த மன்னவனே எனக்கு இந்த வாய்ப்பைத் தர வேண்டுமென்று நான் கேட்டேன். (சிரிப்பு) பொன்னியின் செல்வனே எனக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். (சிரிப்பு) நிச்சயமாகக் கொடுத்துவிட்டார். நான் மறக்கவே மாட்டேன். நிச்சயமாக இந்த நாளை என் வாழ்நாளில் மறக்கமாட்டேன் என்று கூறி எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்த உங்களுக்கு என்றைக்கும் நன்றிக் கடனாக இருப்பேன் என்று கூறி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் சிறப்புக் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை முதலில் வணங்கி எனது பதிலுரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பொருளாதாரத்தில், கல்வியில் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்கள், தலைநிமிர்ந்து நடக்க,





மாற்றார் வியக்கும் வண்ணம், போற்றும் வண்ணம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வாழ, வழிவகை கண்ட புரட்சித் தலைவி எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள்.

2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் எண்ணிக்கை 1.22 கோடியாகும். அம்மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் 974 ஆரம்பப் பள்ளிகளும், 193 நடுநிலைப் பள்ளிகளும், 59 உயர்நிலைப் பள்ளிகளும் மற்றும் 69 மேல்நிலைப் பள்ளிகளும், ஆக மொத்தம் 1295 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் 2.60 இலட்சம் மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

மேலும் இப்பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கும் மற்றும் பொதுப் பள்ளிகளில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கும் கல்வி உதவித் தொகைகள், இலவசக் குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள் மற்றும் பெண் குழந்தைகள் கல்வி ஊக்கத் தொகைகள் போன்றவற்றிற்குக் கடந்த ஆண்டில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 111.27 கோடி ஆகும். நடப்பு ஆண்டிலும் இதுபோன்று பல்வேறு உதவித் தொகைகள் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.100 கோடி ஆகும். மேலும், ஆதிதிராவிட நல விடுதிகள், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஆகியவற்றில் தங்கி கல்வி பயின்று வரும் சுமார் 1.25 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு, உணவுக் கட்டணமாக ஆண்டிற்கு ரூ.39.11 கோடி செலவிடப்படுகிறது.

பிற்பகல் 12–55

கல்லூரியுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியர்களின் உணவுக்கான கூடுதல் செலவினத்தை ஈடுசெய்யும் பொருட்டு வழங்கப்பட்டு வந்த கடன் தொகையினை, இந்தியாவிலேயே முதன்முதலாக, முழு மானியமாக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்காக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டு 6,686 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். அதேபோல், கடந்த ஆண்டும் 9,554 ஆதிதிராவிட மாணவ மாணவியர்கள் பயன் பெற்றார்கள். அதற்காக ரூ.6.45 கோடி கூடுதலாகச் செலவு செய்யப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு 1,102 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 574 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான நடவடிக்கையால் கடந்த மூன்று ஆண்டுகளில் 366 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது 208 விடுதிகள் மட்டுமே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட, இந்தியாவிலேயே முதன்முதலாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பிளஸ்-1, பிளஸ்-2 மாணவியர்களுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தில், கடந்த 3 ஆண்டுகளில் 1,54,410 சைக்கிள்கள் வழங்கினார்கள். அதற்கான செலவு ரூ.22.51 கோடியாகும். இந்த ஆண்டும் இலவச சைக்கிள்கள் தொடர்ந்து வழங்கப்படும். இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.8 கோடியாகும்.

இதுபோன்று கல்வி மேம்பாட்டிற்காகச் சிறப்பான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்ததால் கல்வியின் தரம் வெகுவாக உயர்ந்துள்ளது.

அழகு மதியினை அகன்ற வான் மறந்தாலும்
அகன்ற கரையினை அலைகடல் மறந்தாலும்
உற்ற தேகத்தை நல்லுயிர் மறந்தாலும்
உயிரை மேவிய நல்லுடல் மறந்தாலும்
கல்வி கற்க உதவிய கலைமகள் புரட்சித் தலைவியை
மாணவ மாணவியர்கள் தங்களை மறப்பதில்லை தாயே!

(மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மூன்று ஆண்டுகளில், மாண்புமிகு அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியில், வீடு இல்லாத, வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க, பேச்சுவார்த்தை மூலம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 43,715 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ.1,069.11 இலட்சம் ஆகும்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 72,960 இலவச தொகுப்பு வீடுகளும் மற்றும் 37,287 கச்சா



வீடுகளும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு உள்ளாட்சித் துறை மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டும் அதேபோல தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை, பெரும்பான்மையான ஆதிதிராவிட குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளுக்கும் மற்றும் மயானப் பாதை வசதிகளுக்கும் ரூ.544.98 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் கிருஸ்தவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால், அவரின் ஈமச்சடங்கிற்கு ரூ.500/- வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் செலவு செய்யப்பட்டது. இந்த ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட ரூ.60 இலட்சமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவு; இம்மாநிலத்தில் 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டின் பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் ஆகியவை காவல் துறை இயக்குநர் (சமூக நீதி-குற்றப் புலனாய்வுத் துறை) அவர்களின் தலைமையின்கீழ் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், 2000 ஆம் ஆண்டில் 38 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்குகளின் பதிவு எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து, 2003 ஆம் ஆண்டில் மூன்றே வழக்குகள் மட்டும் பதியப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இது தமிழ்நாட்டில் தீண்டாமை என்னும் கொடிய பழக்கம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் அறவே ஒழிக்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது எனலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இதை மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்கள் நன்கு உணரவேண்டும்.

பிற்பகல் 1–00

வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், 2000 ஆம் ஆண்டு 996 வழக்குகளும், 2001 ஆம் ஆண்டு 828 வழக்குகளும், 2002 ஆம் ஆண்டு 917

வழக்குகளும், 2003 ஆம் ஆண்டு 974 வழக்குகளும் மற்றும் நடப்பு ஆண்டில் இதுவரை 378 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில், 2003–ல் 66 வழக்குகளிலும், நடப்பாண்டில் இதுவரையில் 23 வழக்குகளிலும் நீதிமன்றங்கள் பல்வேறு தண்டனைகளை வழங்கியுள்ளன. இதில் ஆயுள் தண்டனைகளும் அடங்கும். இவ்வாறு அதிகப்படியான தண்டனைகள் வழங்கப்படுவதன் காரணமாக, சமுதாய குற்றம் புரிவோர் மனதில் ஓர் அச்ச உணர்வு ஏற்படுத்தப்பட்டு சமுதாய சீர்திருத்தத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் மற்றும் விதிகளின் சீரிய அமலாக்க நுணுக்கங்கள் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள விசாரணை அலுவலர்களான காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் 193 பேர்களுக்கும் மற்றும் மேற்பார்வை அலுவலர்களான மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் துணை ஆணையர்கள் 49 பேர்களுக்கும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்தகைய பயிற்சி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துறையின் முனைப்பான நடவடிக்கைகளின் பயனாக, விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், வீரபயங்கரம் என்னும் கிராமத்தில் உள்ள அய்யனார் கோவிலில் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த 150 ஆண்டுகளாக சாமி கும்பிட அனுமதி மறுக்கப்பட்டு வந்த்னர். கடந்த ஆண்டில் இதற்குத் தீர்வு காணப்பட்டு தற்போது மற்ற இனத்தவரோடு ஆதிதிராவிட சமுதாய இனத்தவரும் பிரச்சினையின்றி வழிபாடு செய்து வருகின்றனர். இதுபோன்று பல நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**பழங்குடியினர் நலம்:** பழங்குடியினர் மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் மைய அரசு விடுவிக்கும் நிதியை, கடந்த கால தி.மு.க. அரசு முழுமையாகச் செலவழிக்காமல் இருந்து வந்த நிலையை இவ்வரசு மாற்றி, கடந்த மூன்று ஆண்டுகளில் தேவையான திட்டங்களைச் செயல்படுத்தி மைய அரசின் நிதியை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளது.





இதன்படி, விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளிமலையில் ரூ.2.95 கோடி செலவில் பழங்குடியினர் உண்டு உறைவிட மாதிரி மேல்நிலைப் பள்ளி கட்டி முடிக்கப்பட்டு, பள்ளி இயங்கி வருகிறது. கோவை மாவட்டத்தில் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் தோலாம்பாளையம் முதல் கோபனரி வரை பழங்குடியினருக்கு நல்ல தரம் வாய்ந்த தார்ச் சாலை அமைத்துத் தரப்பட்டுள்ளது. பழங்குடியினர் வசிக்கும் பகுதியில், குடியிருப்பு வீடுகள் கட்டித் தருதல், மின்விளக்கு வசதி, மின்வேலி அமைத்தல், குடிநீர் வசதி, இணைப்புச்சாலை வசதி, பள்ளி மற்றும் விடுதி வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக மொத்தம் ரூ.6.42 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**தாட்கோ:** தாட்கோ திட்டத்தின்மூலம், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் 3,45,973 பயனாளிகள், பல்வேறு கடன் உதவித் திட்டத்தில் பயன் அடைந்துள்ளனர். இதற்காக தாட்கோ மூலம் வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ.102.93 கோடி ஆகும். கடந்த மூன்றாண்டுகளில் தாட்கோ மூலம் பயனடைந்த 3,45,973 பயனாளிகளில் 80 சதவிகிதம் பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நிலம் வாங்கும் திட்டம்:** இந்தியாவிலேயே, ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்த மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த 6,000 ஏழை ஆதிதிராவிட மற்றும் 1,000 பழங்குடியின மகளிருக்கு 50 சதவிகிதம் மானியத்தில் விவசாய நிலம் வாங்கி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரையில்47,242 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 6,825 பேர்களிடமிருந்து நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. 5,834 விண்ணப்பங்கள் வேளாண்மை அலுவலர்களின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதில், 2,814 விண்ணப்பங்கள் வேளாண்மை அலுவலர்களின் பரிந்துரையுடன் வரப்பெற்றுள்ளன. 1,399 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காகப் பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து 75 சதவிகிதம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு மின் இணைப்புப் பெற மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூ.10,000 முன் வைப்புத் தொகையை பயனாளியின் சார்பாக தாட்கோ நிறுவனமே செலுத்தும்.

கற்ற நெஞ்சங்கள் நற்கலை மறந்தாலும்

கண்களிரண்டும் நின்றிமைப்பது மறந்தாலும்

வன்மை செய்திடும் மிக வறுமை வந்தாலும்

மகிழ்வு செய் பெருவாழ்வு வந்தாலும்

வளம் கொழித்திட நிலம் தந்த வள்ளல் தாயே!

ஆதிதிராவிடர்–பழங்குடி மகளிர் மறப்பதில்லை அன்னையே!

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதற்காக, கலைக்கப்பட்ட ஆட்சி தி.மு.க. ஆட்சி. சட்டமன்றத்திற்குள்ளேயே கடந்த தி.மு.க. ஆட்சியில் என்னைக் கொல்லப் பார்த்தார்கள். இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலும், தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் சட்டமன்றத்திற்குள்ளேயே கழக உறுப்பினர்களை அடிக்க வந்தார்கள். இதிலிருந்து தி.மு.க. ஒரு "கொலைவெறிக் கட்சி" என்று எல்லோருக்கும் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், "மாறாதய்யா மாறாது கருணாநிதி குணமும் செயலும் மாறாது". மக்கள் பணியாற்ற சட்டமன்றத்திற்கு வராமல், குடும்ப மக்கள் நலன் ஒன்றையே முதன்மையாகக் கொண்டு செயல்படுபவர்கள், இனி இங்கு வரப்போவதில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் குறை ஏதுமில்லை. 2006–ல் வரும் சட்டமன்றத் தேர்தலிலும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான், இந்தக் காலியான இருக்கைகளுக்கும் சேர்த்து மக்களின் பேராதரவோடு கழக உறுப்பினர்களாக அமர்த்துவது உறுதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீர்நிலையினை நிலப்பரப்பு மறந்தாலும்

நிலைத்து வீசிடும் தென்றலை புவி உயிர் மறந்தாலும்

பருகும் அமுதினை பச்சிளம் குழவிகள் மறந்தாலும்

பச்சைப்பயிர்களை நதி நீர் மறந்தாலும்

தொழில்வளம் தந்து தமிழ்மக்கள் வாழ்வை

உயர்த்திடும் அன்னையே!

குமரி வடக்கே மாறிப்போனாலும்

இமயம் தெற்கே இடம் பெயர்ந்தாலும்



மரணம் உயிரை மாய்க்க வந்தாலும்

மறுபிறவி மீண்டும் திரும்ப வந்தாலும்

நாட்டுக்கு நல்லது செய்யும் நற்பெருந் தேவியே!

ஆதிதிராவிடர்–பழங்குடி மக்கள் தங்களை மறப்பதில்லை தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் Kashmir to Kanyakumari வரை தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை இந்த அவைக்கு பொத்தாம் பொதுவாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கலாம், உண்மையிலேயே காஷ்மீரிலிருந்து சென்னைவரைதான் ஒருவேளை அப்படி இருக்கலாம் என்று. ஆனால் நம்முடைய தமிழ்நாடு ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலேயே பல சிறப்பான திட்டங்களை முன்னோடியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றி வருவதைப் பார்த்துத்தான் மற்ற மாநில முதலமைச்சர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய வழியைப் பின்பற்றுகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் அம்பேத்கர் விருது 3 ஆண்டுகளாக இன்னும் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். அம்பேத்கர் விருது வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்ததே நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது 1995 ஆம் ஆண்டு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம்; 2001 ஆம் ஆண்டுக்கான விருது திரு. வை. பாலசுந்தரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. 2002, 2003 ஆம் ஆண்டுகளுக்கான விருது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான குழுவின் பரிசீலனையில் உள்ளது. அதுவும் 2002 ஆம் ஆண்டுக்கான அந்த விருது வேலூர் மாவட்டத்திற்கும், 2003 ஆம் ஆண்டுக்கான விருது கரூர் மாவட்டத்திற்கும் வழங்குவதற்கு ஆய்வில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

அவர்கள் தலைமையில் இயங்கும் குழுவின் பரிசீலனையில் உள்ளது என்பதை மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நடப்பு ஆண்டில் புதிய திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ள புதிய அறிவிப்புகளை இங்கே அறிவிக்கின்றேன்.

ரூ.8.15 இலட்சம் செலவில் 10 அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

ரூ.24.65 இலட்சம் செலவில் ஒரு அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.

ரூ.29.92 இலட்சம் செலவில் ஒரு அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.

ரூ.4.08 இலட்சம் செலவில் 5 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

ரூ.24.65 இலட்சம் செலவில் ஒரு அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.

ரூ.29.92 இலட்சம் செலவில் ஒரு அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.

*பிற்பகல் 1-10*

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 100 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர் விடுதிகளுக்கு நடப்பாண்டில் ரூ. 31.50 கோடி செலவில். கட்டடங்கள், 'தாட்கோ' மூலம் கட்டித் தரப்படும்.

ரூ.99 இலட்சம் செலவில், அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதலாக 30 வகுப்பறைகள் கட்டப்படும்.

ரூ.7.50 இலட்சம் செலவில், 25 ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும்.



ரூ.17.50 இலட்சம் செலவில், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 500 மாணவர்களுக்கு அறைகலன்கள் வசதி செய்து தரப்படும்.

ரூ.11.87 இலட்சம் செலவில், 5 ஆதிதிராவிட நல மாணவியர் விடுதிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

ரூ.9.44 இலட்சம் செலவில், 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு இருக்கையுடன்கூடிய சாய்வு மேசைகள் வழங்கப்படும்.

ரூ.50 இலட்சம் செலவில், 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு, அறிவியல் ஆய்வுக் கூடக் கட்டடங்கள் கட்டப்படும்.

ரூ.3 இலட்சம் செலவில், மின் ஆளுகைக்காக, தலைமைச் செயலக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குக் கணினிகள் வழங்கப்படும்.

ரூ.18 இலட்சம் செலவில், மின் ஆளுகைக்காகத் துணைக் கருவிகளுடன் கூடிய 30 கணினிகள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களுக்கு வழங்கப்படும்.

ரூ.1.20 இலட்சம் செலவில் பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு 2 கணினிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் மற்றும் இந்த மானியக் கோரிக்கையில் பங்குகொண்டும், நல்ல பல கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்களது கருத்துகளை, மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, தாயுள்ளத்தோடு கவனத்தில்கொள்ளும் என உறுதியளிக்கிறேன். என்னுடைய இந்த பதிலுரை, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்கும் என நம்புகிறேன். எனவே, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு வேண்டி அமர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குலம் தழைக்க வந்த குங்குமத் தாமரையே! இந்த நிலம் செழிக்க வந்த ஆகாய கங்கையே! எங்கள் நலம் காக்க வந்த தமிழர் தவப் பயனே! இருண்ட இதழ்களிலும் புன்னகை கிரணங்களைப் பூக்க வைக்க வந்த பொன் பொழுதே! அம்மா! உங்கள் திருவடிகளை வணங்கி, என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

உலகத்து உயிர்கள் எல்லாம் தாயில் தொடங்கும்; தீயில் அடங்கும். ஆனால், ஓர் உண்மையான போராளியை, அவனுடைய போராட்டத்தை தீ கூட அடக்கிவிட முடியாது. ஒரு போராளிக்குத் தோல்வி என்பதே கிடையாது. மரணம் கூட அவனைத் தோற்கடித்துவிட முடியாது. ஏனென்றால், அவன் புதைக்கப்படுவதில்லை; விதைக்கப்படுகிறான். இத்தாலியின் மாஜினி சொல்வான்: "ஒரு கோழையின் வாழ்வைவிட, ஒரு வீரனின் கல்லறை ஜீவ களையோடு விளங்குகிறது" என்று. ஒரு போரில் எத்தனையோ களங்கள் உண்டு. எத்தனையோ முனைகள் உண்டு. ஒரு களத்தின் வெற்றி, தோல்வி என்பது மட்டுமே, ஒரு போரின் முடிவைத் தீர்மானித்துவிட முடியாது. பல் முளைக்கும் முன்பே, பிள்ளையின் கையில் வில் முளைக்கும் வித்தை தந்த இந்த வீர மண்ணின் வீரப் பெண், எங்கள் அம்மா. தோல்வியின் நிழல்கூட எங்கள் அம்மாவைத் தொட்டுவிட முடியாது. ஒரே ஒரு தேர்தலில் கிடைத்த வெற்றியால், வெற்றி தந்த போதையால், "கள் குடித்த மந்தி"–யாகச் சிலர் திரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை என்ன? Operation success, patient out தானே? Operation success, patient out தான். அவர்கள் Operation–ல் நோயாளியைப் பிழைக்க வைக்க முடிந்ததா? நினைத்ததை நிறைவேற்ற முடிந்ததா? துணி மூட்டை சுமந்தாலும், கழுதை உடுக்கத் துணியில்லாமல்தான் அலைந்து கொண்டிருக்கிறது. எங்கள் அம்மா, யார் வரக்கூடாது என்று சொன்னாரோ, அவர் வரவில்லை; வரவும் முடியவில்லை. எதைப் பற்றியும் கவலைப்படாமல், யாரைப் பற்றியும் யோசிக்காமல் அனைத்து இந்தியாவிலும், முதன்முதலாக ஒரு கொள்கையை ஓங்கியடித்து, உரத்த குரலில் முழங்கி, அதில் வெற்றியும் பெற்றவர் எங்கள் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் அம்மா, குழி முயல் அல்ல, குள்ள நரிகள் சீண்டிப் பார்க்க. அவர் ஒரு குகைச் சிங்கம். எங்கள் அம்மா, யாரோ கட்டிவைத்த கப்பலில் தன்னை ஏற்றிக்கொள்ள மாட்டார்களா என்று ஏங்கித் தவிப்பவர் அல்லர். தன்னந்தனியே தண்ணீரில் குதித்து, கடலின் அலைகளைக்



கைகளால் கிழித்து, கரையைத் தம் கரங்களால் வென்றிடும் வல்லமை மிக்கவர். அவருடைய உயரத்தை எந்தக் குள்ள மனிதர்களின் கூட்டமும் குறைத்துவிட முடியாது. உள்ளத்திற்கு வலி எடுக்கும்போது எங்கள் அம்மா கொஞ்சம் உட்கார்ந்துகொள்வாரே தவிர; உள்ளத்திற்கு வலி எடுக்கும்போது கொஞ்சம் எங்கள் அம்மா உட்கார்ந்து கொள்வாரே தவிர; கால்களுக்கு வலி எடுக்கும்போது எங்கள் அம்மா என்றைக்குமே களைப்பாறியதில்லை. மடி நிறைய மலர்களை அள்ளிக் கொண்டுவரும் வைகறை போல, குங்குமக் கன்னத்தில் குழி விழச் சிரித்தபடி வரும் எங்கள் அம்மாவின் உதயத்தை எந்த இருட்டும் தடுத்துவிட முடியாது.

பிற்பகல் 1–15

இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சோகமாக கும்பகோணம் தீ விபத்து நடந்தது. கருகிய உடல்களைப் பார்த்து உருகிப்போய், நொறுங்கிப் போனார் எங்கள் அம்மா. கருகிக் கிடந்த உடல்களைப் பார்த்துவிட்டு கலங்கிப் போய் அழுதார்கள் எங்கள் அம்மா. கண்ணீரும் தாய்ப் பாலும் கடைகளில் கிடைக்காது; கண்ணீரும் தாய்ப் பாலும் கடைகளில் கிடைக்காது. அழுத கண்ணீரின் அடர்த்தியை ஒரு தாய் மனம் மட்டுமே அறிய முடியும். நான் வாழ்க்கையில் இரண்டே முறைதான் அழுது இருக்கிறேன். ஒன்று என் தாய் இறந்தபோது. இன்னொன்று என் தலைவர், புரட்சித் தலைவர் இறந்தபோது என்று எங்கள் அம்மா சொல்லி இருக்கிறார். அந்த அம்மா வாழ்க்கையிலே மூன்றாவது முறை அழுதது கும்பகோணத்தில், குமுறிக் குமுறி அழுத காட்சிதான். யாரை இந்தியாவின் "இரும்புப் பெண்மணி" என்று பத்திரிகைகள் எழுதினவோ, அந்தத் தாய் அன்றைக்கு கலங்கிக் கலங்கி அழுதார். இறந்தால் புதைப்பார்கள் அல்லது எரிப்பார்கள். ஆனால் அந்தக் குழந்தைகள் எரிந்ததால் புதைக்கப்பட்டார்கள். அந்தக் கொடுமையை எண்ணி எண்ணி எங்கள் தாய் கலங்கினார். ஆனால், அதிலும் அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். திருமண வீடானாலும், துக்க வீடானாலும், குடும்பத்தோடுதான் போவார்கள். ஆனால், இவர்கள் தனித் தனியாகப் போய், சாவிலும்கூட விளம்பரம் தேடிக்கொள்ளப் பார்க்கிறார்கள். அதிலும் ஒருவர் அராஜகத்தின் ஆணிவேர்; ஜனநாயகத்தின் சவப்பெட்டி. அந்தத் தலைவர் சாவகாசமாக, ரொம்ப சாவகாசமாக, மறக்க நினைக்கும் துயரத்தை கிண்டிக் கிளறும் வகையில், ஒரு வாரம் கழித்து தனித் தனியே அழுதுகொண்டிருந்தவர்களை கூட்டமாகக் கூட்டி அழச் செய்து, அவர்களோடு சேர்ந்து அஞ்சு சொட்டுக் கண்ணீரைச் சிந்திவிட்டு – .5 சொட்டு கண்ணீரைச் சிந்திவிட்டு – அரைப்படி இரத்தம் குடிக்கத்

துடிக்கிறார். இப்படிப்பட்ட இரத்தக் காட்டேரிகளை, பிணம் தின்னி அரசியல்வாதிகளை அவர்களின் முகமூடிகளை எங்கள் அம்மா கிழித்துக் காட்டுவார். (மேசையைத் தட்டும் ஒலி).

எங்கள் அம்மா ஆட்சிக் கால சாதனைகள் மிகப் பெரிய சமூகச் சீர்திருத்தங்கள் என்று வரலாறு சொல்லத்தான் போகிறது. சமூக நலத் துறை என்பது மனித நேயமிக்க துறை. இந்தத் துறையிலே பெண்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள், உடல் ஊனமுற்றோர், சிறு வயதிலேயே தவறு இழைக்கப்பட்டிருக்கக்கூடிய சிறார்கள், மகளிர் ஆகிய இவர்களை எல்லாம் ஒருங்கிணைத்து அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு மனித நேயமிக்க துறை சமூக நலத் துறை. இந்தச் சமூக நலத் துறையில் எங்கள் அம்மா அவர்கள் புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் அறிவித்து, இன்றைக்கு அவையெல்லாம் செயல்படக்கூடிய சூழ்நிலையிலே, மக்கள் பாராட்டுகின்ற நிலையிலே உருவாகி இருக்கின்றன. பெத்தவள் இரத்தம் சிந்தாமல் பிறப்பதில்லை 10 மாத தாமரை. பெத்தவள் இரத்தம் சிந்தாமல் பிறப்பது இல்லை 10 மாத தாமரை. அந்தத் தாயின் பெயரைக் குழந்தையின் தலைப்பெழுத்தாக்கிய தாய் எங்கள் அம்மா. மசக்கை இல்லாமல், மாவடு தின்னாமல், தெருக் குப்பைத் தொட்டிகள் எல்லாம் குழந்தைகளைப் பெற்ற அந்தக் கொடுமைக்கு முடிவு கட்டியது எங்கள் அம்மா கொண்டுவந்த தொட்டில் குழந்தைத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே"— என்று புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்கள் ஒரு பாடல் காட்சியிலே பாடிக் காட்டுவார். பிறந்த குழந்தைகள் யாவருமே இந்த நாட்டிலே வளருவதற்கும் வாழ்வதற்கும் உரிமை இருக்கிறது. அந்தச் சீரிய நோக்கத்திலே எங்கள் அம்மா கொண்டுவந்த திட்டம்தான் தொட்டில் குழந்தைத் திட்டம். எங்கள் அம்மா கொண்டுவந்த தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலமாக இதுவரை 1,061 குழந்தைகள் தொட்டிலிலே கிடத்தப் பெற்றிருக்கிறார்கள். அதிலே ஆண் குழந்தைகள் 70, பெண் குழந்தைகள் 991; 10 நிறுவனங்கள் மூலம் 984 குழந்தைகளும், பெற்றோர் வசம் 66 குழந்தைகளும் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறார்கள். தத்துத் திட்டத்தின்கீழ் உள்நாட்டிலே தத்துக் கொடுக்க 21 நிறுவனங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. அதில் 9 நிறுவனங்களுக்கு வெளிநாட்டிலே தத்துக் கொடுக்கக்கூடிய உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் குழந்தைகளைப் பெற்றுச் செல்லக்கூடிய தொண்டு



நிறுவனங்கள் மிகச் சிறப்பான முறையிலே அந்தக் குழந்தைகளைக் கவனித்துக்கொள்கிறார்களா என்பதுபற்றி சமூக நலத் துறை, அந்தப் பிள்ளைகளின் வளர்ச்சி குறித்துத் தொண்டு நிறுவனங்களிடத்திலே ஆய்வு செய்து அவர்களுடைய அறிக்கையைப் பெற்று, ஏதாவது குறை இருக்குமேயானால், அந்தத் தத்து நிறுவனங்களை, அரசாங்கத்திலே ஒப்புதல் கொடுத்திருக்கிற தத்து நிறுவனங்களைத் தடை செய்வதற்கும் சமூக நலத் துறை தயாராக இருக்கிறது என்பதை ஏற்கெனவே எச்சரிக்கையாகத் தெரிவித்திருக்கிறோம். இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலமாகப் பெறப்பட்டிருக்கக்கூடிய குழந்தைகள் இன்றைக்கு வெளிநாட்டிலேயும், உள்நாட்டிலேயும் மிகச் சிறப்பான முறையிலே வளர்க்கப்பட்டு வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–20

அடுத்து, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம். இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தின் சிறப்பைப் பற்றி மிகச் சிறப்பாகச் சொன்னார்கள். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஊக்கம் அளிப்பதற்காகவும், பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காகவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக்கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்துவதற்காகவும், பெண்கள் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்ற நிலையை ஊக்குவிப்பதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் 1992–லே இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை 2001–2004 வரை 73,389 பேர் பயனடைந்து இருக்கிறார்கள். இதற்காக 38 கோடியே 66 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, 1993 ஆம் ஆண்டு எங்கள் அம்மா அவர்கள் 15 அம்சத் திட்டத்தை அறிவித்தார்கள். அதற்குப் பிறகு, மீண்டும் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, கடந்த ஆட்சிக் காலத்திலே கிடப்பிலே போடப்பட்ட அந்தத் திட்டத்திற்குப் புத்துயிர் கொடுத்து 18 அம்சத் திட்டம் என்று ஆக்கி, 2010–க்குள்ளாக இந்த 18 அம்சத் திட்டம், சமூக நலத் துறை, உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, சுகாதாரத் துறை, உள் துறை, தொழிலாளர் நலத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, திருமண நிதி உதவித் திட்டங்கள். இந்தத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்திலே 7,000/– ரூபாய் தரப்பட வேண்டுமென்று வகுக்கப்பட்டிருந்தது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, அதை ஆய்வு செய்து ரூ.7,000/– என்பதை ரூ.10,000/–ஆகத் தரவேண்டுமென்று உத்தரவிட்டு கடந்த மூன்று ஆண்டு காலத்திலே மட்டும் 8,342 பேர் பயனடைந்திருக்கிறார்கள். ரூபாய் 11 கோடியே 4 இலட்சத்து 93 ஆயிரம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, இலவச தையல் இயந்திரம். கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள், வாழ்வதற்கே வழியில்லாமல் இருக்கக்கூடிய பெண்களுக்குத் தையல் மிஷின் வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டு 2001–2004 வரை 21,665 நபர்கள் பயன்பெறுகிற வகையில் 4 கோடியே 30 இலட்சத்து 89 ஆயிரம் செலவில் இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்து, அரசு குழந்தைகள் காப்பகத்திலே படிக்கக்கூடியவர்கள், பிளஸ்–1, பிளஸ்–2 படிக்கக்கூடிய மாணவிகள், ஆதிதிராவிடப் பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதைப்போல எங்களுக்கும் சைக்கிள் வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். அதன் அடிப்படையிலே அம்மா அவர்கள் உத்தரவிட்டு இப்போது பிளஸ்–1, பிளஸ்–2 படிக்கக்கூடிய மாணவிகள் காப்பகத்திலே தங்கிவிட்டு, வெளிப் பள்ளியிலே படிப்பதற்கு சைக்கிளிலேயே சென்று கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலக்கூடிய பெண் குழந்தைகளுக்கு சுடிதார் வாங்க வேண்டும் என்று கேட்டார்கள். அம்மா அவர்கள் சுடிதார் வேண்டாம், சல்வார் கமீஸ் தருகிறேன் என்று சொல்லி அந்தச் சல்வார் கமீஸ் வாங்குவதற்கு ரூ.300/–ஆக இருந்த பணத்தை ரூ.400/–ஆகவும், 8 ஆம் வகுப்பிற்கு மேல் படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு ரூ.400–லிருந்து ரூ.500/–ஆகவும் உயர்த்தி வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, உணவீட்டுச் செலவினம் ரூ.200/–லிருந்து ரூ.225/–ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.



அடுத்து நாட்டின் மூத்த குடிமக்கள், முதியவர்கள்; இவர்களை இல்லங்களில் பராமரிக்கிறபோது அவர்களுக்கு உணவீட்டுச் செலவினமாக ரூ.250/– வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரே வீச்சிலே ரூ.250/–ஐ ரூ.500/–ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, இன்றைக்குக் காப்பகங்களிலே தங்கி இருக்கக்கூடிய முதியோர்களுக்கு ரூ.500/– வழங்கப்பட்டு, பயன்பெற்று வருகிறார்கள்.

பிற்பகல் 1–25

அடுத்து, ஊட்டச் சத்து; ஊட்டச் சத்து என்று சொல்கிறபோது, நான் இந்து பத்திரிகையிலே ஜூலை 25, 2004–ல் வந்ததைச் சொல்கிறேன். மராட்டிய மாநிலத்திலே ஊட்டச் சத்து குறைவான ஒரு குழந்தையின் புகைப்படத்தை அந்தப் பத்திரிகையின் முதல் பக்கத்திலேயே வெளியிட்டிருந்தார்கள். ஊட்டச் சத்து என்பது ஒரு குழந்தைக்கு அவசியம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அவசியம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் உணர்ந்து, பல்வேறு திட்டங்களைச் சீர்திருத்தி ஊட்டச் சத்து மிக்க உணவை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையிலே இன்றைக்கு அங்கன்வாடி பள்ளியிலே படிக்கக்கூடிய குழந்தைகளுக்கும், பள்ளிக்கூடங்களிலே படிக்கக்கூடிய மாணவ மாணவியர்களுக்கும் சத்தான உணவு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரையின்படி 37 மாதங்கள் முதல் 60 மாதங்கள் முடிய உள்ள குழந்தைகளுக்கு சத்துணவிலே கறிவேப்பிலை பவுடர், முருங்கைக்கீரை பவுடர் நாள் ஒன்றுக்கு, ஒரு பயனாளிக்கு, 2 கிராம் வீதம் 5 நாட்கள் சேர்த்து வழங்குவதற்கு உத்தரவிட்டு இந்தத் திட்டம் 12–11–2003 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதனை, குழந்தைகள் சத்துணவிலேயே சேர்த்து உண்ணும்போது Vitamin-A அதிகமாகக் கிடைக்கிறது. இப்பொருட்களில் உள்ள Beta Carotene Vitamin-A–ஆக மாறி, உடலுக்குத் தேவையான சத்தினை அளிக்கிறது. இந்த பவுடர் தயாரிக்கக்கூடிய பொறுப்பை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதன்மூலம் இந்தப் பொடியினைத் தயார் செய்து குழந்தைகளுக்கு வழங்குவதற்கு, உத்தரவிட்ட காரணத்தினால் பொருளாதாரத்திலே சிறந்து விளங்கக்கூடிய சூழ்நிலையை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உருவாக்கித் தந்து இருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் 35,000 பேர் பயன் அடைந்து இருக்கிறார்கள். 22 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், Rubella நோயானது மூன்று வருடத்திற்கு ஒருமுறை, இந்திய துணைக் கண்டத்திலே அதிக அளவில் ஏற்படுகிறது என்று தெரிவிக்கிறது. இந்த நோய் தாக்கப்படும் கர்ப்பிணிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளில் 40 சதவீதம் அளவிற்கு காது கேட்காமல் பாதிக்கப்படுகிறார்கள் என்று, பல்வேறு ஊனங்கள் குழந்தைப் பருவத்திலேயே ஏற்படுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டு இருக்கிற அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறது. இதைக் கருத்திலேகொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், 10 வயது முதல் 15 வயது வரை உள்ள வளரிளம் பெண்களுக்கு Rubella தடுப்பூசி, 24 முதல் 60 மாத குழந்தைகளுக்கு தட்டம்மை, புட்டாலம்மை Rubella தடுப்பூசியும் போடப்படவேண்டுமென்று உத்தரவிட்டு அதன்படி இன்றைக்கு Rubella நோய் தாக்கம் இன்றி ஆரோக்கியமாக இன்றைக்கு வளரிளம் பெண்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக 25 ஆயிரம் குழந்தைகள் தட்டம்மை, புட்டாலம்மை Rubella தடுப்பூசி மூலமும் 22,500 வளரிளம் பெண்கள் Rubella தடுப்பூசி மூலமும் பயன் பெற்று இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு ரூ. 24.75 இலட்சம் உலக வங்கி நிதியிலிருந்து செயல்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் சத்துணவுத் திட்டத்தை சிறுவர் சிறுமியர், நடுநிலைப் பள்ளி மாணவர்கள் பயன்பெறத் தக்க வகையிலே 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அண்ணாவின் பிறந்த நாளின்போது அறிவித்தார்கள். இந்தத் திட்டம் 1984–ல் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இந்தச் சத்துணவுத் திட்டத்தை காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவர்கள், இந்த மதிய உணவுத் திட்டம் என்பது ஏதோ அவர்கள் காலத்திலே போடப்பட்ட திட்டம் என்றும், தங்களுக்குத்தான் சொந்தம் என்ற முறையிலேயும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே, இந்த அவையிலேயும், வெளியிலேயும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலக் கட்டத்தில், 1921 முதல் 1924 வரை உள்ள காலங்களில், அப்போதைய நீதிக் கட்சியினால் ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கின்ற நடைமுறை மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டுச் செயலாக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாகச் செல்வந்தர்களால் ஆங்காங்கே சிற்சில இல்லங்களில் ஏழைப் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. 1950–க்குப் பிறகு ஆதிதிராவிட நலப் பள்ளிகளுக்கும், சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த பள்ளிகளுக்கும் இந்தத் திட்டம்



விரிவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தது. மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் 1956 ஆம் ஆண்டு முதல் தேர்வு செய்யப்பட்ட சில பள்ளிகளிலே மட்டும் அரசின் செலவினம் இல்லாமல் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1957 ஆம் ஆண்டு அரசு மானியத்துடன் இந்தத் திட்டம் மேலும் கொஞ்சம் விரிவாக்கப்பட்டது. அப்போது ஒரு மாணவனுக்கான உணவிற்கான செலவு வெறும் 10 பைசாதான். அதிலே 6 பைசா அரசு மானியம்; 2 பைசா சம்பந்தப்பட்ட ஊராட்சி நிதி; 2 பைசா செல்வந்தர்கள் மற்றும் பொதுமக்களிடம் திரட்டப்பட்டது.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அந்த நேரத்தில் வெறும் 8,270 மையங்களிலே மட்டும்தான் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளிலும், சென்னை மாநகராட்சியைச் சார்ந்த 293 பள்ளிகளிலும் மட்டுமே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, 1961–லே CARE என்கிற நிறுவனத்தின் மூலமாக ஊக்குவிக்கப்பட்டு, கோதுமை, சோயா எண்ணெய், பால் மாவு முதலான உணவுப் பொருட்கள் அந்த CARE நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்தன. இந்தத் திட்டத்தை இன்றைக்கு முழுக்க முழுக்க அரசின் திட்டமாக மாற்றிய பெருமை எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவுத் திட்டத்தை மேலும் சத்துள்ளதாக ஆக்குவதற்கு வாரம் ஒருமுறை வேகவைத்த முட்டை வழங்கக்கூடிய திட்டத்தை கடந்த மே மாதம் அறிவித்து, 28 ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2 வயது முதல் 15 வயதிற்குட்பட்ட பள்ளிக் குழந்தைகள், அங்கன்வாடி மையக் குழந்தைகள் மொத்தப் பயனாளிகளாக 74 இலட்சம் பேர் பயன்பெற்று வருகிறார்கள். வாரத்தில் திங்கட்கிழமை உருளைக்கிழங்கு, செவ்வாய்க்கிழமை பச்சைப் பயறு அல்லது கொண்டைக் கடலை, வியாழக்கிழமை வேகவைத்த முட்டை என்று ஒவ்வொரு பயனாளிக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பழுதடைந்த சத்துணவுக் கூடங்களைப் பழுது நீக்குவதற்கு 25 கோடி ரூபாயும், பள்ளிச் சத்துணவுக் கூடங்களுக்கு Eversilver தட்டு, Tumbler வாங்க 1 கோடி ரூபாயும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு அந்தப் பணம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அனைவருக்கும் கல்வி என்னும் திட்டத்தின்கீழ் ரூபாய் 3 கோடியே 7 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 15 இலட்சம் வீதம் அனைத்து மாவட்டங்களிலும் 2 கட்டங்களாக ஆரம்ப நிலையில் மழலையர் நலம் மற்றும் கல்வி நிலையை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்து ஊனமுற்றோர் நலன்; சமுதாயத்தில் ஊனமுற்றோர்மீது அனைவரும் அன்பு செலுத்தவேண்டும் என்பதில் அம்மா அவர்கள் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வருகிறார்கள். சமுதாயத்தில் பிறர் போலவே அவர்களும் சிறப்பாகத் தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொள்ள வழிவகுப்பதே அரசின் முக்கிய நோக்கம். ஊனமுற்றோருக்கென்று தனியாக ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககத்தை 1992–93 இல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தி, மிகச் சிறப்பான முறையிலே அந்த இயக்ககம் செயல்பட்டு வருகிறது. ஊனமுற்றோருக்கு சம வாய்ப்பு அளிக்க, அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்க, 1995–ல் ஊனமுற்றோருக்கான சட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநரை மாநில ஆணையாளராக நியமித்து, திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஊனமுற்றோர்மீது எங்கள் அம்மா அவர்கள் எப்போதுமே பரிவோடும், பாசத்தோடும் நடந்து கொள்பவர். முதலமைச்சர் நிவாரண நிதியிலே இருந்து பல்வேறு நலத் திட்டங்களை, உதவிகளைச் செய்கிறபோதுகூட ஊனமுற்றோரைத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலே இருந்து கண்டறிந்து, தன்னுடைய இல்லத்திற்கே அல்லது தன்னுடைய அறைக்கே வரவழைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும், உபகரணங்களையும் வழங்குவதில் இந்தியாவிற்கே முன்னோடியாக இருக்கக்கூடியவர், முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)





எங்கள் அம்மா அவர்கள் திருச்சிக்குச் சென்றிருந்தபோது இரண்டடி உயரம் உள்ள ஒரு பெண்ணைச் சந்தித்து, அந்தப் பெண் வேலைவாய்ப்பின்றிச் சிரமப்படுகிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு, அந்தப் பெண்ணுக்கு, அறிவுக் கண் என்ற பெண்ணுக்கு, அங்கு நடைபெற்ற விழாவிலேயே உடல் ஊனமுற்றோர் துறையிலே கணக்காளராக வேலை தரவேண்டுமென்று உத்தரவிட்டு, அந்தப் பெண்ணும் இன்றைக்குப் பணியாற்றக்கூடிய மிகப் பெரிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் அந்தப் பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். 9.93 இலட்சம் ரூபாய் செலவிலே 122 கை, கால் ஊனமுற்றோர், செவித்திறன் குறைபாடுடையோர் மற்றும் பார்வையற்றோருக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 10.06 இலட்சம் ரூபாய் செலவில் 60 கை, கால் ஊனமுற்றோர் மற்றும் செவித்திறன் குறைபாடுடையோருக்கு ஆய்வுக்கூடத் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. 8.16 இலட்சம் ரூபாய் செலவில் 32 கை, கால் ஊனமுற்றோர், காது கேளாத பெண்களுக்கு அழகுக் கலையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில் மன வளர்ச்சி குன்றியோருக்கான 2 பகல் நேர பராமரிப்பு மையங்கள் ரூ. 10 இலட்சம் நிதியுதவியுடன் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. சிறப்புப் பள்ளிகளில், விடுதிகளில் தங்கிப் பயிலும் ஊனமுற்ற மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவீட்டு மானியம் ரூ.200/–லிருந்து ரூ.225/–ஆக உயர்த்தப்பட்டது. இதற்கென 126.42 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 6,321 ஊனமுற்ற மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். தனியார் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 10,060 ஊனமுற்ற மாணவர்களுக்குத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் 8.53 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 1–35

ஊனமுற்றோருக்குக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோரின் எண்ணிக்கை 13,700–லிருந்து 15,000 ஆக உயர்த்தப்பட்டு, 117.20 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பார்வையற்ற மாணவர்களுக்குத் தக்க

வகையில் பாடங்களை வாசித்துக் காண்பிப்போருக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வருடத்திற்கு 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும், 750 ரூபாயிலிருந்து 1,250 ரூபாயாகவும், 1000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் மாண்புமிகு அம்மா அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்குத் தடையற்ற சுற்றுச்சூழலை ஏற்படுத்தும்வண்ணம், தலைமைச் செயலகத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் சாய்வு தளமும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மாவட்டத்திற்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 45 இலட்சம் ரூபாய் செலவில் சாய்வு தளங்களும் அமைக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

செவித்திறன் குறையுடையோரைத் திருமணம் செய்யும் நல்ல நிலையிலே உள்ளவர்களுக்கு, திருமண ஊக்கத் தொகை 7,000 ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக வழங்கப்பட்டுள்ளது; கை, கால் ஊனமுற்றோரைத் திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளோருக்கு 7,000 ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 7,400 லிருந்து 8,400 ஆகவும், மாதாந்திர உதவித் தொகையை 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாகவும் உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, மகளிர் மேம்பாட்டுக் கழகம். மாண்புமிகு அம்மா அவர்களால் முதன்முதலில் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் என்பது மிக வெற்றிகரமான ஒன்று. இதை அமைதிப் புரட்சி, மௌனப் புரட்சி என்றுதான் சொல்லவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டிலே நடக்கக்கூடிய அனைத்து அரசு விழாக்களிலேயும், அம்மா அவர்கள் கலந்துகொண்டபோது, சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வங்கிகளை அணுகிக் கடன் பெறும் நிலை மாறி, வங்கிகளே சுய உதவிக் குழுக்களைத் தேடிச் சென்று கடன் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடுவார்கள். பெண்கள், சுய உதவிக் குழுவில் அதிக இடம் பெறவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அக்குழுக்களிலே இடம் பெறுவதற்கு இன்றைக்குப் பெண்கள் தீவிரம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமத்திலே மட்டும் உருவாகி வந்த சுய உதவிக் குழு, நகர்ப்புறத்திலேயும் உருவாக்கப்பட வேண்டுமென்கிற கருத்தை மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்ததற்குப் பிறகு, இன்றைக்கு



நகரங்களிலேயும் இந்த சுய உதவிக் குழு உருவாக்கப்பட்டு, மிகச் சிறப்பான முறையில் பெண்கள் செயல்பட்டு வருகிறார்கள். கடந்த மூன்று ஆண்டு காலங்களில் மட்டும் 95,475 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 14,62,860 பெண்கள் பயனடைந்துள்ளனர். இதிலே 414 பேர் அரவாணிகள்–28 குழுக்கள்; 1,446 பேர் விலைமாதர்கள்–113 குழுக்கள். மற்றும் 6,073 உடல் ஊனமுற்றோர்–616 குழுக்கள் என அடங்குவர்.

மேலும் அரவாணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் இரண்டு அரவாணிகளுக்கு அலுவலக உதவியாளர் பணியும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இவர்கள் வசிப்பதற்கு தொகுப்பு வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் சேமிப்புத் தொகை 388.73 கோடி ரூபாயாகும். சுய தொழிலில் ஈடுபட 647.53 கோடி ரூபாய்க்குக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இது மூன்று ஆண்டு காலத்துக் கணக்கு மட்டும். தமிழ்நாட்டிலே செயல்படும் மொத்த சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 1,70,802. மகளிரின் மொத்த எண்ணிக்கை 28,91,267. வழங்கப்பட்ட கடன் தொகை 767 கோடியே 80 இலட்சம் ரூபாய். மொத்த சேமிப்புத் தொகை 469 கோடியே 33 இலட்சம் ரூபாய்.

தொழில் முனைவோர் பயிற்சி பெற்றோர் 2003–2004–லே 1,25,836 பேர் பயனடைந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ள புரட்சிகரமான திட்டம்; 5 இலட்சம் பெண்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட வேண்டுமென்கின்ற திட்டத்தின் அடிப்படையில் 3 ஆண்டு காலத்திலே மட்டும் 3,64,157 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–40

**தொழில் முனைவோர் பயிற்சி:** சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு மூன்று ஆண்டு காலத்தில் இரண்டு கோடி ரூபாய் செலவில் 44,725 பெண்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்படவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் சுதந்திர தினத்தன்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 37,72,000 ரூபாய் செலவில் 4,858 புது மணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

தேனி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்கிற காரணத்தால் தேனி மாவட்ட ஒட்டுமொத்த வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு 2,297 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 35,986 பெண்கள் பயன் அடைந்துள்ளனர். இரண்டாயிரம் பெண்களுக்குத் தொழில்களில் திறன் வளர்ப்புப் பயிற்சியும், 1,377 பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும், 465 பெண்களுக்கு வாழ்க்கைத் தொழிற் கல்விப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்தது சமூகப் பாதுகாப்புத் துறை. சமுதாயத்திலே பெற்றோர் மற்றும் உற்றார் உறவினரின் ஆதரவின்றி, கவனிப்பாரின்றி அநாதையாக விடப்பட்டிருக்கின்ற சிறுவர் சிறுமியரின் நலனுக்காக சட்டத்தின் பார்வையிலே குற்றவாளியாகத் தெரியும் தவறிழைத்த சிறார்களைச் சீர்திருத்துவதற்காக அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு மத்திய அரசால் இயற்றப்பட்ட 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி பாதுகாப்புச் சட்டத்தின் – J.J. Act – விரிவான விதிமுறைகளை அமல்படுத்தியதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் — மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற தமிழகம்தான் முதன்மை மாநிலமாகவும், முன்னோடி மாநிலமாகவும் இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

துன்புறுத்துதல், கொடுமைக்கு உள்ளாக்கப்படுதல், புறக்கணித்தல் முதலானவற்றிலிருந்து மகளிர் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். கடத்தலைத் தடுப்பதற்கு தலைமைச் செயலாளரின் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, நவம்பர் 2001–ல் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, இதுவரை ஐந்து முறை கூட்டம் நடத்தப்பட்டு கடத்தலைத் தடுப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள், தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது. 5–9–2002–ன்படி ஒவ்வொரு கிராமத்திலும்–தமிழகத்தில்தான் முதன் முதலாக–கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகளிர், குழந்தைகளைக் கடத்தக்கூடிய, இந்தக் கடத்தலைத் தடுத்து, J.J. Act–ல் விதிக்கப்பட்டிருக்கக்கூடிய விதிமுறைகளின் மூலமாக கடுமையான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். 2001 முதல் 2004 வரை



பிடிபட்டு அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 486 பேர். அவர்களிலே 165 பேர் பெற்றோர்களிடத்திலே மறுபடியும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மீதம் இருக்கிற குழந்தைகள் எல்லாம் இன்றைக்கு இல்லங்களிலே தங்க வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புதிய அறிவிப்புகள்:** தலைமைச் செயலக சமூக நலத் துறை, சமூக நல இயக்ககம் மற்றும் அனைத்து மாவட்ட சமூக நல அலுவலகங்களுக்குத் தேவையான கணினிகள், இரும்பு பீரோக்கள், ஜெராக்ஸ் இயந்திரங்கள், படிப் பெருக்கிகள், குழந்தைகள் காப்பகங்களுக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வழங்கவும், நூலகம், கூடுதல் வகுப்பறைகள், புதிய கட்டடங்கள், மேலாண்மை, தகவல் முறை பயிற்சி மற்றும் முதியோர் இல்லங்கள் ஏற்படுத்திடவும், சேவை இல்லச் சிறார்களுக்கான உணவீட்டுச் செலவினத்தை உயர்த்தி அளிக்கவும், மாண்புமிகு அம்மா அவர்கள் 65,70,000 ரூபாய் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவுப் பணியாளர்களுக்கு எவர்சில்வர் தட்டு ஒன்றும், டம்ளர் ஒன்றும் ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையகத்தில் தொலைபேசி, கணினி வாங்கவும், Digital Board தொலைத் தொடர்பு முறை அமைக்கவும், அனைத்து ஊனமுற்ற நபர்களுக்குத் தேவையான உதவி உபகரணங்கள் வழங்கவும், மனநலம் குன்றியோருக்கான அத்தியாவசிய பொருட்கள் வாங்கி வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் 1,25,05,000 ரூபாய் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கென அறைகலன்கள், மின் உற்பத்தி இயந்திரம் மற்றும் கணினி வாங்கவும், நூலகத்தை வலுப்படுத்தவும், கண்காணிப்பாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டவும், சிறார் இல்லங்களுக்குக் குடிநீர் வசதி, புதிய கட்டடம், உணவுக் கூடம் மற்றும் பழுதுபார்ப்புச் செலவு மேற்கொள்ளவும், மகளிர் மற்றும் சிறார்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுக்க ஒரு பிரிவை ஏற்படுத்தவும், சாலையோர சிறார்களுக்கான திட்டத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் 50,38,000 ரூபாய் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திருமதி பா. வளர்மதி] [2004 ஜூலை 28

பிற்பகல் 1–45

சமுதாயத்திலே நலிந்த பிரிவினருக்காகப் பல்வேறு திட்டங்கள். பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் வரை பல்வேறு உதவிகளைச் செய்யக்கூடிய புரட்சிகரமான திட்டங்களைச் செய்து கொண்டிருக்கக்கூடிய எங்கள் அம்மா அவர்கள், எந்த விமர்சனங்களைப் பற்றியும் கவலைப்படாமல், நாடெல்லாம் தூங்க, நடுவான நிலா தூங்க, காடெல்லாம் தூங்க, கானகத்து முயல் தூங்க, பாரெல்லாம் தூங்கும் வேளையிலும், தூங்கும் குழந்தையின் சின்ன அசைவிலும், துடித்து எழுகிற அன்னையைப் போல எங்கள் அம்மா, தூங்காது பணியாற்றிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் அம்மா சிந்திய வியர்வைத் துளிகள்தான், வெற்றித் தேவதையின் மாணிக்கப் பதக்கத்திற்குக் காணிக்கையாயின. ஐந்தாறு மொழி அறிந்தாலும், அனைவரிடமும் அன்புமொழி பேசும் எங்கள் தெய்வம் அம்மா, பூந்தமிழர் நெஞ்சமெல்லாம் புகுந்து, ஆண்டாண்டு காலமாய் எங்களை ஆளப் பிறந்த அம்மா, நீங்கள், கைநழுவி மண்ணுக்கு வந்த கண்ணன் கை புல்லாங்குழல், கைநழுவி மண்ணுக்கு வந்த கண்ணன் கை புல்லாங்குழல். உங்களின் சிரிப்புப் பூக்களை வாரிச் சூடிக் கொண்டது வண்ணத் தமிழின் வார்குழல், அஞ்சா மனம், அயரா மனம், ஆள்வோர் அடி நத்திக் கெஞ்சா மனம், வீர மனம், எல்லாம் பெற்ற எங்கள் அம்மா, கடல் வற்றிப் போனால் கருவாடு சாப்பிடலாம் என்று குடல் வற்றி செத்த கொக்கைப் போல சிலர் காத்துக் கிடக்கிறார்கள். கடல் வற்றிப் போனால் கருவாடு சாப்பிடலாம் என்று குடல் வற்றிச் செத்த கொக்கைப் போலச் சிலர் காத்துக் கிடக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குடல் வற்றிப் போகுமே தவிர கடல் வற்றப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கடலின் ஓரலை ஓய்வதற்குள் அடுத்த அலை வந்துவிடும்; கடலின் ஓரலை ஓய்வதற்குள் அடுத்த அலை வந்துவிடுவதைப் போலப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழ் அலைகள் தொடர்ந்து கொண்டேதானிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள். நான் அளித்திருக்கின்ற பதில் உங்களுக்கு ஓரளவிற்குத் திருப்தியாக இருக்குமென்று கருதுகிறேன். கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.



2004 ஜூலை 28]

## (அ) கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை.

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.411,29,57,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. முரளிதரன், இருக்கையில் இல்லை. திரு. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.390,94,96,000/–, மூலதனக் கணக்கில் ரூ.53,71,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்

துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-7-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

68. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் திரு. எஸ். முத்தையா அவர்களை கோயமுத்தூர் தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதித் துறை) ஆக நியமித்தது குறித்து வணிக வரிகள் (இ2) துறையின் அரசாணை (2டி) எண் 68, நாள் 9-6-2004-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

69. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-1) முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

70. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம்



ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

71. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

72. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

73. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

74. 2002–2003 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

75. 2002–2003 ஆம் ஆண்டிற்கான அரியலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

76. 2002–2003 ஆம் ஆண்டிற்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

77. 2002–2003 ஆம் ஆண்டிற்கான கோயமுத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

78. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

79. 2002–2003 ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

47. மானியக் கோரிக்கை எண் 43 – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

48. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் செயல்முறைத் திட்டம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

49. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மக்கள் சாசனம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

50. மானியக் கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

51. 2004–2005 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்)

52. 2004–2005 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

53. 2004–2005 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

54. நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2004–2005) (தமிழ்)





55. சிறைச்சாலைத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2004–2005) (தமிழ்)

56. பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2004–2005) (தமிழ்)

57. வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2004–2005) (தமிழ்)

58. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் ஆண்டறிக்கையினை பேரவையில் வைக்காததற்கான காரணங்கள் குறித்த அறிவிப்பு.

59. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

60. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

61. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

62. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐந்தாவது அறிக்கை. (2003–2004)

63. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஆறாவது அறிக்கை. (2003–2004)

64. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஏழாவது அறிக்கை. (2003–2004)

65. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எட்டாவது அறிக்கை. (2003–2004)

[2004 ஜூலை 28

66. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஒன்பதாவது அறிக்கை. (2003–2004)

67. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பத்தாவது அறிக்கை. (2003–2004)

68. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினொன்றாவது அறிக்கை. (2003–2004)

69. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பன்னிரெண்டாவது அறிக்கை. (2003–2004)

70. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதிமூன்றாவது அறிக்கை. (2003–2004)

71. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினான்காவது அறிக்கை. (2003–2004)

72. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினைந்தாவது அறிக்கை. (2003–2004)

73. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினாறாவது அறிக்கை. (2003–2004)

74. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினேழாவது அறிக்கை. (2003–2004)

75. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினெட்டாவது அறிக்கை. (2003–2004)

76. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பத்தொன்பதாவது அறிக்கை. (2003–2004)

77. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபதாவது அறிக்கை. (2003–2004)

78. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2003–2004)

79. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (2003–2004)



2004 ஜூலை 28]

80. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை. (2003–2004)

81. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஆறாவது அறிக்கை. (2003–2004)

82. மனுக்கள் குழுவின் ஐம்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2003–2004)

83. மனுக்கள் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2003–2004)

84. மனுக்கள் குழுவின் அறுபத்தி ஒன்றாவது அறிக்கை. (2003–2004)

85. மனுக்கள் குழுவின் அறுபத்தி இரண்டாவது அறிக்கை. (2003–2004)

86. மனுக்கள் குழுவின் அறுபத்தி மூன்றாவது அறிக்கை. (2003–2004)

87. மனுக்கள் குழுவின் அறுபத்தி நான்காவது அறிக்கை. (2003–2004)

88. மனுக்கள் குழுவின் அறுபத்தி ஐந்தாவது அறிக்கை. (2003–2004)

89. மனுக்கள் குழுவின் அறுபத்தி ஆறாவது அறிக்கை. (2003–2004)

90. மனுக்கள் குழுவின் அறுபத்தி ஏழாவது அறிக்கை. (2003–2004)

91. மனுக்கள் குழுவின் அறுபத்தி எட்டாவது அறிக்கை. (2003–2004)

– – –

# இணைப்பு I

(280 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 43

## சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### அத்தியாயம் - 1

**முன்னுரை**

கோரிக்கை எண் 43-ன்கீழ் 2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.411,29,57,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

2. ஒரு நாட்டின் மேம்பாடு அந்நாட்டின் மனித வளத்தின் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு நாட்டின் சமுதாய மேம்பாடு மகளிரின் மேம்பாட்டைப் பொறுத்தே அமைகிறது. மகளிரின் பொருளாதாரம், சமூகம் மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றைப் பொறுத்தே நாடு வளமை மிக்கதாக அமையும்.

3. மகளிர், குழந்தைகள் மற்றும் பொருளாதார மற்றும் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவின் மேம்பாடு ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நம்பிக்கையாகும்.

4. ஆற்றல்மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும் இவ்வரசு, குழந்தைகள் முதல் முதியோர் வரை பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், பணிபுரியும் மகளிர் விடுதிகள், ஆதரவற்றோருக்கான இல்லங்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட மகளிருக்கு தையல்

இயந்திரங்கள் வழங்குதல், முதியோர் இல்லங்கள், சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்துதல், ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு நலத் திட்டங்கள், கைவிடப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பு, குழந்தைகள், கர்ப்பிணி மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர்களுக்கான சத்துணவுத் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை சமூக நலத் துறை செயல்படுத்தி வருகிறது.

5. மேற்கூறப்பட்ட நலத் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள், நிதி ஒதுக்கீடு மற்றும் பயனாளிகளின் விவரங்கள் அந்தந்த அத்தியாயத்தின்கீழ் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் - 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

2.1. குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களது நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, அவர்களின் உடல் வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பெண் குழந்தைகளின் சுகாதாரத்தைப் பேணிக் காத்திடவும், பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிடவும், பாலியல் வேறுபாட்டினை ஒழிக்கவும், வளர்இளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தவும், பெண்களின் ஆரோக்கியமான உடல்நலத்தைப் பேணுவதற்கும் அரசு கொள்கைகளை உருவாக்கி, முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

### 2.2 பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

பெண்கள் இச்சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையாக பீடுநடை போடுவதை உறுதிப்படுத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புரட்சிகரமானதொரு பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள். குடும்பக் கட்டுபாட்டுக்கு ஊக்கம், பெண் சிசுக்கொலையை ஒழிப்பதற்காகவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பி பெற்றுக் கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்துவதற்காகவும், இத்திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள். தற்பொழுது இத்திட்டம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு அதிக நிதி கிடைக்கும் வகையில் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு



வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் ஒரு முன்னோடித் திட்டமாக அமல்படுத்தப்படுவதோடு ஏழைப் பெண் குழந்தைகளின் கல்விக்கு உறுதுணையாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2001-ல் இத்திட்டம் மறுவடிவாக்கம் செய்யப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே இருந்து வேறு குழந்தைகள் எவரும் இல்லாத குடும்பங்களில் பெற்றோர் எவரேனும் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருந்தால், அரசு அக்குழந்தையின் பெயரில், தமிழ்நாடு மின்வள நிதி நிறுவனத்தில் தொடக்க வைப்பீடாக ரூ.22,200/-செலுத்துகிறது. இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தை முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு கல்வியை முடிக்கும் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வழங்கப்படும். 20 ஆண்டுகளுக்கு பிறகு வட்டியுடன் கூடிய முதிர்வு தொகை முழுமையாக வழங்கப்படும். அப்பெண் தொடர்ந்து மேற்கல்வி பயிலவோ அல்லது அதன் திருமணச் செலவிற்கோ இத்தொகை உதவும். இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருந்தால், அரசு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவரின் பெயரிலும் தமிழ்நாடு மின்வள நிதி நிறுவனத்தில் ரூ.15,200/-ஐத் தொடக்க வைப்பீடாக செலுத்தும். இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் முன்னர் தெரிவித்துள்ளபடி மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வழங்கப்படுவதோடு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன் கூடிய முதிர்வுத் தொகை முழுமையாக வழங்கப்படும். இத்திட்டம், பெண் குழந்தைகள் மட்டும் உள்ள பெற்றோருக்கு புதிய நம்பிக்கை கொடுப்பதோடு ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் கல்வி அளிப்பதை உறுதிப்படுத்தும்.

2004-2005 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3 தொட்டில் குழந்தைத் திட்டம்

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் கொடுஞ்செயலாக நடைபெற்று வரும் பெண் சிசுவதையைத் தடுக்கும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் "தொட்டில் குழந்தைத் திட்டம்" எனும் தன்னிகரில்லாத திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

[2004 ஜூலை 28

இத்திட்டத்தின்படி சமூகச் சூழ்நிலை காரணங்களினால் பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிக்கும் வண்ணம் மருத்துவமனை, ஆரம்பச் சுகாதார நிலையம், குழந்தைகள் இல்லம் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டன. சேலத்தில் ஒரு வரவேற்பு மையமும் துவக்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டம் புத்துயிர் அளிக்கப்பட்டு, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய வரவேற்பு மையங்கள் துவங்க அரசு அனுமதி அளித்து துவக்கப்பட்டு விட்டது. மேலும், சேலத்தில் தற்பொழுது உள்ள மையம் மேம்படுத்தப்பட்டுள்ளது. பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார மையங்களில் பெண் சிசுக்களைப் பெற, அம்மையங்களின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட சமூக நல அலுவலகங்களிலும், ஆரம்பச் சுகாதார / துணை ஆரம்பச் சுகாதார மையங்களிலும் மொத்தம் 188 இடங்களில் தொட்டில்கள் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொட்டில் மையங்களில் பெறப்படும் குழந்தைகள் வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்படும். பெண் சிசுவதை செய்யும் கொடுஞ்செயலுக்கு எதிராக மாநில அரசு, பரந்த அளவில் பிரச்சாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கல்வி, சுயவேலைவாய்ப்பு பயிற்சி அளிப்பதன் மூலமாக பெண்களுக்கு சமூகப் பொருளாதார உரிமைகளை வழங்குவதில் அரசு தனிக் கவனம் செலுத்தும். சிறப்பு வாய்ந்த தொட்டில் குழந்தைத் திட்டம் நாடெங்கிலும் பெருவாரியான ஆதரவைப் பெற்றுள்ளது.

**2004-2005 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.14.58 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

## 2.4 அரசு குழந்தைகள் காப்பகங்கள்

சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளை பிற்காலத்தில் நாட்டின் நல்ல குடிமக்களாக வாழ வைக்கும் உயரிய நோக்குடன் தமிழ்நாடு முழுவதிலும் 25 அரசு குழந்தைகள் காப்பகங்களை அரசு நடத்தி வருகிறது. இக்காப்பகங்களில் உள்ளுறையும் குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், உடை, கல்வி மற்றும் மருத்துவச் செலவினம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.



2004 ஜூலை 28]

இக்காப்பகங்களில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

- பெற்றோரோ அல்லது உறவினரோ இல்லாத ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கும் குறைவாகப் பெறும் குடும்பத்தைச் சார்ந்த தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் இறந்துவிட்ட நிலையிலுள்ள குழந்தைகள், கணவனோ அல்லது மனைவியோ நீண்டநாள் கைதியாக இருப்பின், மனைவியால் அல்லது கணவனால் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ள குழந்தைகள், கணவனாலோ அல்லது மனைவியாலோ கைவிடப்பட்ட குழந்தைகள்.
- தொழுநோய் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

சத்யா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகங்கள் என அழைக்கப்படும் அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட வசதிகளை அரசு அளித்து வருகின்றது:

ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.225/- வீதம் உணவிற்குச் செலவிடப்படுகிறது. காப்பகத்திலேயே 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் வெளி பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இக்காப்பகக் குழந்தைகள் தன்னிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்குத் தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது.

அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் கல்வி பயில தேவையான புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் வாங்கி வழங்கப்படுகிறது. அரசு குழந்தைகள் காப்பகங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் வெளி

பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு ஆண்டு தோறும் முறையே ரூ.400/- மற்றும் ரூ.500/- மதிப்பீட்டில், இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன. அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.150/- வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்ட அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு மட்டும் ஒரு குழந்தைக்கு ரூ.250/- வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது.

அரசு குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ.50/- மதிப்புள்ள காலணிகள் வாங்கி வழங்கப்படுகின்றன.

250 குழந்தைகள் வீதம் உள்ள 20 அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதமும், 100 குழந்தைகள் வீதம் உள்ள 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500/- வீதமும் மருத்துவச் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காப்பகங்களை அவ்வப்போது ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சிறந்த சேவை அளிக்கப்படுகிறது. இக்காப்பகங்கள் சிறப்பாக செயல்படுவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென சமூகப் பணியாளர்களைக் கொண்ட குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

இக்காப்பகங்கள் நல்ல நிர்வாக அமைப்புடன் இயங்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்க்கண்ட 7 உறுப்பினர்களை கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு ஏற்படுத்தி உள்ளது:

| | | |
|---|---|---|
| 1. மாவட்ட ஆட்சித் தலைவர் | – | தலைவர் |
| 2. மாவட்ட கல்வி அதிகாரி | – | உறுப்பினர் |
| 3. பகுதிநேர மருத்துவ அலுவலர் | – | உறுப்பினர் |
| 4. மாவட்ட சமூகநல அலுவலர் | – | உறுப்பினர் |
| 5. மாநில சமூகநல வாரிய உறுப்பினர் | – | அலுவல்சாரா உறுப்பினர் |
| 6. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப் படும் சமூகப்பணியில் முன்னணியில் உள்ள இரண்டு சமூக சேவகர்கள் | – | அலுவல்சாரா உறுப்பினர்கள் |



இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி காப்பகங்களின் முன்னேற்றத்தினையும், குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் குழந்தைகளை காப்பகத்தில் சேர்த்தல் ஆகியவை குறித்தும் கண்காணிக்கும். காப்பகங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட சமூகநல அலுவலர்களுக்கு இக்குழு உதவும்.

அன்றாட வாழ்க்கையினை தொடர்வதற்குத் தேவையான வெளி உலகத் தொடர்புக்கு வாய்ப்பு நல்கும் பொருட்டும், குழந்தைகளை ஒரே மாதிரியான சூழ்நிலையில் வாழும் தினசரி வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்தும் பொருட்டும், அவர்கள் அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு ஆண்டிற்கொருமுறை சுற்றுலா அழைத்து செல்லப்படுகின்றனர்.

**2004-2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.494.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.5. குழந்தைகள் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

தமிழக அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் பாதுகாப்பும், பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் நலத் திட்டத்தில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. இதில் 80 சதவீதம் மானியமாக 01-04-1992 முதல் மாநில அரசு வழங்குகிறது. 20 சதவீதம் தொண்டு நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது. இம்மானியம் தொடர் செலவினமாக உணவு, உடை போன்றவற்றிற்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.250/- வீதம் வழங்கப்படுகிறது. இவ்வில்லங்களை மாவட்ட அளவில் மாவட்ட அலுவலர்களும், சமூகநல இயக்ககத்தில் உள்ள அலுவலர்களும் முறையாகப் பார்வையிடுகிறார்கள். இவ்வில்லங்களில் பராமரிக்கப்படும் 14,377 குழந்தைகளுக்காக 183 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசிடம் மானியம் பெறுகின்றன.

**இத்திட்டத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.267.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

[2004 ஜூலை 28

## 2.6. தத்து எடுத்தல்

அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தக்கதொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து அதன்மூலம் அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அன்பும், அரவணைப்பும் கிடைக்கவும், அவர்களிடமுள்ள செயல்திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் தத்து திட்டம் ஒரு முக்கியமான வாயிலாக உள்ளது. மேலும் குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும், இயல்பான வளர்ச்சியைப் பெறவும், அறிவாற்றலை வளர்க்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும் தத்தெடுத்தல் உதவுகிறது. அத்துடன் இக்குழந்தைகள் சமூக விரோத செயல்களில் ஈடுபடுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும் தத்தெடுத்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

உள்நாட்டில் தத்து கொடுக்க 21 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோவை, தருமபுரி, திருச்சி, தூத்துக்குடி, மதுரை, சேலம், நாமக்கல், திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. உரிமம் பெற்ற 21 நிறுவனங்களில் 9 நிறுவனங்களுக்கு வெளிநாட்டில் தத்து கொடுக்கவும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் மாவட்டத்திற்கு ஒரு தத்து நிறுவனம் செயல்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொது மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கி தத்தெடுப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. தத்து திட்டத்திற்கென மாவட்ட சமூகநல அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். புதியதாக உரிமம் பெற்ற நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 21 சமூகப் பணியாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நிறுவனங்கள் தத்து கொடுத்தலை சட்ட பூர்வமாக்கும் அதிகாரம் பெற்றவர்கள்.

## 2.7. ஏழை விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கு குறைவாக பெறும் விதவை தாய்மார்களின் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின்



2004 ஜூலை 28]

மூலம் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவாறு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன:

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் புத்தகம் மற்றும் குறிப்பேடுகளின் மதிப்பு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ.50 |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.125 |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.175 |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | ரூ.300 |
| +1 மற்றும் + 2 வகுப்பு | ரூ.600 |

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,000 குழந்தைகள் பயனடைகின்றனர்.

2004–2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.11.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.8 வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் அக்குழந்தைகளுக்குப் பின் பிறந்துள்ள மழலையர்களைப் பார்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவதாலும் அல்லது சமூக விரோத செயல்பாடுகளில் ஈடுபடுவதாலும் பள்ளிக்குச் செல்வது என்பது இயலாததாகிறது. அரசு இதனைக் கருத்திற்கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 141 குழந்தைகள் காப்பகங்களுக்கு காப்பகம் ஒன்றிற்கு ரூ.25,410/- வீதம் தொடர் செலவினமாக வழங்கி வருகிறது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டு சமூகநல இயக்குநரின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட சமூகநல அலுவலர் மூலம் நிறைவேற்றப்படுகிறது. ஒரு காப்பகம் என்பது 25 குழந்தைகளைக் கொண்டதாகும்.

[2004 ஜூலை 28

*2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 2.9 திருமண நிதியுதவித் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு–

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் |
|---|---|---|
| 1. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டம் | ரூ.10,000/— (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | விதவையரின் ஆண்டு வருமானம் ரூ.12,000/—க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20—30—க்குள் இருக்க வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். |
| 2. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.10,000/— (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | ஆண்டு வருமானம் ரூ.12,000/—க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20—30—க்குள் இருத்தல்வேண்டும். |
| 3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் | ரூ.10,000/— (ரூ.7,000/— தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000/— கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | மணப்பெண்ணின் வயது 20—30—க்குள் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை. |
| 4. தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் | (அ) ரூ.20,000/-, (ரூ.10,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.10,000/- கேட்பு வரைவோலை அல்லது காசோலை)<br><br>(ஆ) ரூ.10,000/-, (ரூ.7,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000/- கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | (அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முற்பட்ட வகுப்பினரை அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்தல். மணப்பெண்ணின் வயது 20-30—க்குள் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை<br><br>(ஆ) முற்பட்ட வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை /மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்தல். மணப்பெண்ணின் வயது 20—30—க்குள் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை. |



2004 ஜூலை 28]

*2004-2005 ஆம் ஆண்டிற்கு அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களுக்கென ரூ.397.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 2.10 சேவை இல்லங்கள்

விதவைகள் ஆதரவற்ற மற்றும் உதவிக்கு எவருமில்லாத பெண்களுக்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது. அத்தகைய பாதுகாப்பு அளித்திடவும், பெண்கள் மீண்டும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவவும், அரசு சேவை இல்லங்களை உருவாக்கியுள்ளது. இத்துறையின் மூலம் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் மதுரை ஆகிய 7 இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன. இச்சேவை இல்லங்கள் பெண்களுக்கு உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆகியவற்றை அளித்து வருகிறது.

[2004 ஜூலை 28

பெண்களுடன் அவர்களது குழந்தைகளும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுவதுடன், அக்குழந்தைகளுக்கும் கல்வி வசதி செய்து தரப்படுகிறது.

தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் கலைப் பாடங்களை கொண்ட மேல்நிலை வகுப்புகளும் தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடத்தில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. உணவூட்டுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு தலா ரூ.300/- வீதமும், சிறியவர்களுக்கு தலா ரூ.200/- வீதமும் வழங்கப்படுகிறது. பெரியவர்களுக்கு ரூ.500/- மதிப்பில் சீருடை வழங்கப்படுகிறது. இச்சேவை இல்ல சிறுவர்களுக்கு ஆண்டிற்கொரு முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சீருடை வழங்கப்படுகிறது. மற்றும் இவ்வில்லங்களில் பயிலும் மாணவிகளுக்குத் தேவையான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி இலவசமாக வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோருக்கென தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்கி வருகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவையில்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பாடங்களில் பயிற்சி வழங்கும் செயலகப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது. ஆண்டொன்றிற்கு 65 மாணவிகளுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சிக்குப்பின் அவர்கள் அரசு தொழில் நுட்பத் தேர்வு எழுத தகுதியுடையவராகின்றனர். செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகத் தொழில் நுட்பப் பயிற்சி போன்றவை திருநெல்வேலி, கடலூர், சேலம், காரைக்குடி மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றது. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு முடித்த சேவையில்ல மாணவிகளுக்கு நவீன தொழில் நுட்பத்தில் ஈடுபாடு கொள்ளும் வகையில் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு முடித்த பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர். 2003–2004 ஆம் ஆண்டில் ஒரு புதிய சேவை இல்லம் மதுரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

**2004–2005 ஆம் நிதியாண்டிற்கென ரூ.224.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



2004 ஜூலை 28]

## 2.11 தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு மானிய உதவி

அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும், சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திரிலும், கோவையில் சரணாலயத்திலுமாக மொத்தம் மூன்று சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

1. உள்ளுறைவோர்களுக்கு பயிற்சி உதவித் தொகையும், ஆசிரியர்களுக்கு ஊதியமும் மானியமாக வழங்கப்படுகிறது.
2. சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்களுக்காக ஸ்திரி சேவா மந்திரால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் செயலக வகுப்பு (தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து) மற்றும் தொழிற் பயிற்சி நடத்தப்படுகின்றன.
3. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு நிலையில் குறுகிய காலப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகின்றது.
4. சரணாலயம், கோயம்புத்தூர் தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் உள்ளுறைவோர் பயனடையும் வகையில் தையல் மற்றும் திரை அச்சீடு பயிற்சி வழங்கப்படுகிறது.

**2004–2005 ஆம் ஆண்டிற்கென இத்திட்டத்திற்கு ரூ.9.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.12 பணிபுரியும் பெண்கள் விடுதிகள்

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடவசதியின் தேவையும் அதிகரிக்கிறது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடம் அல்லது சுற்றுப்புறத்தில் தங்குவதற்கு தக்கவாறு இடவசதியினை நாட வேண்டியுள்ளது. எனவே, இப்பெண்களுக்கு உதவும் வகையில் சென்னையில் 2, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரிலும் தலா ஒன்று வீதம் 8 பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. பணிபுரியும் மகளிர் விடுதியில் சேருவதற்கான மாத வருமான உச்சவரம்பு ரூ.10,000/- ஆகும். வாடகையாக மாதமொன்றுக்கு சென்னையில் ரூ.200/-ம்

[2004 ஜூலை 28

இதர மாவட்டங்களில் ரூ.150/- வீதமும் வசூலிக்கப்படுகிறது. தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளுறைவோர்களால் சரிசமமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்விடுதியில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதர பணியாளர்களின் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

*2004-2005 ஆம் நிதியாண்டில் ரூ.28.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**2.13. வழிகாட்டி மையம்**

வழிகாட்டி மையம் 1979 ஆம் ஆண்டு 20 மாவட்டங்களில் மாவட்ட சமூகநல அலுவலரின்கீழ் செயல்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் மகளிர் முன்னேற்றத்திற்காக அரசால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை பெண்களிடையே விளக்கியும் அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியும் வருவதாகும். மேலும் இம்மையம் மகளிர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு தொழில் புரிய பலதரப்பட்ட வங்கிகளுக்கு கடன் பெற பரிந்துரை செய்து வருகிறது. ஆகவே, இம்மையம் அரசுக்கும் மக்களுக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளது.

*2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ 61.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**2.14. சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்குதல்**

வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் வேலை வாய்ப்பினைப் பெருக்கும் நோக்கத்துடனும், அவர்கள் சமூகத்தில் நற்பாங்கான வாழ்க்கையினைத் தொடரவும் சத்யவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

*2004-2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.115.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*



2004 ஜூலை 28]

**2.15 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மானியம்**

கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காக உண்மையிலேயே செயல்படும் தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் நல்ல நிலையில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றன. குழந்தைகளின் விளையாட்டு சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவைகள் வாங்குவதற்கு ஒவ்வொரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கும் ரூ.5,000/– மானியமாக வழங்கப்படுகிறது. 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றன.

*2004-2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.10.00 இலட்சங்கள் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.*

**2.16 குடும்ப ஆலோசனை மையம்**

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் ஒன்று உருவாக்கப்பட்டது. இம்மையம் வரதட்சணைக் கொடுமை, குடிப் பழக்கம் ஆகியவற்றை நீக்கவும், எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் வாயிலாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம், 6 குடும்ப ஆலோசனை மையங்கள், நாமக்கல், கரூர், ஈரோடு, விழுப்புரம், வேலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

*2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.5.11 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.*

**2.17 பெண்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்**

(1) மகளிருக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் மூலமாக மகளிருக்கான அதிகாரப் பகிர்வு சமூக, பொருளாதார ரீதியாக உறுதி செய்யப்படுகிறது. மகளிர் சமுதாயத்தின் உயர்வினை கூட்டுறவு

[2004 ஜூலை 28

முறையில் எய்துவதற்கும், இதன் வாயிலாக குறிப்பாக மகளிர், சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளின் நிர்வாகத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(2) அரசின் மேற்கண்ட நோக்கத்தைச் செயல்படுத்தும் வகையில் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் மகளிர் மட்டுமே அங்கத்தினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். இந்த வகையில் 103 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூகநல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளரின் கீழும் இயங்கி வருகின்றன. இத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நலத் துறை செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைப் பணிகளை மேற்கொள்ளவும் ஈடுபடுத்தப்படுகின்றன.

| வ. எண் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தையல் கூட்டுறவுச் சங்கங்கள் | 79 | 40,384 |
| 2 | எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் | 16 | 913 |
| 3 | இதர சங்கங்கள் | 8 | 1,037 |
| மொத்தம் | | 103 | 42,334 |

79 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் சீருடை தைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 1 முதல் 8—ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பருத்தி துணி சீருடைகள் தைத்து வழங்கப்பட்டு வந்தது.

2003—2004ஆம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயனடையும் குழந்தைகளுக்கு பாலியஸ்டர் நூல் இழையாலான துணியில் சீருடை தைத்து வழங்கிட அரசு ஆணையிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 28]

2003—2004 ஆம் ஆண்டில் 128.60 இலட்சம் சீருடைகள் தைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 61.89 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

சீருடைகள் 79 மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தைக்கப்பட்டதில் 40,384 பெண் அங்கத்தினர்கள் பயனடைந்துள்ளனர்.

16 எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு அலுவலகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணி மேற்கொள்வதன் மூலம் சங்க அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

**2004—2005 ஆம் ஆண்டிற்கு அனைத்து மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகச் செலவிற்காக ரூ.89.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

அரசு 36 தையல் பயிற்சி மையங்களையும் 1 பனை ஓலை, 1 பாய் முடைதல், 1 நார் உற்பத்தி மற்றும் 3 உற்பத்தி மையங்களையும் செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சி மையங்களில் ஆண்டொன்றுக்கு 798 மகளிர், பல்வேறு வகையான தொழிற் கல்வியினை பெற்று பயனடைகிறார்கள்.

**இதற்காக 2004—2005 ஆம் ஆண்டிற்கு ரூ.132.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மலைவாழ் மகளிர் பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் 2—ம், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக, 4 தையற் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் 65 மலைவாழ் மகளிர் பயிற்சி பெற்று பயனடைகின்றார்கள்.

**இதற்காக 2004—2005 ஆம் ஆண்டிற்கு ரூ.6.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினருக்காக குடிசைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2004—2005 ஆம் ஆண்டில் ரூ.7.03 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக 5 தையற் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.

2004—2005 ஆம் ஆண்டில் ரூ. 10.68 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 28

## 2.18 முதியோர் இல்லங்கள்

மாறிவரும் குடும்பச் சூழ்நிலை, பழக்க வழக்கங்கள் இவற்றின் காரணமாக கூட்டு குடும்ப சூழ்நிலை மாறி வருகிறது. இதன் காரணமாக முதியோர்களின் நலனை காப்பதில் தேக்கம் ஏற்பட்டு முதியோர்கள் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களின் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் இன்றி துயருறுவோர் பலர் உள்ளனர். முதியோர்களால் சந்தித்து வரும் பிரச்சனைகளின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. தற்போது 13 தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு முதியோர் இல்லம் நடத்துவதற்காக மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் 485 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர். முதியோர் இல்லங்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. மாவட்ட அளவில் மாவட்ட சமூகநல அலுவலர்களும், சமூகநல இயக்ககத்திலிருந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களும் அந்நிறுவனங்களுக்கு சென்று இத்திட்டம் சரிவர செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்து வருகின்றனர்.

தனியார் தொண்டு நிறுவனங்களால் அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், ஊனமுற்றோர்களுக்கான இல்லங்கள், ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள், ஆதரவற்ற தெருக் குழந்தைகளுக்கான இரவு பாதுகாப்பு விடுதிகள் முதலியவைகளை ஆரம்பிக்க அரசு ஊக்குவித்துள்ளது. மேலும், இத்திட்டத்தை இலாப நோக்கில்லாமல் செயல்படுத்த முன்வரும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கவும் உத்தேசித்துள்ளது.

**2004–2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

## 2.19 தமிழ்நாடு சமூகநல வாரியம், சென்னை

தமிழ்நாடு சமூகநல வாரியம் தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காக தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை அளிக்கும் நோக்கத்தில் 1954 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு–

1. சமூகநல தன்னார்வ அமைப்புகளை ஊக்குவித்து உயர்வடையச்செய்தல்.



2004 ஜூலை 28]

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.

3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூகநல வாரியம் மாநில அரசிடமிருந்தும், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்தும் நிதியுதவி பெற்று தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், மகளிர் மற்றும் ஊனமுற்றோரின் நலனுக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும் பணியாற்றுகிறது. நிதியுதவி 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் நிதியுதவி கூட வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் மூலம் 700 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 1,195அலகுகளுக்கு ஏப்ரல் 2003 முதல் மார்ச் 2004 வரை ரூ.372.49 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.10.00 இலட்சம் 200 தன்னார்வ அலகுகளைக் கொண்ட 200 தொண்டு மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2.20 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ல் பெண்களின் நலனுக்காகவும் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் துவங்கப்பட்டது. 08-03-2002-ல் ஒரு ஓய்வு பெற்ற துணை வேந்தர் தலைவியாகவும் மற்றும் 9 பகுதி நேர உறுப்பினர்களைக் கொண்டும் திருத்தியமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட பெண்களிடமிருந்து மனுக்கள் பெறப்படுகின்றன. கடந்த ஓர் ஆண்டில் மனுக்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. மனுக்கள் உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்கவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நிவாரணமும், பாதுகாப்பும் கிடைக்குமாறும் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பல பெண்களுக்கு இதன்மூலம் உதவி கிடைத்துள்ளது.

கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் சென்ற ஆண்டில் நடத்தப் பட்டிருக்கின்றன:

1. பெண் சிசுக்கொலை, கருக்கொலை தொடர்பான பொது விசாரணை.

2. சென்னை நகரில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடல்.

3. தொழிலகங்களில் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பாக கலந்துரையாடல்.

4. ஆணையத்தின் ஓராண்டு செயல்பாடு தயாரிப்பு .

5. தலித் பெண்கள் பிரச்னைகள் குறித்து பொது விவாதம்.

6. பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்து பொது விவாதம்.

7. பெண்ணுரிமைக்கு எதிரான கொடுமைகள் குறித்து பொது விவாதம்.

8. பெண்களை இழிவு அல்லது கொச்சைப்படுத்தும் வகையிலான விளம்பரம் குறித்து விவாதம்.

இரண்டு கட்டங்களாக சட்ட விழிப்புணர்வு முகாம்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கும், பஞ்சாயத்துத் தலைவிகளுக்கும் என அரசு நடத்தியது.

**ஆணையத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ. 4.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.21 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம்

ஈ.வெ.ரா. மணியம்மையார் விதவை மகள் திருமண உதவித் திட்டம், அன்னை தெரசா ஆதரவற்ற மகளிர் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம், தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், அன்னை சத்யா அரசு குழந்தைகள் காப்பகம், தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், சத்தியவாணிமுத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைகளில் 20.21 விழுக்காட்டிற்கு குறையாமல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டு நிதி மற்றும் செயல் பயன் அளிக்கப்படும்.



**2004–2005 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**

**(சமூக நல இயக்ககம்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சேவை இல்லத்திலுள்ள சிறார்களுக்கான உணவுக் கட்டணங்களை உயர்த்துதல் | 0.15 |
| 2. | சமூக நலத் துறை செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் குறித்து கண்காணிப்பாளர்களுக்கு மேலாண்மை தகவல்முறைப் பயிற்சி | 1.27 |
| 3. | ஒரு புதிய ஜெராக்ஸ் சாதனம் வாங்குதல் | 1.15 |
| 4. | மேலாண்மை தகவல் முறையின் கீழ் சமூக நலத் துறை இயக்ககத்திற்கு புதிய கணினிகளும் லைன் பிரிண்டரும் வாங்குதல் | 3.00 |
| 5. | சென்னை, சமூக நலத் துறை இயக்ககத்திற்கு 5 அலமாரிகள் வாங்குதல் | 0.31 |
| 6. | தருமபுரி மற்றும் மதுரையில் அரசினர் அநாதை இல்லங்களுக்கு இரண்டு புதிய கட்டடங்கள் கட்டுதல் | 20.00 |
| 7. | 15 அரசினர் அனாதை இல்லங்களுக்கு 15 ரோனியோ சாதனங்கள் வாங்குதல் | 3.00 |
| 8. | மாவட்ட சமூகநல அலுவலகம் ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரும்பு அலமாரிகள் வாங்குதல் | 3.60 |
| 9. | 25 அரசினர் அனாதை இல்லங்களில் நூலகம் ஏற்படுத்துதவல் | 3.75 |
| 10. | 25 அரசினர் அனாதை இல்லங்களுக்கு விளையாட்டு சாமான்கள் வழங்குதல் | 1.50 |
| 11. | தாம்பரம், சேவை இல்லத்தில் கூடுதலாக ஆறு வகுப்பறைகள் கட்டுதல் | 19.80 |
| 12. | தொண்டு நிறுவனங்கள் மூலமாக முதியோர் இல்லங்கள் 3 ஏற்படுத்துதல் | 5.00 |
| | மொத்தம் | **62.53** |

[2004 ஜூலை 28

## அத்தியாயம் 3

### சத்துணவு

### 3.1 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

தமிழக அரசு குழந்தைகளின் உடல் நலத்தையும் அவர்கள் சத்துணவு பெறும் நிலைமையையும் நன்கு பாதுகாத்து, அவர்களின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 01-07-1982 முதல் ஊரகப் பகுதியிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கும் 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15-09-1982 முதல் இத்திட்டம் நகர்ப்பகுதிகளில் அமல்படுத்தப் பட்டது. மேலும் இத்திட்டம் 15-09-1984 முதல் 10 வயது முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 15-01-1983 முதல் ஓய்வூதியம் பெறும் முதியோர்களும் 07-12-1995 முதல் கருவுற்ற தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி அதன்மூலம்

1. குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைவினை அகற்றவும்
2. படிக்கும் குழந்தைகளின் விகிதத்தினை அதிகரிக்கவும்
3. பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பள்ளிக்குச் செல்லாமல் இடையில் அகல்வதை குறைக்கவும் ஒரு ஆற்றல் மிக்க ஊக்கியாக செயல்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2004 ஜூலை 28]

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | துறையின் பெயர் | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் | ஒருங் கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் * | உலக வங்கி உதவி பெறும் ஒ.கு.வ.தி—3 ** | உதிஷா |
|---|---|---|---|---|---|
| 1 | உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.தி—3 | 72.87 | 201.19 | 10.32 | 5.59 |
| 2 | ஊரக வளர்ச்சி இயக்குநரகம் | 197.21 | - | - | - |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 11.23 | - | - | - |
| 4 | நுகர்பொருள் ஆணையரகம் (அரிசி போன்ற உணவுப் பொருள்கள் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை) | 206.94 | - | - | - |
| | மொத்தம் | 488.25 | 201.19 | 10.32 | 5.59 |

**மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.705.35 கோடி.**

* நிதி ஒதுக்கீடு மைய அரசு மற்றும் மாநில அரசு அளிக்கிறது

** நிதி ஒதுக்கீடு உலக வங்கியிடம் பெறப்படுகிறது.

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் உள்ள சத்துணவு மையங்களின் எண்ணிக்கை மற்றும் பயனடைவோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

[2004 ஜூலை 28

### 1. அங்கன்வாடி மையங்கள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | குழந்தைகள் | | கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர் | மொத்தம் |
| | | | 6 முதல் 24 மாதம் வரை | 2 வயது முதல் 5 வயது வரை | | |
| 1. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 22779* | 292932 | 297578 | 138926 (தாய்மார்கள்) 11127 (முதியோர்கள்) | 740563 |
| 2. | உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள்-3 திட்டம் | 19500 | 317082 (6 மாதம் முதல் 36 மாதம் வரை) | 608377 (37 மாதம் முதல் 60 மாதம் வரை) | 328710 (தாய்மார்கள்) 48321 (முதியோர்கள்) | 1302490 |
| | மொத்தம் | 42279 | 610014 | 905955 | 527084 | 2043053 |

*01-04-2003 முதல் 13 மாவட்டங்களில் 33 நகராட்சிப் பகுதிகளில் உள்ள 514 குழந்தைகள் நல மையங்களை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களாக மாற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இம்மையங்கள் புதிய மையங்களாகவும், இரட்டை மையங்களாகவும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்-3 திட்ட மையங்களிலும் அடங்கியுள்ளது. இதற்கு மைய அரசும் மாநில அரசும் நிதியுதவி செய்கின்றன.

### 2. பள்ளி சத்துணவு மையங்கள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 39254 | 5821202 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 2082 | 475607 |
| | மொத்தம் | 41336 | 6296809 |



2004 ஜூலை 28]

மொத்த பயனாளிகள் எண்ணிக்கை 2043053 + 6296809 = 8339862

பயனாளிகளுக்கு வழங்கப்படும் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | உணவுப் பொருட்கள் | வயது வி ம் (வருடங்களில்) | | | | கர்ப்பிணிகள் மற்றும் ஓய்வூதியம் பெறும் முதியோர் |
|---|---|---|---|---|---|---|
| | | | 5-9 | 10-15 | | |
| | | 2-5ஆம் வகுப்பு | 1-5 ஆம் வகுப்பு | 6-8ஆம் வகுப்பு | 9-10 ஆம் வகுப்பு | |
| 1 | அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 100 கிராம் | 120 கிராம் | 200 கிராம் |
| 2 | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| 3 | எண்ணெய் | 2 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் |
| 4 | உப்பு | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் |
| 5 | காய்கறிகள், தாளிதம், உப்பு மற்றும் எரிபொருள் | *35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா |
| 6 | வேகவைத்த உருளைக் கிழங்கு (திங்கட்கிழமை) | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | |
| 7 | வேகவைத்த முழு கொண்டைக் கடலை அல்லது வேகவைத்த முழு பச்சைப் பயறு (செவ்வாய்க் கிழமைகளில் மாற்றி) | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | |
| 8 | வேகவைத்த ஒரு முட்டை (வியாழக் கிழமை) | 46 கிராம் | 46 கிராம் | 46 கிராம் | 46 கிராம் | |

* காய்கறிகள்—15 பைசா, தாளிதம் மற்றும் உப்பு—9 பைசா, எரிபொருள்—11 பைசா.

[2004 ஜூலை 28

இணை உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் சத்துமாவு விகிதம் பின்வருமாறு:

| ஊட்டச்சத்து நிலை | சத்துமாவு அளவு | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் (6—24 மாதங்கள்) | குழந்தைகள் (25—36 மாதங்கள்) | கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் |
| சாதாரண நிலை | 50 கிராம் | 100 கிராம் | 100 கிராம் |
| நிலை 1 மற்றும் 2 | 50 கிராம் | 100 கிராம் | |
| நிலை 3 மற்றும் 4 | 100 கிராம் | 150 கிராம் | |

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) அனைவருக்கும் ஊட்டச்சத்து

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-3 தேர்தெடுக்கப்பட்டோருக்கு

ஊட்டச்சத்து (இயல்பான நிலை – வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள்)

சத்துணவு மையத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படுகிறது.

**புரதச் சத்து மிகுந்த உணவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து புரதச் சத்து மிகுந்ததாக ஒரு பயனாளிக்கு வாரத்தில் முறையே, திங்கட்கிழமை 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கும், செவ்வாய்க்கிழமை 20 கிராம் முழுக் கொண்டைக் கடலை அல்லது 20 கிராம் முழு பச்சைப் பயறு (மாற்றி) மற்றும் வியாழக்கிழமை வேகவைத்த ஒரு முட்டை ஒவ்வொரு வாரமும் சத்துணவுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு பயனாளிக்கும் வாரம் ஒருமுறை கூடுதலாக 168.30 கலோரி சத்தும், 10.93 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது.



2004 ஜூலை 28]

**மதிய உணவில் கறிவேப்பிலை பொடி, முருங்கை இலைப்பொடி**

குழந்தைகளுக்கு வைட்டமின்-ஏ சத்து குறைப்பாட்டை போக்க மதிய உணவில் ஒரு குழந்தைக்கு 2 கிராம் வீதம் கறிவேப்பிலை பொடி/முருங்கை இலைப் பொடி வாரம் 5 தினங்களுக்கு (திங்கள் முதல் வெள்ளிவரை), காய்கறிகளுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் முன்னோடித் திட்டமாக தேனி, காஞ்சிபுரம், பெரம்லூர், கடலூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு வட்டாரங்களில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இதற்கென ஒரு குழந்தைக்கு, நாள் ஒன்றிற்கு 20 பைசா செலவினம் என்ற வீதத்தில் ரூ.22 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 35,000 குழந்தைகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

**சர்க்கரைப் பொங்கல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளன்றும் மதிய உணவு பெறும் பயனாளிகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை சீர்ப்படுத்தி அதன் தரத்தை மேம்படுத்தி செவ்வனே வடிவமைத்து திருத்தியமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்தும் வகையில், அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதுவரையில் சத்துணவு மையங்களை செப்பனிட ரூ.13 கோடி ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. மேலும் 2003-2004 ஆம் நிதியாண்டில் சத்துணவு மையங்களை செப்பனிட மேலும் ரூ.12.10 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில், சத்துணவு மையங்களுக்குத் தேவையான அலுமினியப் பாத்திரங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சத்துணவு மற்றும் அங்கன்வாடி மைய பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவதற்கு ரூ.1.96 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 28

**பெண்களுக்கு வேலைவாய்ப்பு**

இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகம் கிடைக்கின்றன. விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும், கீழே குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர்கள் உள்ளனர். 500-க்கு மேற்பட்ட பயனாளிகள் உள்ள மையங்களுக்கு கூடுதலாக ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர் நியமிக்கப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1 | சத்துணவு அமைப்பாளர் | 1 |
| 2 | சமையலர் | 1 |
| 3 | உதவியாளர் | 1 |

## 3.2 ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு தேசிய திட்டத்தின்கீழ் இலவச அரிசி வழங்குதல்

மத்திய அரசு 15-08-1995 முதல் மனித வள மேம்பாடு மற்றும் கல்வித் துறையின் மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் வீதம் மதிய உணவு வழங்குவதற்காக இலவச அரிசி வருடத்தில் 10 மாதத்திற்கு அளித்து வருகிறது.

தமிழகத்தில் ஏற்கெனவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் உள்ளமைப்பு வசதிகள் உள்ளதால், இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, சமைத்து குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

## 3.3 கண்காணித்தல்

சத்துணவு மையங்களில் மாணவர்களின் வருகைக்குக்குத் தக்கவாறு உரிய அளவில் தரமான உணவு வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க ஒரு குழுவும், பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க மாவட்ட / வட்டார / மாநகராட்சி / நகராட்சி மற்றும் ஊராட்சி மன்ற அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு செயலாற்றி வருகின்றன. இக்குழுக்களில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் இடம் பெற்றுள்ளனர்.



2004 ஜூலை 28]

### உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது)

## 3.4 முன்னுரை

ஊட்டச்சத்து நிலை என்பது மக்களின் ஒட்டுமொத்த நலனைப் பற்றிய ஒரு குறியீடாகும். முன்பருவ பள்ளி குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை என்பது சமுதாயத்தில், மக்கள் வாழும் நிலைமையினைத் தெரிவிக்கும் ஒரு குறியீடாகும். கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தற்சமயம் குழந்தைகளிடையே ஊட்டச் சத்து நிலை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. உதாரணமாக 1992-93-ல் 41.4 சதவீதமாக இருந்த இயல்பு நிலை குழந்தைகள், 2003-2004-ல் 60 சதவீதமாக உயர்ந்துள்ளது. குழந்தைகளின் கடுமையான ஊட்டச் சத்து குறைபாடுள்ள நான்காம் நிலை 2003-2004-ல் 0.2 சதவீதமாகக் குறைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. குழந்தைகளுக்கான இறப்பு விகிதம் 1998-ல், 1,000-க்கு 53 ஆக இருந்தது. இவ்விகிதம் 2002-ல் 44 ஆகக் குறைந்துள்ளது. சிசு இறப்பு 1,000-க்கு 30 என்கிற அளவில் பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் குறைக்கப்பட்டுவிடும்.

உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் நமது மாநிலத்தில் உள்ள 318 கிராமபுற வட்டாரங்களில் செயல்படும் 19,500 மையங்களின் மூலமாக தன்னுடைய சேவையினை அளித்து வருகிறது.

ஒரு அங்கன்வாடி மையம் செயல்படுத்தப்பட சமவெளிப் பகுதிகளில் ஒரு மையத்திற்கு 1,000 மக்கட் தொகை என்பதும், மலைப்பகுதிகளுக்கு 700 மக்கட் தொகை என்பதும் ஒரு அளவுகோலாகும். இத்திட்டத்தின் பயன்கள் சென்றடையாத, திட்டத்தின் செயல்பாடுகளுக்குள் கொண்டு வரப்படாத மக்களுக்கு சேவை அளிக்கும் நோக்கத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையின் மூலம் 12,154 அங்கன்வாடி மையங்கள் நிறுவப்பட்டுள்ளது. இதில் 7,343 இரட்டை மையங்களும் 514 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மையங்களும் 4,239 சமவெளிப் பகுதிகளில் புதிய அங்கன்வாடி மையங்களும் 58 அங்கன்வாடி மையங்களும் அடங்கும். தற்போது ஒட்டுமொத்தமாக 42,279 மையங்கள் உலக வங்கி உதவிபெறும் ஒகுவதி-3 மற்றும் ஒகுவதி (பொது)-வில் உள்ள 434 திட்டப் பகுதிகளில் செயல்படுகின்றன.

[2004 ஜூலை 28

**திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்**

- 0–6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்தி அதன் மூலம் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாட்டை தடுத்து, குழந்தை பராமரிப்பு பழக்கத்தினை குடும்ப அளவில் மேம்படுத்துவது.
- பெண்களிடையே குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்துதல்.
- குடும்பத்தின் ஊட்டச்சத்து, சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக தேவையான பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேலோங்கச் செய்வது அதன்மூலம் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னுரிமை மேம்பாட்டினை உயர்த்துவது.
- குடும்பம் முழுவதையும் ஒரு அங்கமாக (யூனிட்) கொண்டு அனைத்து சுகாதார ஊட்டச்சத்து பணிகளும் வாழ்க்கை சுழற்சி முறையில் செயல்படுத்துவது.

**இத்திட்டத்தின் பயனாளிகள்**

- 0–3 வயது குழந்தைகள்
- 3–6 வயது குழந்தைகள்
- கர்ப்பிணித் தாய்மார்கள்
- பாலூட்டும் தாய்மார்கள்
- ஓய்வூதியம் பெறும் முதியோர்கள்
- வளர் இளம் பெண்கள்
- சமுதாயக் குழுக்கள்/சமுதாய தலைவர்கள்

**அங்கன்வாடி மையத்தில் அளிக்கப்படும் திட்டப்பணிகள்:**

- எடை எடுத்து வளர்ச்சி நிலையை உயர்த்துதல்
- அனைத்து மற்றும் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவு அளித்தல்



2004 ஜூலை 28]

- குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி முன்பருவக் கல்வி
- ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி
- சுகாதாரப் பணியாளர்கள் மூலம் (கிராம நல செவிலியர்/ மருத்துவ அலுவலர்) சுகாதாரப் பணிகள் அளிப்பது.
- மேல் மருத்துவ சிகிச்சைக்காக பரிந்துரைத்தல்

**திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள்:**

- அங்கன்வாடி மையத்திலேயே சேவை வழங்குதல்
- உரிய பயனாளிகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார சேவைகள் வழங்குதல். இப்பகுதியில் தொடர்புடைய நிறுவனங்களை சேர்த்துக் கொள்ளுதல்.
- அங்கன்வாடி மையத்திலேயே சுகாதார மற்றும் ஊட்டச் சத்துப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து நலப் பணிகளை அளித்தல்.
- சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து மேற்பார்வையாளர்கள் இணைந்து ஆய்வு செய்தல்.
- ஆரம்பச் சுகாதார நிலையம், வட்டார மற்றும் மாவட்ட அளவில் இணைந்து ஆய்வு செய்தல்.
- பயிற்சி மற்றும் தொடர்புத் துறைகளின் மூலமாக திட்டத்திற்கு ஆதரவு அளித்தல்.
- கிராம செயல் குழுவின் மூலமாக, சமுதாயப் பங்கேற்பினை ஊக்குவித்தல்.

**2004–2005–க்கான திட்டங்கள்**

“ஊட்டச்சத்து குறைபாடு மேலாண்மை” என்கிற யுக்தியிலிருந்து “ஊட்டச்சத்து குறைபாட்டினை தவிர்த்தல்“ என்கிற யுக்திக்கு மாற்றப் பட்டுள்ளது. எனவே வளர் இளம் பெண்களின் ஊட்டச்சத்து நிலை மேம்பட அதிக கவனம் செலுத்தி வாழ்க்கைக் கல்வி பெற்று வளம் பெறச் செய்தல்.

[2004 ஜூலை 28

தொடர்புடைய துறைகள் தனியாக செயல்படுவதைவிட ஒருங்கிணைந்து செயல்படுத்தி நலப் பணிகளைப் பெற்று ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்துதல்.

1. குழந்தைகளின் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கும், குணப்படுத்துவதற்கும், மறுவாழ்வு அளிக்கவும் அனைத்து அங்கன்வாடி மையங்களும் தொடர்பு மையங்களாக செயல்படுகின்றன.

2. சுகாதாரத் துறையின் ஒத்துழைப்புடன் வளர் இளம் பெண்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்குதல் மற்றும் வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து அளித்து அதன் மூலம் அவர்களை இரத்த சோகை நோயிலிருந்து உடல் நலத்தை பாதுகாத்தல்.

3. கிராம அளவிலான நிர்வாகக்குழு மூலமாக பேறுகால தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், 0-3 வயதுக் குழந்தைகள், 3-5 வயதுக் குழந்தைகள் ஆகியோர்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நலப்பணிகள் ஆகியவற்றை அங்கன்வாடி மையங்கள் மூலமாக அளித்தல்.

4. கிராம அளவில் அயோடின் கலந்த உப்பினை உபயோகிக்கச் செய்தல் மற்றும் அயோடின் உப்பு சோதனை உபகரணத்தை பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

## 3.5 இத்திட்டத்தின்கீழ் உள்ள பல்வேறு பிரிவுகளின் திட்டச் செயல்பாடுகள் வருமாறு:-

### ஊட்டச்சத்து பிரிவு

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டத்தின்கீழ் பல்வேறு நிலையில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்கும் பொருட்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் (பிரதம மந்திரியின் கிராம யோஜனா திட்டத்தை தவிர்த்து) ரூ.27 கோடி அளவிற்கு செலவினங்கள் மேற்கொள்ளப்படும்.

உலக வங்கி நிதி உதவியில் 2004-2005 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் மற்றும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன:-



2004 ஜூலை 28]

குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் மற்றும் கிடங்கு கட்டுவதற்கு ரூ.795 இலட்சத்தில் 159 வட்டார அலுவலகங்கள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில், 31-03-2004-ல் 76 கட்டடங்களின் அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்றுள்ளன. மீதமுள்ள 83 கட்டடங்கள் விரைவில் நிறைவு பெற்றுவிடும். 82 அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்காக ஏற்கெனவே உலக வங்கி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து ஒட்டு மொத்த சேமிப்பிலிருந்து ரூ.76.87 இலட்சம் செலவழிக்கவும், ரூ.25.63 இலட்சம் மாநில ஒதுக்கீடாக செவழிக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும்.

### சுகாதாரப் பிரிவு

பொது சுகாதாரத் துறையுடனும், பிற துறைகளுடனும் ஒருங்கிணைந்து கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 0-6 வயது குழந்தைகள் ஆகியோருக்கு நல்ல சுகாதாரப் பணிகள் அளிக்கப்பட்டுள்ளன. 2004-2005-ல் கீழ்வரும் செயல்பாடுகள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது:

- 19,500 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.117 இலட்சம் செலவில் மருந்து உபகரணப் பெட்டி வாங்கி வழங்குதல்
- குழந்தைகள் மற்றும் வளர்இளம் பெண்களுக்காக அல்பெண்டசால் மாத்திரை (வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து) ரூ.15 இலட்சம் செலவில் வாங்கி வழங்குதல்.
- 1,575 குழந்தைகள் நேய கழிப்பிடங்களின் கட்டுமானப் பணிகளுக்கு ஆகும் செலவினை (2-வது தவணை) ரூ.35.73 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### முறைப்படுத்துதல் பிரிவு

கடுமையான ஊட்டச் சத்து குறைபாட்டை தடுத்து, ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தும் வகையில் சிறப்பு ஆய்வுகள் மேற்கொண்டு அதன் மூலம் பிரச்சினைகளைக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். கிராம செயல்குழுக்கள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழு 15 உறுப்பினர்களைக் கொண்டது. இக்குழு கிராம அளவில் செயல்படும் திட்டங்களைக்

கண்காணிப்பதோடு திட்டப் பணிகள் செவ்வனே நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பினை அளிக்கிறது. இதற்கென 14 மாவட்டங்களில் ரூ.2.14 கோடி செலவில் பயிற்சிகள் நடத்தப்படும்.

மொத்தம் 9 செயல்முறை ஆய்வுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 6 ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதம் உள்ள 3 செயல்முறை ஆய்வுகளும், ஒரு சமுதாய மதிப்பீட்டு ஆய்வும் 5 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன. அதில் மீனவ சமுதாயம் மற்றும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் ஆகியவர்கள் அடங்கிய மாவட்டங்களும் இடம் பெற்றுள்ளது.

**நிர்வாகப் பிரிவு**

1. திட்டப் பணிகளை செயல்படுத்துவதில் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கும் பொருட்டு சிறப்பாக பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய 1,005 நபர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகை ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. சென்னை, தரமணியில் தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் தற்போது புதிய திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் ரூ.50 இலட்சம் செலவில் கட்டுவதற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மக்கள் பங்கேற்பு மற்றும் தகவல் தொடர்பு கல்வி பணிகள்**

தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் குடும்ப மற்றும் தனி மனித பழக்க வழக்க மாற்றத்திற்கு முக்கிய துணை புரிகின்றது. இலக்கீடு செய்யப்பட்ட குழுவினிடையே விரும்பிய மாற்றதை ஏற்படுத்தவும், மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பலதரப்பட்ட தொடர்பு மற்றும் சமுதாய பங்கேற்பு செயல்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இலக்கீடு செய்யப்பட்ட குழுவிற்கு அறிவூட்டவும், சமுதாய பங்கேற்பின் மூலம் ஊட்டச்சத்து பற்றாக்குறையை தடுக்கவும், நிர்வகிக்கவும், தமிழ்நாட்டை ஊட்டச்சத்து பற்றாக்குறைபாடற்ற மாநிலமாக உருவாக்க பல உள்ளார்ந்த தொடர்புப் பணி செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு இலட்சம் படிக்காத ஏழை எளிய மகளிர்க்கு எழுத்தறிவும், ஊட்டச்சத்து கல்வியும்



2004-05 ஆம் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் சில மாவட்டங்களில் ஆங்காங்கே காணப்படும் பெண் சிசுக்கொலை மற்றும் இளம் வயது திருமணம் ஆகிய கொடுஞ்செயல்களைத் தடுக்கப் பலவகையான விழிப்புணர்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கூறிய கொடுமையான செயல்களைத் தடுக்கும் வகையில் தகவல் கல்வி தொடர்புப் பணிகள் சேலம், நாமக்கல், மதுரை, தேனி, ஈரோடு, தர்மபுரி மற்றும் கரூர் போன்ற மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் செய்தித் தொகுப்பு "சிட்டுக் குருவி சேதி தெரியுமா?" என்ற இதழ் 2004-05 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும். 2004-05 ஆம் ஆண்டில் தகவல் கல்வி தொடர்பு பணிகளுக்காக ரூ.72.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சி பிரிவு**

உள், வெளி விளையாட்டுப் பொருட்கள் வாங்குதல், ஆரம்ப கால குழந்தை வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் முன்னேற்றம் சார்ந்த புது மாதிரியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி குழந்தைகள் உள், வெளி விளையாட்டை விளையாட விளையாட்டுப் பொருட்கள் அங்கன்வாடி மையங்களுக்கு வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது.

**தரம் உயர சுதந்திர கருத்து வெளிப்பாடு (FREQI)**

திட்டப் பணிகளின் செயல்பாடுகளில் தரம் உயரும் வகையில் சுதந்திர கருத்துப் பரிமாற்றம் அவசியம். இதன்படி அனுபவங்களை பகிர்ந்து கொள்ள இருபத்து நான்கு மாவட்ட வட்டார அளவில் கூட்டம் நடத்தப்படுகிறது.

**கல்விச் சுற்றுலா**

களப் பணியாளர்களின் செயல்பாடுகளை மேம்படுத்தி திட்ட பணிகளைச் செம்மையாக செய்திட கல்விச் சுற்றுலா வழிவகை செய்கிறது. இதன்மூலம் மாவட்டங்களுக்கிடையே, மாவட்டத்திற்குள்ளாக கல்விச் சுற்றுலா சென்று சிறந்த செயல்பாடுகளை கண்டறிய 2004-05 ஆம் ஆண்டிற்கு ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.6 உதிஷா பயிற்சி

உலக வங்கியானது மைய அரசின் மூலம் அளிக்கும் நிதி ஒதுக்கீட்டில் உதிஷா பயிற்சியின்கீழ் அங்கன்வாடி பணியாளர் உதவியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்குப் பணிப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி, மற்றும் புத்தறிவுப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி தேசிய அளவிலான பயிற்சிக்கு 1-4-1999 முதல் 5 வருடங்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.15.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.6.77 கோடி செலவினத்தில், கீழ்க்கண்ட பயிற்சிகள் தொடங்கப்பட்டு, 2004-2005 ஆம் நிதியாண்டில் முடிவுறும்:-

1. இத்திட்டத்தில் பணிபுரிவோர் மற்றும் சமுதாயத்தில் உள்ள முக்கிய நபர்களுக்கு ஊட்டச்சத்து கொள்கை பற்றிய பயிற்சி
2. மேற்பார்வையாளர்களுக்கு ஆரம்ப காலத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் ஊனத்தை (இயலாமை) கண்டறியும் பயிற்சி
3. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கான பயிற்சி
4. ஊட்டச்சத்து மற்றும் சுகாதார துறையை சார்ந்த அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி, வட்டார, அளவு, பகுதி அளவு மற்றும் மைய அளவு
5. அங்கன்வாடி பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி
6. மேற்பார்வையாளர்கள் மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கான பணிப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி
7. குழந்தை வளர்ச்சித் திட்டம் அலுவலர்களுக்கான பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி
8. விளையாட்டு முறைக் கல்வி
9. கற்றலின் இனிமை, மேலாண்மை பயிற்சி
10. மருத்துவ அலுவலர்களுக்கான வாழ்க்கை சுழற்சி அணுகுமுறைப் பயிற்சி உதிஷா திட்டத்தின் பல்வேறு வகையான பயிற்சிகளுக்காக 2004-05 ஆம் ஆண்டிற்கு ரூ.5.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றுதல்

அங்கன்வாடி மையங்களின் மூலம் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்ற, அரசாணை (நிலை) எண் 55, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 8-4 -2002-ல் ஆணையிடப்பட்டது. அங்கன்வாடி மையங்கள் மூலம் சிறார்கள், வளரிளம் பெண்கள், மகளிர் மற்றும் குடும்பத்தினர் பயன்பெற முடியும். மாநிலம் முழுவதும், தகவல், கல்வி மற்றும் தொடர்பு முகாம்களை நடத்தி மக்கள் இயக்கத்தின் மூலம் குறிப்பாக, பஞ்சாயத்து உறுப்பினர் மற்றும் தலைவர்கள் மூலம், ஊட்டச்சத்து குறைவினை அடியோடு போக்கலாம். சுகாதாரம் / மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களை ஒருங்கிணைத்து பயிற்சி அளிப்பதன் மூலம், அவர்களுடைய அனைத்து ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து, ஊட்டச்சத்து குறைபாடற்ற நிலையை அடைய இணைந்து செயலாற்ற இயலும். தகவல் மற்றும் பயிற்சிகளை ஒருங்கிணைக்க சுகாதார துறை ஈடுபடுத்தப்படும். மேற்படி நோக்கத்தினை அடைய ஏனைய தொடர்புடைய துறைகளும் ஈடுபடுத்தப்படும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் மற்றும் சுகாதாரத் துறைகளின் களப் பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தேவையான தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த அக்டோபர் 2002-ல், இத்திட்டத்தின் மிக முக்கியமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள தமிழ்நாட்டை **ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றுவதற்கான** மாநில வரைவு கொள்கையை வரையறுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.8 பிரதம மந்திரியின் கிராமோதய யோஜனா திட்டம்

மத்திய அரசின், பிரதம மந்திரியின் **கிராமோதய யோஜனா** திட்டம் கடந்த 2000–2001 ஆம் ஆண்டிலிருந்து துவங்கப்பட்டு, கிராம மக்களின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம், கொண்டுவரப்படாத / சென்றடையாத பகுதிகளில் உள்ள 6 மாதக் குழந்தைகள் முதல் 36 மாதக் குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்படுகிறது.

மேற்படி திட்டத்திற்கு 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 28

### 3.9 ஊட்டச்சத்து குறைபாடுள்ள கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர்இளம் பெண்களுக்கு 6 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம்

திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுள்ள, 40 கிலோ எடைக்கும் குறைவாக உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மற்றும் 35 கிலோ எடைக்கும் குறைவாக உள்ள வளர் இளம் பெண்களுக்கு 6 கிலோ அரிசி மாதமொன்றிற்கு இலவசமாக வழங்கும் முன்னோடித் திட்டம் 25-11-2002 முதல் ரூ.1.18 கோடி செலவில் மத்திய அரசின் வழிமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் 45,760 பயனாளிகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 32,656 பயனாளிகளும் பயன் பெறுகின்றனர். கடந்த நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.1.13 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.10 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது) 1975 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. தற்போது இத்திட்டம் 116 திட்டங்களாக விரிவாக்கப்பட்டு, 67 திட்டங்கள் கிராமப்புறங்களிலும், 47 திட்டங்கள் நகர்ப்புறங்களிலும், 2 திட்டங்கள் மலைவாழ்ப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டம், மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பணியாளர் செலவினம் உட்பட அனைத்து செலவுகளும் மத்திய அரசின் நிதியின் மூலம் ஈடுகட்டப்படுகிறது. இணை உணவு தொடர்பான செலவினம், மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில், கீழ் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- அங்கன்வாடி மையங்களுக்கு மருந்து பெட்டிகள் வழங்குதல்
- அங்கன்வாடி மையங்களுக்கு முன்பருவக் கல்விக்கு தேவையான பொருட்கள் வழங்குதல்.
- வளரிளம் பெண்களுக்கான திட்டத்தில் இரத்த சோகையினை கட்டுப்படுத்த, இரும்பு சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல், குடல் புழு நீக்க மாத்திரைகள் வழங்குதல், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, சட்ட உரிமை, வீட்டைப் பராமரித்தல், குழந்தைப் பராமரிப்பில் விழிப்புணர்வுப் பயிற்சி அளித்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.



2004 ஜூலை 28]

சமுதாயப் பங்கேற்பினை மேம்படுத்த தொடர்பு முகாம்கள், கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுவதுடன், தேசிய நாட்களான குழந்தைகள் தினம், தேசிய ஊட்டச்சத்து வார விழா போன்ற விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் பணியாற்றும் களப் பணியாளர்களின் செயல்திறனை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாநில அளவில் 26 விருதுகளும், தேசிய அளவில் ஒரு விருதும் வழங்கப்படுகின்றன.

### 3.11 கிஷோரி சக்தி யோஜனா (வளர் இளம் பெண்களுக்கான திட்டம்)

வளர் இளம் பெண்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி முகாம் திட்டம் 2001–2002 ஆம் ஆண்டிலிருந்து கிஷோரி சக்தி யோஜனா என்ற புதிய திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் புதுக்கோட்டை, தர்மபுரி, மதுரை, விழுப்புரம், தஞ்சாவூர், நீலகிரி, சேலம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 37 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் ரூ.40.15 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, சட்ட உரிமை, வீட்டைப் பராமரித்தல், குழந்தைகள் பராமரிப்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த 11-15 வயதுள்ள வளரிளம் பெண்களுக்கு 2 நாள் பயிற்சி முகாம் மற்றும் 16-18 வயது வரையுள்ள பெண்களுக்குத் தொழிற் கல்வி பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. வளரிளம் பெண்களுக்குத் தொழிற் கல்வி பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும், முந்தைய ஆண்டு நடைமுறைப்படுத்தியது போன்றே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.12 தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்

குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டினை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள இவ்வரசு, 1993ஆம் ஆண்டு **"டாக்டர் ஜெ ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தினை"** ஆரம்பித்து செயலாக்கியது. இத்திட்டத்தின் சமீபத்திய வளர்ச்சிகளைக் கருத்திற்கொண்டு, தொடர்

நடவடிக்கையாக 2001–2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேம்படுத்தப்பட்டு "தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்" என மாற்றம் செய்யப்பட்டது.

இத்திட்டம் தமிழக அரசின் துறைகளான சமூக நலம், கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் நலன் மற்றும் இதர சம்பந்தப்பட்ட துறைகளின் பணிகளை ஒருங்கிணைந்து மகளிர் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்கான இத்திட்டத்தின் குறிக்கோள்களை அடையச் செய்வது ஆகும்.

இத்திட்டத்தில் 2010ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டு மற்றும் 2006 ஆம் ஆண்டுக்கென இடைக்கால இலக்குகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு மாநில அளவிலான குழு, துறைத் தலைவர்கள் அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழு என குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 3.13 பயனாளிகளில் குறைந்தபட்சம் 30 விழுக்காடு ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வகுப்பினராக இருப்பது உறுதி செய்யப்படுகிறது

*2004–2005–ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்*

*(ஊரக வளர்ச்சி இயக்ககம்)*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு எவர் சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்குதல் | 100.00 |



## அத்தியாயம்–4

### மகளிர் நல மேம்பாடு

4.1 1983 ஆம் ஆண்டு, தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழக அரசால் மகளிரது அதிகாரப் பகிர்விற்காக நிறுவப்பட்டது. இந்நிறுவனம் (அ) தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், (மகளிர் திட்டம்), (ஆ) மகளிர் மனமகிழ் மன்றம் அமைத்தல், (இ) பெண்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சித் திட்டம், (ஈ) மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையம், (உ) வறுமைக் கோட்டிற்குகீழுள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம், (ஊ) வாழ்க்கை மற்றும் தொழில் பயிற்சித் திட்டம், (எ) 25,000 புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்கும் திட்டம், (ஏ) தேனி மாவட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்களை பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தி வருகிறது.

### 4.2 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்)

1991-92 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் பரிட்சார்த்த முறையில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவன வெளிநாட்டு நிதியுதவியுடன் தர்மபுரியில் துவங்கப்பட்டது. இத்திட்டம் வளர்ச்சி பெற்று முதன்மையாக செயல்பட்டதால் 1992-94 ஆண்டுகளில் சேலம், தென்னாற்காடு, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 1995-96 ஆம் ஆண்டு இத்திட்டம் மிகவும் சிறப்பாகவும் பயனுள்ள வகையிலும் செயல்படுத்தப்பட்டதால், எதிர்கால வளர்ச்சிக்கு மாதிரி திட்டமாக மாநில வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் இது கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் தற்போது "மகளிர் திட்டம்" என்ற பெயரில் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அரசுசாரா நிறுவனங்களின் உதவியுடன் சுய உதவிக் குழுக்கள் என்ற வலை அமைப்பு உருவாக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு முதற்கொண்டு இத்திட்டம் நிலைத்த தன்மையை அடையவும் மற்றும் தொலைவிலுள்ள குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புற பகுதி / குடிசைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. 2004 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை, கிராமப்புறங்களில் 1,26,404 சுய உதவிக் குழுக்கள் (21,46,856 உறுப்பினர்கள்) மற்றும் நகர்ப்புறங்களில் 35,735 சுய உதவிக் குழுக்கள் (6,03,518 உறுப்பினர்கள்) ஆக மொத்தம் 1,62,139 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 27.50 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சுய உதவிக் குழுக்கள் இதுவரை ரூ.439.34 கோடி சேமிப்பு செய்துள்ளன.

கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்காக மகளிர் திட்டமும், ஊரக வளர்ச்சித் துறையின் பொன் விழா கிராமப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதே போன்று நகர்ப்புற சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் மகளிர் திட்டமும் பொன்விழா நகர்ப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. வணிக வங்கிகளில் மட்டும் அல்லாது தமிழ்நாடு மகளிர் மேம்பாடு திட்ட வரைமுறைக்குட்பட்டு, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கணக்கு தொடங்கி கடன் பெற்று வருகின்றன.

தற்காலத்தில், பெண்கள் தங்களின் பலம், குடும்ப நிதி ஆதாரம் மற்றும் அவற்றை சமாளிக்கும் திறமை ஆகியவற்றை நன்கு அறிந்தவர்களாக உள்ளனர். மேலும் வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, குழு மற்றும் குழு மகளிருடையதாகும். ஆகையால் எந்தத் தொழில்கள் செய்யலாம் என்பதையும், அதற்குத் தேவையான கடனின் அளவையும் குழு உறுப்பினர்களே நல்லமுறையில் தீர்மானிக்கின்றனர். திட்ட அமலாக்க அலுவலகங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆலோசகர்களாகவும் வழி நடத்துனர்களாகவும் மட்டுமே செயல்பட்டு வருகின்றனர். முடிவு எடுப்பது மகளிரிடம் விடப்பட்டுள்ளது.

ஒரு சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கடன் பெறும் தகுதியை அடைந்தவுடன், வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுத் தரப்படுகிறது. 31-03-2004 நிலவரப்படி வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, குடிசை மற்றும் கிராமத் தொழில் போன்ற கிராமப்புறத் தொழில் செய்யவும், மற்றும் நகர்ப்புறத்தில் இதர சிறிய வியாபாரம், மிகச்சிறிய தொழில்கள்



மேற்கொள்ளவும் 1,24,288 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.674.19 கோடி வங்கிக் கடன் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளில், வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த சுமார் 15 இலட்சம் பெண்களை சுய உதவிக் குழுக்களாக அமைக்க தமிழ்நாடு அரசு ஊக்கம் அளித்து உதவி செய்யவுள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சொந்தமாக மிகச்சிறிய தொழில் துவங்க ஏதுவாக தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியைத் தொடர்ந்து சிறப்பு முனைப்புடன் வாழ்க்கை தொழிற் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மகளிரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.20.00 கோடி நிதி மகளிர் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***2004-2005 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது:***

- சிறுபான்மையின, ஆதி திராவிட, மற்றும் பழங்குடியின மகளிரது சமூக பொருளாதார நிலை மேம்படுவதற்கும், வன்கொடுமைகளில் இருந்து பாதுகாக்கவும் அவர்களை சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர வைத்தல்.
- பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுய உதவிக் குழுப் பெண்களுக்கு பொருத்தமான வகையில், வேலைவாய்ப்புத் திட்டங்கள் மற்றும் சிறு வியாபார அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படும். இது ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000 பெண்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பினை உறுதி செய்யும்.
- சந்தைப்படுத்துதல் (Marketing) சுய உயதவிக் குழுப் பெண்களின் வருமானத்திற்கும் மற்றும் பொருளாதார மேம்பாடு வாய்ப்பினை அதிகரிக்கக்கூடிய ஒரு முக்கிய செயல்பாடாகும். எனவே, சுய உதவிக் குழுக்களது பொருட்கள் விற்பனைக்கு வகை செய்யும் ஒரு செயல் திட்டம் நடப்பு ஆண்டில் வரையப்படும்.
- தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம், தமிழ்நாடு பெண்கள் வேளாண் திட்டம் மற்றும் மகளிர் மன்றத்தைச் சார்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பயன்பெறவும், பொருளாதார மேம்பாடு அடையவும் அவர்களை மகளிர் திட்டத்தின்கீழ்

கொண்டுவந்து அவர்களுக்கு மகளிர் திட்டத்தில் உள்ள அனைத்து உதவிகளையும் அளித்தல்.

- கிராம மற்றும் வட்டார அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புப் பணிகளை வலுப்படுத்தும் பொருட்டு இக்கூட்டமைப்புகளுக்கு மூல வைப்பு நிதி வழங்குதல் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு பயிற்சி அளித்தல் மற்றும் குழுப் பராமரிப்புப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துதல்.
- கடலோர மாவட்ட மீனவ சுய உதவிக் குழுப் பெண்களுக்கு நூதனமான மீன் வகை உணவுப் பண்டங்கள் தயாரித்தல் மற்றும் பதப்படுத்துதல் போன்ற சிறப்புப் பயிற்சிகள் வழங்குதல்

### 4.3. மகளிர் மனமகிழ் மையங்கள்

சத்தான உணவு, உடல் நலம், கல்வி மற்றும் பிற தேவைகள் அன்றி உழைக்கும் ஏழைப் பெண்களுக்கு மனமகிழ்ச்சியும் மிக இன்றியமையாத தேவையாகும். எனவே, சுய உதவிக் குழுக்களின் பெண்களின் பயனுக்காக மனமகிழ் மன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. ஊராட்சியில் உள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் ஒன்று கூடி தங்களுக்கு ஆர்வமுள்ள நல்ல கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், சமூகப் பிரச்சினைகளைக் கூடி விவாதிக்கவும், விளையாட மற்றும் பிறவற்றிற்கும் இந்த மையத்தைப் பயன்படுத்துகின்றனர். குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்கள், முற்றம் உட்பட மாத இதழ்களை இம்மையங்களில் படிக்கிறார்கள். இதுவரை 275 மனமகிழ் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 10,000 ஆதிதிரா்விட / பழங்குடி மகளிர் உட்பட சுமார் 50,000 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறுவர்.

### 4.4 மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையங்கள் அமைத்தல்

தகவல் தொழில் நுண் பிரிவில் உள்ள சிறு தொழில் விவரங்களை சுய உதவிக் குழு பெண்களுக்கு விளக்கிக் கூறவும் மற்றும் அவர்களை இத்தொழிலில் ஈடுபட ஊக்கமளிக்கும் பொருட்டும், மாவட்டந்தோறும் ஒரு தகவல் மற்றும் இணைய தள மையம் உருவாக்கத் திட்டமிடப்பட்டது. ஏழை எளிய மற்றும் ஆதிதிராவிட பழங்குடியின இளம் பெண்களுக்கு



கணினி பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் 6 இணைய தள மையங்கள் ரூ.15.00 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டன.

***2004-2005 ஆம் ஆண்டில் 3 மையங்கள் உருவாக்க ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.***

### 4.5 புதுமணத் தம்பதியினருக்கு இலவச எரிவாயு இணைப்பு அளித்தல்

ஏழ்மை நிலையில் உள்ள மகளிர் வீட்டில் மாசு ஏற்படுவதைத் தடுக்கவும் மற்றும் வேலைப்பளுவை குறைக்கவும் புதுமண தம்பதியினருக்கு இலவச எரிவாயு இணைப்பு அளிக்கும் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நாள் வரை, சுய உதவிக் குழு குடும்பத்தைச் சார்ந்த 4,514 புதுமணத் தம்பதிகள் பயன் அடைந்துள்ளனர். இவர்களுக்கு தலா ஒரு சிலிண்டர் இணைப்பு வழங்குவதற்காக வைப்புத் தொகையாக மொத்தம் ரூ.35.24 இலட்சம் மாவட்டங்களில் உள்ள சம்பந்தப்பட்ட எரிவாயு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அரசின் உதவியுடன் நடைபெறும் ஏனைய திருமணத் திட்ட புதுமணத் தம்பதிகளுக்கு பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

***2004-2005 ஆம் ஆண்டில் மேலும் 5,000 புதுமணதம்பதிகள் பயன்பெறும் வகையில் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 4.6 25,000 சுய உதவிக் குழுக்களை உருவாக்க உதவி அளிக்கும் திட்டம்

சுய உதவிக் குழு இயக்கத்திற்கு உத்வேகம் கொடுக்கும் பொருட்டு 2003-2004 முதல் 2005-2006 வரையிலான மூன்றாண்டுகளில் 15 இலட்சம் பெண்களைக் கொண்டு 75,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்க அரசு ரூ.262.50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி, 2003-2004 ஆம் ஆண்டில் அரசு வழங்கிய ரூ.87.50 இலட்சம் வழங்கிய நிதியைக்கொண்டு சுமார் 4.22 இலட்சம் பெண்களைக் கொண்டு 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2004–05 ஆம் ஆண்டிற்கு அரசு 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் தொலைவிலுள்ள கிராமப்பகுதிகளில், பழங்குடியினர் வாழும் இடங்களில், மீனவ

[2004 ஜூலை 28

கிராமங்களில், நெசவாளர் வாழும் இடங்களில் மற்றும் நகர்ப்புற குடிசைப்பகுதிகளிலும் உருவாக்கிட ஏதுவாக ரூ.125.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

## 4.7 தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 1,00,000 இலட்சம் பெண்கள் வீதம் 5 இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் திட்டத்தை 2001-2002 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்கள். இத்திட்டத்தை செயல்படுத்தும் முன்னோடி நிறுவனமான தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் பிற அரசு துறை நிறுவனங்களான தாட்கோ, ஊரக வளர்ச்சித் துறை, குடிசைப் பகுதி மாற்று வாரியம், வேளாண்மைத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, பிற்பட்டோர் நலத் துறை, மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, பட்டுப்புழு வளர்ச்சித் துறை போன்றவற்றுடன் இணைந்து செயல்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் 3,63,530 பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்துள்ளது. இதில் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மட்டும் 62,369 பெண்களுக்குப் பயிற்சி அளித்தள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் 22,000 சுய உதவிக் குழுப் பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும், 3,000 சுய உதவிக் குழுப் பெண்களுக்குத் தொழில் திறன் பயிற்சியும், 650 சுய உதவிக் குழுப் பெண்களுக்குத் தொழில் திறன் உயர்வு பயிற்சியும் வழங்க அரசு ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 4.8 வாழ்க்கை மற்றும் தொழில் திறன் பயிற்சி

2003-2004 ஆம் ஆண்டு, ஆண்டு ஒன்றுக்கு 12,500 பெண்களுக்குப் பயிற்சியளிக்க ரூ.100 இலட்சம் வீதம் 2003-04 முதல் 2007-08 வரையிலான 5 ஆண்டுகளில் 50,000 தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற சுய உதவிக் குழுப் பெண்கள் சுயமாக வருமானம் தரும் பொருளாதாரத் தொழில்கள் துவங்க ஏதுவாக வாழ்க்கை மற்றும் தொழில் திறன் பயிற்சி வழங்க ரூ.500 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்தது. அதன்படி 2003-04 ஆம் ஆண்டில் 12,500 பெண்களுக்கு, வாழ்க்கை மற்றும் தொழில் திறன் பயிற்சி வழங்க ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இதுநாள் வரை ரூ.100 இலட்சம் செலவில் 17,500 பெண்களுக்கு வாழ்க்கை மற்றும்



2004 ஜூலை 28]

தொழில் திறன்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டிற்கு மேலும் 12,500 பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க ரூ.175.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவை தவிர மத்திய அரசுத் திட்டங்களான நொராடு (NORAD) மற்றும் ஸ்டெப் (STEP) திட்ட நிதிகளையும் சுய உதவிக் குழுப் பெண்களுக்குத் தொழில் திறன் பயிற்சி வழங்க பயன்படுத்திக் கொள்ளப்பட உள்ளது.

## 4.9. தேனி மாவட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்ட ஒட்டுமொத்த வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு நிறுவனங்களின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட வேண்டும் என அறிவித்துள்ளார்கள். வறுமை ஒழிப்புக்கு சுய உதவி வழிகாட்டு முறை ஒரு படிக்கல்லாக மனதில் பதிந்துள்ளது. அதன்படி தேனி மாவட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தினை 2003-04 முதல் 2006-07 வரையிலான 4 ஆண்டுகளில் செயல்படுத்திட ரூ.220.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாக அனைத்து குடியிருப்புகளிலும் குழுக்கள் அமைத்தல், தகுதியுள்ள அனைத்து குழுக்களுக்கும் கடன் வசதி பெற்றுத் தருதல், தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, குறிப்பாக நிலம் தொடர்பான தொழில்களில் தொழிற் பயிற்சி மற்றும் தொழில் திறன் உயர்வு பயிற்சி, வாழ்க்கை மற்றும் தொழில் திறன் பயிற்சி, சுகாதாரம் மற்றும் சத்துணவு பயிற்சி, அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராமப்புற செவிலியர்கள் மூலம் சத்துணவு குறைபாடில்லாத மாவட்டமாக உருவாக்குவதற்கான பயிற்சி, எழுத்தறிவு அற்ற சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு எழுத்தறிவு பயிற்சி அளித்தல் ஆகியவை அமையும்.

பாதிக்கப்பட்ட நெசவாளர் மற்றும் சிறுபான்மையின குடும்பங்கள், ஆதிதிராவிட மற்றும் மலைவாழ் மக்கள் வசிக்கும் இடங்களில் புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்குவதுடன், அவர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் திறன் பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது. 2003-04 ஆம் ஆண்டிற்கு அரசு வழங்கிய ரூ.55.30 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சியரின் நேரடி பார்வையில் தேனி மாவட்டத்திற்கான சிறப்பு செயல் திட்டம் தயாரித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டிற்கு அரசு மேலும் ரூ.55.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[2004 ஜூலை 28

## 4.10. மகளிருக்கான அரசின் மாநிலக் கொள்கை

இந்த அரசு மகளிருக்கான மாநிலக் கொள்கையினை பயன் அளிக்கத்தக்க வகையில் முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்த உள்ளது. இது பாலின பாகுபாடுகளை நீக்குவது, பெண்கள் வளம் அடைதல், பெண்களுக்கு முடிவு எடுக்க சம வாய்ப்பு அளித்தல், மற்றும் மகளிர் தரமான உயர் வாழ்க்கை பெறுவதல் போன்ற அனைத்து துறைகள் மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகள், வளர்ச்சிக் கொள்கைகளை அமல்படுத்த வழிகாட்டி உதவும்.

அரசின் முற்போக்கான மகளிர் கொள்கை மற்றும் திட்டங்களின் செயல்பாட்டினை ஆண்டுதோறும் அளவிடவும், மதிப்பீடு செய்யவும் மகளிர் வளர்ச்சிக் குறி அட்டவணை, மகளிர் அதிகார பகிர்வு குறியீடுகள் அடங்கிய அரசுத் துறைகளின் பாலின கொள்கை மற்றும் அரசுத் துறைகளை முறைப்படுத்த வழிவகுக்கும் மகளிர் மேம்பாட்டு அறிக்கை தயாரிக்க திட்டமிடப்பட்டு இந்த அறிக்கையை தயாரிக்கும் பணியினை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

## 4.11. தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் ஆதார மையம் (என்.வி.ஆர்.சி.)

தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் ஆதார மையம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஒரு சுயாட்சி உப நிறுவனமாக 2001 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் திறனை வளர்த்தல், தன்னார்வலர்களை உருவாக்குதல், ஆய்வு மேம்பாடு மற்றும் அறிக்கை தயாரிக்கும் திறனை வளர்த்தல் ஆகியவை இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனச் செலவிற்காக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிறுவனம் 2003-04 ஆம் ஆண்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நொராடு மற்றும் ஸ்டெப் திட்ட முன்மொழிவு அறிக்கை தயாரித்திட 5 கருத்துப் பட்டறைகளும், அரசுக் கொள்கைகளை ஆய்வு செய்திட 4 கருத்துப் பட்டறைகளும் 2 மாவட்டங்களில் தொழில் முனைவோர் திட்ட மதிப்பீடு ஆய்வும், சுவயம் சித்தா திட்டத்தில் அளிக்கப்பட வேண்டிய பயிற்சிகளைக் கண்டறியவும், ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகளுக்கு 2 பாலின நிகர்நிலைப் பயிற்சியும், தன்னார்வலர்களுக்கு 2 கலந்துரையாடல் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம், 2004-05 ஆம் ஆண்டில் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி திரட்டுதல், திட்ட முன்மொழிவு அறிக்கை தயார்



2004 ஜூலை 28]

செய்யும் பயிற்சி, ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகள் மற்றும் ஊராட்சி தலைவிகள்/உறுப்பினர்களுக்கு சட்டப் படிப்பு பயிற்சி, உதவி திட்ட அலுவலர்களுக்கு புத்தூட்டப் பயிற்சி, மகளிர் திட்ட அலுவலர்களுக்கு நிறுவன அமைப்பு தொடர்பான மேலாண்மை பயிற்சி, தன்னார்வலர்களுக்கு என கலந்துரையாடல்/பயிற்சி வழங்கத் திட்டமிட்டுள்ளது. மேலும், அரவாணிகள் மற்றும் நரிக்குறவர்கள் போன்ற சமுதாயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தவும் கருதியுள்ளது.

## 4.12 தரிசு நில மேம்பாடு மற்றும் நீர் வள ஆதாரங்களை வளப்படுத்துதல்

உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணவும், விவசாயிகளுக்குப் போதுமான வருமானம் கிடைக்கவும் மற்றும் வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் இந்த அரசு தரிசு நில மேம்பாடு, நீர் வள மற்றும் மண் வள, நிர்வாகம் மற்றும் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தி வருகின்றது. பிற அரசு நிறுவனங்களுடன் இந்நிறுவனம் ஒருங்கிணைந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு/சுய உதவிக் குழுவிற்குத் தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்து வருகின்றது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நிலங்களை மேம்படுத்தத் தேவைப்படும் செப்பனிடு வழிமுறைகளை தேசிய வேளாண்மை வளர்ச்சி வங்கி (நபார்டு)யுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றது.

மாவட்டத்திலுள்ள வேளாண் இணை இயக்குநருடன் ஒருங்கிணைந்து சுய உதவிக் குழுக்களுக்கு நில அடிப்படையிலான வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள் மற்றும் மிகச்சிறு வியாபாரத் தொடர்பான பயிற்சியினை அளித்து வருகின்றது.

## 4.13. மகளிருக்கு கல்வியறிவு

2003–04 ஆம் ஆண்டு உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட உதிஷா–பயிற்சி நிதி உதவியுடன் ஒரு இலட்சம் படிப்பறிவற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு படிப்பறிவு அளிக்கும் திட்டம் ரூ.23,18,400 செலவில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில், இத்திட்டத்திற்காக சிறப்பாக தயாரிக்கப்பட்ட சுகாதாரம் மற்றும் சத்துணவுப் பாடப் புத்தகங்களை கொண்டு ஒரு இலட்சம் படிப்பறிவற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு

[2004 ஜூலை 28

6,000 தாய் பயிற்சியாளர்களான படித்த சுய உதவிக் குழு உறுப்பினர்கள்/ தொண்டு நிறுவனத்தினர் மூலம் எழுதப் படிக்க வைக்கப்படுகிறார்கள். 2004-05 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் மேலும் 1,00,000 படிப்பறிவற்ற பெண்கள் எழுதப் படிக்க வைக்கப்படுவார்கள்.

### 4.14 உலக வங்கி நிதி உதவிபெறும் தமிழ்நாடு அதிகாரப் பகிர்வு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டம்

இந்நிறுவனம் 2004-2005 முதல் 2009-2010 வரையிலான காலகட்டத்திற்கு செயல்படுத்தப்படவுள்ள உலக வங்கி நிதி உதவி பெறும் ரூ.650 கோடி செலவிலான தமிழ்நாடு அதிகாரப் பகிர்வு மற்றும் வறுமை ஒழிப்பு திட்டத்தை ஊரக வளர்ச்சி மற்றும் நிதித் துறைகளின் ஒத்துழைப்புடன் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டில் ரூ.6.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–5

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

### ஊனமுற்றோருக்கான சிறப்பு ஆணையர் அலுவலகம்

ஊனமுற்றோருக்கான நல்வாழ்விற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாநில அரசால் கடந்த 1992-93-ல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ன்கீழ் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அனைத்துப் பிரிவு மக்களின் நல்வாழ்விற்கு பொறுப்பேற்றிருப்பதே ஒரு நல்லரசின் கடமையாகும். அரசின் உதவிக்கரம் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களையும், ஊனமுற்றோரையும் சென்றடைதல் வேண்டும். பல்வேறு நவீனத் திட்டங்கள் பொதுவாக இந்நோக்கத்தை சார்ந்தே உள்ளன.

ஊனமுற்றோருக்கான அரசின் கொள்கை ஊனத்தை தடுத்தல், உரிய நேரத்தில் அவர்களுக்கு உதவுதல் எனும் நோக்கத்துடனும், சாதாரண மனிதர்களைப் போல அவர்களும் சமுதாயத்திலும் குடும்பத்திலும் வாழ்க்கை நடத்த பிரதானமாக வகுக்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 28]

இந்த ஒருங்கிணைந்த கொள்கை ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தேவையான மருத்துவ வசதி மற்றும் தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக அளவில் அவர்களை சுயசார்பு குடிமக்களாக முன்னேற்றி, சமுதாயத்தில் அவர்களையும் மற்றவர்களோடு ஒன்றிணைத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் அரசு, தொழில் முனைவோர், தயாள மனம் கொண்டோர் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உட்பட அனைத்து சமுதாயத்தினருக்கும் ஒருங்கிணைந்த பொறுப்புணர்ச்சி உண்டு.

மேற்காணும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

- ஊனமுற்றோர் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சிரமமின்றி சென்று வர வழிவகை செய்தல், அவர்கள் உடல் தகுதிக்கு ஏற்ப உதவி உபகரணங்கள் வழங்குதல் உட்பட ஊனத்தின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் கண்டறிதல், ஊனத்தின் காரணத்தை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து நிவர்த்தி செய்தல், அதற்கான தடுப்பு நடவடிக்கையாக போலியோ, அம்மை, ருபெல்லா, பொன்னுக்குவீங்கி போன்ற நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசி போடுதல்.

மேலும், ஒவ்வொரு ஊனமுற்ற குழந்தையும் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி பெறவும் ஊனத்தின் அளவுக்கேற்றவாறு சிறப்புக் கல்வியோ அல்லது ஒருங்கிணைந்த கல்வியோ பெறவும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

- ஊனமுற்றோரின் தகுதி, தேவை, அளவுக்கேற்ப அவர்களை சாதாரணமானவர்களோடு ஒன்றிணைந்து வாழும் அளவுக்கு உயர்த்துதல்.
- ஊனமுற்றோரின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்ட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்க உரிய ஆசிரியர் பயிற்சி மையங்கள் அமைத்தல்.
- ஊனமுற்றோர்களுக்கு உதவிடும் வகையில் கல்வி உதவித்தொகை, இலவசப் பயணச்சலுகை, கல்வி உபகரணங்கள், சிறப்பு உதவி உபகரணங்கள், சிறப்பு ஆசிரியர்கள் நியமனம், விடுதி வசதி ஆகியவற்றை அளித்து உயர்கல்வி பெற தேவையான உதவிகள் செய்தல்.

- ஊனமுற்றோருக்கான உரிய தொழிலைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய நிறுவனத்தில் பயிற்சி அளிக்க பயிற்சி மையங்களை நடத்துதல்.
- இவர்கள் செய்யும் தொழிலுக்கேற்ற தேவையான உபகரணங்கள் வாங்கிட நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தல்.
- சுயதொழில் செய்திட கடன் பெறும் வகையில் வங்கி மற்றும் இதர நிறுவனங்களின் மூலமாக உதவிடல்.
- அனைத்து பொதுக் கட்டடங்களிலும் ஊனமுற்றோருக்கு கட்டட அமைப்பில் தடையற்ற சூழலை உருவாக்குதல் மற்றும் ஊனமுற்றோருக்கு ஏற்படும் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.
- சாதாரணமானவர்களைப் போல ஊனமுற்றவர்களும் சமூக, கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வண்ணம் வழி வகைகள் செய்தல்.

## 5.2 ஊனமுற்றோருக்கான சட்டம், 1995–ஐ அமலாக்குதல்

ஊனமுற்றோருக்கு சமவாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்தினரோடு இணைந்து அவர்கள் முழுவதுமாக பங்குபெறும் வகையில் கடந்த 1995-ல் ஊனமுற்றோருக்கான சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில் இச்சட்டம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்கக இயக்குநரை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமித்து துறைத் தலைமை பதவியோடு இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 5.3 மாநிலத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை

தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் மொத்த மக்கட்தொகையில் 1.9 சதவிகிதம் ஊனமுற்றவர்கள். 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி மக்கட்தொகையின் 1.9 சதவிகிதம் என்பது 11,80,106 பேர் என கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் கடந்த 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பில் ஊனமுற்ற மக்கட்தொகை கணக்கெடுக்கப்பட்டு அதன் விவரம் மக்கள் தொகை கணக்கீடுத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.



## 5.4 ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின் மூலம் அவர்களுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் மானியம் பெறாத சிறப்புப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சிப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மானியம் பெறும் பள்ளிகள் | மானியம் பெறாத பள்ளிகள் | | |
| 1 | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 5 | – | 27 |
| 2 (அ) | பேச்சுத் திறன் குறைந்து செவித் திறன் இழந்தோர் பள்ளி | 10 | 20 | 39 | 2 | 77 |
| (ஆ) | முன் பருவப்பள்ளி | 2 | - | 4 | - | - |
| 3 | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 12 | 88 | - | 101 |
| 4 | கடும் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி | 1 | 14 | 43 | - | 58 |
| 5 | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | - | 1 | - | - | 1 |
| மொத்தம் | | 25 | 58 | 179 | 2 | 264 |

[2004 ஜூலை 28

அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:

| பார்வையற்றோருக்கான பள்ளிகள் | பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்தோருக்கான பள்ளிகள் | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் (1 – 5 ஆம் வகுப்பு) | கடலூர் (1 — 8 ஆம் வகுப்பு) | மதுரை (1 – 8 ஆம் வகுப்பு) | சென்னை (தாம்பரம்) |
| கடலூர் (1 – 5 ஆம் வகுப்பு) | தருமபுரி (1 – 12 ஆம் வகுப்பு) | | |
| தருமபுரி (1 – 5 ஆம் வகுப்பு) | ஈரோடு (1 – 10 ஆம் வகுப்பு) | | |
| மதுரை (1 – 6 ஆம் வகுப்பு) | காஞ்சிபுரம் (1 – 10 ஆம் வகுப்பு) | | |
| நாகர்கோவில் (1 – 5 ஆம் வகுப்பு) | தாம்பரம் (1 – 8 ஆம் வகுப்பு) | | |
| பூவிருந்தவல்லி (1—12 ஆம் வகுப்பு) | உதகமண்டலம் (1 – 10 ஆம் வகுப்பு) | | |
| புதுக்கோட்டை (1 – 5 ஆம் வகுப்பு) | புதுக்கோட்டை (1 – 8 ஆம் வகுப்பு) | | |
| சேலம் (1 – 8 ஆம் வகுப்பு) | சேலம் (1 – 10 ஆம் வகுப்பு) | | |
| சிவகங்கை (1 – 5 ஆம் வகுப்பு) | தஞ்சாவூர் (1 – 12 ஆம் வகுப்பு) | | |
| தஞ்சாவூர் (1 – 8 ஆம் வகுப்பு) | விருதுநகர் (1 – 7 ஆம் வகுப்பு) | | |
| திருச்சிராப்பள்ளி (1 – 12 ஆம் வகுப்பு) | இராமநாதபுரம் (முன் பருவப் பள்ளி மட்டும்) | | |



2004 ஜூலை 28]

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:—

(அ) இலவசக் கல்வி, உணவு மற்றும் உறைவிடம்

(ஆ) ஆண்டிற்கு இரண்டு இணை இலவச சீருடை

பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன் பருவப் பள்ளிப் பிரிவுகள் கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசு காது கேளாதோருக்கான பள்ளிகளிலும், வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் இணைந்து இயங்கி வருவதுடன் இராமநாதபுரத்தில் உள்ள அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திலும், கோயம்புத்தூரில் உள்ள அரசு பார்வையற்றோருக்கான பள்ளியிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.5 ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை

இத்திட்டத்தின்கீழ் பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோருக்கு படிப்பிற்கான பொருட்கள் வாங்குவதற்கு நிதியுதவி அளித்திட கீழ்க்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது:—

| வகுப்பு / படிப்பு | தொகை (ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|
| (அ) 1 — 5ஆம் வகுப்பு வரை | ரூ.250/— |
| (ஆ) 6 — 8ஆம் வகுப்பு வரை | ரூ.750/— |
| (இ) 9 — 12ஆம் வகுப்பு வரை | ரூ.1100/— |
| (ஈ) பட்டப்படிப்பு | ரூ.1500/— |
| உ) தொழில் மற்றும் முதுநிலை பட்ட மேற்படிப்பு | ரூ.1950/— |

2004–2005 ல் இதற்கென ரூ.117.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 28

**வாசிப்பாளர் உதவித் தொகை**

பார்வையற்ற மாணவர்களுக்கு பாடங்களை வாசித்து காட்டுகிறவர்களுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகை இதுவரையில் கல்வி உதவித் தொகையின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டு வந்தது. 2004–2005 முதல் வாசிப்பாளர் உதவித் தொகை கீழ்க்கண்ட முறையில் உயர்த்தி வழங்கப்பட உள்ளது:

| வ. எண் | வகுப்பு | கடந்த ஆண்டு வழங்கப்பட்ட வாசிப்பாளர் உதவித் தொகை | உயர்த்தப்பட்ட வாசிப்பாளர் உதவித் தொகை (2004—2005 முதல்) |
|---|---|---|---|
| 1 | 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை | ரூ.500/– | ரூ.750/– |
| 2 | பட்டப் படிப்பு | ரூ.750/– | ரூ.1,250/– |
| 3 | முதுநிலைப் பட்டப் படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்பு | ரூ.1,000/– | ரூ.1,500/– |

## 5.6 பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

இதற்கு உதவி புரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.30/- வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடையும் 225 பார்வையற்ற மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:–

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.
2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.



2004 ஜூலை 28]

4. புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை.

2004–2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.3.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.7 அரசு மண்டல பிரெய்லி அச்சகம்

பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளி, பூவிருந்தவல்லியில் இயங்கிவரும் மண்டல பிரெய்லி அச்சகம் நவீனமயமாக்கப்பட்டு இரண்டு புதிய கணினிமயமாக்கப்பட்ட சிறிய பிரெய்லி அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இந்த இரண்டு அலகுகளும் கடந்த 4-8-2001 முதல் இயங்கி வருகின்றன.

2004–2005 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.13.03 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.8 சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பல்வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு பிரத்தியேகப் பயிற்சி தேவைப்படுகிறது. இந்த;ச் சிறப்புப் பயிற்சியின் காலம் பத்து மாதங்களாகும். பயிற்சிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை—56 | பார்வையற்றோருக்கு போதிக்கும் இளநிலைப் பட்டயம் | 20 |
| 2 | பாலவிகார் பயிற்சிப் பள்ளி, கீழ்ப்பாக்கம், சென்னை—10 | மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிக்கும் இளநிலைப் முதுநிலைப் பட்டயம் | 25 |
| 3 | சிறுமலர் காதுகேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை—6 | காதுகேளாதோருக்கு போதிக்கும் இளநிலைப் முதுநிலைப் பட்டயம் | 50 |

[2004 ஜூலை 28

## 5.9 நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம்

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் தற்சமயம் கிண்டி தொழிற்பேட்டையில் ஊனமுற்றோருக்கான மாநில சிறப்பு ஆணையரின் கட்டுபாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இங்கு ஆண்டுதோறும் உடல் ஊனமுற்ற நபர்களுக்கு ரூ.4.5 இலட்சங்கள் மதிப்புள்ள இலவசமாக வழங்கப்பட்டு வரும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் அனைத்தும் இக்கூடத்திலேயே தயாரிக்கப்பட்டு அவைகள் யாவும் மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு மையங்களின் மூலம் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், 2004-2005 ஆம் ஆண்டிற்கு உதவி உபகரணங்களுக்காக ரூ.62.87 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.10 பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற, அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு இவர்களுக்கு சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருட்கள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தம் 26 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் தங்கிப் பயனடைந்து வருகிறார்கள்.

## 5.11 மறுவாழ்வு மையம் மூலம் ஊனமுற்றோருக்கான பயிற்சிகள்

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின்கீழ் செயல்படும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகங்களின் வாயிலாக ஒவ்வொரு வருடமும் கீழ்க்கண்ட பயிற்சிகள் இலவசமாக முறையே வழங்கப்பட்டு வருகின்றது.

1. ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பயிற்சி (ஓராண்டு காலம்) (சென்னை, சேலம், கோவை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை)
2. கணினி பயிற்சி (ஆறு மாத காலம்) (சென்னை, சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி)



2004 ஜூலை 28]

இப்பயிற்சிகள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. கல்விக் கட்டணம் மற்றும் பயிற்சிக் கட்டணம் உட்பட அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு மேலும், பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.300/- வீதம் கல்வி உதவி தொகையாகவும் வழங்கி வருகிறது.

மேற்கூறிய பயிற்சிகளில் உடல் ஊனமுற்றோர், வாய் பேச இயலாத மற்றும் காது கேளாத மாணவ மாணவியர்கள் சேர்ந்து பயன்பெற்று அவர்களின் எதிர்காலத்தில் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள ஏதுவாக அமைகிறது.

**2004-2005 ஆம் ஆண்டிற்கு மேற்கண்ட பயிற்சிக்காக ரூ.15 இலட்சங்கள் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.**

## 5.12 ஊனமுற்றோருக்கான பயிற்சி

சென்னை, பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேனிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் 30 பார்வையற்றோருக்கு கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது:

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)
2. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்)
3. வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (ஓராண்டு காலம்)

மேற்கூறிய பயிற்சிகள் பெறும் பயனாளிகளுக்கு அவ்விடத்திலேயே இலவசமாக உணவு, இருப்பிடம் மற்றும் இரண்டு சீருடைகள் வழங்கப்படுகிறது.

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத ஊனமுற்ற நபர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சிறப்பு பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு தற்போது "பொருத்துநர் பிரிவில்" 16 நபர்கள் பயிற்சிகள் பெற்று வருகின்றனர். மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் கல்வி உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

**2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.16.94 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

[2004 ஜூலை 28

## 5.13 போலியோ மற்றும் முதுகு தண்டுவடம் பாதித்தோருக்கான இலவச அறுவை சிகிச்சை

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின்கீழ் செயல்படும் அனைத்து மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக முகாம்கள் நடத்தி அந்தந்த மாவட்ட பகுதிகளில் போலியோ மற்றும் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு "இலவச சரி செய்தலுக்கான அறுவை சிகிச்சை" மேற்கொண்டு அந்த ஊனமுற்ற நபர்களின் உடல் உறுப்புகள் மேலும் ஊனமாகாமல் தடுத்து சாதாரண நிலையில் நடந்து செல்ல உதவியாக சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஊனமுற்ற நபர்களுக்கு ரூ.500/– உதவித் தொகையாகவும் மற்றும் மருத்துவமனையில் தங்கும் செலவிற்காகவும் வழங்கப்படுவதுடன் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.300/–ம் வழங்கப்படுகிறது.

இச்சிகிச்சையின் மூலமாக ஊனமுற்ற நபர்களின் ஊனத்தின் கடுமை குறைக்கப்பட்டு மீண்டும் சாதாரண மக்களைப் போல தங்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ள முடிகிறது.

***2004–2005 ஆம் ஆண்டிற்கு அரசு ரூ.4 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.***

## 5.14 ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள் வழங்குதல்

பல்வேறு வகையான ஊனத்தினால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு இத்துறை மூலம் கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள் அவரவர் தகுதி, திறன், பாதிப்பு மற்றும் தேவைகேற்ப இலவசமாக அளிக்கப்படுகிறது:

1. மூன்று சக்கர வண்டிகள்
2. சக்கர நாற்காலிகள்3
3. கறுப்பு கண்ணாடிகள்
4. மடக்கு ஊன்றுகோல்கள்



2004 ஜூலை 28]

5. பிரெய்லி கை கடிகாரங்கள்
6. காதொலிக் கருவிகள்
7. சோலார் மறு செறிவூட்டக்கூடிய பாட்டரிகள்
8. காலிப்பர்கள் அல்லது கால் தாங்கிகள்
9. கிரட்ச்சஸ் அல்லது தோள்பட்டை தாங்கிகள் மற்றும்
10. செயற்கை அவயங்கள்.

மேற்கூறப்பட்ட அனைத்து உதவி உபகரணங்கள் மூலம் ஊனமுற்ற நபர்கள் சமுதாயத்தில் அவர்களுடைய அன்றாட அனைத்து பணிகளையும் அவர்களே செய்து கொள்ள ஏதுவாக இருப்பதினால் பிறர் உதவி எவ்விதத்திலும் இல்லாமல் அவர்களை சமூகத்தில் மற்ற நல்ல நிலையிலுள்ள நபர்களைப் போலவே நடமாட முடிகிறது.

மேலும் வரிசை எண் 8 முதல் 10 வரையிலான உதவி உபகரணங்கள் மாவட்ட மறுவாழ்வு மையங்களில் உள்ள முடநீக்கு பிரிவில் அளவுக்கு ஏற்றவாறு தயாரித்து இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

***2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.75 இலட்சங்கள் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.***

## 5.15 ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில் மூன்று சதவீதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவீதத்தில் ஒரு சதவீதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவீதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு இரண்டு சதவீதமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் காது கேளாத பேசும் திறனற்றவர்களுக்கு இரண்டு சதவீதமும் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.16 வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு 5 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படுகிறது.

(அ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம் பின்வருமாறு:

| கல்வித் தகுதி | நிவாரணத் தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 1. பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.300/— |
| 2. புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேர்ச்சி/பட்டப் படிப்பிற்குகீழ் | ரூ.250/— |
| 3. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக்கீழ் | ரூ.200/— |

(ஆ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்த அளவு ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் 1,200 பார்வையற்ற நபர்கள் பயனடைகிறார்கள்.

**2004–2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.30.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.17 சுய வேலைவாய்ப்பு

ஊனமுற்றோருக்கு உதவும் பொருட்டு அவர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்காக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ளவும், பெட்டிக்கடை அமைத்துக் கொள்ளவும் இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. ரூ.2,000/- அல்லது மொத்தக்





கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 2004-2005-ல் இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 975 பேர்கள் பயனடையும் வண்ணம் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்கான சுய வேலை வாய்ப்புக்கு மேலும் உந்துதல் அளிக்கும்பொருட்டு, தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெறப்படும் கடன்களுக்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

## 5.18 ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கான சலுகைகள்

ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன:

| வ எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவி | பயனாளிகள் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூ இலட்சத்தில்) 2004—2005 |
|---|---|---|---|---|
| 1 | பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்—களுக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ3,000/— 2. ரூ7,000/—க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 100 | 10.00 |
| 2 | ஒரு கை அல்லது கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவர்—களுக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ3,000/— 2. ரூ7,000/—க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 | 14.50 |
| 3 | காதுகேளாத வாய்பேசாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கு சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ3,000/— 2. ரூ7,000/—க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 | 14.50 |

[2004 ஜூலை 28

## 5.19 உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்

பார்வையற்றவர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது. ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர வழங்கப்படுகிறது. பார்வையற்றவரும், கால் முடமானோரும், விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை அவர்கள் சொந்த ஊருக்குச் சென்று வர இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மனவளர்ச்சி குன்றியவர்களைப் பொறுத்தமட்டில் ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை அரசு விலக்கி ஆணையிட்டுள்ளது. இதனால் அனைத்து மனவளர்ச்சி குன்றியவரும் உதவியாளர் ஒருவருடன் இலவசப் பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

**2004–2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.62.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.20 கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை

கடுமையான ஊனமுற்றோர்களுக்கு மாதம் ரூ.200/– வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. 1–1–2003 முதல் பராமரிப்பு உதவித் தொகை பயனாளிகளுக்கு பண அஞ்சல் (Money order) வாயிலாக மாதந்தோறும் அவர்களுடைய வீட்டிற்கே அனுப்பப்படுகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் 8,400 கடும் ஊனமுற்ற நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**2004–2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.211.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



2004 ஜூலை 28]

## 5.21 மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிருக்கான பாதுகாப்பு இல்லம்

14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு 30 பெண்கள் பயனடையும் வண்ணம் ஆண்டுதோறும் தலா ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 நிறுவனங்களுக்கு (மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் வேலூர்) மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**2004–2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.15.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.22 சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி

சட்டப் படிப்பு முடித்த 10 உடல் ஊனமுற்ற பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொருவருக்கும் ரூ.3,000/– உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**2004–2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.0.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.23 மாநில விருதுகள்

ஊனமுற்றோருக்கான சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு கீழ்க்கண்ட மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்றும், அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்றும் வழங்கப்படுகின்றன:–

ஆண்டுதோறும் சுதந்திர விழாவன்று வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்த நிறுவனத்திற்கு விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஊனமுற்றோருக்கான மிகச் சிறந்த நிறுவனத்திற்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/— ரொக்கப் பரிசு |
| 3 | மகளிர் நலத்திற்காக மிகச் சிறந்த சேவை புரியும் நிறுவனத்திற்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் மற்றும் ரூ.50,000/— ரொக்கப் பரிசு |
| 4 | ஊனமுற்றோருக்காக மிகச் சிறப்பாக பணி புரிந்த சமூக பணியாளருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மகளிர் நலத்திற்காக மிகச் சிறப்பாக பணியாற்றிய சமூகப் பணியாளருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | ஊனமுற்றோருக்கு அரும் சேவை செய்த மருத்துவருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | ஊனமுற்றோர் நலனுக்காக அரும் பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 8 | மிகச் சிறந்த மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்று (டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி) வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:





| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலை வாய்ப்பளித்த தொழில் அதிபர்களுக்கு விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஊனமுற்றோரில் மிகச் சிறந்த பணியாளர் விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | சிறந்த நிறுவனத்திற்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | இலட்சுமிகாந்தம் அம்மாள் விருது | சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.1200/— |

## 5.24 மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

இந்திய அரசின் உதவியுடன் செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று பலவகைப்பட்ட ஊனமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. சுமார் 2,000 பேர் இதன்மூலம் பயனடைகிறார்கள்.

**2004–2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.36.23 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மாநிலத்தின் இதர 28 மாவட்டங்களிலும் இதைப் போன்ற மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாநில அரசின் நிதியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, அவர்களின் ஊனத்தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும், உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

[2004 ஜூலை 28

2004-2005 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.264.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.25. ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் (National Programme for Rehabilitation of Persons with Disabilities)

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகளை வழங்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசியத் திட்டம் தேனி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.1.78 கோடியில் செயல்படுத்தப் பட்டுள்ளது. மேற்கண்ட மாவட்டங்களில் மறுவாழ்வுப் பணிகள் ஒன்றியம் மற்றும் ஊராட்சியளவில் செயல்படுத்தப்படுகின்றன. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணியாளர்கள் 2,200 பேர் மற்றும் 60 பல்நோக்கு மறுவாழ்வுப் பணியாளர்கள் இதற்கென நியமனம் செய்யப்பட்டு மறுவாழ்வுப் பணியில் பயிற்சி முறையே ஒரு மாதம் மற்றும் மூன்று மாதங்கள் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐம்பது மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு மறுவாழ்வு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.168.14 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தினை மேற்கண்ட நான்கு மாவட்டங்களில் 2004-2005 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்த ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னையில் ரூ.39.63 இலட்சம் செலவில் மாநில அளவிலான ஊனமுற்றோருக்கான வளம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

## 5.26 அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளுக்குப் புனர்வாழ்வு அளித்திட 10 அரசு மறுவாழ்வு இல்லங்களை தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துள்ளது:



2004 ஜூலை 28]

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் | |
|---|---|---|
| 1. | பர்கூர் | தருமபுரி மாவட்டம் |
| 2. | தேவியாக்குறிச்சி | சேலம் மாவட்டம் |
| 3. | மல்லவாடி | திருவண்ணாமலை மாவட்டம் |
| 4. | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் மாவட்டம் |
| 5. | பரனூர் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 6. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| 7. | செல்லியம்பட்டி | தருமபுரி மாவட்டம் |
| 8. | உளுந்தூர்பேட்டை | விழுப்புரம் மாவட்டம் |
| 9. | விண்ணப்பள்ளி | ஈரோடு மாவட்டம் |
| 10. | யா.புதுப்பட்டி | மதுரை மாவட்டம் |

ஒவ்வொரு அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாக சேர முன் வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்தியபின், இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், கணவனோ அல்லது மனைவியோ எவரேனும் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் இல்லத்தில் தங்க அனுமதிக்கப்டுகின்றனர். இல்லங்களில் தங்கும் இல்லவாசிகள் முழுமையாகக் குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ இல்லத்தை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி, இவற்றுடன் வெவ்வேறு தொழில்களில் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. திரைப்படம், வண்ணத் தொலைக்காட்சி, நூலகம், விளையாட்டு போன்ற பொழுதுபோக்கு வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. இல்லத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.20/- மதிப்பீட்டிலும், அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.15/- மதிப்பீட்டிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களில் சிறப்பு உணவு கூடுதலாக ரூ.5/- மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன் பொங்கல்

[2004 ஜூலை 28

அன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுக்கு ஒரு முறையும், போர்வைகள் மூன்று ஆண்டுக்கு ஒருமுறையும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் முழுமையான மருத்துவ வசதிகளுடன் மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவினம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இல்லவாசிகளுக்கு வழங்கப்படுகிறது:

| வ. எண் | செலவினம் (ஆண்டொன்றுக்கு) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | செயற்கை காலணிகள் மற்றும் செயற்கை கால் அவயவங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | 1,000/— |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | 2,000/— |
| 3. | பற்பொடி மற்றும் பல்துலக்கும் புருசு வழங்குவதற்கு (வருடமொன்றுக்கு) | 2,000/— |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் வாங்கிட | 1,200/— |
| 5. | இசைக்கருவிகள் வாங்கிட | 400/— |

மேலும், இல்லவாசிகள் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/-வழங்கப்படுகிறது.

1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வழங்கிட ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உடல் தகுதியுள்ள இல்லவாசிகளுக்கு பாய், துணி நெய்தல், தையல், காலணிகள் உற்பத்திப் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவர்களின் உடல் உழைப்பிற்கு ஏற்றவாறு போதுமான கூலி வழங்கப்படுகிறது. பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் விசைத்தறி ஒன்று இயங்கி வருகிறது.



2004 ஜூலை 28]

**2004-2005 ஆம் நிதியாண்டிற்கு ரூ.421.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.27 அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்

1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்பதை தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் பிச்சை எடுப்பவர்களைத் தடை செய்து நீதிமன்றங்கள் மூலமாக தண்டிக்கப்பட்டவர்கள், சென்னை மாநகரில் மேல்பாக்கம் ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் பாதுகாப்புடன் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு வரையிலான தண்டனைக் காலம் வரை அவர்கள் பராமரிக்கப்படுவதற்காக 1954 ஆம் ஆண்டு மார்ச் முதல் நாள் முதல் 950 (ஆண்கள் 770 + பெண்கள் 180) என்று நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டது. நீதிமன்றங்கள் வாயிலாக தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு இவ்வில்லத்தில் இலவச தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மட்பாண்டம் மற்றும் தையல் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், இல்லத்திலுள்ள ஆண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டு, இரண்டு இணை சட்டைகள் மற்றும் கால் சட்டைகளும், பெண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு இணை சேலைகள் மற்றும் ஜாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. மேலும் பொங்கல் நாளன்று இலவச வேட்டிகளும் சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும் பாய், படுக்கை விரிப்பு, தட்டு, டம்ளர், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன் சொந்த ஊருக்குச் செல்வதற்கு இருப்பூர்தி பயணச்சீட்டு / பேருந்து கட்டணங்கள் வழங்கப்படுகின்றன.

**இவ்வில்லத்திற்கு 2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.45.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

[2004 ஜூலை 28

**2004–2005 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**
**(ஊனமுற்றோருக்கான மாநில சிறப்பு ஆணையரகம்)**

| வ எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | உடல் ஊனமுற்ற நபர்கள் மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்து சரி செய்தல் | 4.00 |
| 2 | இயலாமையுற்றோருக்கான ஆணையர் அலுவலகத்தில் மின்னணு தொலைபேசி போர்டு (Digital தொலைத் தொடர்பு முறை) நிறுவுதல் | 1.30 |
| 3 | ஊனமுற்றோர் ஆணையரக அலுவலக கணினி அறைக்கு சீர்வளி சாதனம் பொருத்துதல் | 0.30 |
| 4 | சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு உணவூட்டுச் செலவினத்தை ரூ.200/—ல் இருந்து ரூ.225/—ஆக உயர்த்தி வழங்குதல் | 4.91 |
| 5 | அரசு மறுவாழ்வு இல்லங்களுக்கு படுக்கை விரிப்புகள், பாய்கள், தலையணைகள் வாங்குதல், மேல்பாக்கத்தில் மருத்துவ முகாம்கள் நடத்துதல் | 3.80 |
| 6 | 7 அரசு மறுவாழ்வு இல்லங்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்குதல் | 0.84 |
| 7 | சென்னை மன வளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனத்திற்கு கல்வி உபகரணங்கள் வாங்குதல் | 1.00 |
| 8 | ஊனமுற்றோருக்கு உதவும் / பொருத்தும் கருவிகள், உபகரணங்கள் வாங்குதல் | 75.00 |
| 9 | ஊனமுற்றோருக்கான வாழ்க்கை தொழிற் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் | 15.00 |
| 10 | காது கேளாதோர் பள்ளி மாணவர்களுக்கு காதொலிக் கருவிகள் வழங்குதல் | 10.00 |
| 11 | ஊனமுற்றோருக்கான விளையாட்டு விழாக்கள், கலை விழாக்கள் நடத்துதல் | 5.00 |
| 12 | பார்வையற்ற மாணவர்களுக்கு தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை உயர்த்தி வழங்குதல் | 1.35 |
| 13 | ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்ல தலைமைக் கண்காணிப்பாளர் சென்னை அலுவலகத்திற்கு கணினி வாங்குதல் | 0.55 |
| | மொத்தம் | 123.05 |



2004 ஜூலை 28]

## அத்தியாயம் – 6

### சமூகப் பாதுகாப்பு

6.1 துயருறும் சூழலில் உள்ள சிறார்களுக்கு சேவை புரிவதில் தமிழ் நாடு முதல் இடம் வகிக்கிறது. ஆதரவற்ற, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக முதல் சீர்திருத்தப்பள்ளி 1887 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் செங்கற்பட்டில் துவங்கப்பட்டது.

சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக இளைஞர் நீதிச்சட்டம், 1986 (மத்திய சட்டம்) 02-10-1987 முதல் அமலாக்கம் செய்யப்பட்டது. குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் சாற்றுரையின் அடிப்படையில், மத்திய அரசு 1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தை மறு ஆய்வு செய்து 2000ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) என்ற புதிய சட்டம் இயற்றி உள்ளது. இப்புதியச் சட்டத்தின் விரிவான விதிமுறைகளை தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் எண் 94, நாள் 14-02-2002-ல் அறிவிக்கை செய்துள்ளது. இச்சட்டத்தினை அமல்படுத்தியதில் தமிழக அரசு முதன்மையாகத் திகழ்கிறது. திருத்தப்பட்ட சட்டத்தின்படி தற்போது சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய இளைஞர் நலக் குழுமம் குழந்தைகள் நலக் குழுவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இளைஞர் நீதிமன்றங்கள் இளைஞர் நீதிக் குழுமமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு குழுமங்களும் நிறுவப்பட்டு நன்முறையில் இயங்கி வருகின்றன. இதே போன்று, பல்வேறு சிறார்கள் கவனிப்பு நிறுவனங்கள், இச்சட்டத்தின்கீழ் பெயர் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

**(அ) கூர்நோக்கு இல்லங்கள்:**

தவறிழைத்த சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள் மூலமாக கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அரசு சாரா அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்களுக்கு பராமரிப்பு மானியமாக, அரசு மாதம் ஒன்றுக்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.225/– வீதம் வழங்குகிறது.

தற்போது, மாற்றி அமைக்கப்பட்ட சட்டத்தின்படி, சட்டத்திற்கு புறம்பாக (தவறிழைத்த) செயல்பட்ட சிறார்கள் மட்டுமே கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். தற்போதுள்ள 8 கூர்நோக்கு இல்லங்களின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கடலூர்) | 6 |
| 2 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூர்நோக்கு இல்லங்கள் (மதுரை மற்றும் கோயம்புத்தூர்) | 2 |
| | மொத்தம் | 8 |

**(ஆ) சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்கள்:–**

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் அமையப்பெற்ற 31 சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் மற்றும் 2 சிறப்பு இல்லங்களில் முறையே குழந்தைகள் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்கள் மூலம் அனுமதிக்கப்படும் சிறார்களுக்கு பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.





| | | |
|---|---|---|
| 1 | அரசினர் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள், வேலூர் (சிறுவர்), சென்னை (சிறுமியர்) | 2 |
| 2 | அரசினர் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (செங்கல்பட்டு, தட்டப்பாறை, இராணிப்பேட்டை, தஞ்சாவூர், சென்னை—13, மல்லிப்புத்தூர், பஞ்சப்பள்ளி, ஈரோடு, விழுப்புரம் மற்றும் காரைக்குடி) சிறுமியர் — 1 (சென்னை) | 11 |
| 3 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (சென்னை—21, சென்னை—113, சென்னை—8, சென்னை—93, சென்னை—17, சென்னை—39, சென்னை—10 (2 நிறுவனங்கள்), சென்னை—107, காந்திகிராம், கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், மதுரை, திருவள்ளூர், திருவண்ணாமலை, விருதுநகர், மயிலாடுதுறை, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி) | 20 |
| | மொத்தம் | 33 |

மாற்றியமைக்கப்பட்ட சட்டத்தின்கீழ் குழந்தைகள் நலக் குழுவின் ஆணைப்படி கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக அனுமதிக்கப்படும் சிறார்கள், குழந்தைகள் இல்லங்களிலும், இளைஞர் நீதிக் குழுமத்தின் ஆணைப்படி சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதாகக் கருதப்படும் சிறார்கள், சிறப்பு இல்லங்களில் அனுமதித்தும் பராமரிக்கப்படுகின்றனர்.

அரசு சாரா நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.225/– என பராமரிப்புத் தொகை அரசால் வழங்கப்படுகிறது.

**2004–2005 ஆம் ஆண்டில் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான கூர்நோக்கு / குழந்தைகள் / சிறப்பு இல்லங்களைப் பராமரிக்க ரூ.633.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

[2004 ஜூலை 28

### (இ) பிற்காப்பு நிறுவனங்கள்:

சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து வீடேகும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு, பிற்காப்பு நலத்திட்டங்களை செயல்படுத்த கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் மூன்று "பிற்காப்பு நிறுவனங்கள்" செயல்பட்டு வருகின்றன:

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் மதுரை | 2 |
| 2 | அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம் (வேலூர்) | 1 |
| | மொத்தம் | 3 |

***2004–2005 ஆம் ஆண்டிற்கு பிற்காப்பு இல்லங்களை பராமரிக்க ரூ.36.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

பிற்காப்பு நிறுவனத்தில் பயிலும் இல்லவாசிகளுக்கு, வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சிகள், திரை அச்சுக்கலை, இருசக்கர வாகனப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல், மற்றும் கணினி பயிற்சி (டி.டி.பி) ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியேறும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகளும் தங்கள் உயர்கல்வியினைத் தொடர பிற்காப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

### (ஈ) குழந்தைகள் நலக் குழு:–

புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறார்களின் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களைக் கொண்ட (1 பெண் உறுப்பினர் உட்பட) குழந்தைகள் நலக் குழுக்கள் கீழ்க்கண்ட 18 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.



2004 ஜூலை 28]

| | |
|---|---|
| 1. சென்னை | 2 செங்கற்பட்டு |
| 3. இராணிப்பேட்டை | 4. கடலூர் |
| 5. தருமபுரி | 6. ஈரோடு |
| 7. சேலம் | 8. கோயம்புத்தூர் |
| 9. விருதுநகர் | 10. திண்டுக்கல் |
| 11. காரைக்குடி | 12. தூத்துக்குடி |
| 13. தஞ்சாவூர் | 14. திருச்சிராப்பள்ளி |
| 15. மதுரை | 16. திருநெல்வேலி |
| 17. நாகப்பட்டினம் | 18. திருவள்ளூர் |

### (உ) இளைஞர் நீதிக் குழுமங்கள்:–

திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் சட்டத்தின்படி 8 இடங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் அமைக்கப்பட்டு, (சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கடலூர், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர்) சட்டத்திற்குப் புறம்பான செயலில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படும் சிறார்களின் வழக்குகளை விசாரித்து வருகின்றன.

## 6.2 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாக கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களில் இவர்களுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு வழங்கப்படுகிறது. ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர், பாதுகாப்பிற்காக தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் தங்குவதற்கு, இயக்குநர் அனுமதியுடன் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆறு மகளிர் காப்பகங்கள் பாதுகாப்பு இல்லங்கள்கீழ் குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

| | |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 1 |
| திருச்சி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| மொத்தம் | 6 |

[2004 ஜூலை 28

**(அ) மீட்புப் புகலிடங்கள்:–**

இச்சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கென 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்புகலிடங்கள் அந்தந்த இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து செயல்படுகின்றன.

**(ஆ) மணமாகாத தாய்மார்கள் இல்லம்:–**

பாலியல் கொடுமைகளால் பாதிப்புள்ளாகி மகப்பேறடைந்த பெண்கள் மற்றும் சிறுமியர் கீழ்குறிப்பிட்டுள்ள இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:–

1. அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் ஸ்ரீசதனா, சென்னை–4

2. புனித பிரான்சிஸ் சேவியர் மீட்பு இல்லம், அடைக்கலாபுரம், திருநெல்வேலி மாவட்டம் (தன்னார்வத் தொண்டு நிறுவனம்)

**(இ) குறுகியகால இல்லம்:–**

மேற்குறிப்பிட்டவை தவிர திக்கற்ற மகளிருக்கென சென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் "அபய நிலையம்" என்ற இல்லம் இயங்கி வருகிறது. இத்தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு பராமரிப்புத் தொகையாக ஒரு பெண் இல்லவாசிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.225/– வீதம் வழங்கப்படுகிறது.

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டிற்கு மேற்குறிப்பிட்ட இல்லங்களைப் பராமரிக்க ரூ.77.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) இடைவழி இல்லம்:–**

பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர் மற்றும் மகளிருக்கு புகலிடம், கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கும் விதத்தில் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் 1999–2000 ஆம் ஆண்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஒரு இடைவழி இல்லம் 25 பெண்களைப் பராமரிக்கும் வகையில் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



2004 ஜூலை 28]

2004–2005 ஆம் ஆண்டில், இடைவழி இல்லம் பராமரிக்க ரூ.0.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு வணிக ரீதியில் பாலியல் செய்யப்படுவதைத் தடுப்பது தற்போது மாநிலங்களில் முக்கிய நோக்கமாகும். இதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- மாநில அளவில் தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் நவம்பர் 2001–ல் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இதுவரை ஐந்து முறை கூட்டம் நடத்தப்பட்டு கடத்தலைத் தடுக்க முக்கியமான பல்வேறு நடவடிக்கைகளும், தீர்மானங்களும் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.
- இதேபோல மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது.
- அரசு ஆணை எண் 138 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட துறை, நாள் 5-9-2002-ன்படி ஒவ்வொரு கிராமத்திலும் இப்பிரச்சினைகளை மேற்கொள்ளவும்/தடுக்கவும் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் இக்குழுமங்களுக்குத் தலைவர் ஆவர்.

## 6.3 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

இளைஞர் வழிகாட்டி நிலையங்கள், கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களின் சிறார்களின் பிரச்சினைகளை உளவியல் ரீதியாக ஆய்ந்து தகுதியுடைய அதிகாரிகளுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கின்றன.

சென்னை (2), மதுரை, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கி வருகின்றன.

[2004 ஜூலை 28

*2004-2005 ஆம் ஆண்டிற்கு இளைஞர் வழிகாட்டி நிலையங்களைப் பராமரிக்க ரூ.6.79 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 6.4 கல்விப் பயிற்சி

அனைத்து அரசு சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் / சிறப்பு இல்லங்களில் 8 ஆம் வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் சிறுவர் குழந்தைகள் இல்லம் மற்றும் சென்னை அரசினர் சிறுமியருக்கான குழந்தைகள் / சிறப்பு இல்லத்தில் 10 ஆம் வகுப்பு வரை கல்வியுடன், கணிப்பொறி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மேலும் சிறார்களின் உயர் கல்வி தொடரும் பொருட்டு, வெளியில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள், பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் சார்ந்த பட்ட கல்வி ஆகியவற்றில் கீழ்க்குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்:

| | |
|---|---|
| மருத்துவப் பட்டப்படிப்பு | 1 |
| பொறியியல் பட்டப்படிப்பு | 8 |
| இளங்கலைப் பட்டப்படிப்பு | - |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 40 |
| தொழில்நுட்பக் கல்வி | 6 |
| உயர்நிலைக் கல்வி | 28 |

*2004–2005 ஆம் ஆண்டில் கல்விச் செலவினங்களுக்காக ரூ.6.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 6.5 குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சி

சிறார்களுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லங்களில் பின் குறிப்பிட்ட தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர்கள் மூலம் தச்சு, புத்தகம் கட்டுதல், மின் தச்சு, கொத்து வேலை, சோப்பு தயாரிப்பு, மெழுகுவர்த்தி தயாரிப்பு,



2004 ஜூலை 28]

பனியன் தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக் கருவி பயிற்சி, பாய் நெசவு, உலோகப் பணி, தையற் தொழிற் பயிற்சி, விசைத்தறி நெசவு, மின்பற்ற வைப்பு, பாய் நெசவு, பூ வேலை, மனையியல் பயிற்சி, வெற்றிட தின்காரை கற்கள் தயாரிப்பு மற்றும் சுகாதாரத் துண்டுகள் ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி பின்வரும் குறுகிய காலத் தொழிற் பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன:

(1) மாவு அரைத்தல்

(2) தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு

(3) திரை அச்சுக் கலை மற்றும்

(4) கணினி பயிற்சி

*2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.3.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு. செய்யப்பட்டுள்ளது.*

தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1 | முழுத்திறன் பெற்ற சிறார்கள் | ரூ.70/- மாதம் தோறும் ஒரு சிறாருக்கு |
| 2 | பாதி திறன் பெற்ற சிறார்கள் | ரூ.50/- மாதம் தோறும் ஒரு சிறாருக்கு |

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத்தொகை சேமிக்கப்பட்டு இல்லவாசிகளின் கைசெலவுக் கணக்கில் மாதம்தோறும் வரவு வைக்கப்படுகிறது.

*2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 6.6. வெளியேறும் இல்லவாசிகளுக்கான தொழிற் பயிற்சிகள்

காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு நோக்குடன் தொழிற் பிரிவுகளில் இல்லநீக்கம் செய்யப்பட்ட இல்லவாசிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆத்தூர், அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவன

வளாகத்தில் திரைஅச்சுக்கலை, கணினி பயிற்சி (DTP) மற்றும் இருசக்கர வாகனங்கள் பழுதுப்பார்த்தல் ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 179 மாணவர்கள் பயிற்சி முடித்து பயன் அடைந்துள்ளனர். 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்துடன் இணைந்த தொழிற்கூடத்தில் சிறுமியர் மற்றும் மகளிருக்கு உள்ளடக்கிகள் (Holdall), தோல்பொருட்கள் தைப்பு மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.7 மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன:

1. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்கு திருமணக் கொடையாக ரூ.3000/–மும், திருமண நாள் செலவாக ரூ.2000/–மும் வழங்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் 2 பெண் இல்லவாசிகள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்றுள்ளனர்.

2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி, விதிகள் 2002-ன்படி நிறுவனங்களுக்கான உள்ளமைப்பு வசதிகள், முற்றிலும் அனாதை / ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி உதவி ரூ.5,000/-க்கு மிகாமல் மற்றும் பொருளுதவி ரூ.10,000/-க்கு மிகாமலும் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 மற்றும் 1956ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் வீடேகும் இல்லவாசிகளுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் நிறுவனங்களுக்கு தற்போதுள்ள கட்டடங்களில் சிறிய அளவில் பழுதுபார்த்தல் மற்றும் கட்டுவதற்கு, நிறுவனத்திற்கு விளையாட்டு / பொழுதுபோக்கு சாதனங்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் ஏனைய செலவுகளுக்கு உதவும் வகையில் ஆண்டுக்கு ரூ.20,000/-க்கு மிகாமல், செலவிடப்படுகிறது. அரசு செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்



திட்டத் துறை தலைவராக கொண்டு, சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் உறுப்பினர் செயலாளராக கொண்டு, அரசு துணை செயலர் / கூடுதல் செயலர், நிதித் துறை உறுப்பினராக கொண்ட ஆட்சிக்குழு அமைக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட தொகை பராமரிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 153 முன்னாள் இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.

3. மேலும் அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் கீழ்க்கண்ட பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும் இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க உதவுவதற்காக, கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது:

| வ. எண் | தொழிற் பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| 1 | தச்சு | 5 | 2,000 |
| 2 | நெசவு | 2 | 1,000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 3 | 1,000 |
| 4 | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5 | கொத்து பிரிவு | 2 | 500 |
| 6 | தையல் | 10 | 2,500 |
| 7 | பூத்தையல் | 2 | 1,000 |
| 8 | உலோக வேலை | 4 | 1,000 |
| 9 | பாய் நெசவு | 4 | 1,000 |
| 10 | வீட்டு மின் இணைப்பு, கம்பி சுருள் சுற்றுதல் மற்றும் குழாய்ப் பணிகள் | 2 | 1,000 |
| 11 | மின் பற்றவைப்பு | 2 | 1,000 |
| 12 | இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 2 | 2,000 |

2004-2005 ஆம் நிதி ஆண்டில் இதற்காக ரூ.0.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 28

## 6.8 குடும்ப உதவித் திட்டம்

பின்தங்கிய பொருளாதார சூழ்நிலை காரணமாக குழந்தைகள் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில் குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி, குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள், இல்லநீக்கம் செய்யப்பட்டு, குடும்பத்துடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற சிறார்களுக்கு, அவர்களில் கல்வியினைத் தொடரும்பொருட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அமைக்கப்பட்ட குழு மூலம், சிறார்கள் கண்டறியப்பட்டு அவர்கள் பெற்றோர்வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200/- வீதம் நிதி உதவி அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், தாமாகவே பயிலும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.9 சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்

சிறார்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு சிறார்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கும் வகையில் சென்னை, செனாய் நகரில் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றது.

**2004–2005 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.1.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 6.10 சிறப்பு பராமரிப்பு மையங்கள்

குழந்தைகள் இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு அன்பும் அரவணைப்பும் அளிக்கும் வகையில் ஒரு சிறப்பு பராமரிப்பு மையம் (சிறுமியர்) தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 50 சிறுமியர் பயன்பெறுகிறார்கள்.

**2004–2005 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



2004 ஜூலை 28]

## 6.11 ஆதரவற்ற மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்களின் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம்

குழந்தைகள் முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு, இந்திய குழந்தைகள் நலச் சங்கம் (தமிழ்நாடு கிளை) வாயிலாக ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்த வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தற்காலிகப் பாதுகாப்பு மற்றும் புகலிடம் அளிப்பதுடன், குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

**2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 6.12 மாநில அரசின் சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடத் திட்டம்

சாலைகளில் வாழும் சிறார்கள் மற்றும் நடைபாதைகளில் வசிக்கும் சிறார்களுக்கு இரவுப் புகலிடங்கள் அளிக்கும் விதமாக ஒரு திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 7 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசின் மானிய உதவியுடன் (ரூ.65500/– ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு) இயங்கி வருகின்றன. ஒவ்வொரு புகலிடத்திலும் 50 சிறார்கள் பயன்பெறும் வகையில் ஒரு வேளை உணவு, முறை சாரா கல்வி, தொழிற் பயிற்சி மற்றும் இதர செலவினங்கள் வழங்கப்படுகிறது.

கீழ்குறிப்பிட்ட இடங்களில் இரவுப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 1 | திருநெல்வேலி | 1 |
| மதுரை | 2 | திண்டுக்கல் | 1 |
| சேலம் | 1 | திருச்சி | 1 |

சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் பாதுகாப்பு அளிக்கவும் தொழிற்பயிற்சி மற்றும் முறைசாரா கல்வி வழங்கும் வகையில் இப்புகலிடங்கள் அமைந்துள்ளன. வருடந்தோறும் 400 சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர்.

[2004 ஜூலை 28

*2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.5.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 6.13 குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் (Childline)

துன்பச் சூழ்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு உதவ குழந்தைகளின் இலவச தொலைபேசி திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பெரு நகரங்களான சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான நிதியுதவியினை மைய அரசு வழங்கி வருகிறது. இலவச தொலைபேசி எண் 1098 நாடு முழுவதும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. சமீப காலங்களில் இத்தொலைபேசி வசதி 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு குழந்தைகளின் சேவைக்காக மாநிலம் முழுவதும் அமலாக்கப்பட்டுள்ளது.

## 6.14 காணாமற்போன சிறார்களுக்கான தகவல் மையம்

காணாமற்போன சிறுவர்களை அவர்களுடைய குடும்பத்துடன் சேர்க்க உதவும் வகையில் உயர் தொழில்நுட்பத் தகவல் மையம் துவங்கப்பட்டுள்ளது. இத்தகவல் மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

*2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 6.15 சமூகப் பாதுகாப்புத் துறை இணையதளம்

இத்துறை செயல்படுத்தும் குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டம், காணாமற்போன சிறார்கள் தகவல் மையம், சாலையோரச் சிறார்கள் நலத் திட்டம் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து பொது மக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த இத்துறைக்கென இணைய தளம் மார்ச் 2002-ல் துவக்கப்பட்டது. இந்த இணையதளம் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தின் முகவரி: **www.tn.nic.in/socialdefence**



2004 ஜூலை 28]

மேலும் இன்டர்நெட் இணைப்பு ஜனவரி 2002-ல் பெறப்பட்டுள்ளது. எளிய மற்றும் துரித தகவலுக்காக இயக்குநர் அலுவலகத்தில் மின் அஞ்சல் இயங்கிவருகிறது. மின் அஞ்சல் முகவரி: **dsd@tn.nic.in**

## 6.16 திட்ட முன்னேற்றம் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

சமூகப் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத் திட்டங்களைக் (நிறுவனங்கள் மற்றும் நிறுவனம் சாராத பணிகள்) கண்காணிக்க யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்கங்கள் நடத்துவதோடு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சாலையோரச் சிறார்களுக்கான நலத் திட்டங்களை இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது.

*2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.7.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

### 2004–2005 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்
### (சமூகப் பாதுகாப்பு இயக்ககம்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆலோசனைப் பணிகள் மதிப்பூதியத்தில் வழங்குதல் | 2.00 |
| 2 | இராணிப்பேட்டை அரசினர் குழந்தைகள் இல்லக் கண்காணிப்பாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் | 2.40 |
| 3 | பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்துதல் மற்றும் வணிக நோக்கில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான பிரிவு இயக்ககத்தில் ஏற்படுத்துதல் | 2.00 |

| | | |
|---|---|---|
| 4 | சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கு ஒரு கணிப் பொறி வாங்குதல் | 0.75 |
| 5 | ஆறு நகராட்சிகளில் இயங்கும் சாலையோர சிறார்கள் திட்டத்தினை விரிவாக்குதல் | 9.00 |
| 6 | சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கென நூலகத்தை வலுப்படுத்துதல் | 0.15 |
| 7 | சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கு கையடக்க மின்ஆக்கி வழங்குதல் | 0.49 |
| 8 | சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தை வலுப்படுத்துவதற்கு அறைகலன்கள் வழங்குதல் | 0.60 |
| 9 | தட்டப்பாறை அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு குடிநீர் வசதி வழங்குதல் | 3.00 |
| 10 | இரண்டு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் இரண்டு குழந்தைகள் இல்லங்களில் மின் இணைப்புகள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 6.88 |
| 11 | பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர் மற்றும் தட்டப்பாறை அரசினர் குழந்தைகள் இல்லங்களில் உள்ள கட்டடங்களை சிறப்பு பழுதுபார்த்தல் | 10.00 |
| 12 | இராணிப்பேட்டை, அரசினர் குழந்தைகள் இல்லத்தில் வரவேற்பு பிரிவிற்கென புதிய கட்டடம் கட்டுதல் | 5.20 |
| 13 | செங்கல்பட்டு அரசினர் குழந்தைகள் இல்லத்தில் சிறப்பு பழுதுபார்த்தல் | 3.50 |
| 14 | மல்லிப்புதூர் சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உறைவிடம் கட்டுதல் | 2.93 |





| | | |
|---|---|---|
| 15 | ஆறு இடங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு இடத்திலும் ரூ.1.30 இலட்சத்தில் ஒரு அறை கட்டுதல் | 7.80 |
| 16 | செங்கற்பட்டு சிறுவருக்கென அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உணவு அருந்தும் அறை கட்டுதல் | 4.88 |
| | மொத்தம் | 61.58 |

## அத்தியாயம் - 7

### முதியோர் பாதுகாப்பு

*7.1* இத்திட்டம் முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய சீரிய திட்டமாகும். உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு வருவாய்த் துறை மூலம் கீழ்க்கண்ட ஐந்து இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது:

1. முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம் (01–04–1962 முதல்)
2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் (01–11–1974 முதல்)
3. ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் (1–6–1975 முதல்)
4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் (15–3–1981 முதல்)
5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25–4–1986 முதல்)

இத்திட்டத்தில் அனைத்து இனங்களின்கீழ் பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.200/– மாவட்டங்களிலுள்ள நலிந்தோர் நலத் திட்ட வட்டாட்சியர்களால் பணவிடை மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 28

## 7.2 முதியோர் ஓய்வூதியத் திட்டம்

### (அ) முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டம்

இத்திட்டம் பிழைப்புதவி இல்லாமலும் ஆதரிப்பவர்கள் யாரும் இல்லாமலும் உள்ள அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அறிமுகப்படுத்தப்பட்டு 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதரவற்ற நிலையிலுள்ள கண்பார்வையற்றோர், தொழு நோய், மனநோய், பாரிச வாயு மற்றும் அவயங்கள் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். இதர ஆதரவற்ற முதியோர்களுக்கு குறைந்தபட்ச வயது 65 ஆகும். இத்திட்டத்தில் பயன் பெறுபவர்கள் வருமானம் ஏதும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். பிச்சை எடுப்பது தொழிலாக இருக்கக் கூடாது. 20 வயதிற்கு மேற்பட்ட மகன் அல்லது மகனின் மகன் ஆதரவு அளிக்கக் கூடியவராக இருக்கக்கூடாது. ரூ.5,000 மதிப்பிற்கு மேல் சொத்து இருக்கக்கூடாது. இத்திட்டத்தின்கீழ் 31-03-2004 தேதியில் 4,77,181 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

முதியோர் ஓய்வூதிய(சாதாரணம்)த் திட்டத்தின்கீழ் 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த மாத ஓய்வூதியத் தொகை ரூ.200/-ல் மைய அரசின் பங்களிப்பாக மாதம் ரூ.75/- வழங்கப்படுகிறது.

### (ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்

உடல் ஊனம் 50 சதவீதம் அளவும் அதற்கு மேலும் உள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவதற்குரிய குறைந்தபட்ச வயது வரம்பு 45 ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைவராகவும், மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் அடங்கிய குழு, ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து தனியர்களின் ஊனத்தின் தன்மைக்கேற்ப அவர்களுக்கு வயதுவரம்பின்றி ஓய்வூதியம் வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொழுநோயாளிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முதியோர் உதவித்



2004 ஜூலை 28]

தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31-03-2004 தேதியில் 56,030 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

### (இ) ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆதரவற்ற விதவைகளும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வயது வரம்பு ஏதும் இல்லை. 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகைப் பெற தகுதியுள்ளவர்களாவர். திருமணமாகி கணவனை இழந்து விதவையான, மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைய தகுதி பெற்றவர்கள் ஆவர். முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31-03-2004 தேதியில் 4,97,711 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

### (ஈ) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

முதியோர் ஓய்வூதியத்திட்டம் ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைய குறைந்த பட்ச வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31-03-2004 தேதியில் 94,679 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

### (உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்

இத்திட்டம் 30 வயதுக்கு மேல் கணவனால் கைவிடப்பட்டு, நீதிமன்றத்தில் விவாகரத்து சான்று பெற்றவர் அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேல் கணவனைப் பிரிந்து வாழும் ஆதரவற்ற பெண்கள் பயன்பெறும் வகையில் விரிவுப்படுத்தப்பட்டது. 18 வயது நிரம்பிய, வாரிசு இருந்தாலும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் இத்திட்டத்தின்கீழ்

[2004 ஜூலை 28

உதவித்தொகை பெற தகுதியுள்ளவர்களாவர். முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

**இத்திட்டத்தின்கீழ் 31-03-2004 தேதியில் 82,903 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.**

## 7.3 பிற உதவிகள்

### (1) இலவச வேட்டி / சேலை வழங்குதல்

மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கு, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு சேலையும், ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைக்கு வழங்கப்படுகிறது.

### (2) முதியோர் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கு இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல்

முதியோர் ஓய்வூதியம் பெறும் அனைத்து பயனாளிகளும் கீழ்க்கண்ட நிலைகளின்படி இலவச அரிசி பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது:-

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாத- வர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 4 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 2 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின்கீழ் 31-03-2004 தேதியில் 12,08,504 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.**

## 7.4 அன்னபூர்ணா திட்டம்:

அன்னபூர்ணா திட்டத்தின்கீழ், தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் உதவிபெறும் ஆதரவற்ற / மூத்த குடிமக்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ வீதம் அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு, தமிழ்நாட்டில் உள்ள தேசிய முதியோர்



2004 ஜூலை 28]

ஓய்வூதியத்திட்டத்தின் மூலம் பயன்பெறுபவர்களில் 71,974 பேர் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளனர்.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இத்திட்டத்திற்கான பயனீட்டாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். மற்ற உணவு பங்கீடு அட்டைகளிலிருந்து மாறுபட்ட நிறத்தில் "அன்னபூர்ணா" அட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தயார் செய்யப்பட்டு, பொது விநியோக முறை கடைகளின் மூலம் 10 கிலோ இலவச அரிசி வினியோகிப்பதற்கென பயனீட்டாளிகளுக்கு வழங்கப்படுகிறது

**இத்திட்டத்திற்கு 2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 5.47 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7.5 தேசிய குடும்ப நலத் திட்டம்

இத்திட்டம் தமிழ்நாட்டில் 02-10-1995 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் குடும்பத் தலைவர் இயற்கை அல்லது விபத்து மூலம் இறந்து விட்டால் அக்குடும்பத்தின் காப்பாளருக்கு ரூ.10,000/- நிவாரணத் தொகையாக மத்திய அரசு மூலம் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நலிந்தோர் நிவாரணத் திட்டம் மற்றும் தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் வரும் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு ரூ.15,000/- நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேற்காணும் தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ.10,000/-உம், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.5,000/-உம் ஆகும். இத்திட்டம் 2002-2003 முதல் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு திட்டத்தின்கீழ் மாற்றப்பட்டுள்ளது.

**2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் விபத்து நிவாரணத் திட்டத்திற்கு ரூ.3.00 கோடியும், நலிந்தோர் நிவாரணத் திட்டத்திற்கு ரூ.45.00 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

[2004 ஜூலை 28

## 2004-2005 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

**(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, தலைமைச் செயலகம்)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நான்கு கணினிகள், ஒரு வண்ண பிரிண்டர் வாங்குதல் மற்றும் பராமரிப்புச் செலவு | 3.00 |
| 2. | மூன்று இரும்பு பீரோக்கள் (அல்மரா) வாங்குதல் | 0.17 |

### தொகுப்புரை

மேதகு ஆளுநர் அவர்கள் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில், சீர்திருத்த முன்னுரிமைகளை வளர்ச்சிக் கோட்பாடுகளுடன் வெற்றிகரமாக ஒருங்கிணைத்து, அவற்றிற்கும் மேலாக வறியோர்களின் நலன்களை முன்னிறுத்துவதன் மூலம் மாநிலங்களிடையே முதலிடத்தைப் பெற வேண்டும் என்ற தனது நெடுநாளைய இலக்கை நோக்கி விரைந்து செயல்படும் மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகி உள்ளது. குறுகிய காலத்தில் இந்த வியக்கத்தக்க, ஈடு இணையற்ற சாதனையைப் படைத்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சாரும்.

நாம் அனைவரும் உறுதியோடும், கட்டுப்பாட்டோடும், கடமை உணர்வோடும், கருத்தொருமித்தும் செயல்பட்டால் வளமிக்க வருங்காலத்திற்கு நல்ல அடித்தளமாக அமைந்து, வறுமையில் வாடும் அனைத்து பிரிவினரும் முன்னேற்றம் அடைவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்று நாம் உறுதியாக நம்புவோம். இக்கனவுகள் நனவாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் நாம் அல்லும் பகலும் அயராது உழைத்திட உறுதி கொள்வோம்.



2004 ஜூலை 28]

## இணைப்பு - II

(281 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 4 –ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2004-2005

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையான 6,24,05,679-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் மொத்த மக்கள் தொகை 20.04% ஆகும். அதில் ஆதிதிராவிடர்கள் 19% , பழங்குடியினர்கள் 1.04% உள்ளனர். 70% ஆதிதிராவிடர்களும் 85% பழங்குடியினரும் ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர். சமூகரீதியாக பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சமூக பொருளாதார முன்னேற்றம் பெற தொடர்ந்து சிறப்பு கவனம் தேவைப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சமூக, பொருளாதார முன்னேற்றம் காண, உகந்த சூழலை உருவாக்கும் வண்ணம் அரசு உரிய கொள்கைகளை வகுத்து பல நலத் திட்டங்களை அவர்கள் நலனுக்காக நிறைவேற்றி வருகிறது. இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை பெரிதளவில் சீரமைக்கவும். அவர்கள் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பழங்குடியினருக்கான பழங்குடியினர் துணைத் திட்டம் போன்றவற்றின் கீழ் நடவடிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக மேம்பாட்டிற்காக நடைமுறையில் பிற துறைகள் வழியாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மட்டுமல்லாமல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு சென்றடையும் வகையில் குறிப்பிட்ட செயல் இலக்கை உள்ளடக்கி பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை தாட்கோ மேற்கொள்கிறது. இவர்தம் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவைகளை உரிய வழிகளில் செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

## கல்வி முன்னேற்றத்திற்கான முனைப்பு நடவடிக்கைகள்

[2004 ஜூலை 28

மாநில மக்கள் தொகையில் கல்வியறிவு பெற்றவருடன் ஒப்பிடும்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களில் கல்வியறிவு பெற்றவரின் எண்ணிக்கை மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளது. கல்வி அறிவை அளிப்பதன் மூலம் நலிவடைந்துள்ள இம்மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நிரந்தரமான மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, கல்விக்கு முன்னுரிமை அளித்து வருகின்றது. எனவே 2004-2005 ஆம் ஆண்டில் இத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.448.91 கோடியில் சுமார் 70%-க்கும் அதிகமான நிதி கல்வி சார்ந்த திட்டங்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்துறையின்கீழ் 1,018 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும், 277 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

| பள்ளியின் வகைப்பாடு | ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் | | பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் | |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
| நடுநிலைப் பள்ளிகள் | 761 | 89592 | 213 | 19122 |
| உயர் நிலைப் பள்ளிகள் | 147 | 38520 | 46 | 11431 |
| மேல் நிலைப் பள்ளிகள் | 51 | 20544 | 8 | 3,869 |
| மொத்தம் | 59 | 64358 | 10 | 12632 |
| | 1018 | 213014 | 277 | 47054 |

மாவட்ட வாரியான விவரங்கள் பட்டியல் எண்கள். II, III மற்றும் IV-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அருகிலேயே கல்வி வாய்ப்பு வசதிகளை அமைத்துத் தருவதை இன்றியமையாததாக இந்த அரசு கருதுகிறது. இதனைக் கருத்திற் கொண்டு தேவை மற்றும் அரசின் நிதிநிலைக்கேற்ப இத்துறையின்கீழ்



2004 ஜூலை 28]

இயங்கும் பள்ளிகள் படிப்படியாக அடுத்த நிலைக்கு உயர்த்தப்படுகின்றன. 2003-2004-ல் நாகப்பட்டினம் மாவட்டத்தில், மாதானம் ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், 10 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளைப் பொறுத்தவரை 5 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 5 தொடக்கப் பள்ளிகளும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் 16 ஏகலைவா பள்ளிகளும் புதிதாக திறக்கப்பட்டன.

கணினி அறிவியலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் 31 உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 62 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. மார்ச் 2004-இல் கணினி அறிவியலில் +2 பொதுத் தேர்வில் ஆதிதிராவிட இன மாணவ மாணவியரின் தேர்ச்சி 99.80% என்பது குறிப்பிடத்தக்கது.

42 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை இதுவரையில் 59 பள்ளிகளுக்குத் தனியாக அறிவியல் ஆய்வுக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் கடந்த ஆண்டில் மட்டும், ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கும், ஒரு பள்ளிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கும் புதிதாக அறிவியல் ஆய்வுக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 1. கல்விக் கட்டணச் சலுகை

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள் வருமான வரம்பின்றி கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

### 2. இலவசக் கல்வி

இளங்கலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:

[2004 ஜூலை 28

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-02 | 70.22 | 13,728 |
| 2002-03 | 80.83 | 9,617 |
| 2003-04 | 75.04 | 8,066 |

**முதுகலைப் பட்டப் படிப்பு வரை மாணவியருக்கான இலவசக் கல்வி**

இந்த அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரின் உயர் கல்வி மேம்பாட்டில் அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே, 2001-2002ஆம் கல்வி ஆண்டு முதல் இம்மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகையை முதுகலைப் பட்டப் படிப்பு வரை நீட்டித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-02 | 0.62 | 41 |
| 2002-03 | 27.27 | 1325 |
| 2003-04 | 31.26 | 4281 |

**3 . கல்வி உதவித் தொகை**

**(அ) ப்ரி மெட்ரிக் உதவித் தொகை**

6 முதல் 10ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/ மாணவிகள் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு ஏற்படும் இழப்புத் தொகையினை அந்தந்த கல்வி நிறுவனங்களுக்கு இத்துறை வழங்குகிறது.

அதேபோல் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ/ மாணவிகள் பொதுத் தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். இத்தொகை முழுவதும், இத்துறையால், அரசுத் தேர்வுத் துறை இயக்குநரகத்திற்கு வழங்கப்படுகிறது.



2004 ஜூலை 28]

**(ஆ) ப்ரி மெட்ரிக் உதவித் தொகை (மைய அரசு திட்டம்)**

சுகாதாரக் குறைவான தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு சாதி, மதம் மற்றும் வருமான வரம்பின்றி 1 ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காது பயிலும் மாணவ/ மாணவியருக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ. 40/- முதல் ரூ.75/- வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கி பயில்வோருக்கு 3 முதல் 8ஆம் வகுப்பு வரையில் மாதம் ரூ.300/-ம், 9 மற்றும் 10ஆம் வகுப்பு பயில்வோருக்கு மாதம் ரூ.375/-ம் வழங்கப்படுகிறது. இதுவன்றி, தனி மானியமாக விடுதியில் தங்காது பயிலும் மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ.550/-ம், விடுதியில் தங்கி பயில்வோருக்கு ரூ.600/-ம், 1.4.2003 முதல் வழங்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட விவரம் மற்றும் பயனாளிகள் விபரம் கீழே தரப்பட்டுள்ளன:-

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-02 | 363.19 | 43812 |
| 2002-03 | 340.51 | 39450 |
| 2003-04 | 365.07 | 42334 |

**(இ) போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை (மைய அரசு திட்டம்)**

மைய அரசு திட்டத்தின்கீழ் 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருப்பின், கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய குறிப்பேடுகள் வாங்குதல் போன்ற கட்டாயச் செலவுகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் ஆகியவற்றை ஈடுசெய்ய, மாதம் அதிகபட்சமாக ரூ.330/- படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இவர்கள், விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் இத்தொகை மாதம் அதிகபட்சமாக ரூ.740/- படிப்பிற்கு ஏற்றவாறு பராமரிப்பு படியாக வழங்கப்படுகிறது. இதுவன்றி, மாணவர்களால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்படவேண்டிய கட்டாயக் கட்டணங்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

[2004 ஜூலை 28

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-02 | 3678.56 | 1,90,694 |
| 2002-03 | 4013.28 | 2,01,437 |
| 2003-04 | 5993.51 | 2,34,324 |

மாவட்ட வாரியான விவரங்கள் பட்டியல் எண் XI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக், சட்டம், வணிக நிருவாக முதுகலைப் பட்டம், பட்டயக் கணக்கர், உயிர் அறிவியல் மற்றும் இதர தொழில்நுட்பம் சார்ந்த படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக புத்தக வங்கித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.2,400/- முதல் ரூ.7,500/- வரை மதிப்பிலான புத்தகங்கள் இரண்டு பேருக்கு ஒரு செட் வீதம் வாங்கி வழங்கப்படுகின்றன.

2003-2004 ஆண்டு முதல், இத்திட்டம் மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

**(ஈ) போஸ்ட்மெட்ரிக் சிறப்பு உதவித் தொகை திட்டம்(மாநில அரசு)**

அதே போன்று மாநில அரசு போஸ்ட்மெட்ரிக் சிறப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய விடுதியில் தங்காது பயிலும் மாணவ, மாணவியருக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 50,000/-க்கு மிகாமல் இருப்பின் மாதம் ரூ.65/- முதல் ரூ.125/- வரையில் பராமரிப்புப் படி மற்றும் கட்டாயக் கட்டணங்களுக்காக படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இதுவே விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் பராமரிப்புப் படி மற்றும் கட்டாயக் கட்டணங்களுக்காக மாதம் ரூ.115/- முதல் ரூ.280/- வரையில் படிப்பிற்கு ஏற்றவாறு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மத்திய அரசின் கல்வி உதவித் தொகைகள் மற்றும் மாநில அரசின் கல்வி உதவித் தொகைகள் வழங்குவதற்கு அந்தந்த கல்வி நிலைய தலைவர்களுக்கு ஒப்பளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் சிறப்பு படிப்பு உதவித் திட்டத்தின் கீழ் தொழிற் பயிற்சி மற்றும் இதர பயிற்சியில் சேரும் பத்தாம் வகுப்பு



2004 ஜூலை 28]

**தேறாதவர்களுக்கும் போஸ்ட் மெட்ரிக் படிப்பு எனக் கருதப்பட்டு அதற்குரிய உதவித் தொகை பெறுவதற்கு தகுதியுடையவர்களாகிறார்கள்.** இத்திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வருடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-02 | 231.67 | 16,011 |
| 2002-03 | 170.40 | 16,294 |
| 2003-04 | 462.85 | 29,589 |

மாவட்டவாரியான விவரங்கள் பட்டியல் எண் XII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**4, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை (HESS)**

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினை தொடர்ந்து, 2002-2003ஆம் கல்வி ஆண்டு முதல் கல்விக் கடன் உதவித்தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை என வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.6,500/-ம், முதுகலைப் பட்டப் படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்புக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 7,000/-ம் வழங்கப்படுகிறது. மேற்படி உதவித் தொகை மருத்துவப் படிப்பு பயிலும் மாணவ மாணவியர்களைப் பொறுத்தவரை 75% தொகை மானியமாகவும், 25% தொகை கடனாகவும் மற்றவர்களுக்கு முழுவதும் மானியமாக வழங்கப்படுகிறது. இம்மானியத்திற்குத் தகுதி பெற பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ் கடந்த இரண்டாண்டுகளில் 16,240 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:-

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2002-03 | 451.34 | 6,686 |
| 2003-04 | 645.38 | 9,554 |

[2004 ஜூலை 28

மாவட்டவாரியான விவரங்கள் பட்டியல் எண். XIII-ல் கொடுக்கப்பட்டுள்ளன. **2004–2005** ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.430.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5, வெளிநாடு சென்று பயில உதவித் தொகை

இத்திட்டத்தின்கீழ் ஒரு மாணவருக்கு ரூ.3.00 இலட்சம் வீதம் ஆண்டொன்றுக்கு 10 மாணவர்களுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்கப்படும். வெளிநாடுகளில் சென்று பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் போன்ற குறிப்பிடத்தக்க களங்களில் முதுகலைப் பட்டப்படிப்பு நிலையில் ஆராய்ச்சித் திட்டங்களில் மேற்படிப்பைத் தொடர தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இத்திட்டம் நிதியுதவி வழங்க வகை செய்கிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலரின் மாத வருமானம் எல்லா விதங்களிலும் ரூ.12,000/-க்கு மிகாமலிருக்க வேண்டும். 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6, இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

ஆதிதிராவிட நலத் துறை நடத்தும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக பாடப் புத்தகங்களும், 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களைப் பொறுத்தமட்டில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்களும், 4 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவச குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.378.83 இலட்சம் செலவில் புத்தகங்களும், குறிப்பேடுகளும் பொதுப் பள்ளிகளுக்கு ரூ.1,399.62 இலட்சம் செலவில் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் வழங்கப்பட்டன.

### 7, சிலேட்டுகள்

இத்துறை நடத்தும் பள்ளிகளில் பயிலும் ஒன்றாம் வகுப்பு மாணவ, மாணவியர்க்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



2004 ஜூலை 28]

இதன்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-02 | 2.91 | 34,493 |
| 2002-03 | 2.96 | 35,895 |
| 2003-04 | 2.48 | 35,313 |

### 8. சீருடைகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து பருத்தி மற்றும் பாலியஸ்டர் இணைந்த சீருடைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுவரை தைக்கப்பட்ட சீருடைகள் வழங்கப்பட்டு வந்தன. அவ்வாறு தைத்து வழங்கப்படும் சீருடைகள் மாணவரின் அளவுக்கு ஏற்ப இருப்பதில்லை. எனவே, 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்கள் தங்கள் அளவுக்கேற்ப தைத்துக் கொள்ளும் விதத்தில் துணிகள் மட்டும் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும். நடப்பு ஆண்டிற்கு ரூ.1,143.70 இலட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9, பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் 100% பள்ளிச் சேர்க்கையை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் கொண்டு வந்த பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதமொன்றுக்கு ரூ.50/- வீதம் பத்து மாதங்களுக்கு ரூ.500/- வழங்கப்படுகிறது. இத்திட்டம் கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல்,

[2004 ஜூலை 28

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும், சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலுள்ள பழங்குடியினப் பெண் குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்படுகிறது. அதே போன்று 6ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.100/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ.1,000/- சென்னையை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவினமும் பயனாளிகளின் விவரமும் பின்வருமாறு:

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த பெண்கள் எண்ணிக்கை | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த பெண்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | 6 ஆம் வகுப்பு | 6 ஆம் வகுப்பு |
| 2001-2002 | 251.90 | 50380 | 279.48 | 27948 |
| 2002-2003 | 299.435 | 59887 | 293.48 | 29348 |
| 2003-2004 | 300.00 | 60000 | 300.00 | 30000 |

இத்திட்டத்திற்காக 2004-2005ஆம் ஆண்டில் ரூ.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 10. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

ஆதிதிராவிடர், பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய மாணவியரின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் கல்வி பயிலும் அம்மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் உன்னதமான திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் இலவச மிதிவண்டிகள் மாணவியருக்கு வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:



2004 ஜூலை 28]

**மிதிவண்டிகள் விநியோகம்**

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-2002 | 620.19 | 56,525 |
| 2002-2003 | 833.15 | 47,501 |
| 2003-2004 | 798.13 | 50,384 |

மாவட்டவாரியான விவரங்கள் பட்டியல் எண் XIV-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் XI-ம் வகுப்புப் பயிலும் மாணவியர்க்கு மிதி வண்டிகள் வழங்க ரூ.8.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 11. முதுகலைப் பட்டம் பயிலும் மாணவியருக்குச் சலுகை மற்றும் விடுதி வசதி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2001-2002 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியருக்கு முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டம் நீட்டித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதேபோல், முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர், கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர் 50 பேர் தங்கிப் பயிலும் ஒரு தனி விடுதி சென்னையில் 2001-2002 ஆம் ஆண்டு முதல் துவங்கி நடத்தப்பட்டு வருகிறது.

### 12. பரிசுத் தொகைகள் (மாநிலை அளவில்)

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு மாநில அளவில் பொதுப் பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

[2004 ஜூலை 28

| | | |
|---|---|---|
| 1 | பன்னிரண்டாம் வகுப்பு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி) | பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ.25,000/— வீதம் |
| 2. | பத்தாம் வகுப்பு | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ.10,000/— வீதம் |
| 3. | ப்ளஸ் 2 வகுப்புத் தேர்வு மாநில அளவில் தேர்ச்சி (25 பாடங்கள்) | பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடங்களிலும் (25 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ.2,000/— வீதம். |
| 4. | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் ( முதல் ஐந்து பாடங்கள் ) | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (5 பாடங்கள்) முதல் மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிட இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ.1,000/— வீதம். |

**13. பரிசுத் தொகைகள் (மாவட்ட அளவில்)**

மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு பொதுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. விபரங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1 | பன்னிரண்டாம் வகுப்பு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி) | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.3000/— வீதம் |



2004 ஜூலை 28]

| | | |
|---|---|---|
| 2 | பத்தாம் வகுப்பு ( 3 பரிசுகள்) முதல் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.1,000/— வீதம் |
| | இரண்டாம் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.500/— வீதம் |
| | மூன்றாம் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.300/— வீதம் |

**14. (அ) முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்**

+2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களை ஊக்குவிக்க ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்தவ மதம்மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில் முதல் ஆயிரம் பேருக்கும், மாணவிகளில் முதல் ஆயிரம் பேருக்கும் அவர்கள் மேல்படிப்பினைத் தொடர ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1,500/- வீதம் ஐந்து ஆண்டுகளுக்குத் தகுதிப் பரிசு வழங்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:-

| வருடம் | செலவு (ரூபாய் லட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-2002 | 65.47 | 4,365 |
| 2002-2003 | 40.90 | 2,730 |
| 2003-2004 | 72.40 | 4,827 |

**(ஆ) பரிசுத் தொகை திட்டம்**

பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பு, தொழிற்கல்வி படிப்புகளில் 60% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பரிசுத்

தொகையாக ரூ.2,000/– முதல் ரூ.5,000/– வரையில் மொத்தம் 550 மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-2002 | 18.55 | 551 |
| 2002-2003 | 18.49 | 550 |
| 2003-2004 | 18.50 | 550 |

**(இ) சிறந்த மாணவர்க்கான பரிசுத் தொகை**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் எஸ்.எஸ்.எல்.சி. (10 ஆம் வகுப்பு) பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் இரண்டு இடம் பெறும் மாணவர் மற்றும் மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் படிப்பினைத் தொடர இத்தொகை வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகைக்காக தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800/–ம், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஓராண்டிற்கு ரூ.960/– வீதமும் அவர்கள் படிப்பினைத் தொடர்ந்தால் மட்டும் ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். கடந்த் மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வருடம் | செலவு (ரூ. இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-2002 | 5.79 | 575 |
| 2002-2003 | 5.83 | 565 |
| 2003-2004 | 5.98 | 589 |

**(ஈ) காந்தி நினைவு பரிசுத் தொகை**

இந்தப் பரிசுத் தொகை +2 பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்று மேற்படிப்பினைத் தொடரும் இந்து ஆதிதிராவிட மாணவ மாணவியருக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி இத்திட்டத்தின்கீழ்



தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ.1,500/–ம், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,000/–வீதமும் வழங்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வருடம் | செலவு (ரூ. இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-2002 | 1.36 | 99 |
| 2002-2003 | 1.34 | 97 |
| 2003-2004 | 1.71 | 116 |

**(உ) தகுதிவழிப் பரிசுத் தொகை**

தகுதிவழிப் பரிசுத் தொகை காந்தி நினைவு பரிசுத் தொகையைப் போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும், பழங்குடியின மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும் வழங்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வருடம் | செலவு (ரூ. இலட்சத்தில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-2002 | 0.34 | 26 |
| 2002-2003 | 0.26 | 22 |
| 2003-2004 | 0.08 | 8 |

**15. விடுதிகள்**

இத்துறையின்கீழ், ஆதிதிராவிட மாணவர்களுக்கென 1076 விடுதிகளும், பழங்குடியின மாணவர்களுகென 26 விடுதிகளும் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிட விடுதிகளில் 869 விடுதிகள் அரசு கட்டடங்களிலும், 207 வாடகை கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. பழங்குடியினர்க்கான விடுதிகளில் 25 அரசுக் கட்டடங்களிலும், ஒன்று வாடகைக் கட்டடத்திலும் இயங்கிவருகின்றன. இவ்விடுதிகள் குறித்த விவரங்கள் பட்டியல் எண்கள் V, VI, VII மற்றும் VIII-ல் கொடுக்கப் பட்டுள்ளன.

2001–2002 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து ஆதிதிராவிடர் விடுதிகளையும் சொந்தக் கட்டடங்களில்

[2004 ஜூலை 28

அமர்த்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. 2001–2002 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டுகளில் முறையே 143 மற்றும் 150 விடுதிகளின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவன்றி மைய அரசு பங்கேற்கும் திட்டத்தின்கீழ் 2001–2002 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டில் 60 விடுதிகளுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**16. பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்**

"அனைவருக்கும் கல்வி" என்ற "சர்வ சிக்ஷா அபியான்" திட்டத்தின் மூலம் பள்ளிக் கல்வித் துறையுடன் சேர்ந்து செயலாற்ற இத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் மற்றும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எட்டாம் வகுப்புவரை தரமும் வசதிகளும் உயர்வடையும். "அனைவருக்கும் கல்வி" எனும் இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒலி–ஒளி துணைக்கலங்கள் பயன்படுத்திப் பாடம் கற்பிக்கும் வகையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மூலம் ஆசிரியர்களின் கல்வி மற்றும் கற்பிக்கும் திறன் வளர்ச்சி அடைகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 3,631 ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

**17. குடியுரிமைப் பாதுகாப்பு**

**(அ) தீண்டாமை ஒழிப்பு**

இம்மாநிலத்தில் தீண்டாமைப் பழக்கத்தை ஒழிக்கவும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுக்கவும், 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் 1989 ஆகியவை சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென காவல் துறை இயக்குநர் (சமூக நீதி குற்றப் புலனாய்வுத் துறை) தலைமையின்கீழ் அவருக்கு உதவியாக காவல் துறை துணைத் தலைவர் அடங்கிய (மனித உரிமைகள்/சமூகநீதி) குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதற்கென மாவட்டங்களில் 7 காவல் சரகங்களில் 7 துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் 34 காவல் ஆய்வாளர்கள்



2004 ஜூலை 28]

பணியாற்றுகின்றனர். மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடப்பிலுள்ள பணிகள், பாதிக்கப்பட்டோர் மற்றும் அவரைச் சார்ந்திருப்பவர்களுக்குத் தீருதவி வழங்கல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகள் இக்குழுவின் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.224.72 இலட்சம் செலவில் 1,772 பேர் பயனடைந்துள்ளனர்.

மேலும், இவ்விருச் சட்டங்களைச் செயல்படுத்த முதல் நிலை குற்றவியல் நீதிபதிகளைக் கொண்ட 4 சிறப்பு நீதிமன்றங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்களில் குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்போது 13 சிறப்பு குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் சென்னை, விழுப்புரம், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி , கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றனர்.

**(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்**

தீண்டாமையின் தீமை குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் பணியை மேற்கொள்ள பணியாளர்கள் மற்றும் ஒலி–ஒளி அமைப்புடன் கூடிய 2 நடமாடும் விளம்பரப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவை மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தமது விளம்பரப் பணியை செய்து வருகின்றன. இதுதொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் "புதிய சரித்திரம்", "வாழு, வாழவிடு", "காலம் மாறிடுச்சு" ஆகிய தலைப்பிலான திரைப்படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.

**(இ) தீண்டாமை ஒழிப்பில் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமை கடைப்பிடிக்காமல் பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்திற்கு ரூ1.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொகையைக் கொண்டு அக்கிராமத்தின் பயன்பாட்டிற்கு ஊராட்சி மன்றம் நிர்ணயித்தபடி குடிநீர் வழங்கல், பாதை வசதி, பள்ளிக் கட்டடம் கட்டுதல், குழந்தைகள் நல மையம், போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் பஞ்சாயத்துத் தீர்மானத்தின்படி கிராமத்திற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ், 2003-2004 ஆம் ஆண்டில் 24 கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மனித நேய வார விழா ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ரூ.5.00 இலட்சம் செலவில் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கூட்டங்கள் நடத்தி கொண்டாடப்படுகிறது. வில்லுப்பாட்டு கலைஞர்கள் மூலம் பொது மக்களுக்குத் தீண்டாமை ஒழிப்பு குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது.

சமபந்தி விருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 அல்லது அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

## 18. விழிப்புணர்வு கருத்தரங்குகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் அரசு அதிகாரிகள் அதிக அக்கறை கொண்டு மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுவதன் அவசியம் குறித்து அவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் ஆணையிட்டதற்கிணங்க, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விழிப்புணர்வுக் கூட்டங்களும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன.

## 19. இட ஒதுக்கீடு

அரசுப் பணியாளர் தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முறையே 18% மற்றும் 1% சட்டப்படியான இட ஒதுக்கீட்டின்படி நியமனம் செய்யப்படுகின்றனர். இந்த இட ஒதுக்கீட்டின்படி தகுதி வாய்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் போதிய அளவில் கிடைக்கப் பெறாத பட்சத்தில், அவர்களுக்கான அந்தப் பணியிடங்கள் பின்னடைவு காலிப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்டு,



அடுத்து வருகின்ற தேர்வுகள் அல்லது சிறப்புத் தேர்வுகள் மூலம் நிரப்பப்படுகின்றன. இத்தகைய பின்னடைவு காலிப் பணியிடங்கள் காலாவதியாக அனுமதிக்கப்படுவதில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் ஆணையிட்டபடி அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள்/வாரியங்கள் மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் 'A', 'B', 'C', 'D' ஆகிய ஒவ்வொரு பிரிவு பணியிடங்களிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் போதிய பங்கேற்பு இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடும் மற்றும் இந்தப் பங்கேற்பு குறைவுபடுகின்ற இனங்களில் அந்தந்தப் பிரிவில் நுழைவு நிலையில் நேரடி நியமனம் மூலமாகவோ அல்லது பணிமாறுதல் மூலமாகவோ அப்பணியிடங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களைக் கொண்டு நிரப்புவதற்கும், தேவைப்படின் அந்தந்தப் பணியிடங்களுக்கான பணி விதிகளுக்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஆய்வு செய்ய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 20. கொத்தடிமை ஒழிப்பு

தேசிய அளவில் கொத்தடிமை முறையை நீக்குவதற்காக கொத்தடிமை (ஒழிப்புச்) சட்டம் 1976-ல் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்ட அதே ஆண்டு முதல் தமிழகத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் மட்டுமின்றி பிற மாநிலத்திலும் கொத்தடிமைத் தனத்தில் சிக்கியுள்ளவர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை மாநிலத்தில் திறம்பட நிறைவேற்றிடவும் அதன்மூலம் நிவாரணப் பணியை கண்காணிக்கவும் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் மூலம் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல், குறிப்பாக வீட்டுவசதி வழங்குதல் போன்றவை குறித்து முடிவு எடுப்பதற்கும் அந்தந்த மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்டக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இச்சட்டத்தின் கீழுள்ள கொத்தடிமை ஒழிப்பு குறித்து ஆய்வு செய்கிறது. கடன் வழங்குவோர் மற்றும் முதலாளிகளிடம் கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.1,000/-ம்,

பின்னர் வருவாய் ஈட்டும் தொழில் மேற்கொள்ள அவர்களுக்கு மறுவாழ்வு நிதியாக ரூ.19,000/–ம் வழங்கப்படுகிறது. இதுவரையில் ரூ.1301.41 இலட்சம் செலவில் 12,931 நபர்கள் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமைத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு மாதிரி திட்டம்

இந்த அரசு கொத்தடிமைகள் விடுவிப்பு மற்றும் அவர் தம் மறுவாழ்வு மீது அக்கறை செலுத்துவதோடு மட்டுமல்லாமல், மேலும் கடனாளிகளாக ஆவதை தடுப்பதிலும் கவனம் செலுத்துகிறது. அகில உலகத் தொழிலாளரமைப்பின் தீவிர ஈடுபாட்டுடன் திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமை முறையை தடுக்கும் விதத்தில் திட்டங்கள் செயல்படுத்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் தலைமையின்கீழ் திட்ட அறிவுரைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

### 21. சாதிச் சான்றிதழ்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவர்களுக்கு அரசியல் அமைப்பின்கீழ் செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை போலியான சாதிச் சான்றுகள் அளித்து இதர இனத்தவர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்தும் பொதுப் பணிகளில் நியமனமும் பெறுவதன்மூலம் உண்மையான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அவ்வாறு அளிக்கப்பட்ட சான்றுகளின் மெய்த்தன்மையினை முறையாக ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும். இதற்கென உச்சநீதிமன்றம் A.I.R.1995 SC.94–ல் சமூகநிலைச் சான்று வழங்குதல், அதன் மெய்த்தன்மையினை ஆய்வு செய்தல் மற்றும் ஒப்பளித்தல் குறித்து வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தளித்துள்ளது. அதனடிப்படையில் இந்த அரசு மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் தலைமையிலும் இரு குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட விழிப்புணர்வுக்குழுக்கள் இத்தகு நிகழ்வுகளை, உரிய ஆவணங்களைப் பரிசீலித்து ஆய்வு செய்த பின், சாதிச் சான்றிதழ்கள் பொய்த்தன்மை வாய்ந்ததாய் இருப்பின் அவற்றை இரத்து செய்து விரிவான ஆணைகள் வெளியிடுகின்றன. மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களால் வெளியிடப்படும் ஆணைகளை மாநில கூர்நோக்குக் குழு



மறு ஆய்வு செய்வதுடன், மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களின் ஆணையினால் பாதிக்கப்பட்டவரால் தொடரப்பட்ட மேல்முறையீடு களையும் ஆய்வு செய்கிறது. மாவட்ட விழிப்பிணர்வுக் குழு மற்றும் மாநில கூர்நோக்குக் குழுவிடம் நிலுவையிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையறியும் இனங்கள் பட்டியல் எண்கள் IX (ம) X-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 22, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன. மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்ட பல இடங்களில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் பயனாளிகள் அவ்விடங்களில் குடியேறாமல் உள்ளனர். மனைப்பட்டாக்கள் வழங்கி எண்ணிக்கையைப் பெருக்குவதற்குப் பதிலாக அப்படிப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு அளித்தார். இதனால் பயனாளிகள் தாங்களாகவே முன்வந்து வீடுகளை கட்டிக் கொண்டு குடியேறினர். இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்ய கடந்த 3 ஆண்டுகளுக்கான செலவினம் மற்றும் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:

**வீட்டுமனைப் பட்டாக்கள்**

| வருடம் | செலவினம் (ரூ. இலட்சத்தில்) | பயனடைந்தவர்கள் |
|---|---|---|
| 2001-02 | 396.77 | 17,240 |
| 2002-03 | 290.50 | 13,080 |
| 2003-04 | 381.84 | 13,395 |

**அடிப்படை வசதிகள்**

| வருடம் | செலவினம் (ரூ. இலட்சத்தில்) | குடியிருப்புகள் |
|---|---|---|
| 2001-02 | 93.00 | 21 |
| 2002-03 | 100.00 | 95 |
| 2003-04 | 100.00 | 74 |

## 23. வீட்டுவசதி

ஊரக வளர்ச்சித் துறைமூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகுப்பு வீடுகள் கான்கிரீட் கூரை வேயப்பட்ட வீடுகளாக கட்டிக்கொள்ள உதவும் வகையில் ஊரக வளர்ச்சித் துறை நிதியுடன் இத்துறை மூலம் ஒவ்வொரு தொகுப்பு வீட்டிற்கும் ரூ.12,000/- மானியமாக வழங்கப்படுகிறது.

## 24. சமுதாயக் கூடங்கள்

ஆதிதிராவிடர்கள் இல்லத் திருமணங்கள் நடத்துவதற்கும், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தேவையினை பூர்த்தி செய்வதற்கு ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக்கூடங்கள் கட்டப்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் இரண்டு சமுதாயக் கூடங்கள் ரூ.12.00 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்தில், சேக்கிழார்பட்டி மற்றும் கண்டமனூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

## 25. மயானங்கள் மற்றும் பாதை வசதி

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான மயான வசதி மற்றும் மயான பாதைகள் இத்திட்டத்தின்கீழ் அமைத்துத் தரப்படுகின்றன. இத்திட்டத்திற்கு தேவையான நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களும் தமது நிதியிலிருந்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருகின்றன. இதற்கான குடிநீர் வசதிக்கு 15%,இணைப்புச்சாலை வசதிக்கு 10% இத்துறையின் பங்குத் தொகையாக வழங்கப்படுகின்றன. கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டம் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:-

| வருடம் | ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | சிறு பணிகள் | நிலம் | சிறு பணிகள் | நிலம் |
| 2001-02 | 61.00 | 183.00 | 56.82 | 74.78 |
| 2002-03 | 22.50 | 91.50 | 21.90 | 44.00 |
| 2003-04 | 10.00 | 91.50 | 9.44 | 46.04 |

2004-2005ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.78.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 26. ஈமச்சடங்கிற்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவரின் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ. 500/- வழங்கப்படுகிறது.

## 27. சிறப்பு உள்ளடக்கத் திட்டம்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலிருந்து ஆதிதிராவிடர் மக்கள் தொகையின் விகிதத்திற்கேற்ப அவர்களுக்குரிய பயன்கள் சென்றடைய வேண்டுமென மைய அரசு உணர்ந்ததால் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை ஆதிதிராவிடர்களுக்கென அறிமுகப்படுத்தியது. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி முழுமையாக பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகள் வாயிலாக அரசின் நிதியுதவி ஆதிதிராவிடப் பிரிவு மக்களை எளிதாக சென்றடைவதை உறுதி செய்வதற்காக இத்திட்டத்தை இறுதி செய்து, செயல்படுத்தி, ஒருங்கிணைத்து வரும் மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலரை (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) தலைமையாகக் கொண்ட உயர்மட்டக்குழு அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவாக உயர்த்தப்பட்டுள்ளது. பகுக்கப்படும் மற்றும் பகுக்கப்படாத புதிய திட்டங்களை முடிவு செய்து பல்வேறு அரசு துறையின் வாயிலாக நிறைவேற்றவும் இக்குழு தீர்மானிக்கும்.

2000-2002ஆம் ஆண்டுகளின் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட மதிப் பீடு | சிறப்பு உள்ளடக்க திட்டம் (19.18%) | செல வினம் | சி.உ.தி. பொறுத்த செல வினத்தின் விழுக் காடு | மாநில திட்ட மதிப்பீட்டினைப் பொறுத்த செலவி னத்தின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2000-2001 | 570026.24 | 101337.00 | 76453.07 | 75.44% | 13.41% |
| 2001-2002 | 520000.00 | 98778.27 | 74331.68 | 75.25% | 14.29% |

[2004 ஜூலை 28

2002–2003 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டமானது ஆதிதிராவிடர் மக்கள் நேரடியாக பயன்பெறும் திட்டம் மற்றும் மற்ற மக்களுடன் சேர்ந்து பயன்பெறும் திட்டம் என இருவகையாக பிரிக்கப்பட்டு செலவின விவரங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட மதிப்பீடு | சிறப்பு உள்ளடக்க திட்டம் (19.18%) | செலவினம் | | | சிஉதி பெறுத்த செலவி னத்தின் விழுக் காடு | மாநில திட்ட மதிப்பீட்டில் செலவின % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக் கூடியது | பகுக்க முடியாதது | மொத்தம் | | |
| 2002-2003 | 575152.96 | 110373.55 | 40209.13 | 79069.95 | 119279.08 | 108.06% | 20.73% |
| 2003-2004 | 700013.16 | 135370.64 | 61388.49 | 100125.28 | 161513.77 | 119.31% | 23.07% |

2003–2004 ஆம் ஆண்டிற்கான துறை வாரியான விவரங்கள் பட்டியல் எண் XV-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## III. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் முன்னேற்றத்திற்கென தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகம் 1974 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இக்கழகம் தொழிற்நுட்பப் பிரிவு மற்றும் வளர்ச்சிப் பிரிவு என்ற இரு பிரிவுகளை உள்ளடக்கியது. வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், ஆசிரியர் குடியிருப்புகள் வகுப்பறைகள் போன்ற கட்டுமானப் பணிகளை தொழிற்நுட்பப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்பாடு அடையச்செய்ய 1980–1981–லிருந்து இக்கழகத்தின் வளர்ச்சிப் பிரிவு, மாநிலத்திலுள்ள



2004 ஜூலை 28]

இம்மக்களின் தர மேம்பாட்டிற்கான பொருளாதார நடவடிக்கைகளை தேவையின் அடிப்படையில் வகுத்து நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 28. தாட்கோவின் பொருளாதார மேம்பாட்டு முனைப்பு நடவடிக்கைகள்

#### (அ) திட்டங்கள் செயல்முறையை பன்முகப்படுத்துதல்

2002–2003 ஆம் ஆண்டு முதல் மாவட்ட செயலாக்கத் திட்டம், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் அம்மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட மக்களின் தேவை மற்றும் தொழில் செய்வதற்கு அம்மாவட்டத்திலுள்ள வசதி வாய்ப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பயனாளிகளின் தேர்வு, பன்முகப்படுத்தப்பட்டு வட்டார அளவில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

#### (ஆ) மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

திட்ட இலக்கு தனிநபர் பயனாளிகளுக்கு மட்டும் உதவுவது என்ற நிலை மாறி தற்சமயம் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மொத்த மானியத்தில் 75% பிரத்தியேகமாக பெண்கள் சுய உதவி குழுக்களின் வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

#### (இ) தொழிற்பயிற்சி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு அளிக்கப்படும் தொழிற் பயிற்சித் திட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்ட தொழிற் பயிற்சி தேர்வுக் குழுவால் ஒழுங்படுத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் மத்திய மாநில அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் அளிக்கப்படுகின்றன.

#### (ஈ) மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி

நலிவடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்கென 2002–2003 முதல் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை திட்டம் எனும் புதிய திட்டம் தொடங்கப்பட்டு, ஏற்கனவே நடைமுறையிலுள்ள திட்டங்கள் மூலம் பயன்பெற இயலாத நிலையிலுள்ள மிகவும் நலிவடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 100%

[2004 ஜூலை 28

மானியம் அடிப்படையில் வருமானம் ஈட்டக் கூடிய தொழிலை தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட செயல்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 5% மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதிக்கென பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

*(உ) கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு*

தாட்கோ மூலம் ஆண்டுதோறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்படும் அனைத்து கடன்களை 100% கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**(ஊ) தேசிய துப்புரவுப் பணியாளர் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம்**

தேசிய துப்புரவுப் பணியாளர் மறுவாழ்வுத் திட்டம் முற்றிலும் சீரமைக்கப்பட்டு துப்புரவுப் பணியாளர் மற்றும் சுகாதாரப் பணியாளர்களை சார்ந்து வாழ்பவரின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில், அவர்களைக் கொண்ட சுய உதவி குழுக்கள் அமைக்கப்பட்டு, வருமானம் ஈட்டக்கூடிய தொழிலை மேற்கொள்ளப் போதிய தொழிற் பயிற்சியும் கடனுதவியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

*(எ) நிலம் வாங்கும் திட்டம்*

2003-2004-ல் நிலம் வாங்கும் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் முனைப்பு நடவடிக்கை முயற்சியாக, நிலம் வாங்கும் திட்டத்தின்கீழ் 7,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண் பயனாளிகளுக்கு மானியம் மற்றும் கடன் தொகையாக ரூ.70.00 கோடி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தனிநபர் பயனாளிகளுக்கு நிலம் வாங்க ரூ.1.00 இலட்சமும், நிலமேம்பாடு, சிறிய அளவிலான நீர் பாசனம் மற்றும் கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 50% மானியம் மற்றும் 50% பருவக்கடன் என்ற அடிப்படையில் ரூ.1.00 இலட்சமும்



2004 ஜூலை 28]

கடன் உதவி வழங்கப்படும். இத்துடன், இந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு விவசாயத்திற்காக 5,000 விசைக்குழாய்கள் வழங்குவதுடன் மின் இணைப்புகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். மேலும், இப்பயனாளிகளுக்கு முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணத்தில் 7.5% விலக்கு அளிக்கப்படும்.

## IV. பழங்குடியினர் நலன்

2001 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 6.51 இலட்சம் பழங்குடியினர் உள்ளனர். இது மொத்த மக்கட் தொகையில் 1.04% ஆகும். பழங்குடியினர் நலனுக்காக தனியே ஒரு இயக்ககம் 1-4-2000 முதல் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் நல இயக்ககம் பழங்குடியினர்கள் அதிகம் வாழும் 13 மாவட்டங்களில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் 36 வகை பழங்குடியினர்களில் 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பா, இருளர், பனியா, காட்டுநாயகன் ஆகியோர் பண்டைய பழங்குடியினர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். பழங்குடியினர் மக்கட்தொகையில் 50%-க்கும் அதிகமாக வாழும் பகுதி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதி 6 மாவட்டங்களில் உள்ளது. பரவலாக வாழும் மற்ற பழங்குடியினர்கள் பரவி வாழும் பழங்குடியினர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**29. பழங்குடியினர் துணைத் திட்டம்**

பழங்குடியினர்களின் பொருளாதார, கல்வி, சமூக நிலையை மேம்படுத்தி பழங்குடியினர்க்கும் பழங்குடியினர் அல்லாதார்க்கும் உள்ள இடைவெளியை குறைப்பதற்கு பழங்குடியினர் மேம்பாடு அவசியமாகிறது. பழங்குடியினரின் நிலை தொழிலாளர் முனைப்பான திட்டம் மற்றும் அதன் செயலாக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது. பழங்குடியின மேம்பாட்டின் முக்கிய குறிக்கோள் இம்மக்கள் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டு நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதாகும். 1976-1977 ஆம் ஆண்டிலிருந்து பழங்குடியினரின் மக்கட்தொகை விகிதத்தின்படி அவர்களுக்கென உள்ள நலத்திட்டங்கள் அவர்களை சென்றடைவதற்காக புதிதாக பழங்குடியினர் துணைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பழங்குடியினர் துணைத்

[2004 ஜூலை 28

திட்டம் உருவாக்கப்படுகிறது. பழங்குடியினர் துணைத் திட்டம் பல்வேறு துறைகளின் உதவியுடன் மாநில பழங்குடியினர் மக்கட்தொகையான 1.04%-க்கு நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டம் பழங்குடியினர் அதிகம் வாழும் பின்வரும் இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

| வ. எண் | மாவட்டம் | பழங்குடியினர் வாழும் பகுதி |
|---|---|---|
| 1. | தர்மபுரி | சித்தேரிமலை. |
| 2. | நாமக்கல் | கொல்லிமலை |
| 3. | சேலம் | ஏற்காடு மலை |
| 4. | சேலம் | கல்ராயன் மலை |
| 5. | சேலம் | அறுநூத்து மலை |
| 6. | சேலம் | பச்சைமலை. |
| 7. | திருச்சி | பச்சைமலை |
| 8. | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை |
| 9. | விழுப்புரம் | கல்ராயன் மலை |

பழங்குடியினர் துணைத்திட்ட முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட முதலீடு ரூ. | திட்டமிடப் பட்ட பழங்குடி யினர் துணை திட்டம் (103%) | செலவினம் ரூ. | திட்டமிடப் பட்ட பழங்குடி யினர் துணைத் திட்டம் விழுக்காடு | ஆண்டுத் திட்ட செலவினம் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2000-01 | 570026.24 | 5859.87 | 1754.88 | -29.94% | 0.30% |
| 2001-02 | 520000.00 | 7295.46 | 1615.80 | 22.14% | 0.31% |

2002–2003 ஆம் ஆண்டிலிருந்து பழங்குடியினர் துணைத் திட்டச் செலவின விவரம் பகுக்கக்கூடியவை/பகுக்கக்கூடாதவை என பிரித்து அளிக்கப்பட்டுள்ளன:



2004 ஜூலை 28]

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட மதிப்பீடு | பழங்குடி யினர் துணைத் திட்டம் (103%) | செலவினம் | | | பகுதி. பொறுத்த செலவி னத்தின் விழுக்காடு | மாநில திட்ட மதிப் பீட்டினைப் பொறுத்த செலவினத் தின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக் கூடியது | பகுக்க முடியாதது | மொத்தம் | | |
| 2002-03 | 575152.96 | 5941.03 | 2001.99 | 1427.01 | 3429.00 | 57.71% | 0.59% |
| 2003-04 | 700013.16 | 8606.00 | 3629.88 | 4869.70 | 8499.58 | 98.76% | 1.21% |

2003–2004 ஆம் ஆண்டிற்கான துறை வாரியான விவரங்கள் பட்டியல் எண் XV-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 30. பழங்குடியினருக்கான அடிப்படைக் கட்டுமான அமைப்பு

### (அ) வீட்டுவசதித் திட்டம்

மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதியில் வாழும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசு ஆண்டுதோறும் சமவெளிப் பகுதிகளில் ஒரு வீட்டிற்கு ரூ.32,000/- வீதமும் மலைப் பகுதிகளில் ரூ.34,000/-வீதமும் அவர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. இத்திட்டத்தின் முழுச் செலவினமும் அரசால் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்பதாவது 5 ஆண்டுத் திட்டத்தில் 1,384 வீடுகள் பழங்குடியினருக்காக கட்டப்பட்டது. 2004-2005-ல் இத்திட்டத்திற்காக ரூ.16.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) பொருளாதார மேம்பாடு

பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாட்டில் 19 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் (LAMPS) சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் பழங்குடியினருக்கு சிறு கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்கப் பெறுவதற்கும் இச்சங்கங்கள் உதவி புரிகின்றன. 19 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் (LAMPS) சங்கங்களின் விவரங்கள் பட்டியல் எண் XVI-ல் தரப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 28

வேலைவாய்ப்பில் வழிகாட்டும் வகையில் 4 தொழில் நெறி வழிகாட்டு மையங்கள் உதகமண்டலம், சங்கராபுரம், கொல்லிமலை, ஜவ்வாது மலைப் பகுதிகளிலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியினர் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு 25 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 76 துணைச் சுகாதார நிலையங்களும், 7 சித்த மருத்துவமனைகளும், 5 அரசு மருந்தகங்களும் மற்றும் ஒரு நடமாடும் சித்த மருத்துவ நிலையமும் செயல்பட்டு வருகின்றன. 25 ஆரம்பச் சுகாதார நிலையங்களின் விவரங்கள் பட்டியல் எண் XVII-ல் தரப்பட்டுள்ளன.

**(இ) குடும்ப வருவாய் ஈட்டித் தரும் திட்டங்கள்**

பண்டைய பழங்குடியினர் மற்றும் பரவி வாழும் பழங்குடியினர் ஆகியோரின் குடும்ப வருவாய் ஈட்டித் தரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆடு அலகுகள் பழங்குடியினர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் 78 ஆடு அலகுகள் ரூ.7.02 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

**(ஈ) அடிப்படை வசதிகள்**

ஒவ்வொரு ஆண்டும் பழங்குடியினர்களுக்கு அடிப்படை வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி வழங்குவதற்காக ரூ.32.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மின்வசதி மற்றும் சாலை வசதிகள் மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து செய்யப்படுகிறது.

**(உ) மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்**

பழங்குடியினர் பகுதியில் பின்வரும் மைய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன: -

**(i) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய உதவி**

இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பழங்குடியினர்களுக்கு வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கு முதன்மையாகவும் இதில் ஒரு பகுதி (30 % மிகாமல்) இந்த வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கான அடிப்படை வசதிகளுக்காக செலவிடப்படுகிறது. 2003–2004–ல் ரூ.290.99 இலட்சம்



2004 ஜூலை 28]

ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) இந்திய அரசியலமைப்புச் சட்ட விதி 275(1)–ன்கீழ் விடுவிக்கப்படும் நிதி**

கடந்த மூன்றாண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ரூ.2.95 கோடியில் விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையில் உள்ள வெள்ளிமலையில் மாதிரி உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்தப்பட்டது. கோவை மாவட்டத்தில் தோலாம்பாளையம் முதல் கோபனாரி வரை புதிய சாலை அமைத்தல் பணிக்கு ரூ.310.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.63.00 இலட்சத்தில் பழங்குடியினருக்கு வீடுகளும் மற்றும் மின்வசதி திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு ரூ.239.77 இலட்சத்தில் உள் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் பழங்குடியினர் நலனுக்கென ரூ.70.00 இலட்சம் செலவில் 5 இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நாமக்கல் மாவட்டத்தில் முள்ளுக்குறிச்சி முதல் நரியன்காடு வரை தார்ச்சாலை அமைப்பதற்கு ரூ.70.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர்த்து பழங்குடியினர் பகுதிகளில் சாலை வசதிகள், குடிநீர் வசதி, தெருவிளக்கு மற்றும் வீடுகள் கட்டித்தருதல் போன்ற பல்வேறு வசதிகள் செய்துத் தருவதற்காக ரூ.210.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(iii) பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்கான மைய அரசின் நிதியுதவி**

நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்காக சூரிய ஒளி விளக்குகள் அமைக்கும் பணி ரூ.49.54 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது நீலகிரி மாவட்டத்தில் பனியா பண்ணை வீடுகள் பண்டைய பழங்குடியினர்களுக்கு கட்டிக் கொடுப்பதற்காகவும் பண்டைய பழங்குடியினர் புள்ளிவிவர கணக்கெடுப்புப் பணி மேற்கொள்வதற்காகவும் ரூ.45.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பண்டைய பழங்குடியினர் புள்ளிவிவர கணக்கெடுப்பு பணி பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், உதகமண்டலம் மூலம் மேற்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம் நடைபெற உள்ளன.

**(iv) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் அருங்காட்சியகம்**

பழங்குடியினரின் தொன்மைக்கால வரலாற்றை நினைவுகூரும் வகையில் பழங்குடியினர்களுக்காக அருங்காட்சியகம் ஒன்று உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் ரூ.200.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.120.00 இலட்சம் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர்கள் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பழங்குடியினர் திட்டங்களை ஆய்வு செய்தல், பழங்குடியினர் புள்ளிவிவர கணக்கெடுப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**31. பழங்குடியினருக்கான இதர திட்டங்கள்**

*(அ) பழங்குடியினர் சுய உதவிக் குழுக்கள்*

பழங்குடியினர் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சுய உதவிக் குழுவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது 1,261 சுய உதவிக் குழுக்களில் 19,872 பழங்குடியின பெண்கள் திறம்பட செயல்பட்டு வருகின்றனர்.

**(ஆ) இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR)**

2001–2002 ஆம் ஆண்டு முதல் இந்திய மருத்துவக் கழக ஆராய்ச்சிக் குழுமத் திட்டப் பணிகள், காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன. பண்டைய பழங்குடியினரின் மருத்துவ நலன் கருதி அதற்கு வசதிகள் செய்யும் பொருட்டு பழங்குடியினர் நலப் பணியாளர்கள் மற்றும் தாய்ஸ் ஆகியோரை நியமித்து அவர்களுக்கு இத்திட்டப் பணிகளுக்கான தொடர் பயிற்சி வழங்கப்படுகிறது.

**(இ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP)**

நீலகிரியில் வாழும் பழங்குடியினர்களின் நலனுக்காக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்ட ஆட்சியரால் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதற்கென ரூ.120.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**V. நிதி ஒதுக்கீடு**

*2004—2005 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு*

| வ எண் | கணக்குத் தலைப்பு | திட்டத்தில் சேராதது (ரூ. இலட்சத்தில்) | திட்டம் (ரூ. இலட்சத்தில்) | மைய அரசு பொறுப் பேற்புத் திட்டம் (ரூ. இலட்சத்தில்) | மைய அரசு மற்றும் மாநில அரசு பங்கேற்கும் திட்டங்கள் (ரூ. இலட்சத்தில்) | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2225 01 ஆதி,பந மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினர் நலன் | 16468.46 | 6358.41 | 10879.32 | 456.57 | 34162.76 |
| | 02 பழங்குடியினர் நலன் | 2220.87 | 314.02 | 434.00 | 27.37 | 2996.26 |
| | 80 பொது | 1593.90 | 10.60 | 0 | 0 | 1604.50 |
| 2 | 2235 00 சமூக பாதுகாப்பு மற்றும் நலன் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 மறுவாழ்வு | 0 | 0 | 0 | 200.00 | 200.00 |
| | 60 இதர சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் | 300.00 | 0 | 0 | 0 | 300.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 2251 00 தலைமைச் செயலகம் — சமூகப் பணிகள் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 090 தலைமைச் செயலகம் | 231.45 | 0 | 0 | 0 | 231.45 |
| 4 | 4225 00 ஆதி.பந மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த முதலீட்டுத் தொகை. | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 ஆதிதிராவிடர் நலன் | 0 | 5211.89 | 0 | 0.01 | 5211.90 |
| | 02 பழங்குடியினர் நலன் | 0 | 159.20 | 0 | 0.01 | 159.21 |
| 5 | 6225—00— ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான கடன்கள். | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 ஆதிதிராவிடர்கள் நலன் | 0 | 25.00 | 0 | 0 | 25.00 |
| | மொத்தம் | **20814.68** | **12079.12** | **11313.32** | **683.96** | **44891.08** |



கோரிக்கை எண்.4 — ஆதிதிராவிடர் நலத்துறை — நிதி ஒதுக்கீடு
( இன வாரியான விவரம் )

( ரூபாய் இலட்சத்தில் )

| வ. எண் | சிறிய தலைப்புகளும் / உள் தலைப்புகளும் | கணக்குகள் 2002—2003 | இறுதி திருத்த மதிப்பீடு 2003—2004 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2004—2005 |
|---|---|---|---|---|
| I. | திட்டம்<br>கல்வி<br>அ) உதவித் தொகை<br>1) உயர் கல்விக்காக வெளி நாடு செல்வதற்கான படிப்புதவித் தொகை | 3.31 | 10.00 | 10.00 |
| | 2) ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு இலவசக் கல்வி படிப்புதவித் தொகை | 77.13 | 85.00 | 85.00 |
| | 3) முதுகலை பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு இலவசக் கல்வி | 12.56 | 46.26 | 50.00 |
| | 4) தொழில்முறைக்கல்வி, பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கடன்கள் | 381.43 | 25.00 | 25.00 |
| | 5) உயர் கல்விக்கான சிறப்பு உதவித்தொகை | 425.14 | 655.05 | 430.00 |
| | மொத்தம் | 899.57 | 821.31 | 600.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | **ஆ வெகுமதி** | | | |
| | 1) முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் திட்டம் | 47.95 | 82.50 | 53.50 |
| | 2) மூன்று முதல் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை | 326.54 | 300.00 | 300.00 |
| | 3) ஆறாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை | 258.57 | 300.00 | 300.00 |
| | மொத்தம் | 633.06 | 682.50 | 653.50 |
| | **இ பராமரிப்பு** | | | |
| | 1) விடுதிகளை தொடங்குதலும் பராமரித்தலும் (ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் விடுதிக்கான ஒதுக்கீடுகள்) | 261.51 | 326.01 | 324.87 |
| | 2) ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்(ஆசிரியர் பணியாளர் சம்பளம்) | 0 | 28.14 | 38.53 |
| | 3) ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல் (ஆசிரியர் முற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான சம்பளம்) | 159.04 | 159.98 | 177.57 |
| | 4) ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல் (ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் பிற இனங்கள்) | 0 | 0 | 7.32 |



| | | | | |
|---|---|---|---|---|
| | 5) உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணிணி வாங்கி வழங்குதல் | 0.00 | 3.32 | 3.01 |
| | மொத்தம் | 420.55 | 517.45 | 551.30 |
| | **ஈ. இணைப்பு அமைவு** | | | |
| | 1) முதுநிலைப் பட்டதாரிகளுக்கான விடுதிகள் தொடங்குதல் (ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளருக்கான சம்பள இனங்கள்) | 40.42 | 41.21 | 42.05 |
| | 2) ஆய்வுக் கூட சாதனங்கள் வாங்கி வழங்குதல் | 9.88 | 3.00 | 3.00 |
| | 3) கல்விப் பிரிவை வலுப்படுத்துதல் | (-)0.66 | 0.00 | 0.00 |
| | 4) ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் கட்டுதல்<br>(i) 16 பெரும் பணிகள்<br>(ii) 64 நிலங்கள் | 0.00<br>3.77 | 4149.72<br>50.00 | 4126.87<br>50.00 |
| | 5) ஆதிதிராவிடர் நல பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் | 19.91 | 76.10 | 188.21 |
| | 6) ஹட்கோ மூலம் ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கு தாட்கோவிற்கு நிதியுதவி | 62.34 | 211.60 | 515.31 |
| | மொத்தம் | 135.66 | 4531.63 | 4925.44 |

| | | | | |
|---|---|---|---|---|
| | உ) பிற உதவிகள் | | | |
| | 1) சீருடைகள் வழங்குதல் | 38.95 | | |
| | 2) கம்பளி மேலாடை வழங்குதல் | 0.75 | | |
| | 3) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ மாணவிகளுக்கு தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி அளித்தல் | 2.13 | 3.00 | 3.00 |
| | 4) ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனை மேம்படுத்துபவர்களுக்கு டாக்டர் அம்பேத்கார் பரிசு | 1.25 | 1.25 | 1.25 |
| | 5) பதினொராம், பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மாணவிகளுக்கு மிதிவண்டி இலவசமாக அளித்தல் | 790.83 | 800.00 | 800.00 |
| | 6) சாய்வு மேசையுடன் கூடிய பெஞ்சுகள் | 0.00 | 7.55 | 9.44 |
| | 7) பொது பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/ கிறித்துவ மதம் மாறிய மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பாடப்புத்தகம் வழங்கல். | | 1400.00 | 1550.00 |
| | 8) முதுநிலை பட்டதாரிகள் மற்றும் உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பணியிடை பயிற்சி | 0.00 | 3.40 | 0.00 |
| | மொத்தம் | 833.91 | 3311.61 | 3508.39 |



| | | | | |
|---|---|---|---|---|
| II | கிராம உள் அமைப்பு | | | |
| | 1) இலவச வீட்டு மனைப் பட்டா | 514.20 | 908.50 | 919.60 |
| | 2) ஆதிதிராவிடர் காலனிகளுக்கு குடிநீர் | 46.07 | 15.00 | 15.00 |
| | 3) கான்கிரீட் வீடுகள் கட்டித் தருதல் | 0.00 | 0.01 | 0.01 |
| | 4) ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடு கட்டித் தர மானியம் | 22.63 | 18.77 | 0.00 |
| | 5) சமூக நலக் கூடங்கள் கட்டித் தருதல் | 9.59 | 12.00 | 12.00 |
| | 6) இடுகாடுகளுக்கான பாதை வசதி ஏற்படுத்துதல் மற்றும் இடுகாடுகள் ஏற்படுத்துதல் | 57.13 | 78.50 | 78.50 |
| | மொத்தம் | 649.62 | 1032.78 | 1025.11 |
| III. | பொருளாதார உதவிகள் | | | |
| | பிற திட்டங்கள் | | | |
| | 1) தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு நிதி உதவி (கல்விக் குடும்பத் திட்டம்) | (-) 0.15 | 0.01 | 0.01 |
| | மொத்தம் | (-) 0.15 | 0.01 | 0.01 |
| IV. | பிற இனங்கள் | | | |
| | 1) தனி வட்டாட்சியர்களுக்கு (ஆதிதிராவிடர் நலம்) ஈப்புகள் | 15.92 | 10.60 | 10.60 |
| | 2) டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா | 0.00 | 0.05 | 0.05 |
| | 3) விழிப்புணர்வு முகாம்கள் | (-) 38.90 | 0.00 | 0.00 |
| | மொத்தம் | (-)22.98 | 10.65 | 10.65 |
| V. | பங்கு மூலதனம் | | | |
| | தாட்கோவிற்கு பங்கு மூலதனம் | 0.00 | 0.00 | 331.50 |
| | மொத்தம் | 0.00 | 0.00 | 331.50 |

சுருக்கம் — திட்டம் ( கோரிக்கை எண்.4 )

| வ. எண் | சிறிய தலைப்புகளும் / உள் தலைப்புகளும் | கணக்குகள் 2002—2003 | இறுதி திருத்த மதிப்பீடு 2003—2004 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2004—2005 |
|---|---|---|---|---|
| I. | **கல்வி** | | | |
| | அ) உதவித் தொகைகள் | 899.57 | 821.31 | 600.00 |
| | ஆ) வெகுமதிகள் | 633.06 | 682.50 | 653.50 |
| | இ) பராமரிப்பு | 420.55 | 517.45 | 551.30 |
| | ஈ) இணைப்பு அமைவு | 135.66 | 4531.63 | 4925.44 |
| | உ) பிற உதவிகள் | 833.91 | 3311.61 | 3508.39 |
| II. | **கிராம உள் அமைப்பு** | 649.62 | 1032.78 | 1025.11 |
| III. | **பொருளாதார உதவிகள் பிற திட்டங்கள்** | (-) 0.15 | 0.01 | 0.01 |
| IV. | **பிற இனங்கள்** | (-) 22.98 | 10.65 | 10.65 |
| V. | **தாட்கோவிற்கு பங்கு மூலதனம்** | 0.00 | 0.00 | 331.50 |
| | மொத்தம் | 3549.24 | 10907.94 | 11605.90 |
| I | **திட்டம் சாராதவை**<br>**கல்வி**<br>**(அ) உதவித் தொகைகள்** | | | |
| | 1) மாநில மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்புக்கான உதவித் தொகைகள் | 886.00 | 360.96 | 369.47 |
| | 2) தேர்வுக்கான தொகையை திரும்ப அளித்தல் /பதிவுக்கட்டணம் | 45.35 | 345.99 | 395.99 |



| | | | | |
|---|---|---|---|---|
| | 3) மாநில அரசு சிறப்பு படிப்புதவித் தொகை | 160.54 | 462.85 | 288.51 |
| | 4) பல்கலைக் கழகங்களுக்கு இழப்பீடு | 320.59 | 129.97 | 177.97 |
| | 5) விளையாட்டு பொருட்கள் வாங்கி வழங்குதல் | (-) 4.05 | 0.30 | 0.30 |
| | மொத்தம் | 1408.43 | 1300.07 | 1232.24 |
| | (ஆ) வெகுமதிகள் | | | |
| | 1) அறிவுக் கூர்மையுள்ள மாணவ/மாணவிகளுக்கு உதவித் தொகை | 5.19 | 8.16 | 8.16 |
| | 2) காந்தி நினைவு படிப்புதவித் தொகை | 1.34 | 3.34 | 3.34 |
| | 3) பரிசுத் தொகை வெகுமதி | 18.49 | 18.50 | 18.50 |
| | 4) கல்வித் துறை மூலம் ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை | 1.51 | 1.42 | 1.42 |
| | 5) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர்க்கு பரிசுத் தொகை | 20.48 | 20.52 | 9.77 |
| | மொத்தம் | 47.01 | 51.94 | 41.19 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (இ) பராமரிப்பு | | | |
| | 1) ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கான பராமரிப்பு | 56.81 | 45.00 | 45.00 |
| | 2) ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கான சிறுபணிகள் | 49.58 | 40.00 | 40.00 |
| | 3) ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கான பராமரிப்பு | 42.07 | 45.00 | 55.00 |
| | 4) தனியார் விடுதிகளுக்கு மான்யம் வழங்கல் | 63.12 | 75.00 | 66.00 |
| | 5) பள்ளிக் கல்வி (பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் பிற) | 7723.24 | 8117.85 | 8849.67 |
| | 6) விடுதிகள் (பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் பிற) | 4811.11 | 5136.48 | 5437.47 |
| | மொத்தம் | 12745.93 | 13459.33 | 14493.14 |
| | ஈ. இணைப்பமைவு | | | |
| | 1) ஆதிதிராவிடர் நல உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலக புத்தகங்கள் வாங்கி வழங்குதல் | 0.68 | 1.10 | 1.10 |
| | 2) ஆய்வகக் கூட சாதனங்கள் வாங்கி வழங்கல் | 5.77 | 5.93 | 5.93 |
| | 3) ஆசிரியர்களுக்கு பயிற்சி | 2.53 | 0.01 | 0.01 |
| | 4) திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு | 1.05 | 1.10 | 1.10 |
| | 5) தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிக்கு வரைபடம் மற்றும் விளக்கப் படம் வாங்கி வழங்கல் | 0.42 | 0.53 | 0.53 |
| | 6) பள்ளிகளில் கணினிகள் பராமரிப்பு | 0.00 | 0.00 | 2.00 |
| | மொத்தம் | 10.45 | 8.67 | 10.67 |



| | | | | |
|---|---|---|---|---|
| | உ) பிற உதவிகள் | | | |
| | 1) சீருடைகள் வழங்கல் | 591.14 | திட்டத்திற்கு மாற்றப்பட்டது | திட்டத்திற்கு மாற்றப்பட்டது |
| | 2) ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கல் | 348.70 | 380.00 | 425.00 |
| | 3) பொதுப் பள்ளிகளுக்கு புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கல் | 702.17 | திட்டத்திற்கு மாற்றப்பட்டது | திட்டத்திற்கு மாற்றப்பட்டது |
| | மொத்தம் | 1642.01 | 380.00 | 425.00 |
| II | கிராம உள் அமைப்பு | | | |
| | தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு வெகுமதி | 21.88 | 28.00 | 0.01 |
| | மொத்தம் | 21.88 | 28.00 | 0.01 |
| III | பொருளாதார உதவி | | | |
| | பிற திட்டங்கள்—குடிசைத் தொழில்கள் | 5.63 | 12.48 | 14.81 |
| | மொத்தம் | 5.63 | 12.48 | 14.81 |
| IV | மற்றவை | | | |
| | 1) பொது சுகாதாரம் | 2.45 | 0.01 | 0.01 |
| | 2) ஈமச் சடங்குகள் | 196.88 | 50.00 | 60.00 |
| | 3) தலித்துகள் மற்றும் பழங்குடியினர் நல நடவடிக்கைகளுக்கான அமைப்பை ஏற்படுத்துவதற்கு பங்குத்தொகை அளித்தல். | 0.00 | 50.00 | 0.01 |
| | 4) நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் அ) தலைமையிட பணியாளர்கள் | 155.87 | 181.12 | 191.39 |
| | ஆ) மாவட்ட பணியாளர்கள் | 1371.06 | 1395.60 | 1593.89 |
| | மொத்தம் | 1726.26 | 1676.73 | 1845.30 |
| V | சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் | | | |
| | கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறுவாழ்வு | 94.78 | 250.00 | 300.00 |
| | மொத்தம் | 94.78 | 250.00 | 300.00 |

சுருக்கம் — திட்டம் சாராதவை ( கோரிக்கை எண்.4 )

| வ. எண் | சிறிய தலைப்புகளும் / உள் தலைப்புகளும் | கணக்குகள் 2002—2003 | இறுதி திருத்த மதிப்பீடு 2003—2004 | வரவு— செலவுத் திட்ட மதிப்பீடு 2004—2005 |
|---|---|---|---|---|
| I | **கல்வி** | | | |
| | அ) உதவித் தொகைகள் | 1408.43 | 1300.07 | 1232.24 |
| | ஆ) வெகுமதிகள் | 47.01 | 51.94 | 41.19 |
| | இ) பராமரிப்பு | 12745.93 | 13459.33 | 14493.14 |
| | ஈ) இணைப்பமைவு | 10.45 | 8.67 | 10.67 |
| | உ) பிற உதவிகள் | 1642.01 | 380.00 | 425.00 |
| II | கிராம உள் அமைப்பு | 21.88 | 28.00 | 0.01 |
| III | பொருளாதார உதவி | 5.63 | 12.48 | 14.81 |
| IV | மற்றவை | 1726.26 | 1676.73 | 1845.30 |
| V | கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு | 94.78 | 250.00 | 300.00 |
| | மொத்தம் | 17702.38 | 17167.22 | 18362.36 |



மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

| வ. எண் | சிறிய தலைப்புகளும் / உள் தலைப்புகளும் | கணக்குகள் 2002—2003 | இறுதி திருத்த மதிப்பீடு 2003—2004 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2004—2005 |
|---|---|---|---|---|
| | **கல்வி** | | | |
| | **படிப்புதவித் தொகை** | | | |
| | 1) மத்திய அரசு ப்ரிமெட்ரிக் படிப்புக்கு மேல் படிப்புக்கான உதவித் தொகை | 3935.95 | 5995.08 | 4200.00 |
| | 2) ஆதிதிராவிடர் மாணாக்கரின் தகுதியை உயர்த்துதல் | (-) 0.29 | 7.50 | 7.50 |
| | 3) சிறப்பு மத்திய அரசு உதவி | 7970.32 | 4500.00 | 6671.82 |
| | மொத்தம் | 11905.98 | 10501.58 | 10879.32 |

மத்திய மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

| வ. எண் | சிறிய தலைப்புகளும் / உள் தலைப்புகளும் | கணக்குகள் 2002—2003 | இறுதி திருத்த மதிப்பீடு 2003—2004 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2004—2005 |
|---|---|---|---|---|
| I | **கல்வி**<br>**உதவித் தொகை** | | | |
| | 1) மத்திய அரசு ப்ரிமெட்ரிக் படிப்புதவித் தொகை | 286.05 | 385.90 | 390.00 |
| | 2) புத்தக வங்கி | 71.93 | 34.56 | 34.56 |
| | 3) தமிழ்நாடு தொழில் கல்வி நுழைவுத் தேர்வுகள் எழுதும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணாக்கர்க்கு பயிற்சி | 6.17 | 8.96 | 5.85 |
| | 4) அரசு மாணவியர் இல்ல கட்டிடங்கள் கட்டுதல் | 204.75 | 1165.50 | 0.01 |
| | மொத்தம் | 568.90 | 1594.92 | 430.42 |
| II | **மற்றவை** | | | |
| | 1) கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு நிதியுதவி | 158.01 | 250.00 | 200.00 |
| | 2) 1955—ம் ஆண்டு மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயற்படுத்தும் நிர்வாக அமைப்பு (பணியாளர் சம்பளம்) | 20.28 | 43.81 | 26.16 |
| | மொத்தம் | 178.29 | 293.81 | 226.16 |
| | ஆக மொத்தம் | **747.19** | **1888.73** | **656.58** |

**பழங்குடியினர் நலன் — நிதி ஒதுக்கீடு**
**( இன வாரியாக விவரம் ) கோரிக்கை எண்.4**

( ரூபாய் இலட்சத்தில் )

| வ எண் | சிறிய தலைப்புகளும் உள் தலைப்புகளும் | கணக்குகள் 2002—03 | இறுதி திருத்த மதிப்பீடு 2003—2004 | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2004—2005 |
|---|---|---|---|---|
| I | திட்டம் | | | |
| | 1. கல்வி | | | |
| | அ) பள்ளிக் கட்டிடம் கட்டுதல் கீழ் சிறு பணிகள் | 6.21 | 6.75 | 6.75 |
| | ஆ) மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும், பராமரித்தலும் | 42.57 | 131.89 | 132.33 |
| | இ) ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுதல் திட்டத்தின் கீழ் சிறு பணிகள் | 64.07 | 14.85 | 14.85 |
| | ஈ) பழங்குடியினர் தங்கிப்பயிலும் நடுநிலை/உயர்நிலைப்பள்ளி களை உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்துதல். | 0.00 | 0.00 | 15.37 |
| | உ. —— „ — | 0.00 | 0.00 | 39.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| • | **ஊ. பழங்குடியினர் தங்கிப்பயிலும் அரசினர் தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளியாக நிலை உயர்த்துதல்** | 0.00 | 6.75 | 12.28 |
| | **2. விடுதிகள்** | | | |
| | 1. பழங்குடியினர் மாணவர்களுக்காக அரசு மாணவர் இல்லங்களை தொடங்குதல் | 18.14 | 22.23 | 24.82 |
| | 2. மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பழங்குடி மாணவர்கள் தங்கிப் பயிலும் பள்ளிகளும், மாணவர் இல்லங்களும் கட்டுதல் | 120.66 | 120.00 | 120.00 |
| II | **பொருளாதார முன்னேற்றங்கள்** | | | |
| | 1) குடிசைத் தொழில்கள் | | | |
| | பயிற்சி மற்றும் உற்பத்தி மையம் | 2.12 | 3.08 | 3.19 |
| | 2) தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு நிதி உதவி | (-) 0.01 | 0.01 | 0.01 |
| III | **பழங்குடியினர் துணைத் திட்டம்** | | | |
| | 1) சிறுபாசனத் திட்டங்கள் கீழ் சிறு பணிகள் | (-) 0.03 | 4.95 | 4.95 |
| | 2)) குடிநீர் வழங்கு திட்டங்கள் | 32.00 | 32.00 | 32.00 |
| | 3) பழங்குடியினர் ஆராய்ச்சியும் மேம்பாடும் | 7.77 | 8.34 | 10.55 |



| | | | | |
|---|---|---|---|---|
| | 4) ஆதிவாசிகள் மேம்பாடு | 7.19 | 38.47 | 9.35 |
| | 5) பரவலாக வாழும் பழங்குடியினர் | 11.10 | 13.68 | 15.03 |
| | 6) பழங்குடியினர் பகுதிகளில் சாலைகள் போடுதல் திட்டம் | 9.72 | 10.80 | 10.80 |
| | 7) பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் கிணறுகள் அமைத்தல் | 5.49 | 4.93 | 4.93 |
| | 8) தனிப்பட்ட தொழில் முனைவோர் திட்டத்தை மேம்படுத்தல் | 0.00 | 0.01 | 0.01 |
| IV | **பலவகைத் திட்டங்கள்** | | | |
| | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வீடுகள் கட்டுதல் | 23.12 | 16.80 | 16.80 |
| | மொத்தம் (திட்டம்) | 350.12 | 435.54 | 473.22 |

## திட்டத்தில் சேராதது

| | | | | |
|---|---|---|---|---|
| I | **கல்வி** | | | |
| | **படிப்புதவித் தொகை** மாநில அரசின் மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பிற்கான உதவித்தொகை | 7.88 | 1.53 | 1.53 |
| | சிறப்பு மாநில கல்வி உதவித்தொகை | 8.35 | 7.10 | 7.10 |
| | மத்திய அரசின் மெட்ரிகுலேஷனுக்கு மேற்பட்ட படிப்புக்கான படிப்புதவித் தொகை | 4.03 | 11.40 | 11.40 |
| | தேர்வு கட்டணத்தை திரும்ப கொடுத்தல் | 2.50 | 6.90 | 7.00 |
| | அறிவுக் கூர்மைப் பரிசு மற்றும் தகுதி வழிவகைப் பரிசுத் தொகை | 1.00 | 1.00 | 1.00 |
| | 2) பள்ளிகள் | | | |
| | பள்ளிக் கல்வி (கல்வி உதவித் தொகை மற்றும் பணியாளர்கள் சம்பளம் தவிர்த்து) | 1755.23 | 1927.05 | 2065.08 |
| | ஆசிரியர்கள் குடியிருப்புகளை பராமரித்தலின் கீழ் சிறு பணிகள் | 0.40 | 0.40 | 0.40 |
| | 3) விடுதிகள் | | | |
| | பழங்குடியின மாணவர்கள் விடுதிகள் பராமரித்தல் | 90.59 | 97.00 | 104.11 |
| II | பொருளாதார முன்னேற்றங்கள் | | | |
| | சுகாதாரம் மருத்துவப் பிரிவுகளும் நடமாடும் மருந்தகங்களும் | 13.16 | 18.87 | 19.65 |
| III | பலவகைத் திட்டங்கள் | | | |
| | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | (-) 1.22 | 0.53 | 0.64 |
| IV | பழங்குடியினர் துணைத்திட்டம் | | | |
| | 1) தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு ஆணையம் | 0.35 | 0.01 | 0.01 |
| | 2. கல்ராயன் மலை நிர்வாக அமைப்பு | 2.54 | 3.21 | 2.95 |
| | மொத்தம் (திட்டத்தில் சேராதது) | 1884.81 | 2075.00 | 2220.87 |



## மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| I | **கல்வி — உதவித் தொகை** | | | |
| | 1) மத்திய அரசின் மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பிற்கான உதவித் தொகை | 9.72 | 18.55 | 18.55 |
| | 2) பழங்குடியின மாணவர்களின் தகுதியை உயர்த்துதல் | 0.00 | 0.45 | 0.45 |
| II | **பலவகைத் திட்டங்கள்** | | | |
| | 1. ஆதிவாசிகள் மேம்பாடு | 49.54 | 420.0 | 45.00 |
| | 2. பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டப்பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கான நலத்திட்டங்கள் | 646.64 | 290.99 | 200.00 |
| | 3. ஆதிவாசிகள் மேம்பாடு — இந்திய அரசியல் அமைப்பு சட்டப்பிரிவுக்கூறு 275 (1)ன் கீழ் வழங்கும் நிதியுதவி | 280.00 | 45.00 | 170.00 |
| | 4. ஆராய்ச்சியாளர்களுக்கு படிப்புதவித்தொகை வழங்குதல் | 0.00 | 1.97 | 0.00 |
| | மொத்தம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | 985.90 | 776.97 | 434.0 |

## மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| I | **கல்வி — விடுதிகள்** | | | |
| | பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் கட்டுதல் | 0.00 | 0.01 | 0.01 |
| | பழங்குடியினர் பகுதிகளில் அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகள் கட்டுதல் | 0.00 | 50.00 | 0.00 |
| II | **பலவகைத் திட்டங்கள்** | | | |
| | உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் அருங்காட்சியகம் ஒன்றை ஏற்படுத்தல் | 0.00 | 30.00 | 0.01 |
| | பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துதல் | 21.62 | 26.17 | 27.36 |
| | மொத்தம் (மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்பவை) | 21.62 | 106.18 | 27.38 |

## சுருக்கம்–நிதி ஒதுக்கீடு (ஆதிதிராவிடர் நலம்)

( ரூ. இலட்சத்தில் )

| கணக்குத்தலைப்பு | கணக்குகள் (2002-2003) | இறுதி திருத்த மதிப்பீடு (2003-2004) | வரவு-செலவுத் திட்டம் (2004-2005) |
|---|---|---|---|
| திட்டம் | 3549.24 | 10907.94 | 11605.90 |
| திட்டத்தில் சேராதது | 17702.38 | 17167.22 | 18362.36 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 11905.98 | 10501.58 | 10879.32 |
| மத்திய மற்றும் மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 747.19 | 1888.73 | 656.58 |
| மொத்தம் | 33904.79 | 40465.47 | 41504.16 |

## சுருக்கம் – நிதி ஒதுக்கீடு (பழங்குடியினர் நலம்)

| | | | |
|---|---|---|---|
| திட்டம் | 350.12 | 435.54 | 473.22 |
| திட்டத்தில் சேராதது | 1884.81 | 2075.00 | 2220.87 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 985.90 | 776.96 | 434.00 |
| மத்திய மற்றும் மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 21.62 | 106.18 | 27.38 |
| மொத்தம் | 3242.45 | 3393.65 | 3155.47 |



## VI பட்டியல்களின் விபரம்

| | |
|---|---|
| I | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் கல்வியறிவு விகிதம் |
| II | ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை விபரம் |
| III | ஆதிதிராவிடர் நலத்துறையில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை |
| IV | பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விபரம் |
| V | அரசு ஆதிதிராவிடர் விடுதிகளில் தங்கிப்படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை |
| VI | பழங்குடியினர் விடுதிகள் விபரம் |
| VII | அரசு மற்றும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர் விடுதிகளின் விபரம் |
| VIII | அரசுக்கட்டிடம் மற்றும் வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் பழங்குடியினர் விடுதிகளின் விபரம் |
| IX | மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களிடம் பட்டியல் இனத்தவர் / பட்டியல் பழங்குடியினர் சாதி மெய்த்தன்மை அறிதல் குறித்து நிலுவை விபரம் |
| X | மாநில கூர்நோக்குக்குழு முன்பு பட்டியல் இனத்தவர் / பட்டியல் பழங்குடியினர் சாதி மெய்த்தன்மை குறித்த மேல்முறையீடு செய்யப்பட்ட நிலுவையில் உள்ள இனங்களின் விபரம் டிசம்பர் 2003 முடிய |
| XI | மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையின் பயனாளிகள் மற்றும் செலவின விவரங்கள் |
| XII | மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையின் பயனாளிகள் மற்றும் செலவின விவரங்கள் |
| XIII | உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள் |
| XIV | ஆதிதிராவிடர் / பழங்குடியின / கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரங்கள். |
| XV | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் செலவின விவரங்களின் பட்டியல். |
| XVI | பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் ( LAMPS ) விவரப் பட்டியல் |
| XVII | பழங்குடியினருக்கான ஆரம்ப சுகாதார நிலையங்களின் விவரப் பட்டியல். |

## பட்டியல் I

### புள்ளி விவரங்கள்

| | 1961 | 1971 | 1981 | 1991 | 2001 |
|---|---|---|---|---|---|
| இந்திய நாட்டின் மக்கள் தொகை | 439234771 | 548159652 | 685184692 | 846302688 | 1027015247 |
| தமிழ்நாட்டின்மக்கள்தொகை | 8990528 | 12464834 | 48408077 | 55858946 | 62405679 |
| தமிழகத்தில் ஆதிதிராவிடர் இனத்தவர் | 6067327 | 7315595 | 8881295 | 10712266 | 11857504 |
| தமிழகத்தில் பழங்குடியினர் இனத்தவர் | 251991 | 311515 | 520226 | 574194 | 651321 |
| ஆதிதிராவிடர் இனத்தவர் (நகரப்பகுதி) | 5141487 | 6050302 | 1790631 | 2284226 | 3548614 |
| ஆதிதிராவிடர் இனத்தவர் (ஊரகப்பகுதி) | 925840 | 1265293 | 7090664 | 8428040 | 8308890 |
| பழங்குடியினர் இனத்தவர் (நகரப்பகுதி) | 237663 | 294379 | 50416 | 68986 | 100178 |
| பழங்குடியினர் இனத்தவர் (ஊரகப்பகுதி) | 14388 | 17136 | 469810 | 505208 | 551143 |
| ஆதிதிராவிடர் இனத்தவர் கல்வி கற்றோர் சதவிகிதம் | 0 | 21.82% | 29.67% | 39.47% | 0 |
| பழங்குடியினர் இனத்தவர் கல்வி கற்றோர் சதவிகிதம் | 0 | 9.02% | 20.46% | 23.34% | 0 |



## பட்டியல்-II

### ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரம் 2003–2004

| வ எ | மாவட்டம் | தொடக்கப்பள்ளி | | | நடுநிலைப்பள்ளி | | | உயர்நிலைப்பள்ளி | | | மேல்நிலைப்பள்ளி | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | சென்னை | 863 | 834 | 1697 | 496 | 452 | 948 | 99 | 190 | 289 | 1364 | 1222 | 2586 | 2822 | 2698 | 5520 |
| 2 | காஞ்சிபுரம் | 860 | 890 | 1750 | 378 | 338 | 716 | 121 | 135 | 256 | 0 | 0 | 0 | 1359 | 1363 | 2722 |
| 3 | திருவள்ளூர் | 6387 | 6342 | 12729 | 1029 | 1037 | 2066 | 385 | 848 | 1233 | 5480 | 4018 | 9498 | 13281 | 12245 | 25526 |
| 4 | திருவண்ணாமலை | 398 | 315 | 713 | 0 | 0 | 0 | 354 | 299 | 653 | 483 | 433 | 916 | 1235 | 1047 | 2282 |
| 5 | வேலூர் | 315 | 279 | 594 | 259 | 214 | 473 | 0 | 0 | 0 | 401 | 196 | 597 | 975 | 689 | 1664 |
| 6 | கடலூர் | 24 | 37 | 61 | 91 | 81 | 172 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 115 | 118 | 233 |
| 7 | விழுப்புரம் | 5210 | 5598 | 10808 | 2610 | 2705 | 5315 | 2373 | 2445 | 4818 | 3873 | 3333 | 7206 | 14066 | 14081 | 28147 |
| 8 | நாகப்பட்டினம் | 89 | 90 | 179 | 234 | 221 | 455 | 68 | 77 | 145 | 0 | 0 | 0 | 391 | 388 | 779 |
| 9 | திருவாரூர் | 830 | 772 | 1602 | 466 | 482 | 948 | 437 | 454 | 891 | 344 | 256 | 600 | 2077 | 1964 | 4041 |
| 10 | தஞ்சாவூர் | 543 | 508 | 1051 | 420 | 386 | 806 | 151 | 109 | 260 | 894 | 705 | 1599 | 2008 | 1708 | 3716 |
| 11 | புதுக்கோட்டை | 1850 | 1896 | 3746 | 214 | 207 | 421 | 96 | 128 | 224 | 631 | 622 | 1253 | 2791 | 2853 | 5644 |
| 12 | திருச்சி | 305 | 280 | 585 | 0 | 0 | 0 | 133 | 142 | 275 | 770 | 638 | 1408 | 1208 | 1060 | 2268 |
| 13 | பெரம்பலூர் | 149 | 141 | 290 | 147 | 140 | 287 | 135 | 113 | 248 | 0 | 0 | 0 | 431 | 394 | 825 |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | கரூர் | 1807 | 1782 | 3589 | 728 | 720 | 1448 | 380 | 332 | 712 | 400 | 230 | 630 | 3315 | 3064 | 6379 |
| 15 | நாமக்கல் | 393 | 370 | 763 | 130 | 145 | 275 | 0 | 0 | 0 | 801 | 691 | 1492 | 1324 | 1206 | 2530 |
| 16 | சேலம் | 25 | 39 | 64 | 360 | 319 | 679 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 385 | 358 | 743 |
| 17 | ஈரோடு | 361 | 297 | 658 | 517 | 502 | 1019 | 0 | 0 | 0 | 446 | 344 | 790 | 1324 | 1143 | 2467 |
| 18 | தர்மபுரி | 233 | 228 | 461 | 0 | 0 | 0 | 160 | 186 | 346 | 564 | 459 | 1023 | 957 | 873 | 1830 |
| 19 | கோயம்புத் தூர் | 3787 | 3675 | 7462 | 1044 | 1102 | 2146 | 2000 | 1994 | 3994 | 367 | 269 | 636 | 7198 | 7040 | 14238 |
| 20 | நீலகிரி | 421 | 362 | 783 | 83 | 58 | 141 | 267 | 208 | 475 | 212 | 196 | 408 | 983 | 824 | 1807 |
| 21 | திண்டுக்கல் | 238 | 224 | 462 | 389 | 383 | 772 | 0 | 0 | 0 | 530 | 203 | 733 | 1157 | 810 | 1967 |
| 22 | தேனி | 2682 | 2435 | 5117 | 1579 | 1428 | 3007 | 642 | 620 | 1262 | 1971 | 2618 | 4589 | 6874 | 7101 | 13975 |
| 23 | மதுரை | 1657 | 1892 | 3549 | 1931 | 1966 | 3897 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3588 | 3858 | 7446 |
| 24 | இராமநாத புரம் | 1354 | 1310 | 2664 | 152 | 157 | 309 | 202 | 217 | 419 | 720 | 832 | 1552 | 2428 | 2516 | 4944 |
| 25 | சிவகங்கை | 3228 | 3199 | 6427 | 1696 | 1647 | 3343 | 665 | 676 | 1341 | 5404 | 4873 | 10277 | 10993 | 10395 | 21388 |
| 26 | விருதுநகர் | 191 | 213 | 404 | 208 | 208 | 416 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 399 | 421 | 820 |
| 27 | திருநெல்வேலி | 5774 | 5818 | 11592 | 2435 | 2431 | 4866 | 769 | 711 | 1480 | 4538 | 6164 | 10702 | 13516 | 15124 | 28640 |
| 28 | தூத்துக்குடி | 4060 | 4046 | 8106 | 1640 | 1609 | 3249 | 643 | 580 | 1223 | 2735 | 2459 | 5194 | 9078 | 8694 | 17772 |
| 29 | கன்னியா குமரி | 846 | 840 | 1686 | 181 | 165 | 346 | 0 | 0 | 0 | 443 | 226 | 669 | 1470 | 1231 | 2701 |
| | மொத்தம் | 44880 | 44712 | 89592 | 19417 | 19103 | 38520 | 10080 | 10464 | 20544 | 33371 | 30987 | 64358 | 107748 | 105266 | 213014 |



## பட்டியல்-III

### ஆதிதிராவிடர் நலத்துறையில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 2003-2004

| வ எண் | மாவட்டம் | தொடக்கப் பள்ளி | நடுநிலைப் பள்ளி | உயர்நிலைப் பள்ளி | மேல்நிலைப் பள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 6 | 2 | 1 | 2 | 11 |
| 2 | கோயம்புத்தூர் | 18 | 2 | 1 | 0 | 21 |
| 3 | கடலூர் | 101 | 6 | 2 | 8 | 117 |
| 4 | தர்மபுரி | 9 | 0 | 1 | 1 | 11 |
| 5 | திண்டுக்கல் | 8 | 2 | 0 | 1 | 11 |
| 6 | ஈரோடு | 1 | 3 | 0 | 0 | 4 |
| 7 | காஞ்சிபுரம் | 62 | 13 | 6 | 6 | 87 |
| 8 | கன்னியாகுமரி | 1 | 2 | 1 | 0 | 4 |
| 9 | கரூர் | 10 | 5 | 4 | 1 | 20 |
| 10 | மதுரை | 4 | 7 | 1 | 2 | 14 |
| 11 | நாகப்பட்டினம் | 40 | 2 | 1 | 1 | 44 |
| 12 | நாமக்கல் | 5 | 0 | 1 | 1 | 7 |
| 13 | நீலகிரி | 2 | 4 | 1 | 0 | 7 |
| 14 | பெரம்பலூர் | 36 | 6 | 3 | 1 | 46 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | புதுக்கோட்டை | 9 | 1 | 0 | 1 | 11 |
| 16 | இராமநாதபுரம் | 1 | 6 | 0 | 0 | 7 |
| 17 | சேலம் | 6 | 3 | 0 | 1 | 10 |
| 18 | சிவகங்கை | 1 | 0 | 2 | 1 | 4 |
| 19 | தஞ்சாவூர் | 88 | 6 | 8 | 1 | 103 |
| 20 | தேனி | 4 | 1 | 2 | 1 | 8 |
| 21 | திருநெல்வேலி | 8 | 4 | 0 | 2 | 14 |
| 22 | திருவள்ளூர் | 38 | 8 | 4 | 5 | 55 |
| 23 | திருவண்ணாமலை | 39 | 17 | 0 | 0 | 56 |
| 24 | திருவாரூர் | 21 | 1 | 1 | 1 | 24 |
| 25 | திருச்சி | 61 | 17 | 4 | 10 | 92 |
| 26 | தூத்துக்குடி | 8 | 3 | 0 | 0 | 11 |
| 27 | வேலூர் | 91 | 13 | 4 | 6 | 114 |
| 28 | விழுப்புரம் | 68 | 12 | 3 | 4 | 87 |
| 29 | விருதுநகர் | 15 | 1 | 0 | 2 | 18 |
| | **மொத்தம்** | **761** | **147** | **51** | **59** | **1018** |



## பட்டியல் — IV

## பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரம் 2003–2004

| வ. எண் | மாவட்டம் | துவக்கப்பள்ளி | | | நடுநிலைப்பள்ளி | | | உயர்நிலைப் பள்ளி | | | மேல்நிலைப் பள்ளி | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை | |
| | | | மாணவர் | மாணவியர் | | மாணவர் | மாணவியர் | | மாணவர் | மாணவியர் | | மாணவர் | மாணவியர் | | மாணவர் | மாணவியர் |
| | விடுதி மாணவர்கள் | | | | | | | | | | | | | | | |
| 1 | சென்னை | 1 | 25 | 20 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 25 | 20 |
| 2 | திருவண்ணா-மலை | 20 | 1298 | 520 | 5 | 274 | 63 | 1 | 32 | 16 | 0 | 0 | 0 | 26 | 1604 | 599 |
| 3 | வேலூர் | 13 | 451 | 284 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 13 | 451 | 284 |
| 4 | விழுப்புரம் | 34 | 1746 | 1307 | 7 | 996 | 736 | 0 | 0 | 0 | 2 | 858 | 379 | 43 | 3600 | 2422 |
| 5 | திருச்சி | 24 | 643 | 654 | 3 | 149 | 114 | 1 | 70 | 62 | 1 | 72 | 60 | 29 | 934 | 890 |
| 6 | நாமக்கல் | 6 | 329 | 233 | 0 | 0 | 0 | 1 | 173 | 171 | 2 | 1694 | 1220 | 9 | 2196 | 1624 |
| 7 | சேலம் | 33 | 1586 | 1445 | 12 | 1339 | 961 | 2 | 558 | 467 | 0 | 0 | 0 | 47 | 3483 | 2873 |
| 8 | ஈரோடு | 13 | 475 | 409 | 4 | 498 | 320 | 0 | 0 | 0 | 1 | 168 | 72 | 18 | 1141 | 801 |
| 9 | தர்மபுரி | 23 | 839 | 589 | 2 | 315 | 287 | 0 | 0 | 0 | 1 | 198 | 127 | 26 | 1352 | 1003 |
| 10 | கோயம்புத்தூர் | 17 | 281 | 186 | 2 | 245 | 175 | 1 | 103 | 76 | 0 | 0 | 0 | 20 | 629 | 437 |
| 11 | நீலகிரி | 15 | 617 | 571 | 9 | 993 | 943 | 0 | 0 | 0 | 1 | 130 | 108 | 25 | 1740 | 1622 |
| 12 | திண்டுக்கல் | 6 | 151 | 162 | 0 | 0 | 0 | 1 | 273 | 85 | 0 | - | - | 7 | 424 | 247 |
| 13 | தேனி | 2 | 22 | 12 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | - | - | 2 | 22 | 12 |
| 14 | விருதுநகர் | 1 | 8 | 6 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | - | - | 1 | 8 | 6 |
| 15 | திருநெல்வேலி | 2 | 58 | 38 | 0 | 0 | 0 | 1 | 21 | 59 | 0 | - | - | 3 | 79 | 97 |
| 16 | கன்னியாகுமரி | 3 | 50 | 0 | 1 | 53 | 48 | 0 | 0 | 0 | 2 | 1043 | 898 | 6 | 1146 | 946 |
| 17 | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 1 | 68 | 63 | 0 | 0 | 0 | 0 | - | - | 1 | 68 | 63 |
| | மொத்தம் | 213 | 8579 | 6436 | 46 | 4930 | 3710 | 8 | 1230 | 936 | 10 | 4163 | 2864 | 277 | 18902 | 13946 |
| | வெளி மாணவர்கள் | **0** | 2437 | 1670 | 0 | 1460 | 1331 | 0 | 984 | 719 | 0 | 3890 | 1715 | 0 | 8771 | 5435 |
| | மொத்த கூடுதல் | **213** | **11016** | **8106** | **46** | **6390** | **5041** | **8** | **2214** | **1655** | **10** | **8053** | **4579** | **277** | **27673** | **19381** |

## பட்டியல்—V

### அரசு ஆதிதிராவிடர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணாக்கர் எண்ணிக்கை 2003–2004

| வ. எண் | மாவட்டம் | முதுகலை விடுதி | | | கல்லூரி விடுதி | | | | தொழிற்பயிற்சி விடுதி | | | | பள்ளி விடுதி | | | | மொத்த விடுதிகளின் எண்ணிக்கை | | | | ஆக மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | | மாணவர் | | மாணவியர் | | மாணவர் | | மாணவியர் | | மாணவர் | | மாணவியர் | | மாணவர் | | மாணவியர் | | | |
| | | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை |
| 1 | சென்னை | 2 | 110 | 55 | 6 | 1452 | 1 | 77 | 2 | 308 | 1 | 55 | 2 | 60 | 3 | 120 | 11 | 1930 | 6 | 307 | 17 | 2237 |
| 2 | காஞ்சி புரம் | | | | 1 | 23 | 1 | 40 | 0 | 0 | 0 | 0 | 29 | 1559 | 8 | 385 | 30 | 1582 | 9 | 425 | 39 | 2007 |
| 3 | திருவள்ளூர் | | | | 2 | 110 | 1 | 26 | 0 | 0 | 0 | 0 | 25 | 2108 | 8 | 436 | 27 | 2218 | 9 | 462 | 36 | 2680 |
| 4 | திருவண்ணா மலை | | | | 2 | 116 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 25 | 1423 | 14 | 806 | 27 | 1539 | 14 | 806 | 41 | 2345 |
| 5 | வேலூர் | 1 | 64 | 0 | 2 | 147 | 1 | 80 | 2 | 120 | 0 | 0 | 23 | 1332 | 14 | 785 | 28 | 1663 | 15 | 865 | 43 | 2528 |
| 6 | கடலூர் | | | | 3 | 215 | 2 | 110 | 2 | 130 | 1 | 60 | 30 | 4025 | 17 | 2528 | 35 | 4370 | 20 | 2698 | 55 | 7068 |
| 7 | விழுப்புரம் | | | | 2 | 203 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 57 | 3680 | 17 | 1209 | 59 | 3883 | 17 | 1209 | 76 | 5092 |
| 8 | நாகப் பட்டினம் | | | | 1 | 62 | 1 | 68 | 0 | 0 | 0 | 0 | 15 | 808 | 10 | 656 | 16 | 870 | 11 | 724 | 27 | 1594 |
| 9 | திருவாரூர் | | | | 2 | 227 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 15 | 846 | 12 | 723 | 17 | 1073 | 12 | 723 | 29 | 1796 |
| 10 | தஞ்சாவூர் | | | | 2 | 227 | 2 | 133 | 0 | 0 | 0 | 0 | 28 | 1603 | 8 | 666 | 30 | 1830 | 10 | 799 | 40 | 2629 |
| 11 | புதுக் கோட்டை | | | | 1 | 262 | 2 | 258 | 0 | 0 | 0 | 0 | 26 | 1786 | 14 | 828 | 27 | 2048 | 16 | 1086 | 43 | 3134 |
| 12 | திருச்சி | 1 | 65 | 0 | 1 | 285 | 1 | 45 | 1 | 83 | 0 | 0 | 23 | 1850 | 10 | 751 | 26 | 2283 | 11 | 796 | 37 | 3079 |
| 13 | பெரம்பலூர் | | | | 1 | 154 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 31 | 2900 | 16 | 983 | 32 | 3054 | 16 | 983 | 48 | 4037 |
| 14 | கரூர் | | | | 1 | 91 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 10 | 582 | 5 | 377 | 11 | 673 | 5 | 377 | 16 | 1050 |
| 15 | நாமக்கல் | | | | 2 | 200 | 1 | 80 | 0 | 0 | 0 | 0 | 18 | 822 | 10 | 526 | 20 | 1022 | 11 | 606 | 31 | 1628 |
| 16 | சேலம் | | | | 2 | 235 | 1 | 90 | 0 | 0 | 0 | 0 | 22 | 858 | 8 | 536 | 24 | 1093 | 9 | 626 | 33 | 1719 |
| 17 | ஈரோடு | | | | 1 | 154 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 18 | 1483 | 13 | 1026 | 19 | 1637 | 13 | 1026 | 32 | 2663 |
| 18 | தர்மபுரி | | | | 2 | 567 | 1 | 50 | 0 | 0 | 0 | 0 | 28 | 1102 | 14 | 454 | 30 | 1669 | 15 | 504 | 45 | 2173 |
| 19 | கோயம் புத்தூர் | | | | 2 | 291 | 1 | 121 | 1 | 99 | 0 | 0 | 22 | 1372 | 10 | 771 | 25 | 1762 | 11 | 892 | 36 | 2654 |
| 20 | நீலகிரி | | | | 1 | 64 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 11 | 744 | 5 | 676 | 12 | 808 | 5 | 676 | 17 | 1484 |
| 21 | திண்டுக்கல் | | | | 1 | 69 | 1 | 57 | 1 | 40 | 0 | 0 | 21 | 1045 | 12 | 745 | 23 | 1154 | 13 | 802 | 36 | 1956 |
| 22 | தேனி | | | | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 16 | 983 | 11 | 956 | 16 | 983 | 11 | 956 | 27 | 1939 |
| 23 | மதுரை | 1 | 52 | 0 | 2 | 205 | 2 | 185 | 1 | 112 | 0 | 0 | 30 | 1843 | 9 | 612 | 34 | 2212 | 11 | 797 | 45 | 3009 |
| 24 | இராமநாத புரம் | | | | 2 | 150 | 1 | 33 | 0 | 0 | 0 | 0 | 21 | 1921 | 10 | 910 | 23 | 2071 | 11 | 943 | 34 | 3014 |
| 25 | சிவகங்கை | | | | 3 | 178 | 2 | 132 | 0 | 0 | 0 | 0 | 23 | 1423 | 8 | 574 | 26 | 1601 | 10 | 706 | 36 | 2307 |
| 26 | விருது நகர் | | | | 1 | 55 | 1 | 70 | 0 | 0 | 0 | 0 | 39 | 3132 | 8 | 753 | 40 | 3187 | 9 | 823 | 49 | 4010 |
| 27 | திருநெல் வேலி | 1 | 65 | 0 | 1 | 94 | 2 | 115 | 0 | 0 | 0 | 0 | 29 | 1599 | 18 | 1364 | 31 | 1758 | 20 | 1479 | 51 | 3237 |
| 28 | தூத்துக் குடி | | | | 1 | 59 | 1 | 74 | 1 | 52 | 0 | 0 | 23 | 1202 | 16 | 1237 | 25 | 1313 | 17 | 1311 | 42 | 2624 |
| 29 | கன்னியா– குமரி | | | | 1 | 107 | 1 | 55 | 1 | 44 | 0 | 0 | 5 | 175 | 7 | 288 | 7 | 326 | 8 | 343 | 15 | 669 |
| | மொத்தம் | 6 | 356 | 55 | 49 | 6002 | 27 | 1899 | 12 | 988 | 2 | 115 | 665 | 44266 | 315 | 22681 | 731 | 51612 | 345 | 24750 | 1076 | 76362 |

பட்டியல்—VI

பழங்குடியினர் விடுதிகள் விவரம் 2003-2004

| | மாவட்டம் | மாணவர் விடுதி | | மாணவியர் விடுதி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
| 1 | திருவள்ளூர் | 1 | 60 | 0 | 0 | 1 | 60 |
| 2 | திருவண்ணாமலை | 0 | 0 | 1 | 55 | 1 | 55 |
| 3 | வேலூர் | 2 | 97 | 0 | 0 | 2 | 97 |
| 4 | விழுப்புரம் | 3 | 213 | 0 | 0 | 3 | 213 |
| 5 | திருச்சி | 1 | 55 | 3 | 150 | 4 | 205 |
| 6 | நாமக்கல் | 0 | 0 | 1 | 50 | 1 | 50 |
| 7 | சேலம் | 5 | 213 | 1 | 28 | 6 | 241 |
| 8 | கோயம்புத்தூர் | 2 | 115 | 0 | 0 | 2 | 115 |
| 9 | நீலகிரி | 2 | 94 | 0 | 0 | 2 | 94 |
| 10 | திண்டுக்கல் | 2 | 68 | 0 | 0 | 2 | 68 |
| 11 | கன்னியாகுமரி | 0 | 0 | 2 | 110 | 2 | 110 |
| | **மொத்தம்** | **18** | **915** | **8** | **393** | **26** | **1308** |



பட்டியல்—VII

அரசு மற்றும் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர் விடுதிகளின் விவரம் 2003-2004,

| வ எண் | மாவட்டம் | வாடகை கட்டிடம் | | | அரசுக் கட்டிடம் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | |
| 1 | சென்னை | 4 | 4 | 8 | 7 | 2 | 9 | 17 |
| 2 | காஞ்சிபுரம் | 2 | 0 | 2 | 27 | 10 | 37 | 39 |
| 3 | திருவள்ளூர் | 16 | 0 | 16 | 11 | 9 | 20 | 36 |
| 4 | திருவண்ணாமலை | 6 | 0 | 6 | 20 | 15 | 35 | 41 |
| 5 | வேலூர் | 2 | 0 | 2 | 26 | 15 | 41 | 43 |
| 6 | கடலூர் | 11 | 1 | 12 | 24 | 19 | 43 | 55 |
| 7 | விழுப்புரம் | 10 | 0 | 10 | 49 | 17 | 66 | 76 |
| 8 | நாகப்பட்டினம் | 1 | 0 | 1 | 15 | 11 | 26 | 27 |
| 9 | திருவாரூர் | 5 | 2 | 7 | 12 | 10 | 22 | 29 |
| 10 | தஞ்சாவூர் | 4 | 1 | 5 | 26 | 9 | 35 | 40 |
| 11 | புதுக்கோட்டை | 3 | 0 | 3 | 24 | 16 | 40 | 43 |
| 12 | திருச்சிராப்பள்ளி | 2 | 1 | 3 | 24 | 10 | 34 | 37 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | பெரம்பலூர் | 15 | 6 | 21 | 17 | 10 | 27 | 48 |
| 14 | ஈரோடு | 5 | 0 | 5 | 6 | 5 | 11 | 16 |
| 15 | நாமக்கல் | 6 | 1 | 7 | 14 | 10 | 24 | 31 |
| 16 | சேலம் | 4 | 0 | 4 | 20 | 9 | 29 | 33 |
| 17 | கரூர் | 8 | 0 | 8 | 11 | 13 | 24 | 32 |
| 18 | தர்மபுரி | 11 | 0 | 11 | 19 | 15 | 34 | 45 |
| 19 | கோயம்புத்தூர் | 4 | 0 | 4 | 21 | 11 | 32 | 36 |
| 20 | நீலகிரி | 1 | 1 | 2 | 11 | 4 | 15 | 17 |
| 21 | திண்டுக்கல் | 7 | 1 | 8 | 16 | 12 | 28 | 36 |
| 22 | தேனி | 0 | 0 | 0 | 16 | 11 | 27 | 27 |
| 23 | மதுரை | 14 | 0 | 14 | 21 | 10 | 31 | 45 |
| 24 | இராமநாதபுரம் | 5 | 0 | 5 | 18 | 11 | 29 | 34 |
| 25 | சிவகங்கை | 5 | 0 | 5 | 21 | 10 | 31 | 36 |
| 26 | விருதுநகர் | 10 | 1 | 11 | 30 | 8 | 38 | 49 |
| 27 | திருநெல்வேலி | 9 | 2 | 11 | 22 | 18 | 40 | 51 |
| 28 | தூத்துக்குடி | 10 | 5 | 15 | 15 | 12 | 27 | 42 |
| 29 | கன்னியாகுமரி | 1 | 0 | 1 | 6 | 8 | 14 | 15 |
| | **மொத்தம்** | **181** | **26** | **207** | **549** | **320** | **869 *** | **1076** |

* *(2003-2004 ஆம் ஆண்டில் 150 விடுதிகள் கட்ட ஆணையிடப்பட்டதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவாகியுள்ளவைகளும் இதில் அடங்கும்)*



பட்டியல்—VIII

அரசுக் கட்டடம் மற்றும் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் பழங்குடியினர் விடுதிகளின் விவரம் 2003–2004

| வ. எண் | மாவட்டம் | வாடகைக் கட்டிடம் | | அரசுக் கட்டிடம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | திருவள்ளூர் | 0 | 0 | 1 | 0 | 1 |
| 2 | திருவண்ணாமலை | 0 | 0 | 0 | 1 | 1 |
| 3 | வேலூர் | 0 | 0 | 2 | 0 | 2 |
| 4 | விழுப்புரம் | 1 | 0 | 2 | 0 | 3 |
| 5 | திருச்சி | 0 | 0 | 1 | 3 | 4 |
| 6 | நாமக்கல் | 0 | 0 | 0 | 1 | 1 |
| 7 | சேலம் | 0 | 0 | 5 | 1 | 6 |
| 8 | கோயம்புத்தூர் | 0 | 0 | 2 | 0 | 2 |
| 9 | நீலகிரி | 0 | 0 | 2 | 0 | 2 |
| 10 | திண்டுக்கல் | 0 | 0 | 2 | 0 | 2 |
| 11 | கன்னியாகுமரி | 0 | 0 | 0 | 2 | 2 |
| | **மொத்தம்** | **1** | **0** | **17** | **8** | **26** |

பட்டியல்—IX

மாவட்ட விழிப்புணர்வு குழுக்களிடம் பட்டியல் இனத்தவர் / பட்டியல் பழங்குடியினர் சாதி மெய்த்தன்மைஅறிதல் குறித்து நிலுவை விவரம் 31.12.2003 முடிய

| வ. எண் | மாவட்டம் | 2002 வரை மொத்தம் | முடிக்கப்பெற்றவை | | | மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏற்றுக் கொள்ளப் பட்டவை | மறுக்கப் பட்டவை | திரும்பப் பெறப்பட்டவை | |
| 1 | சென்னை | 1020 | 363 | 57 | 0 | 600 |
| 2 | காஞ்சீபுரம் | 358 | 257 | 9 | 0 | 92 |
| 3 | திருவள்ளூர் | 425 | 212 | 13 | 0 | 200 |
| 4 | திருவண்ணாமலை | 61 | 24 | 9 | 0 | 28 |
| 5 | வேலூர் | 187 | 86 | 29 | 0 | 72 |
| 6 | கடலூர் | 4 | 0 | 2 | 0 | 2 |
| 7 | விழுப்புரம் | 281 | 18 | 5 | 2 | 256 |
| 8 | நாகப்பட்டினம் | 33 | 9 | 1 | 0 | 23 |
| 9 | திருவாரூர் | 33 | 2 | 0 | 0 | 31 |
| 10 | தஞ்சாவூர் | 12 | 0 | 8 | 0 | 4 |
| 11 | புதுக்கோட்டை | 34 | 29 | 2 | 0 | 3 |
| 12 | திருச்சிராப்பள்ளி | 388 | 121 | 78 | 32 | 157 |
| 13 | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 14 | அரியலூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15 | கரூர் | 63 | 15 | 2 | 0 | 46 |
| 16 | நாமக்கல் | 66 | 30 | 0 | 0 | 36 |
| 17 | சேலம் | 185 | 4 | 3 | 0 | 178 |
| 18 | ஈரோடு | 230 | 30 | 23 | 51 | 126 |
| 19 | தர்மபுரி | 134 | 3 | 0 | 0 | 131 |
| 20 | கோயம்புத்தூர் | 329 | 111 | 0 | 1 | 217 |
| 21 | நீலகிரி | 49 | 4 | 8 | 4 | 33 |
| 22 | திண்டுக்கல் | 105 | 58 | 13 | 0 | 34 |
| 23 | தேனி | 91 | 43 | 1 | 17 | 30 |
| 24 | மதுரை | 752 | 44 | 38 | 0 | 670 |
| 25 | ராமநாதபுரம் | 8 | 3 | 5 | 0 | 0 |
| 26 | சிவகங்கை | 121 | 7 | 0 | 0 | 114 |
| 27 | விருதுநகர் | 45 | 30 | 9 | 0 | 6 |
| 28 | திருநெல்வேலி | 448 | 84 | 31 | 0 | 333 |
| 29 | தூத்துக்குடி | 4 | 0 | 4 | 0 | 0 |
| 30 | கன்னியாகுமரி | 73 | 45 | 15 | 0 | 13 |
| | **மொத்தம்** | **5539** | **1632** | **365** | **107** | **3435** |

## பட்டியல்-X

### மாநில கூர்நோக்கு குழு முன்பு பட்டியல் இனத்தவர் / பட்டியல் பழங்குடியினர் சாதி மெய்த்தன்மை குறித்த மேல்முறையீடு செய்யப்பட்ட நிலுவையிலுள்ள இனங்களின் விவரம் டிசம்பர் 2003 முடிய

| வருடம். | மொத்தம் வரப் பெற்றவை | முடிக்கப் பெற்றவை | | | மாவட்ட விசாரணைக் குழுவுக்கு மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரைக்கப் பட்டவை | மீதம் உள்ளவை | நிலுவையிலுள்ளவை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | விசாரணை முடிக்கப்பட்டவை. | | | |
| | | ஏற்றுக் கொள்ளப் பட்டவை | மறுத்தளிக் கப்பட்டவை | திரும்பப் பெறப் பட்டவை | | | நீதி மன்றத் தடை | மாவட்ட ஆட்சியரின் கூடுதல் விபரங் களுக்காக நிலுவை யில் உள்ளவை | ஆணைக் காக நிலுவை யில் உள்ளவை | விசாரணை யில் உள்ளவை | விசாரணைக் காக நிலுவை யில் உள்ளவை. |
| 1999 | 8 | 0 | 5 | 1 | 0 | 2 | 2 | 0 | 0 | 0 | 0 |
| 2000 | 105 | 4 | 36 | 1 | 4 | 60 | 16 | 3 | 17 | 8 | 16 |
| 2001 | 92 | 0 | 8 | 1 | 1 | 82 | 2 | 0 | 2 | 1 | 77 |
| 2002 | 111 | 4 | 4 | 1 | 3 | 99 | 1 | 1 | 7 | 2 | 83 |
| 2003 | 30 | 0 | 1 | 1 | 0 | 96 | 2 | 0 | 4 | 3 | 87 |
| 2004 மார்ச் வரை | 29 | 0 | 0 | 0 | 0 | 29 | 0 | 0 | 0 | 0 | 29 |
| மொத்தம் | 413 | 8 | 54 | 5 | 8 | 368 | 23 | 4 | 30 | 14 | 297 |



## பட்டியல்-XI

### மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விபரங்கள்

| வ. எண் | மாவட்டம் | 1999 - 2000 | | 2000 - 2001 | | 2001 - 2002 | | 2002 - 2003 | | 2003 - 2004 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
| 1 | அரியலூர் | - | - | - | - | 21.00 | 1409 | 24.25 | 1921 | 43.34 | 1112 |
| 2 | சென்னை | 419.90 | 24304 | 385.480 | 21562 | 523.94 | 11417 | 483.27 | 17859 | 714.72 | 26700 |
| 3 | கோயம்புத்தூர் | 140.99 | 6774 | 162.420 | 7362 | 174.59 | 8780 | 178.09 | 6866 | 283.00 | 8900 |
| 4 | கடலூர் | 253.58 | 12001 | 180.584 | 8748 | 258.59 | 12385 | 243.07 | 9964 | 420.00 | 17800 |
| 5 | தர்மபுரி | 95.74 | 5981 | 98.000 | 6181 | 101.91 | 6254 | 107.75 | 6520 | 137.15 | 3950 |
| 6 | திண்டுக்கல் | 68.00 | 3920 | 88.830 | 6218 | 105.00 | 6218 | 115.99 | 6519 | 214.00 | 8700 |
| 7 | ஈரோடு | 87.99 | 4007 | 90.976 | 4264 | 98.00 | 5046 | 105.49 | 6995 | 156.31 | 7396 |
| 8 | காஞ்சிபுரம் | 152.99 | 8275 | 152.770 | 9880 | 179.91 | 9880 | 188.50 | 12368 | 300.00 | 14267 |
| 9 | கன்னியாகுமரி | 62.00 | 636 | 52.520 | 3391 | 44.16 | 2555 | 49.86 | 2758 | 49.96 | 1512 |
| 10 | கரூர் | 32.13 | 2074 | 96.590 | 2403 | 38.60 | 2455 | 39.08 | 2839 | 76.38 | 2228 |
| 11 | மதுரை | 193.97 | 9760 | 205.270 | 9806 | 185.00 | 8400 | 213.39 | 10175 | 224.92 | 8814 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | நாகப்பட்டினம் | 91.35 | 5999 | 93.39 | 6930 | 99.97 | 6641 | 89.99 | 6470 | 169.50 | 7780 |
| 13 | நாமக்கல் | 81.42 | 4364 | 77.53 | 5000 | 64.05 | 5000 | 71.37 | 4154 | 198.00 | 7844 |
| 14 | நீலகிரி | 41.67 | 4269 | 40.00 | 4000 | 40.00 | 4000 | 48.24 | 3058 | 65.48 | 2858 |
| 15 | பெரம்பலூர் | 37.04 | 2102 | 54.75 | 4329 | 24.40 | 4329 | 34.89 | 376 | 67.50 | 2770 |
| 16 | புதுக்கோட்டை | 71.61 | 4228 | 70.10 | 4370 | 74.49 | 4765 | 83.98 | 5067 | 129.55 | 3975 |
| 17 | இராமநாதபுரம் | 46.49 | 3133 | 42.70 | 3103 | 51.71 | 3103 | 65.90 | 3910 | 77.36 | 2805 |
| 18 | சேலம் | 92.00 | 6568 | 94.57 | 7958 | 115.00 | 6793 | 136.00 | 5860 | 214.53 | 8252 |
| 19 | சிவகங்கை | 69.99 | 3686 | 70.00 | 3904 | 75.00 | 3994 | 118.58 | 6770 | 138.23 | 6517 |
| 20 | தஞ்சாவூர் | 130.82 | 6844 | 122.99 | 9000 | 140.00 | 7682 | 190.00 | 9448 | 229.90 | 9251 |
| 21 | தேனி | 40.42 | 3060 | 42.33 | 3033 | 45.78 | 2117 | 51.92 | 3258 | 97.16 | 3805 |
| 22 | திருநெல்வேலி | 116.00 | 6957 | 125.715 | 8749 | 120.00 | 8758 | 150.44 | 9530 | 199.99 | 6950 |
| 23 | திருவள்ளூர் | 112.17 | 5179 | 122.69 | 9032 | 119.95 | 7106 | 120.00 | 5620 | 205.00 | 8012 |
| 24 | திருவண்ணாமலை | 117.00 | 5394 | 79.97 | 5471 | 80.00 | 5504 | 118.49 | 6075 | 114.99 | 3722 |
| 25 | திருவாரூர் | 50.36 | 3562 | 54.45 | 3649 | 61.96 | 4690 | 68.50 | 5047 | 106.09 | 3297 |
| 26 | திருச்சி | 249.58 | 10607 | 255.48 | 11068 | 333.61 | 11413 | 386.00 | 10859 | 566.99 | 20800 |
| 27 | தூத்துக்குடி | 90.32 | 5013 | 102.99 | 6003 | 107.75 | 6257 | 111.00 | 6651 | 139.49 | 4138 |
| 28 | வேலூர் | 179.49 | 12167 | 188.10 | 11072 | 180.00 | 11638 | 193.75 | 11612 | 332.60 | 15325 |
| 29 | விழுப்புரம் | 89.97 | 6751 | 102.98 | 5980 | 118.00 | 5980 | 119.22 | 6760 | 189.02 | 9600 |
| 30 | விருதுநகர் | 84.39 | 5457 | 84.98 | 5771 | 80.59 | 5796 | 90.67 | 5730 | 107.90 | 4657 |
| | இயக்குநரகம் | 12.40 | 142 | 17.90 | 197 | 15.60 | 329 | 15.60 | 398 | 24.45 | 587 |
| | மொத்தம் | 3311.78 | 183214 | 357.055 | 198434 | 3678.56 | 190694 | 4013.28 | 201437 | 5993.51 | 234324 |



## பட்டியல்-XII

### மாநில அரசின் சிறப்பு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள்

| | | 1999 - 2000 | | 2000-2001 | | 2001-2002 | | 2002-2003 | | 2003-2004 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூ. லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
| 1 | அரியலூர் | 0.00 | 0 | | | - | - | 1.36 | 171 | 3.37 | 227 |
| 2 | சென்னை | 15.00 | 1176 | 15.41 | 1194 | 18.21 | 1151 | 13.64 | 1143 | 71.63 | 3866 |
| 3 | கோயம்புத்தூர் | 5.56 | 456 | 6.31 | 506 | 6.93 | 534 | 5.60 | 469 | 8.10 | 547 |
| 4 | கடலூர் | 24.90 | 1001 | 25.00 | 2040 | 16.00 | 1154 | 16.00 | 1341 | 16.00 | 1081 |
| 5 | தர்மபுரி | 2.49 | 80 | 2.50 | 185 | 2.49 | 248 | 0.82 | 85 | 1.00 | 57 |
| 6 | திண்டுக்கல் | 10.00 | 800 | 10.00 | 777 | 10.49 | 718 | 6.98 | 495 | 16.00 | 1078 |
| 7 | ஈரோடு | 1.14 | 74 | 1.51 | 77 | 3.13 | 312 | 1.20 | 84 | 1.50 | 101 |
| 8 | காஞ்சிபுரம் | 3.99 | 424 | 5.00 | 1167 | 10.46 | 602 | 5.90 | 1646 | 10.00 | 760 |
| 9 | கன்னியாகுமரி | 10.82 | 3788 | 14.58 | 1592 | 16.30 | 1489 | 13.08 | 1356 | 38.60 | 6802 |
| 10 | கரூர் | 0.45 | 38 | 0.53 | 26 | 0.37 | 18 | 0.38 | 42 | 0.66 | 65 |
| 11 | மதுரை | 7.49 | 424 | 7.08 | 413 | 7.59 | 450 | 7.10 | 408 | 11.30 | 763 |
| 12 | நாகப்பட்டினம் | 2.05 | 139 | 2.20 | 185 | 2.90 | 185 | 2.49 | 251 | 2.60 | 175 |
| 13 | நாமக்கல் | 2.92 | 129 | 0.85 | 57 | - | - | 0.22 | 18 | 0.15 | 10 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | நீலகிரி | 0.65 | 40 | 0.24 | 60 | 1.15 | 58 | 1.38 | 74 | 1.50 | 101 |
| 15 | பெரம்பலூர் | 0.32 | 41 | 0.67 | 68 | 0.50 | 52 | 0.29 | 27 | 1.33 | 81 |
| 16 | புதுக்கோட்டை | 2.48 | 216 | 2.93 | 0 | 4.42 | 415 | 4.40 | 478 | 7.00 | 472 |
| 17 | இராமநாதபுரம் | 4.99 | 355 | 5.00 | 245 | 4.98 | 342 | 4.90 | 469 | 5.35 | 361 |
| 18 | சேலம் | 0.99 | 147 | 1.37 | 345 | 0.99 | 89 | 0.49 | 74 | 0.85 | 57 |
| 19 | சிவகங்கை | 3.59 | 239 | 3.99 | 258 | 4.49 | 303 | 4.69 | 271 | 7.00 | 472 |
| 20 | தஞ்சாவூர் | 11.40 | 1172 | 0 | 0 | 11.78 | 925 | 6.25 | 746 | 50.00 | 3378 |
| 21 | தேனி | 3.36 | 173 | 4.94 | 186 | 4.15 | 157 | 3.96 | 259 | 8.21 | 657 |
| 22 | திருநெல்வேலி | 22.00 | 1461 | 20.00 | 1522 | 21.00 | 1555 | 13.75 | 1150 | 28.88 | 1882 |
| 23 | திருவள்ளூர் | 6.50 | 338 | 8.50 | 376 | 16.00 | 349 | 7.99 | 642 | 65.00 | 1883 |
| 24 | திருவண்ணா-மலை | 0.60 | 29 | 0.34 | 29 | 0.60 | 24 | 0.50 | 42 | 0.53 | 35 |
| 25 | திருவாரூர் | 1.95 | 208 | 1.99 | 226 | 2.08 | 217 | 2.12 | 649 | 2.20 | 221 |
| 26 | திருச்சி | 26.40 | 1687 | 30.00 | 1748 | 30.98 | 1925 | 16.25 | 1109 | 44.36 | 148 |
| 27 | தூத்துக்குடி | 5.98 | 487 | 6.99 | 526 | 7.69 | 541 | 7.24 | 569 | 11.00 | 890 |
| 28 | வேலூர் | 17.67 | 1216 | 17.99 | 1340 | 18.00 | 1405 | 15.77 | 1827 | 34.00 | 2297 |
| 29 | விழுப்புரம் | 0.69 | 69 | 3.00 | 230 | 4.00 | 370 | 2.75 | 157 | 11.18 | 755 |
| 30 | விருதுநகர் | 3.99 | 314 | 4.00 | 423 | 3.99 | 423 | 2.90 | 242 | 3.55 | 367 |
| | இயக்குநரகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **200.37** | **16721** | **202.92** | **15801** | **231.67** | **16011** | **170.40** | **16294** | **462.85** | **29589** |



**பட்டியல்–XIII**

**உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித் தொகை ( HESS ) வழங்கப்பட்ட விவரங்கள்**

| வ. எண். | மாவட்டம் | 2002 - 2003 செலவு (ரூ. லட்சத்தில்) | 2002 - 2003 பயனாளிகளின் எண்ணிக்கை | 2003-2004 செலவு (ரூ. லட்சத்தில்) | 2003-2004 பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 0.00 | 0 | 0.40 | 6 |
| 2 | சென்னை | 24.12 | 357 | 50.34 | 741 |
| 3 | கோயம்புத்தூர் | 18.57 | 272 | 28.97 | 429 |
| 4 | கடலூர் | 88.56 | 1311 | 118.98 | 1763 |
| 5 | தர்மபுரி | 4.21 | 63 | 3.97 | 59 |
| 6 | திண்டுக்கல் | 23.40 | 347 | 35.53 | 527 |
| 7 | ஈரோடு | 2.31 | 35 | 2.80 | 41 |
| 8 | காஞ்சிபுரம் | 6.69 | 97 | 6.46 | 96 |
| 9 | கன்னியாகுமரி | 1.74 | 26 | 2.29 | 34 |
| 10 | கரூர் | 1.18 | 17 | 1.18 | 17 |
| 11 | மதுரை | 58.84 | 817 | 107.40 | 1591 |
| 12 | நாகப்பட்டினம் | 0.00 | 0 | 11.58 | 171 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | நாமக்கல் | 3.31 | 51 | 5.82 | 87 |
| 14 | நீலகிரி | 1.31 | 20 | 0.99 | 15 |
| 15 | பெரம்பலூர் | 0.0 | 0 | 1.08 | 16 |
| 16 | புதுக்கோட்டை | 2.21 | 32 | 3.00 | 44 |
| 17 | இராமநாதபுரம் | 9.04 | 133 | 9.00 | 133 |
| 18 | சேலம் | 13.37 | 198 | 12.98 | 192 |
| 19 | சிவகங்கை | 11.78 | 174 | 19.95 | 295 |
| 20 | தஞ்சாவூர் | 37.58 | 557 | 49.86 | 739 |
| 21 | தேனி | 14.59 | 219 | 14.96 | 222 |
| 22 | திருநெல்வேலி | 30.24 | 429 | 38.63 | 571 |
| 23 | திருவள்ளூர் | 0.0 | 0 | 0.00 | 0 |
| 24 | திருவண்ணாமலை | 3.27 | 49 | 3.95 | 59 |
| 25 | திருவாரூர் | 0.07 | 1 | 0.00 | 0.. |
| 26 | திருச்சி | 54.90 | 891 | 68.80 | 1019 |
| 27 | தூத்துக்குடி | 7.62 | 112 | 17.95 | 266 |
| 28 | வேலூர் | 3.77 | 55 | 4.10 | 59 |
| 29 | விழுப்புரம் | 1.61 | 23 | 2.00 | 30 |
| 30 | விருதுநகர் | 27.05 | 400 | 22.41 | 332 |
| | இயக்குநரகம் | 0.0 | 0 | 0.00 | 0 |
| | **மொத்தம்** | **451.34** | **6686** | **645.38** | **9554** |



**பட்டியல் – XIV**

**2001–2002 முதல் 2003–2004 வரை ஆதிதிராவிடர் / பழங்குடியின / கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரங்கள்**

| வ. எண் | மாவட்டம் | 2001-2002 | | 2002-2003 | | 2003-2004 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பயனடைந்தோர் | செலவினம் | பயனடைந் தோர் | செலவினம் | பயனடைந் தோர் | செலவினம் |
| 1 | அரியலூர் | 662 | 908095 | .. | .. | ... | ... |
| 2 | சென்னை | 5726 | 7785413 | 3730 | 5375242 | 4098 | 6486800 |
| 3 | கோயம்புத்தூர் | 2463 | 3348843 | 1633 | 2353200 | 1790 | 2844400 |
| 4 | கடலூர் | 2629 | .. | 1821 | 6198750 | 1983 | 3151086 |
| 5 | தர்மபுரி | 1412 | 1919848 | 1346 | 1939703 | 1584 | 2517055 |
| 6 | திண்டுக்கல் | 1298 | 1764839 | 1556 | 2242329 | 1567 | 2469914 |
| 7 | ஈரோடு | 767 | 954481 | 1230 | 1860904 | 1362 | 2401204 |
| 8 | காஞ்சீபுரம் | 2393 | 3253666 | 3289 | 4739705 | 3424 | 5387642 |
| 9 | கன்னியாகுமரி | 850 | 815357 | 1035 | 1836879 | 720 | 1141920 |
| 10 | கரூர் | 917 | 1246808 | 603 | 868971 | 713 | 1130842 |
| 11 | மதுரை | 1834 | .. | 1284 | 4343971 | 1257 | 1993602 |
| 12 | நாகப்பட்டினம் | 1703 | 2315501 | 1959 | 2823072 | 1896 | 3012839 |
| 13 | நாமக்கல் | 980 | 1332467 | 1111 | 1601047 | 1122 | 1779492 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 14 | நீலகிரி | 1378 | .. | 956 | 3251282 | 909 | 1444400 |
| 15 | பெரம்பலூர் | 606 | 742374 | 893 | 1368461 | 937 | 1486251 |
| 16 | புதுக்கோட்டை | 1309 | 1637030 | 965 | 1533412 | 1473 | 2340670 |
| 17 | இராமநாதபுரம் | 763 | 1037421 | 746 | 1075045 | 838 | 1331624 |
| 18 | சேலம் | 1509 | 2051727 | 1403 | 2021842 | 1552 | 2466206 |
| 19 | சிவகங்கை | 707 | 961288 | 929 | 1338762 | 903 | 1381000 |
| 20 | தஞ்சாவூர் | 1904 | 2588793 | 1910 | 2752459 | 2007 | 3189223 |
| 21 | தேனி | 1306 | 1747163 | 1002 | 1472501 | 925 | 1469871 |
| 22 | திருநெல்வேலி | 2006 | 2727478 | 2406 | 3467251 | 2043 | 3240198 |
| 23 | திருவள்ளூர் | 2852 | 3877750 | 2363 | 3405286 | 2939 | 4662181 |
| 24 | திருவண்ணாமலை | 1422 | .. | 1787 | 4508457 | 1415 | 2248500 |
| 25 | திருவாரூர் | 1263 | 1717251 | 1535 | 2212054 | 1547 | 2458261 |
| 26 | திருச்சி | 3805 | 5173506 | 2124 | 3060849 | 2687 | 4263500 |
| 27 | தூத்துக்குடி | 2607 | 2829452 | 1405 | 2739906 | 1225 | 1906372 |
| 28 | வேலூர் | 4376 | 5949872 | 2929 | 4220940 | 4291 | 6805600 |
| 29 | விழுப்புரம் | 2725 | 256976 | 2141 | 6533463 | 1786 | 2596507 |
| 30 | விருதுநகர் | 2253 | 2925988 | 1410 | 2169257 | 1391 | 2206126 |
| | முதலமைச்சர் விழா | 100 | 158080 | .. | .. | ... | ... |
| | மொத்தம் | 56525 | 62019451 | 47501 | 83315082 | 50384 | 79813286 |

## பட்டியல்-XV
## சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் 2003-2004
## 31-03-2004 வரை செலவினம்

| வ எ ண் | செயலகம்/ செயலாக்கத் துறைகள் | திட்ட மதிப்பீடு 2003-2004 | சி.உ.தி. (19.18%) | சி.உ.தி. செலவின விவரம் | | | பழ.து.தி. (1.03%) | பழ.து.தி. செலவின விவரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பகுக்கக் கூடியது | பகுக்க முடியாதது | மொத்தம் | | பகுக்கக் கூடியது | பகுக்க முடியாதது | மொத்தம் |
| 1 | ஆதி (ம) ப.ந | 11112.18 | 10706.23 | 11115.21 | 0.00 | 11115.21 | 405.95 | 375.08 | 0.00 | 375.08 |
| 2 | வேளாண்மை | 17648.12 | 3439.57 | 1681.83 | 14.88 | 1696.71 | 225.33 | 134.90 | 0.78 | 135.69 |
| 3 | கால்நடை பராமரிப்பு (ம) மீவ. | 4356.30 | 854.01 | 48.02 | 609.54 | 657.56 | 38.70 | 0.00 | 56.32 | 56.32 |
| 4 | கூட்டுறவு உ. (ம) நு.பா. | 21619.77 | 4146.67 | 20.00 | 2262.86 | 2282.86 | 192.47 | 180.08 | 0.00 | 180.08 |
| 5 | எரிசக்தி | 129480.88 | 31075.41 | 1008.00 | 23678.00 | 24686.00 | 2589.62 | 32.00 | 1304.00 | 1336.00 |
| 6 | சுற்றுச் சூழல் (ம) வனம் | 14066.81 | 2698.01 | 3523.00 | 0.00 | 3523.00 | 422.00 | 183.00 | 0.00 | 183.00 |
| 7 | கைத்தறி, கை.துணி (ம) கதர் | 854.80 | 163.95 | 3.85 | 80.10 | 83.95 | 8.80 | 1.86 | 4.58 | 6.44 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | சுகாதாரம் (ம்) குடு. | 17906.47 | 3612.89 | 1684.73 | 2268.89 | 3953.62 | 209.29 | 223.56 | 0.00 | 223.56 |
| 9 | உயர் கல்வி | 894.52 | 171.57 | 60.92 | 28.85 | 89.77 | 9.21 | 3.38 | 1.58 | 4.96 |
| 10 | நெடுஞ்சாலை | 98478.45 | 18888.17 | 0.00 | 49542.67 | 49542.67 | 1014.33 | 0.00 | 2253.08 | 2253.08 |
| 11 | வீட்டுவசதி | 12998.63 | 3054.53 | 3476.91 | 0.00 | 3476.91 | 133.89 | 0.00 | 0.00 | 0.00 |
| 12 | தொ.(ம்). வேலை. | 307.92 | 59.06 | 29.10 | 0.00 | 29.10 | 3.17 | 0.00 | 24.47 | 24.47 |
| 13 | நிதி (ம்) குவ | 103794.99 | 26964.10 | 6265.30 | 18781.60 | 25046.90 | 1069.09 | 32.00 | 1004.52 | 1036.52 |
| 14 | திட்ட வளர்ச்சி | 729.08 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 729.08 | 729.08 | 0.00 | 729.08 |
| 15 | ஊரக வளர்ச்சி | 87515.40 | 16785.45 | 22528.07 | 0.00 | 22528.07 | 901.41 | 1209.30 | 0.00 | 1209.30 |
| 16 | பள்ளிக் கல்வி | 15890.79 | 3045.63 | 1621.01 | 2767.64 | 4388.65 | 163.56 | 16.87 | 219.41 | 236.28 |
| 17 | சிறு தொழில் | 2937.25 | 563.36 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 18 | சமூக நலம் | 47229.58 | 9058.63 | 8279.33 | 0.00 | 8279.33 | 485.66 | 506.45 | 0.00 | 506.45 |
| 19 | தமிழ் வளர்ச்சி | 260.54 | 49.97 | 43.21 | 0.00 | 43.21 | 2.68 | 2.32 | 0.00 | 2.32 |
| 20 | இளைஞர் நலம் (ம்). விளையாட்டு | 174.29 | 33.43 | 0.00 | 90.25 | 90.25 | 1.80 | 0.00 | 0.95 | 0.95 |
| 21 | பிற துறைகள் | 111756.39 | 0.00 | | | 0.00 | 0.00 | | | 0.00 |
| | மொத்தத் தொகை | 700013.16 | 135370.64 | 61388.49 | 100125.28 | 161513.77 | 8606.05 | 3629.88 | 4869.70 | 8499.58 |



### பட்டியல்-XVI

**தமிழ்நாட்டில் 19 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகிறது (அவற்றில் 17 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு பகுதியிலும் (2) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு பகுதி அல்லாத இடங்களிலும் உள்ளன)**

| வ.எண் | பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கும் இடங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | ஏற்காடு | சேலம் |
| 2 | அரநூத்துமலை | சேலம் |
| 3 | பச்சைமலை | சேலம் |
| 4 | சின்னகல்ராயன் | சேலம் |
| 5 | பெரியகல்ராயன் | சேலம் |
| 6 | கொல்லிமலை | நாமக்கல் |
| 7 | கொல்லி பவர்காடு | நாமக்கல் |
| 8 | மலையாளப்பட்டி | நாமக்கல் |
| 9 | சித்தேரி | தர்மபுரி |
| 10 | பச்சமலை | திருச்சி |
| 11 | ஏலகிரி | வேலூர் |
| 12 | புதூர்நாடு | வேலூர் |
| 13 | ஜவ்வாது | திருவண்ணாமலை |
| 14 | நம்மியம்பட்டு | திருவண்ணாமலை |
| 15 | வெள்ளிமலை | விழுப்புரம் |
| 16 | கிளாக்காடு | விழுப்புரம் |
| 17 | மோட்டம்பட்டி | விழுப்புரம் |
| | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு பகுதி அல்லாத இடங்கள் | |
| 18 | மசினாக்குடி | நீலகிரி |
| 19 | சத்தியமங்கலம் | ஈரோடு. |

V211, 21.07.4 Fou. 61.1

பட்டியல்—XVII

பழங்குடியினர் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

| வ.எண் | ஆரம்ப சுகாதார நிலையம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | அர்த்தனாவூர் | வேலூர் |
| 2 | புதூர்நாடு | வேலூர் |
| 3 | ஆலங்காயம் | வேலூர் |
| 4 | ஜமனாமரத்தூர் | திருவண்ணாமலை |
| 5 | நரியப்பட்டு | திருவண்ணாமலை |
| 6 | களாக்காடு | விழுப்புரம் |
| 7 | சேராப்பட்டு | விழுப்புரம் |
| 8 | மோட்டாம்பட்டி | விழுப்புரம் |
| 9 | கரியாலூர் | விழுப்புரம் |
| 10 | புதுப்பட்டி | விழுப்புரம் |
| 11 | பச்சமலை (இ) வேப்படிபலா | சேலம் |
| 12 | அரநூத்துமலை | சேலம் |
| 13 | கருமாந்துரை | சேலம் |
| 14 | நாகலூர் | சேலம் |
| 15 | வாழவந்தி | சேலம் |
| 16 | கங்கவள்ளி | சேலம் |
| 17 | கரியப்பட்டி | சேலம் |
| 18 | அரியாப்பாளையம் | சேலம் |
| 19 | பவர்காடு | நாமக்கல் |
| 20 | வாழவந்திநாடு | நாமக்கல் |
| 21 | சித்தேரி | தர்மபுரி |
| 22 | பாப்பிரெட்டிப்பட்டி | தர்மபுரி |
| 23 | டாப்செங்காட்டுப்பட்டி | திருச்சிராப்பள்ளி |
| 24 | உப்பிலியாபுரம் | திருச்சிராப்பள்ளி |
| 25 | பேச்சிப்பாறை | கன்னியாகுமரி |

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.

226195 சென்னை-600 0?8

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.